# அபிவிருத்தி முன்னெடுத்தலுக்கு உந்துதலளித்தல்

வருடாந்த அறிக்கை 2018

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



# அபிவிருத்தி முன்னெடுத்தலுக்கு உந்துதலளித்தல்

ஒரு நாட்டின் சக்திக்கான தேவைகள் கடந்து செல்லும் ஒவ்வொரு வருடத்துடனும் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது என்பது அநேகம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒன்றாகும். சக்தி என்பது உண்மையில், அபிவிருத்தியும் ஒரு உயர் தரத்திலான வாழ்க்கையும் அதன் கொள்கைக் கட்டாயங்களாக உள்ள ஒரு நிஜமான முன்னெடுத்தல் ஆற்றலைக் கட்டமைக்கிறது. புதுப்பிக்கத்தக்க சக்திகள் மீதான அதிகரித்த வலியுறுத்தலுடன் ஒரு பரந்த மறுசீரமைப்பு நோக்கியதாக ஓர் உலகப் போக்கு காணப்பட்டபோதிலும், இத்தொழிற்றுறையில் இரு பெரும் நுகர்வோர்களாக, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறைகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து (இ.பெ.கூ) எரிபொருள் தேவைப்பாட்டின் பெரும் பகுதியைப் பெற்றுக் கொள்ள, நாட்டின் மொத்த சக்திக் கட்டமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாக பெற்றோலிய உற்பத்திகள் தொடர்ந்தும் இருந்தன.

முன்னைய வருடத்திற்கு மாறாக உலகம் முழுவதிலுமான எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிற்றுறை ஒரு வளரும் நம்பிக்கையுணர்வை அனுபவித்தன. எண்ணெயின் விலை மீளதிகரித்ததுடன் தொழில்துறை ஒரு முழுமையான வகையில் பலவீனமான விலைகள், கட்டாய மூலதனக் கட்டுப்பாடு, பரந்த மறுசீரமைப்பு மற்றும் உற்பத்தி வினைத்திறன் சம்பந்தமான பிரச்சினைகள் என்பவற்றால் குறிபிடப்பட்ட பல வருடங்களிலிருந்து மீண்டது. இவை அனைத்தும் காணப்பட்ட போதிலும், அதிகரித்த கேள்வி மற்றும் களநிலைச் சீர்கெடல் என்பவற்றைக் கவனத்தில் கொள்கையில் எதிர்வரும் வருடங்களில் ஒரு விநியோக நெருக்கடி நோக்கி தொழிற்றுறை நகர்வது எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பயன் பெறக்கூடியதான அகழ்வுக்கு ஏதுவான இயற்கை பெற்றோலிய மூலவளங்களின்றியும் மற்றும் 2018 இறுதியில் ஓர் அரசியல் நிச்சயமற்றதன்மை காரணமாக மோசமடைந்த நிதித் ஸ்திரத்தன்மையின்மையில் அகப்பட்டுக் கொண்டு, பெற்றோலியத் தொழிற்றுறையைப் பொறுத்த வரை ஒரு வேண்டத்தகாத நிலையில் தற்போது இலங்கையுள்ளது. ஒரு சிறிய விலையதிகரிப்புக் கூட ஒரு பெரும்பாலான மக்களின் வாழ்வுகள் அதே போன்று வாழ்க்கை முறைகளில் கடுமையாகவும் மற்றும் எதிர்மறையாகவும் தாக்கம் ஏற்படுத்தும் என்பதால், கட்டுப்படியாகும் தன்மையை உறுதி செய்வதற்கு அதிக இறை அழுத்தம் மற்றும் ஒரு ஆணைப்படுத்தப்பட்ட தேவைப்பாட்டின் கீழும் பொதுமக்களுக்கு பெற்றோலிய உற்பத்திகளை வழங்குவதற்கு இ.பெ.கூ தொடர்ச்சியாக சவாலுக்குட்படுத்தப்பட்டது.

இந்த சந்தர்ப்பங்கள், ஓர் ஆரோக்கியமான தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இயல்பாகவே தடை ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும், தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் குறிக்கப்பட்ட இலக்குகள் என்பவற்றுக்கு உண்மையாக, கூட்டுத்தாபனம் இலாபங்கள் மீதான பாதிப்புகளைக் குறைக்கும் முகமாக அனைத்து விடயங்களிலும் வினைத்திறன்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கையில், அதன் ஆணைப்படி தேசிய அத்தியாவசியங்கள் என்ற முக்கியத்துவம் மீது கூட்டுத்தாபனம் கவனத்தை தொடர்ந்து எடுத்தது.

அவ்விதத்தில், தனது பிரஜைகளிற்கு ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை காலப்போக்கில் அளிக்கும் அபிவிருத்தி மற்றும் நிலைபேணும் தன்மை இலக்குகளை அடைவதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு இ.பெ.கூ தொடர்ந்து உந்துதலளிக்கும்.

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| தொலைநோக்கு, பணிநோக்கு, குறிக்கோள்கள் | 5 |
| பயணம் | 6 |
| எமது அணுகுமுறை | 8 |
| கூட்டாண்மைத் தகவல்கள் | 11 |
| நிதிசார் சிறப்புக்கூறுகள் | 12 |
| செயலாற்றுகைச் சிறப்புக்கூறுகள் | 14 |
| தலைவரின் செய்தி | 18 |
| முகாமைத்துவப் பணிப்பாளரின் மதிப்புரை | 22 |
| எமது தலைமைத்துவம் | 26 |
| பணிப்பாளர்கள் சபை | 28 |
| கூட்டாண்மை முகாமைத்துவ அணி | 31 |
| சிரேஷ்ட முகாமைத்துவ அணி | 34 |
| கூட்டுத்தாபனக் கட்டமைப்புரீதியான வரைபு | 36 |
| எமது வணிகம் | 38 |
| முகாமைத்துவ மீளாய்வு | 42 |
| பெறுமதியை எவ்வாறு நாம் உருவாக்குகிறோம் | 54 |
| இடரேதுநிலை முகாமைத்துவ அறிக்கை | 72 |
| கூட்டாண்மை ஆளுகை | 78 |
| கணக்காய்வுக் குழு அறிக்கை | 84 |
| பணிப்பாளர்கள் அறிக்கை | 88 |
| நிதிக் கூற்றுக்கள் | 93 |
| எமது அமைவிடங்கள் | 150 |
| பத்து வருட சாராம்சம் | 152 |



## தொலைநோக்கு

புதிய வாய்ப்புகளின் முன்னோடியாகவும் மற்றும் எங்களது பங்குதாரர்களுக்கு பெறுமதியை வழங்கி; பெற்றோலியம் மற்றும் தொடர்புபட்ட தொழில்களில் ஒரு நிலைபேறான நிறுவனமாக இருத்தல்.

## பணிநோக்கு

போட்டித்தன்மை - கட்டுப்பாட்டு விலைகளில் பெற்றோலியம் மற்றும் தொடர்புபட்ட உற்பத்திகளைக் கொள்வனவு செய்து மற்றும் விநியோகிப்பதன் மூலம் ஒரு சந்தை முன்னோடியாக இருப்பதற்கு முயற்சித்தல்.

நிலைபேண்தன்மை - நீண்ட கால பயன்களில் வலியுறுத்தலை இடும் ஒரு நிதி ரீதியான, சமூக ரீதியான மற்றும் சுற்றாடல் ரீதியான நிலைபேண்தகு வணிகம்

தொடர்ச்சியான முன்னேற்றம் - செய்முறை மற்றும் மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் ஊடாக வளர்ச்சியைக் கொண்டு செல்லுதல். முன்னேற்றத்திற்கு சாத்தியமான விடயங்களில் கூட்டாண்மையின் வளர்ச்சியை எப்போதும் கண்காணித்தல்

நம்பகத்தன்மை - அனைத்துச் சமயங்களிலும் கூட்டாண்மையின் சிறந்த நலன்களை உறுதிப்படுத்தி ஒரு நம்பகமான முறையில் செயற்படுதல்

பொதுமக்கள் கவனம் - நாட்டின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு இலட்சியம் கொள்ளுதல்

## குறிக்கோள்கள்

சந்தை நிலைப்பாட்டை மேம்படுத்துவதற்கு சிறப்பான செயலாற்றுகையை நிறைவேற்றுதல்

உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பேணுதல்

செய்முறைப் பாதுகாப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பொறுப்புகளை உறுதிப்படுத்துதல்

ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் மூலமாக உற்பத்திச் சிறப்புநிலையை அடைதல்

நீண்ட கால நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துதல்

நிறுவன ரீதியான கற்றுக்கொள்ளுதல் மற்றும் ஒரு நேர்மறை வேலைச் சுற்றாடலை முன்னேற்றுதல் மற்றும் மேம்படுத்துதல்

பொதுமக்கள் நலன்களை திருப்தி செய்கின்ற ஒரு சமூகப் பொறுப்புக் கலாசாரத்தை உருவாக்குதல்

# பயணம்

**1961** 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசுக்குச் சொந்தமான ஒரு தொழில் முயற்சியாக ஸ்தாபிக்கப்பட்டது.

**1962** இ.பெ.கூ அந்த சமயத்தில் நாட்டில் செயற்பட்டுக்கொண்டிருந்த ஏனைய எண்ணெய் நிறுவனங்களுடன் போட்டியாக வணிகத்தை ஆரம்பித்தது.

**1964** பெற்றோலிய உற்பத்திகளை நாட்டில் இறக்குமதி செய்வதற்கு, விற்பனை செய்வற்கு மற்றும் விநியோகிப்பதற்கான ஒரேயொரு வணிகமாக இ.பெ.கூ வந்தது.

**1968** இ.பெ.கூ நாளொன்றுக்கு 38,000 பீப்பாய்கள் எண்ணெய் சுத்திகரிப்பு வசதியை நிர்மாணித்தது.

**1969** இ.பெ.கூ சுத்திகரிப்பு செயற்பாடுகளை ஆரம்பித்தது. கொலன்னாவை நிலையத்தில் ஓர் உராய்வுநீக்கி எண்ணெய் கலவை இயந்திரத்தை இ.பெ.கூ பொருத்தியது. விவசாய இரசாயனத் துறையிலும் இ.பெ.கூ பிரவேசித்தது.

**1971** இ.பெ.கூ சட்டத்திற்கு திருத்தங்கள் மூலமாக கூட்டுத்தாபனத்தின் செயற்பரப்பெல்லைக்கு கப்பல்களுக்கான எண்ணெய் விநியோகச் செயற்பாடு மற்றும் விமான எரிபொருள் மீள்விநியோக நடவடிக்கைகளும் சேர்க்கப்பட்டன.

**1978** துணி, டயர்கள் மற்றும் முடிவுப்பொருளுற்பத்தி கைத்தொழில்களுக்காக நைலோன் 6 நூல் உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை இ.பெ.கூ நிர்மாணித்தது.

**1979** 1979 இல் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு செயற்றிறன் அதிகரித்ததின் மூலம் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்றிறன் நாளொன்றுக்கு 50,000 பீப்பாய்களாக அதிகரிக்கப்பட்டது.

**1987** கொழும்புத் துறைமுகத்திலிருந்து 9.2 கி.மீ தள்ளி நங்கூரமிடும் அடையாளத் தனியிடமொன்று (SPBM) நிறுவப்பட்டு அதனுடன் இணைந்து ஒருகொடவத்தை எனுமிடத்தில் இடைநிலை கச்சா எண்ணெய் களஞ்சியத் தாங்கிப் பண்ணை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**1992** சுத்திகரித்தல் செய்முறை நெகிழ்ச்சி மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு கச்சா எண்ணெய சுத்திகரிப்பு அலகை இ.பெ.கூ சீரமைத்தது.

**1994** கரைப்பான்கள் மற்றும் உராய்வுநீக்கிகள் என்பவற்றின் இறக்குமதி மற்றும் விநியோகத்தை கட்டுப்பாடற்றதாக்குதல்.

**1995** பயங்கரவாதிகளின் தாக்குதல் காரணமாக சேதமான கொலன்னாவை மற்றும் ஒருகொடவத்தை எண்ணெய் தாங்கிகளின் புனர்நிர்மாணம்.



**1999** சப்புகஸ்கந்தவில் ஒரு புதிய விநியோக முனையத்துடன் தீயினால் சேதமடைந்த களஞ்சிய வசதிகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டன. காரீயமற்ற பெற்றோல் உற்பத்தி செய்யும் அதன் ஆற்றலை அதிகரிப்பதற்காக, பெற்றோலிற்கான கலவைக் கையிருப்பை உற்பத்தி செய்யும் பிளாட்போர்மர் (platformer) அலகின் செயற்திறனை இ.பெ.கூ மேம்படுத்தியது.

**2003** களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள் புதிதாக உருவாக்கப்பட்ட பொதுப் பயனர் வசதி நிறுவனமான CPSTL இடம் கையளிக்கப்பட்டது. புதிய நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை அரசாங்கம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி என்பவற்றால் சம விகிதத்தில் உரிமை கொள்ளப்பட்டிருக்கும். இ.பெ.கூ பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நவீன விமான மீள் எரிபொருளிடும் வசதியை மற்றும் எரிபொருள் குழாய் முனை முறைமையை (FuelHydrant System) ஆரம்பித்தது.

**2011** இ.பெ.கூ, கொழும்பு 9 இல் அமைந்துள்ள ஒரு புதிய தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு இடம்பெயர்ந்தது. மத்தளையிலுள்ள ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையத்தில் கட்டம் 2 இன் கீழ் எரிபொருள் குழாய் முறைமை தொடர்பான நிர்மாணப் பணிகள் தொடங்கியது.

**2013** 90 ஒக்டேன் பெற்றோல் 92 ஒக்டேன் பெற்றோலாக தரமுயர்த்தப்பட்டது.

**2016** ஒரு BOT அடிப்படையில் இலங்கையில் ஒரு கலவைத் தொழிற்சாலையை இயக்குவதற்கு ஹைரக்ஸ் (Hyrax) உடன் இ.பெ.கூ ஓர் உடன்படிக்கைக்கு வந்தது. உச்ச இலாபத்தை பதிவு செய்தது.




**2002** ஆட்டோ டீசலில் சல்பர் மட்டத்தைக் குறைப்பதற்கான மாற்றம் செய்யப்பட்டது. இருக்கும் டீசல் ஹைட்ரோடிரீட்டரை (Hydrotreater) (04 அலகு) சீரமைத்தல் மற்றும் கெரசின் ஹைட்ரோடிரீட்டரை (07 அலகு) ஒரு டீசல் ஹைட்ரோடிரீட்டருக்கு மாற்றுதல்.

**2010** 107 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் மற்றும் CPSTL இன் ஒதுக்கி வைக்கப்பட்ட 1/3 பங்குகளை இ.பெ.கூ இன் ஒரு மூன்றாவது போட்டியாளருக்காக ஒதுக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்தது. இ.பெ.கூ சந்தைக்கு சுப்பர் டீசல் (10ppm) அறிமுகம் செய்தது.

**2012** கொழும்புத் துறைமுக விரிவாக்க செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக, கொழும்புத் துறைமுகத்தில் நீரமூழ்கி கச்சா எண்ணெய் குழாய் மற்றும் பல்குழாய் இணைப்பு முனை (PLEM) என்பவற்றின் மீள்வழியிடுதல்/மாற்றீடு பூர்த்தி செய்யப்பட்டது. மத்தளையில் ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையத்தில் கட்டம் 2 இன் கீழ் விமான முனையம் தொடர்பான நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**2014** மத்தளையில் ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையத்தில் விமான எரிபொருள் மீள்நிரப்புதல் மற்றும் எரிபொருள் குழாய் முனை முறைமை என்பன சேவையிலிடப்பட்டன. இ.பெ.கூ இன் விமான செயற்பாடு கூட்டுப் பரிசோதனைக் குழுவின் (JIG) இன் வருடாந்த கணக்காய்வுவில் "நன்று" (சராசரிக்கும் மேலான அந்தஸ்து) எனும் அந்தஸ்தை பெறுவதற்கு இயலுமாகவிருந்தது. இ.பெ.கூ இறக்குமதிகளுக்காக 500 ppm எரிபொருள் தேவைப்பாட்டை அறிமுகப்படுத்தியது.

**2018** கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் அபிவிருத்திச் செயல்திட்டம் நிலை II, கட்டம் 2 உடன் சமனான வகையில் புதிய ஏற்றிடம் - E இல் விமான எரிபொருள் முனையம் மற்றும் இருக்கும் எரிபொருள் குழாய் முனை முறைமை, மற்றும் ஒரு புதிய எரிபொருள் குழாய் முனை முறைமை என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்துதலின் ஆரம்பம். எரிபொருள் எண்ணெயை காற்று ஊதுதல் மூலம் திரவத் தார் உற்பத்தியில் இ.பெ.கூ மீள பிரவேசித்தது. இ.பெ.கூ லங்கா சுப்பர் டீசல் யூரோ 4 மற்றும் பெற்றோல் 95 யூரோ 4 என்பவற்றை அறிமுகப்படுத்தியது. உச்ச வருமானம் உருவாக்கம்.

# எங்களது அணுகுமுறை

## அபிவிருத்தி முன்னெடுத்தலுக்கு உந்துதலளித்தல்

இது எங்களது மூன்றாவது ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கை. கூட்டாண்மையின் மூலோபாயம், செயலாற்றுகை, ஆளுகை, இடரேதுநிலை மற்றும் பெறுமதி உருவாக்கம் தொடர்பில் கூடுதல் வெளிப்படைத்தன்மை கொண்டவர்களாக வருவதன் மூலம் எங்களது நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடுவதில் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை நாங்கள் கடைப்பிடித்தோம்.

## அறிக்கையிடும் நோக்கம் மற்றும் எல்லை

ஜனவரி 1, 2018 இலிருந்து டிசம்பர் 31, 2018 வரையான காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வணிக மாதிரி, செயற்படுதல் சூழ்நிலை, பொருள்சார் இடரேதுநிலைகள் மற்றும் வாய்ப்புகள், மற்றும் ஆளுகையும் செய்பணி ஆற்றுதல் தொடர்பான தகவல்களை இந்த அறிக்கை வழங்குகின்றது. எங்களது மூலோபாய வணிக அலகுகளின் செயலாற்றுகையை இந்த அறிக்கை உள்ளடக்குகிறது. மேலும், கணக்காய்வு அறிக்கையுடன் எங்களது வருடாந்த நிதிக் கூற்றுக்களையும் நாங்கள் வெளியிட்டுள்ளோம். எங்களது அனைத்து அறிக்கைகளிற்குமான அறிக்கையிடும் செய்முறை இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRS/LKAS), சிறந்த நிர்வாக ஆளுகைக்கான பொதுத் தொழில் முயற்சிகள் வழிகாட்டல்கள், 1971 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச் சட்டம், சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கைச் சபையால் பிரசுரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பு, நிலைபேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைக் கோவை என்பவற்றில் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் மற்றும் தேவைப்பாடுகளினால் நெறிப்படுத்தப்பட்டன.

## விடயம்சார் தன்மைக்கான எங்களது அணுகுமுறை

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலங்களுக்கு பெறுமதியை உருவாக்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆற்றல் தொடர்பான ஓர் அறிவார்ந்த மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு விரும்பும் தற்போதைய மற்றும் வருங்கால வாய்ப்புக் கொண்ட பங்குதாரர்களுக்கு தேவையான விடயம்சார்ந்த நலன்களை இந்த அறிக்கை வழங்கும் என நாம் நம்புகிறோம். இந்த அறிக்கையிலுள்ள அனைத்துத் தகவல்களும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெறுமதி உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்களுக்கு தொடர்புபட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் முயன்றுள்ளோம். எங்களது வணிகம் பற்றி விளங்கிக் கொள்ளுதல் (பக்கங்கள் 38 இலிருந்து 39), நிதி மற்றும் செயலாற்றுகை பற்றிய சிறப்புக்கூறுகள் (பக்கங்கள் 12 இலிருந்து 15) மற்றும் எங்களது நடவடிக்கைகள் மற்றும் எங்களது பெறுமதிச் சங்கிலி மீதான தாக்கங்கள் (பக்கங்கள் 54 இலிருந்து 69) என்பன இ.பெ.கூ எவ்வாறு பெறுமதி உருவாக்குகிறது என்பதைக் கண்டறிதல் மற்றும் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை இனங் காணுதலுக்கான அடிப்படையை உருவாக்குகின்றன. பெறுமதியை உருவாக்கும் எங்களது வல்லமை எங்களது செயற்படுதல் தொடர்பான பகுதி (பக்கங்கள் 42 இலிருந்து 46) மற்றும் ஏற்படும் இடரேதுநிலைகள் மற்றும் வாய்ப்புகள் (பக்கங்கள் 72 இலிருந்து 75) என்பவற்றுக்கான எங்களது பதிலிறுத்தலினால் தீர்மானிக்கப்படுகிறது. எங்களது செயலாற்றுகை (பக்கங்கள் 42 இலிருந்து 69), எங்கள் தலைமைத்துவ அணி (பக்கங்கள் 26 இலிருந்து 35), மற்றும் எங்கள் நிர்வாக ஆளுகை நடைமுறைகள் (பக்கங்கள் 78 இலிருந்து 81) ஆகியவையும் இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பங்குதாரர்களுக்கு நலன் அளிப்பவையாக இருக்கக்கூடிய மேலும் தகவல்கள், மற்றும் பக்கங்கள் 150 இலிருந்து 153 வரையான பக்கங்களிலுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக எங்களது வருடாந்த நிதிக் கூற்றுக்களும் வழங்கப்பட்டுள்ளது. எங்கள் கணக்காய்வுக் குழு ஒரு வருடாந்த அடிப்படையில் இணைந்த உறுதித் திட்டத்தின் நிறைவேற்றுதல் தொடர்பான உள்ளக உத்தரவாதத்தை பணிப்பாளர் சபைக்கு வழங்கியது. கணக்காய்வுக் குழு அறிக்கை பக்கங்கள் 84 இலிருந்து 85 இல் உள்ளன. கணக்காய்வாளர் நாயகம் எங்களது 2018 வருடாந்த நிதிக் கூற்றுக்களை (பக்கங்கள் 94 இலிருந்து 111) உறுதிப்படுத்தினார். எங்கள் 2018 ஒருங்கிணைந்த அறிக்கை, நிதிசார்ந்த மற்றும் நிதி சாராத ஆகிய இரண்டு குறிக்காட்டிகளையும் கொண்டுள்ள இச் செய்முறைகளைத் தெரிவிக்கிறது.

எங்களின் 2018 வருடாந்த அறிக்கை பின்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது:


பாத்தியதையுடையோர் உறவு
நம்பகத்தன்மையும் பூரணத்துவமும்
இணைப்புநிலை
இடரேதுநிலை மற்றும் வாய்ப்புகள்
வணிக மாதிரி
ஆளுகை
செயற்பாடு மற்றும் சமர்ப்பணத்தின் அடிப்படை
இ.பெ.கூ வருடாந்த அறிக்கை 2018
நிறுவனரீதியான கண்ணோட்டம் மற்றும் வெளிச் சுற்றாடல்
மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு
செயலாற்றுகை
கண்ணோட்டம்
பொருண்மை
சுருக்கத்தன்மை
மூலோபாயக் கவனமும் எதிர்கால நோக்கும்


Ceylon Petroleum Corporation
Aviation Function
Mattala
21

# கூட்டாண்மைத் தகவல்

| | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் |
| சட்ட வடிவம் | 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு பொதுக் கூட்டுத்தாபனம் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | 609, கலாநிதி. டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 |
| தொலைபேசி | +94 11 5455455 |
| தந்தி | "LANKA OIL" |
| கேபிள் | CEYPETCO |
| டெலக்ஸ்: | 21235 CEYPETCO CE |
| தொலைநகல் | +94 11 5455400 |
| மின்னஞ்சல் | cpcsec@ceypetco.gov.lk |
| இணையத்தளம | www.ceypetco.gov.lk |
| வரி செலுத்துநர் அடையாளம் | 409000053 |
| பெறுமதி சேர் வரி பதிவு இலக்கம் | 409000053 - 7000 |
| நிதியாண்டு | ஜனவரி 1 இலிருந்து டிசம்பர் 31 வரை |
| தலைவர் | திரு. ஜி.எஸ்.விதானகே |
| முகாமைத்துவப் பணிப்பாளர் | திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர |
| பணிப்பாளர்கள் | திரு. கே.ஏ. விமலேந்திரராஜா<br>திரு. ஆர்.எம்.விஜயசிங்க<br>திரு. எம்.வை.ஹுசைன்<br>திரு. டபிள்யு.ஆர்.பெரெரா<br>திரு.பி.பி.சமன்ரோஹித்த |
| துணை நிறுவனம் | வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள், எண்ணெய் நிறுவனம், கொலன்னாவை |
| கணக்காய்வாளர்கள் | கணக்காய்வாளர் நாயகம் |
| வங்கியாளர்கள் | மக்கள் வங்கி, கமர்ஷியல் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி |

# நிதிசார் சிறப்புக்கூறுகள்

## நிதிசார் செயலாற்றுகை மற்றும் நிலை

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 மீள்குறிப்பிடப்பட்டது* | 2018 | 2017 மீள்குறிப்பிடப்பட்டது* |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| வருமானம் (மொத்தம்) | **592,252.880** | 516,771.164 | **593,524.040** | 517,445.791 |
| மொத்த (நட்டம்)/இலாபம் | **(3,014.887)** | 26,988.549 | **(9,086.446)** | 20,745.196 |
| தொழிற்பாட்டு (நட்டம்)/இலாபம் | **(23,135.452)** | 7,200.962 | **(22,164.516)** | 10,166.249 |
| வருடத்திற்கான இலாபம்/(நட்டம்) | **(105,050.635)** | 1,055.634 | **(105,286.734)** | 3,585.552 |
| மொத்த முழு வருமானம் | **(104,769.598)** | 10,378.529 | **(104,948.951)** | 12,826.261 |
| மொத்த சொத்துகள் | **329,271.250** | 218,701.185 | **350,884.456** | 236,380.025 |
| நிகர சொத்துகள் | **(281,761.489)** | (176,991.892) | **(261,996.010)** | (156,830.059) |
| கடன்கள் & கடன்பெறல்கள் | **296,240.036** | 179,907.331 | **296,240.036** | 179,907.331 |

## விகிதங்கள் - கூட்டுத்தாபனம்

| | 2018 | 2017 | 2016 |
|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | **-0.58%** | 6.05% | 22.84% |
| செயற்பாட்டு இலாப விகிதம் | **-4.44%** | 1.61% | 19.24% |
| நிகர இலாப விகிதம் | **-20.16%** | 0.24% | 12.53% |
| மொத்த சொத்துகள் மீதான வருவாய் (ROTA) | **-7.03%** | 3.29% | 42.63% |
| கையிருப்புப் புரள்வு விகிதம் | **9.20** | 9.49 | 9.20 |
| சொத்துகள் புரள்வு விகிதம் | **1.58** | 2.04 | 2.22 |
| நடப்பு விகிதம் | **0.43** | 0.38 | 0.34 |
| விரைவு விகிதம் | **0.34** | 0.27 | 0.24 |
| வட்டிக் காப்பு | **(1.92)** | 0.68 | 7.14 |

## துறைசார் இலாபம்/(நட்டம்) (ரூ.மில்)

| போக்குவரத்து | மின்வலு உற்பத்தி | விமானப் போக்குவரத்து | தொழில்துறை |
|---|---|---|---|
| (96,042) | (10,669) | 3,841 | (74) |

| உள்நாட்டு பாவனை | விவசாயம் | கப்பல் எரிபொருள் | ஏற்றுமதிகள் |
|---|---|---|---|
| (14,619) | (19) | (68) | (1,064) |

## ஏனையவை (ரூ.மில்)

| நிலையான சொத்துகளின் முதலீடு | அரசாங்கத்திற்கு பங்களிப்பு | ஏனைய வருமானங்கள் | நிதி வருமானம் |
|---|---|---|---|
| 595 | 124,805 | 813 | 12,889 |

# செயலாற்றுகைச் சிறப்புக்கூறுகள்

## விற்பனை – ஆட்டோ எரிபொருள்கள் & மண்ணெண்ணெய் (லீ.மிலி)

| வருடம் | பெற்றோல் 95 | பெற்றோல் 92 | ஆட்டோ டீசல் | சுப்பர் டீசல் | மண்ணெண்ணெய் |
|---|---|---|---|---|---|
| **2018** | **203.08** | **1,337.38** | **2,120.15** | **97.91** | **259.16** |
| 2017 | 178.55 | 1,210.23 | 2,269.11 | 88.42 | 198.09 |
| 2016 | 144.86 | 1,123.33 | 2,216.64 | 74.68 | 167.41 |
| 2015 | 107.31 | 993.75 | 1,866.54 | 55.42 | 155.63 |
| 2014 | 71.65 | 831.36 | 2,077.16 | 36.62 | 138.51 |
| 2013 | 56.07 | 785.21 | 1,842.74 | 29.41 | 142.32 |

## சுத்திகரிப்பாலைச் செயற்பாடுகள்

| | உள்ளெடுக்கப்பட்ட கச்சா எண்ணெய் மெட்ரிக் தொன்களில் | வருடத்திற்கான நாட்கள் | ஆண்டின் நாளொன்றுக்கு தொன்கள் |
|---|---|---|---|
| **2018** | **1,675,245** | **327** | **5141** |
| 2017 | 1,646,041 | 351 | 4510 |
| 2016 | 1,746,180 | 362 | 4771 |
| 2015 | 1,692,074 | 324 | 4636 |
| 2014 | 1,760,170 | 334 | 4822 |

## துறைசார் செயலாற்றுகை (லீ.மிலி)

போக்குவரத்து



3,552.06

மின்வலு உற்பத்தி



866.32

விமானப் போக்குவரத்து



630.72

தொழில்துறை



147.73

உள்நாட்டு பாவனை



281.28

விவசாயம்



0.13

கப்பல் எரிபொருள்



7.60

ஏற்றுமதிகள்



126.44

## ஏனையவை

| மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை | SP முனையத்தால் கையாளப்பட்ட அளவு (லீ.மிலி) | மொத்த சேவை அனுபவங்கள் (வருடங்கள்) |
|---|---|---|---|
| 2,770 | 1,278 | 489.34 | 39,200 |



# தலைவரின் செய்தி



# தலைவரின் செய்தி

பலவீனமான விலைகள், வினைத்திறனின்மை, கட்டுப்பாட்டுத் தடைகள் மற்றும் துறை மீள்கட்டமைத்தல் என்பவற்றால் குறிப்பிடப்பட்ட பல சவாலான வருடங்களின் பின்னர், உலக எண்ணெய் மற்றும் எரிவாயு கைத்தொழிலின் எதிர்காலம் தொடர்பாக ஒரு அதிகரித்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பீப்பாய் ஒன்றுக்கு $40 மற்றும் $50 என்பவற்றின் நடுப்பகுதிகளிற்கிடையில் தேங்கிக் கிடந்த எண்ணெய் விலைகள் அதிலிருந்து வெளி நகர்ந்து ஓரளவிற்கு ஸ்திரமான $70 இற்கு மேலாக விற்பனை செய்யப்படுவது அதிகரித்தன.

இருந்தபோதிலும், ஒரு சில வருட காலங்களில் விநியோக நெருக்கடி பற்றி ஒரு சாத்தியமான கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச சக்தி முகவர் (IEA) அதே போன்று பல முன்னணிக் கூட்டாண்மை நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரிகள் அதிகரிக்கும் கேள்வி மற்றும் பல முக்கியமான செயல்திட்டங்களில் முதலீட்டுத் தாமதம் என்பன குறைந்த விநியோகச் சாத்தியத்தின் அபாயம் உள்ளதைக் கருதுகிறது என எச்சரித்துள்ளனர்.

## உலகச் சுற்றாடல்

கூட்டுத்தாபனத்தின் ஆணை மற்றும் தலைமைத்துவ நிலை என்பவற்றின் அடிப்படையில், இந்த உலக ரீதியிலான அபிவிருத்திகள் இ.பெ.கூ மற்றும் ஒரு முழுமையான வகையில் நாடு மீதிலும் வெளிப்படையான ஒரு தாக்கத்தைக் கொண்டிருந்தது. விலைகளில் மேல் நோக்கிய ஒரு நகர்வு இருந்ததுடன் அதன் பெருமளவிற்கான சுமை இ.பெ.கூ ஆல் தாங்கப்பட்டதுடன் அது உலக விலை மாற்றங்கள், அதிகரித்த கேள்வி மற்றும் பண மதிப்பிறக்கத்தின் தாக்கங்கள் என்பவற்றைக் கையாள வேண்டியிருந்தது. இதனால், வருமானம் மற்றும் இலாப எண்ணிக்கைகள் என்பன இந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பிரதிபலிப்பால் ஏற்பட்டவையாகும்.

விசேடமாக ஆசியாவின் பொருளாதார மேலேழுச்சியினால், சக்திக்கான கேள்வியில் ஒரு தொடர்ச்சியான அதிகரிப்பு உள்ளது. விசேடமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில், சுத்தமான புதுப்பிக்கத்தக்க உற்பத்திகள் நோக்கி ஒரு ஸ்திரமான நகர்தலை உலக சக்திக்கான கலவைக்கூட்டு கண்டது. இலங்கை இப்போதுள்ளவாறு ஓர் எண்ணெய் உற்பத்தியாளராக இல்லாத போதிலும், நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள் கொள்கை அனுகூலங்கள் இதே இந்தக் குறிக்கோள்களைப் பின்பற்றுவதைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. இந்த எதிர்பார்க்கப்பட்ட நகர்வு எதிர்வரும் காலத்தில் மேலும் வலுவாக புதைபடிவ எரிபொருள் கைத்தொழிலை அநேகம் பாதிக்கும். எனினும், ஒரு மானிய முறை, உலக விலைத் தளும்பல் மற்றும் பலவீனமான மற்றும் வீழ்ச்சியடையும் நாணயமாற்று வீதங்கள் என்பவற்றின் பாதகமான தாக்கம் என்பவற்றால் கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் கூட, புதைபடிவ எரிபொருள் இலங்கையின் சக்திக்கான கலவைக்கூட்டின் மிக முக்கிய அம்சமாக தொடர்ந்து இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்பதுடன் அதனால் முழுமையான சக்தித் தேவைகளைத் திருப்திப்படுத்துதல் மற்றும் கட்டுப்படி விலைகளில் உயர் தரத்திலான உற்பத்திகளின் விநியோகம் என்பதன் அடிப்படையில் இ.பெ.கூ இத்துறையில் ஒரு முக்கிய பாத்திரத்தை தொடர்ந்தும் வகிக்கும்.

## உள்நாட்டுச் சூழ்நிலை

2017 இல் 3.4% இலிருந்து மீளாய்வின் கீழுள்ள வருடத்தில் 3.2% இற்கு நகர்ந்து, வருடா, வருடத்திற்கான பொருளாதார வளர்ச்சி அண்ணளவாக நிலையாக இருந்ததை மத்திய வங்கி புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அரசியல் நிச்சயமற்ற தன்மை, வருடத்தின் கடைசிக் காலாண்டுக்கான வளர்ச்சி வீதம் மோசமான 1.8% இற்கு வீழ்ச்சியடைந்ததைக் கண்டது. இதே காலப் பகுதியில் இலங்கை ரூபாய் அமெரிக்க டொலரிற்கு எதிராக 16.4% ஆல் வீழ்ச்சியடைந்தது, உலக ரீதியாக டொலரின் பொதுவான வலுவடைதலை, அரசாங்க பிணைகள் சந்தையிலிருந்து வெளிப்பாய்ச்சல்களையும் மற்றும் அந்நியச் செலவாணிச் சந்தையில் இறக்குமதிச் செலவிற்கான கேள்வியையும் பிரதிபலித்து. ஆகையால், மொத்தத்தில், மாறாத் தன்மையான நிதிக் கொள்கை மூலமான முந்திய வருடத்தின் இலாபம் பெரிதும் வீணாகியது.

இந்த நிகழ்வுகள் இவ்வாறிருந்தபோதிலும், 2018 இல், நிகர வருமானத்தின் 23.93% ஆன ஒரு தொகையான, ரூ.125 பில்லியன்களை செலுத்தியும் மற்றும் அபிவிருத்திக்கு உந்துதலளித்தும் மற்றும் மானிய விலைகள் வழியாக நாட்டின் சக்திக்கான கேள்விகளைத் திருப்தி செய்வதற்கு உதவுவதின் மூலமாக ஒரு கண்ணியமான தரமான வாழ்க்கைக்கு பங்களித்து தேசிய பொருளாதாரத்திற்கான ஒரு முக்கிய பங்களிப்பவராக இ.பெ.கூ தொடர்ந்துமிருக்கின்றது.

அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிக்கு வசதியளிக்கையில் பிரஜைகளின் வாழ்க்கைகள் மீதான சுமையை குறைப்பதற்கான முயற்சிகளுக்கு உதவுவதற்கு ஆணைப்படுத்தப்பட்டு, இ.பெ.கூ ஒரு கட்டுப்பட்டு இயங்கும் சூழலில் இந்தச் சவால்களை சந்திப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. மீளாய்விற்கு உட்பட்ட வருடத்தில் இயல்பானதும் மற்றும் அயர்வின்றிய முயற்சிகள் இருந்த போதிலும், இலாபத்திலான வீழ்ச்சிப் போக்கு தொடர்ந்தது.

## செயலாற்றுகை

இவ் வருடத்தின் போது அண்ணளவாக 1,675,000 மெட்ரிக் தொன் கச்சா எண்ணெய் சுத்திகரித்தல் செய்முறைப்படுத்தப்பட்டது. எண்ணெய் மற்றும் எரிவாயு உட்பட, கேள்வி 0.4% ஆல் அதிகரித்த வேளையில், மேற்குறிப்பிட்ட வெளிக்காரணிகள் காரணமாக கிரயங்கள் ஒரு 28% ஆல் அதிகரித்தது. சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் கேள்வியிலான இடைவெளி நாட்டில் விநியோகத் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு முடிவுப் பொருட்களின் இறக்குமதி மூலமாக நிரப்பப்பட்டது.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில், உள்நாட்டு விற்பனைகள் முன்னணி வருமான மூலமாகத் தொடர்ந்துமிருந்தன. 2018 மே மாதத்தில் அரசாங்கத்தினால் ஒரு கிரய பிரதிபலிப்பு விலைப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டமையைக் குறிப்பிடுவது சிறந்ததாகும் என்பதுடன் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் குறிப்பிடப்பட்ட கட்டுப்படுத்தல் தேவைப்பாடுகளின்படி மாதாந்தம் திருத்தியமைக்கப்பட்டன. அதன்படி, மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் போது உலக சந்தையிலுள்ள விலைத் தளும்பல்களுடன் சமாந்தரமாக பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் மாறற்றமடைந்தன.

சர்வதேச எண்ணெய்ச் சந்தையில் உள்ள தளும்பல்கள் காரணமான நட்டங்களை குறைப்பதில் உதவி, விலைப் பொறிமுறை கூட்டுத்தாபனத்திற்கு நேர்மறையான வகையில் பங்களித்தது. 2018 வருடத்தில் ஆட்டோ டீசல் மிகவுயர்ந்த வருவாய் ஈட்டுவதைத் தொடர்ந்த வேளையில் பெற்றோல் 92 இரண்டாவது பெரிய வருமானம் ஈட்டுவதாக அமைந்தது. 2017 வருடத்துடன் ஒப்பிடுகையில் பெற்றோல் 92 இற்கான கேள்வி 10% ஆல் அதிகரித்தது. பெற்றோல் 95 மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றுக்கான கேள்வியின் அதிகரிப்பு கூடுதல் வினைத்திறனான மற்றும் சுற்றுச்சூழலிற்கு சிநேகமான எரிபொருளிற்கான நுகர்வோரின் விருப்பைச் சுட்டிக்காட்டுகிறது.

மீளாய்வின் கீழுள்ள வருடத்தில் பாரதூரமான நிதிசார் நட்டங்களை ஏற்படுத்துவதற்கு மற்றும் நாட்டின் சக்திப் பாதுகாப்பை அச்சுறுத்தும் அல்லது இ.பெ.கூ இன் அல்லது நாட்டின் பெயரைக் கெடுப்பதற்கு முடியுமான தவறுகள் அல்லது முட்டுக்கட்டைகளை தவிர்ப்பதற்குத் தேவையான அவசர கவனத்திற்குரிய பல விடயப் பரப்புகளை கூட்டுத்தாபனம் இனம் கண்டது. தேசத்திற்கு ஒரு மேம்பட்ட சேவையை வழங்குவதற்கான இ.பெ.கூ இன் திட்டத்துடன், நடைமுறையிலுள்ள மூலதனச் செயல்திட்டங்களுடன் சொத்து, பொறித்தொகுதி, உபகரணப் (PPE) பெறுமதி ரூ.595 மில்லியன்களால் அதிகரித்தது. வருடத்தில் முக்கியமான பல செயல்திட்டங்கள் திருப்திகரமாக முன்னெடுக்கப்பட்டன. அதே சமயம், சிறிய செயல்திட்டங்கள் மற்றும் மூலதனக் கொள்வனவுகளையும் இ.பெ.கூ பூர்த்தி செய்வதற்கு முடிந்தது.

வருடத்தில் பூர்த்தி செய்த பெரும் செயல்திட்டங்கள் சுத்திகரிப்புக்காக ஒரு தாரை கொதிகலனின் பொருத்துதல், சப்புகஸ்கந்த விநியோக முனையத்தின் தன்னியக்கவாக்கம் மற்றும் ஜெட் A -1 விநியோக வசதியின் சேர்த்தல் மற்றும் கொலன்னாவை CPSTL இல் எண்ணெய் வடிகட்டி கொள்கலன்களின் பொருத்துதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன..

முந்திய வருடங்களில் உள்ளவாறு, கூட்டுத்தாபனம் ஒரு காலாண்டு அடிப்படையில், நிதிக் குறிக்காட்டிகளின் தொடர்ச்சியான கண்காணித்தல் அப்பியாசிக்கப்படுவதைத் தொடர்ந்ததுடன் மேற்குறிப்பிட்ட வெளிக் காரணிகளின் பாதிப்புத் தாக்கங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தது.

## எதிர்காலக் கண்ணோட்டம்

செயற்படுவதற்கு கிடைக்கப்பெற்ற சூழலில், கடுமையான சவால்கள் எங்களுக்கு ஒன்றும் புதிதானவையாக இருக்கவில்லை. சவால்களின் அளவுகளைப் பொருட்படுத்தாது எதிர்காலத்தை எதிர்கொள்வதற்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம். இலங்கையின் சக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி மற்றும் நுகர்வோர்களுக்கு தரமான பெற்றோலிய உற்பத்திகளின் ஒரு தொடர்ச்சியான விநியோகத்தை வழங்குவதற்கான எங்களது வலுவான பற்றுறுதியில் நாங்கள் பெருமை கொள்கிறோம். சர்வதேச தரங்களை திருப்திப்படுத்துவதற்கு நாடு முழுவதுமான எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தரமுயர்த்துவதன் மூலம் அவற்றின் வினைத்திறனை மேம்படுத்தி, எங்களது பெறுமதிச் சங்கிலியை நாங்கள் தொடர்ந்து அதிகரிக்கிறோம். ஓயாது மாறும் தன்மை கொண்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச வணிகச் சூழல் மற்றும் உலக மற்றும் உள்நாட்டு, பொருளாதார மற்றும் அரசியல் என்பவற்றின் பல்தன்மை நெருக்கடிகளின் தாக்கங்கள் பற்றி நாங்கள் அறிவு கொண்டவர்களாக இருந்த போதிலும் எங்களது சுத்திகரித்தல் வசதிகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் விரிவுபடுத்துவதற்கும் நாங்கள் தொடர்வோம். நாங்கள் கடினமான தெரிவுகளை மேற்கொள்வோம், ஆனாலும் இ.பெ.கூ தனது நிலையை உறுதிப்படுத்தி மற்றும் நாடு தங்கியுள்ள அபிவிருத்தியின் ஒரு சுழல்முனையாக இருப்பதைத் தொடரும் என நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்.

## நன்றியுரை

உள் மற்றும் வெளிச் சுற்றாடல்களினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தத்தின் மத்தியிலும் இ.பெ.கூ இன் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு அயராது உழைத்த, முகாமைத்துவப் பணிப்பாளரால் வழிநடத்தப்பட்ட இ.பெ.கூ இன் கூட்டாண்மை அணியினால் இடப்பட்ட முயற்சிகளுக்கு எனது மிகுந்த பாராட்டுதல்களைத் தெரிவிப்பதற்கு நான் விரும்புகிறேன். தொழில்சார் தன்மையான மற்றும் நேர்மையான அணுகுமுறை இந்தத் துறையில் சவால்களை வெற்றி கொள்வதற்கு எங்களை இயலச் செய்தமை எங்களது அனைத்து ஈடுபடுதலிலும் பிரதிபலிப்பது தொடரும் என்பதுடன் இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் நன்மையை உறுதிப்படுத்துவதற்கு அளிக்கப்பட்ட ஆதரவிற்காக எனது கூட்டாண்மை அணிக்கு நான் மிகவும் நன்றியுடையவராகிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆலோசனை, வழிகாட்டுதல் மற்றும் நெறிப்படுத்தலுடன் கௌரவ அமைச்சர், கௌரவ பிரதி அமைச்சர் மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் எங்களைப் பின்னின்று ஆதரித்தனர், என்பதுடன் அவர்களது ஆதரவு மற்றும் அர்ப்பணிப்புக்காக கூட்டுத்தாபனத்தின் சார்பில் எனது உண்மையான நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

எனது வல்லமைமிக்க, அனுபவம் வாய்ந்த மற்றும் மிகுந்த ஆற்றல் மிக்க சக சபை உறுப்பினர்கள், அவர்களின் மேலாண்மைப் பொறுப்பில் அப்பழுக்கில்லாதவர்களாக இருந்தனர். அவ்வாறே, கூட்டுத்தாபனத்தின் முழுப் பணியாளர்களும் இருந்தனர், மிகவும் சவால் மிக்க ஒரு வருடத்தினூடாக கூட்டுத்தாபனத்தை முன்கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் முன்னின்று, இ.பெ.கூ ஒரு வெற்றிகரமான அரச தொழில் முயற்சியாக இயங்குவதை அவர்கள் உறுதிப்படுத்தினர். இந்த விலை மதிப்பிட முடியாத மனித மூலதனம், எதிர்கால சவால்கள், அவை எந்தளவிற்கு வலுவானவையாக இருந்தாலும் அவற்றை எதிர்கொண்டு நாங்கள் வெற்றிகொள்வதை இயலச் செய்வார்கள் என நான் நம்பிக்கை கொள்கிறேன்.

நன்றி



ஜி.எஸ்.விதானகே
தலைவர்


LANKA FILLING STATION
HEIYANTHUDUWA




# முகாமைத்துவப் பணிப்பாளரின் மதிப்புரை

# முகாமைத்துவப் பணிப்பாளரின் மதிப்புரை

இ.பெ.கூ, இத்தொழில் துறையில் அதன் தனித்துவமான நிலை அதே போன்று ஆணைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பற்றுறுதிகளின் அடிப்படையில் இலங்கையின் ஒட்டுமொத்தப் பொருளாதாரம் காரணமாக முகங் கொடுக்கின்ற சவால்களின் ஒரு மோசமான நிலையை 2018 ஆம் ஆண்டு கண்டது. இருந்தபோதிலும், கூட்டுத்தாபனம் தனக்கு நிர்ணயித்துக் கொண்ட அதன் அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் சமரசம் செய்த கொள்ளாது செயற்பாடுகளை சீரமைப்புச் செய்வதில் அதிக உறுதிப்பாட்டுடன் பதிலுரைத்தது.

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிப்பதற்கான அதன் ஆணையை இ.பெ.கூ நிறைவேற்றிய வேளையில், காபன் உமிழ்வுகளைக் குறைப்பதன் மூலம் அதன் சமூகப் பொறுப்பை உறுதிப்படுத்துவதற்கு தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டது.

வருடத்தின் கடைசி இரண்டு மாதங்களிலான வீழ்ச்சிக்கு முன்பாக 2018 இன் போது சர்வதேச கச்சா எண்ணெய் விலைகள் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்தன. 2018 ஆகஸ்ட் நடுப்பகுதியிலிருந்து ஒக்டோபர் முற்பகுதி வரை எண்ணெய் விலைகளில் ஒரு மேல்நோக்கிய போக்கை ஏற்படுத்திய அமெரிக்காவின் ஈரான் மீதான வர்த்தகத் தடை சம்பந்தமாக விநியோகம் தொடர்புபடுகிறது. மிகுந்த உயர் மட்டத்திற்கு உலக பொருளிருப்புகளைக் கட்டியெழுப்பியதும் மற்றும் மெதுவான உலகப் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்ததாக, அமெரிக்காவின் அதிகரித்த மட்டத்திலான கச்சா எண்ணெய் உற்பத்தியும் 2018 இன் இறுதியில் விலைகள் மீது கீழ்நோக்கிய அழுத்தத்தைப் பிரயோகித்தது. அதன்படி, 2017 இல் அமெரிக்க டொலர்கள் 54.76 உடன் ஒப்பிடுகையில், 2018 இல் கச்சா எண்ணெய் (பிரெண்ட்) பீப்பாய் ஒன்றுக்கு அமெரிக்க டொலர்கள் 71.76 ஆக இருந்தது. பொதுமக்கள் உட்பட, பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்புகளையும் போதுமான வகையிலும் மற்றும் ஒப்புரவு பிரதிபலிக்கும் வகையிலும் கவனம் செலுத்துவதற்கு மே மாத நடுப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட விலைச் சூத்திரத்தின் மூலமான சரிப்படுத்துதல் இந்தத் திசையில் எடுக்கப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைந்தது.

## செயற்படும் சூழல்

மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்பட்டவாறு, 2018 இல் பொருளாதார வளர்ச்சி 3.2% ஆக இருந்தது, இது நாட்டினால் முகம் கொடுக்கப்பட்ட உலக மற்றும் உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக முன்னைய வருடத்தின் 3.4% விடக் குறைவானதாக இருந்தது. உள்நாட்டு பெற்றோலிய விலைகளுக்கான விலைச் சூத்திரத்தின் அறிமுகத்துடன் சேர்ந்ததாக ரூபாயின் கடுமையான மதிப்பிறக்கம் என்பவற்றின் மத்தியிலும், பணவீக்க வீதம் 2017 வருடத்தின் 6.6% உடன் ஒப்பிடுகையில் 2018 இல் 4.3% எனும் குறைந்த தனியெண் மட்டத்தில் ஸ்திரமாக நங்கூரமிட்டிருந்தது. நாட்டின் வெளிவாரித் துறையின் பொருளாதாரம் உலக மற்றும் உள்நாட்டுக் காரணிகள் ஆகிய இரண்டினாலும் வருடத்தின் போது ஸ்திரமற்று இருந்தது. ஏற்றுமதியிலிருந்தான வருமானங்களில் அதிகரிப்பை விட இறக்குமதிச் செலவுகளின் வளர்ச்சி, புலம்பெயர் தொழிலாளர்களின் பணம்அனுப்புதல்களில் தேக்கம் மற்றும் அதிகரிக்கும் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் என்பவற்றால் வர்த்தகப் பற்றாக்குறை மேலும் விரிவாகியது. இறக்குமதி எரிபொருள் விலைகளின் அதிகரிப்பு சென்மதி நிலுவையை அகலப்படுத்துவதற்கு மேலும் அழுத்தம் பிரயோகித்தது. வெளிவாரியான காரணிகள் இலங்கை ரூபாயில் ஒரு கடுமையான மதிப்பிறக்கத்தை ஏற்படுத்தின என்பதுடன் அமெரிக்க டொலருக்கு எதிரான மொத்த மதிப்பிறக்கம் 2018 இல் 16.4 சதவீதமாக இருந்தது.

## செயலாற்றுகை

மீளாய்வின் கீழான வருடத்தில், 2017 வருடத்திற்கு எதிராக கூட்டுத்தாபனத்தின் வருவாய் 14.6% ஆல் அதிகரித்தது. பெற்றோல் மற்றும் டீசலுக்காக மே 2018 இல் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கிரயப் பிரதிபலிப்பு நடைமுறைச் சூத்திரத்தைக் குறிப்பிடுவது சிறந்ததாகும். மே மாதத்திலிருந்து பெற்றோலிய விலைகளின் திருத்தியமைத்தலுக்கு இது இயலச்செய்தது. விலைச் சூத்திரம் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கையில், பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள், சர்வதேச எரிபொருள் சந்தையில் உள்ள விலைத் தளும்பல்களுக்குச் சமாந்தரமாக திருத்தப்பட்டன.

மிகவும் சவாலுள்ள வருடங்களிலொன்றாக, இ.பெ.கூ 2018 ஆம் ஆண்டுக்காக ரூ.105 பில்லியன் நட்டத்தை பொறுக்க வேண்டியிருந்தது. நாணயமாற்று வீதத்தின் கடுமையான பெறுமானத் தேய்வுடன் இணைந்த சர்வதேச எண்ணெய் விலைகளின் உயர்வு கூட்டுத்தாபனத்தை நட்ட நிலைமைக்கு இட்டுச் சென்றது. சந்தையில் அமெரிக்க டொலர்களின் இல்லாமை கடன் நிலைமை அதிகரிப்பதற்கும் மற்றும் அதன் காரணமாக நிதிக் கிரயம் அதே போன்று நாயணமாற்று வீத வேறுபாடு என்பவற்றை அதிகரிப்பதற்கும் ஏதுவாக எதிர்மறையான வகையில் பாதிப்பை ஏற்படுத்தியது.

மிகவுயர்ந்த வருமானத்தை உருவாக்குகின்ற, போக்குவரத்துத் துறை, ரூ.413 பில்லியன்களை பங்களித்தது, இது முன்னைய

## உள்நாட்டு விலைகள்




வருடத்தை விட 20.9% முன்னேற்றமாகும். எவ்வாறாயினும், கேள்வி மற்றும் விலைகளிலான அதிகரிப்பின் காரணமாக, கூட்டுத்தாபனம் ஒட்டுமொத்தமாக ரூ.96 பில்லியன் நட்டத்தை ஈட்டியது. எரிபொருள் விலை திருத்த அடிப்படையில் விலைச் சூத்திரம் உதவிய போதிலும், இது அனைத்து நிதிக் கிரயச் செலவுகளை உள்ளடக்கவோ அல்லது நாணயமாற்று வீத வேறுபாட்டிற்கு சரிசெய்யவோ இல்லை.

மின் உருவாக்கத்திற்கான கேள்வி சரிவடைந்ததுடன் மின்வலுத்துறைக்கான எரிபொருள் விற்பனையில் ஒரு 33.6% வீழ்ச்சியை ஏற்படுத்தியது. விமான சேவைத் துறை நம்பகமான வகையில் செயலாற்றி, முன்னைய வருடத்தை விட இலாபத்தில் ஒரு 26.3% பதிவுசெய்த வேளையில் கைத்தொழில் துறை இக் காலத்தின் போது வருமானத்தில் ஒரு 7.4% அதிகரிப்பைக் காட்டியது. வீட்டுப்பாவனைத் துறை, எதிர்பார்க்கப்பட்டவாறே, நுகர்வோர் நட்புரீதியான தேசிய விலைக் கொள்கைகளின் அடிப்படையில் நட்டங்களை ஏற்படுத்துதைத் தொடர்ந்தது.

உலக எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்களால் கூட்டுத்தாபனம் கணிசமான விதத்தில் தாக்கம் பெற்றது. சர்வதேச பெற்றோலிய விலைகள் வருடத்தின் போது 31% ஆல் அதிகரித்ததுடன் அதனால் பெற்றோலிய உற்பத்திகளை நட்டத்தில் விற்பனை செய்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு, லீற்றர் ஒன்று ரூ.70 எனும் ஓர் அதிகபட்ச மானிய விலையில் மண்ணெண்ணையை கூட்டுத்தாபனம் வழங்குகிறது என்பது கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இது ஒரு செயற்பாட்டு நட்டமாக ரூ.14,735 மில்லியன்களை ஏற்படுத்தியது. அத்தோடு, இலங்கை மின்சார சபை அதிக மழைக் காலநிலை காரணமாக, முழுமையான சுத்திகரிப்பு உற்பத்திகளை கொள்வனவு செய்யாமையின் காரணத்தால், இ.பெ.கூ உலை எண்ணெய் மற்றும் நப்த்தா (naphtha) என்பவற்றை மீளேற்றுமதி செய்ய வேண்டியேற்பட்டதுடன், இதன் காரணமாக ரூ.1,064 மில்லியன் நட்டத்தை ஏற்படுத்தியது.

நாணயமாற்று வீத வேறுபாடு கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை இடையுறு செய்வது தொடர்ந்தது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் நாணயமாற்று வீதம் (வருட இறுதி வீதம்) ரூ.29.45 அல்லது வருடத்தின் 19% ஆல் மதிப்பிழந்தது. கூட்டுத்தாபனம் உள்ளாக வேண்டிய இழப்பு ரூ.82,717 மில்லியன்கள் தொகையாக இருந்தது. கூட்டுத்தாபனத்தின் மொத்த நட்டத்தின் 78% இற்கும் அதிகமானது நாணயமாற்று வீத வேறுபாட்டினால் ஏற்பட்டதிற்கு உரியதாகும்.

வங்கிக் கடன்களின் ஓர் அதிகரிப்பின் காரணமாக, 2017 வருடத்துடன் ஒப்பிடுகையில் வட்டிச் செலவீனங்கள் ரூ.1,534 மில்லியன்கள் அல்லது 15% ஆல் அதிகரித்தது. சந்தையில் வெளிநாட்டு நாணயம் கிடைக்காமையினால், இரண்டு அரச வங்கிகளுடனான கடன் தொகை ஒன்றுதிரண்டது. எவ்வாறாயினும். வெளிநாட்டு நாணயம் இல்லாமை காரணமாக திரட்டப்பட்ட நாளாந்த வருவாய்கள், குறுகிய கால முதலீடுகளுக்கு திசை திருப்பப்பட்டதுடன், பதிலுக்கு அவை நிலைமையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தணிப்பதற்கு உதவின.

மூலதனச் செயல்திட்டங்களிலான முதலீடு ரூ.595 மில்லியன்களால் அதிகரித்ததுடன் வருடத்தின் போது பல முக்கியமான செயல்திட்டங்கள் முடிக்கப்பட்டன. உதாரணத்திற்கு, சர்வதேச நியமங்களைத் திருப்திப்படுத்தும் உயர்ந்த தரத்திலான விமான எரிபொருள் உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்காக கொலன்னாவை முனையத்தில் ஜெட் A-1 வடிகட்டி கொள்கலன் பொருத்தப்பட்டது. சந்தையில் தாருக்கான அதன் பங்கை மீளக் கைப்பற்றுதல் மற்றும் அதிகரித்தல் ஆகிய குறிக்கோளுடன் வருடத்தில் எண்ணெய் சுத்திகரித்தல் மூலமாக பெருமளவில் தார் உற்பத்தியை இ.பெ.கூ மீளவாரம்பித்தது. சுத்திகரித்தலின் ஒரு பெரும் முழுமையான பழுதுபார்த்தல் வெறும் 35 நாட்களினுள் செய்யப்பட்டது. ஜனவரி 2018 இல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானசேவை வசதி மற்றும் குழாய் முனை முறைமையின் அபிவிருத்தி மற்றும் தரமேம்படுத்தலையும் நாங்கள் ஆரம்பித்தோம்.

வருடங்களுக்கு மேலாக ஸ்தாபிக்கப்பட்ட பின்வரும் தரநியமங்களான நேர்மை மற்றும் நன்மதிப்பு அதே போன்று கட்டுப்பாட்டுக் கடப்பாடு என்பன அதிக முக்கியத்துவமான விடயங்களாக கருதிக் கையாள்வதை கூட்டுத்தாபனம் தொடர்ந்தது. தொழில்ரீதியான உறவுகள், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மற்றும் மிக முக்கியமாக தேசம் மற்றும் அதன் மக்களின் அபிவிருத்திச் சிறப்புரிமைகளுக்கு ஆதரவளித்தல் என்பவற்றில் உயர்ந்த தரநியமங்களைப் பேணுவதைக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தது. முழு நாட்டையும் உள்ளடக்கும் சேவைகளை மட்டும் கூட்டுத்தாபனம் வழங்குவதன்றி எல்லா சமயத்திலும் பொருளாதார அபிவிருத்திக்கும் அது வசதியளிக்கின்றது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் நாட்டிலுள்ள மிகப் பெரிய வரி செலுத்துவோர்களில் ஒன்றாக கூட்டுத்தாபனம் இருந்ததுடன் அதற்கான அதன் பங்களிப்பு ரூ.124,805 மில்லியன்களாகும், அது எங்களது மொத்த நிகர வருமானத்தின் 23.93% ஆகும்.

## நன்றி பாராட்டுதல்

நாங்கள் எதிர்காலம் குறித்து நலன்நோக்குபவர்களாகவும் உண்மையில் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பதுடன், இது எங்களனைவருக்குமாக நாங்கள் நிர்ணயித்துக் கொண்ட தரநியமங்களிலிருந்து எழுகிறது. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை உறுதிப்படுத்தி, அனைத்து வசதிகள் மற்றும் செய்முறைகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு, நாங்கள் சிறந்த பொறிமுறைகளை இட்டுள்ளோம். எல்லா சமயங்களிலும் எனக்கு ஆதரவளித்ததும் மற்றும் நாங்கள் செயற்படுவதற்கு வேண்டிய மாறுந் தன்மை கொண்ட உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சூழல், அதேபோன்று பெற்றோலியத் தொழில்துறையின் மீதான உள்நாடு மற்றும் சர்வதேசம் ஆகிய இரண்டினதும், பல்வகை நெருக்கடிகள் பற்றி எப்போதும் அறிவு கொண்டதான கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ அணி குறித்து நான் பெருமைப்படுகிறேன். கூட்டுத்தாபன எதிர்காலத்தின் மேனிலைக்கான அவர்களது பற்றுறுதி போற்றத்தக்கது. உண்மையில், இதே கூற்று அனைத்து வகைகளைச் சேர்ந்த எங்களது முழுப் பணியாளர்கள் குறித்தும் சொல்லப்படுவதற்கு முடியும். எதிர்காலத்திற்குமான அனைத்து சவால்களையும் வரவேற்று எதிர்கொள்வதைக் கூட்டுத்தாபனம் தொடரும் என நான் நம்பிக்கை கொள்கிறேன்.

நன்றி.

என்.ஆர்.ஆர்.ஜயசேகர
முகாமைத்துவப் பணிப்பாளர்


CEYPETCO




# எமது தலைமைத்துவம்

# எமது தலைமைத்துவம்



திரு.ஜி.எஸ்.விதானகே
தலைவர்



திரு.என்.ஆர்.ஆர். ஜயசேகர
முகாமைத்துவப் பணிப்பாளர்



திரு.ஆர்.எம்.விஜேசிங்க
பணிப்பாளர்



திரு.டபிள்யு.ஆர்.பெரேரா
பணிப்பாளர்



திரு.கே.ஏ.விமலேந்திரராஜா
பணிப்பாளர்



திரு.பீ.பீ.சமன்ரோஹித்த
பணிப்பாளர்



திரு.எம்.வை.ஹுசைன்
பணிப்பாளர்

# பணிப்பாளர்கள் சபை



### திரு. ஜி.எஸ். விதானகே
**தலைவர்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராகவும் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமான இலங்கை பெற்றோலிய ஸ்ரோரேஜ் டேர்மினல்ஸ் (CPSTL) இன் தலைவர் மற்றும் சபை உறுப்பினராகவும் திரு.ஜி.எஸ்.விதானகே நியமிக்கப்பட்டார். அவர் ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட் மற்றும் ஸ்ரீ லங்கன் கேட்டரிங் லிமிட்டட் என்பவற்றினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராவர். ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக் கழகத்திலிருந்து முகாமைத்துவத் துறையில் பெற்ற விஞ்ஞான இளமானிப் பட்டத்தையும் மற்றும் கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். பொது நிர்வாக அமைச்சில் ஒரு உதவிப் பணிப்பாளராக 1984 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்ததுடன் 1990 இல் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார் மற்றும் அதன் பின் பாதுகாப்பு அமைச்சில் உதவிச் செயலாளர் பதவியை ஏற்றுக்கொண்டார். 1995 இல், ஊடகம், சுற்றுலா மற்றும் விமானசேவைகள் அமைச்சின் உதவிச் செயலாளராக திரு. விதானகே நியமிக்கப்பட்டதுடன் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டார். 2002 இல், அவர் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன் 2004 இல், அவர் சிவில் விமானசேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டார். 2012 வரை குறித்த பதவி நிலையில் சேவையாற்றிய, திரு. ஜி.எஸ்.விதானகே புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு செயலாளராக கடமையை ஏற்பதற்கு பதவி உயர்த்தப்பட்டார். பின் 2015 இல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டு, 2017 இல் மீண்டும் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்கும் வரையும் மற்றும் அவரது ஓய்வுபெறுதல் வரையும் தனது கடமைகளை மேற்கொண்டார். தனது தொழில் முழுவதிலுமாக இலங்கை நிர்வாக சேவைகளின் ஒரு பிரசித்தம் பெற்ற ஓர் அதிகாரியாக அவர் இருந்ததுடன், மேற்குறித்த பதவிகளை வகிக்கையில், திரு.விதானகே வெளிநாடுகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு பலவற்றுக்கு தலைமை தாங்குவதற்கும் நியமிக்கப்பட்டார். 2006 மே மாதத்தில், கொழும்பில் நடத்தப்பட்ட சார்க் பிராந்திய பல்மாதிரி போக்குவரத்து கருத்தரங்கின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். மேலதிகமாக, 2016 இல், அவர் 5 ஆவது கொழும்புச் செய்முறையின் அமைச்சர்கள் கலந்தாலோசித்தலை (பணியாளர்களை அனுப்பும் நாடுகள் மத்தியில் பிராந்திய கலந்தாலோசித்தல் செய்முறை) ஒழுங்கு செய்ததுடன் 2003 இன் பின்னர் இரண்டாவது தடவையாக தலைமைப் பொறுப்பை இலங்கைக்காக ஈட்டிக் கொடுத்தார். மேலும், ஜனவரி 24, 2017 இன்று கொழும்பில் கூடிய, அபுதாபி கலந்துரையாடலின் நான்காவது அமைச்சர்கள் கலந்தாலோசித்தலை ஒழுங்கு செய்வதில் திரு.விதானகே ஈடுபட்டிருந்ததுடன், இலங்கைக்கு தலைமைப் பொறுப்பையும் உறுதிப்படுத்தினார்.



### திரு. என்.ஆர்.ஆர். ஜயசேகர
**முகாமைத்துவப் பணிப்பாளர்**

திரு. ஜயசேகர, பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து இயந்திர பொறியியல் துறையில் விஞ்ஞான இளமானிப் பட்டத்தையும் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். அத்துடன் அவர் ஒரு பட்டயப் பொறியியலாளர் என்பதுடன் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் ஒரு உறுப்பினராவர். மேலதிகமாக, ADNOC சுத்திகரிப்பு ரூவாய்ஸ் மற்றும் உம் - அல் - நார் (Ruwais and Um-al-Nar), அபுதாபியில் சுத்திகரிப்பு பேணல், சுவீடன், ஸ்டொக்ஹோம் இல் பராமரிப்பு முகாமைத்துவம், மான்ஹெய்ம், ஜேர்மனியில் பொறித் தொகுதி பயிற்சி மற்றும் ஆளணி அபிவிருத்தி மற்றும் இதைப் போன்ற சர்வதேச பயிற்சித் திட்டங்களில், தொழில் ரீதியாக பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்.

1992-1995 காலப்பகுதியின் போது, இ.பெ.கூ இல் தனது தொழிலின் ஒரு கணிசமான காலப்பகுதியை அவர் செலவளித்துள்ளதுடன், கட்டார் நாட்டின், டோஹாவிவுள்ள ரஸ் அபு அபூட் இடத்தில் நீர் மற்றும் மின்சார அமைச்சில் எரிபொருள் பொறியியலாளர் பதவியை அவர் வகித்தார்.

தனது தொழிலின் ஆரம்பத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் முதலில் ஒரு போதனாசிரியர் வழிகாட்டுனராகவும் பின் கந்தளாய், சீனித் தொழிற்சாலையில் ஒரு இயந்திரப் பொறியியலாளராகவும் இருந்துள்ளார். அதன்பின் 1981 இல் இ.பெ.கூ இன் சுத்திகரிப்பு பகுதியில் ஒரு இயந்திரப் பொறியியலாளராக இணைந்து கொண்டதுடன் கூட்டுத்தானத்திற்காக 37 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். பின்னர், அவர் பிரதி பொறியியல் முகாமையாளர் (பொறித் தொகுதி உபகரணம்), பொறியியல் முகாமையாளர் (பராமரிப்பு), பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (பராமரித்தல் மற்றும் செயல்திட்டங்கள்) மற்றும் இ.பெ.கூ இன் முகாமைத்துவப் பணிப்பாளராக அவரது தற்போதைய நியமனத்திற்கு முன்னதாக சுத்திகரித்தல் முகாமையாளராகவும் பதவிகளுயர்த்தப்பட்டார்.



### திரு. கே.ஏ.விமலேந்திரராஜா
**பணிப்பாளர்**

திரு.விமலேந்திரராஜாவின் முதலாவது பட்டப்படிப்பு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து பொருளியல் துறையிலானதாகும். அத்தோடு செயல்திட்ட முகாமைத்துவத்தில் அவர் ஒரு முதுமானிப் பட்டத்தையும், பொதுப் பொருளியல் துறையில் முதுகலைமானிப் பட்டத்தையும், அபிவிருத்தி கற்கைகள் மற்றும் பொதுக் கொள்கை கற்கையில் ஒரு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, சர்வதேச விவகாரங்களில் ஒரு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ்கள், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு சட்ட இளமானி பட்டம் என்பவற்றைப் பெற்றிருப்பதுடன் ஒரு சட்ட வழக்கறிஞருமாவர். அவுஸ்திரேலிய கணினிக் கழக சான்றிதழைக் கொண்டிருப்பதுடன் இலங்கை நிர்வாக சேவையில் ஓர் அதிகாரியுமாவர். அத்தோடு, அவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விக் கழகத்தின் ஓர் உறுப்பினருமாவர். தற்போது அவர் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார். அவரது சிறப்பு வாய்ந்த தொழில் வாழ்க்கையில் அவர் ஓர் எண்ணற்ற முக்கிய அரச பதவிகளை வகித்துள்ளார். அவர் இலங்கை வங்கியின் ஒரு மாற்றுப் பணிப்பாளர் என்பதுடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் ஒரு பணிப்பாளருமாவர். அவர் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் அதே போன்று நிதி அமைச்சு என்பவற்றின் முன்னாள் பணிப்பாளர் நாயகமுமாவர். சீனாவின் பெய்ஜிங்கில் இலங்கைத் தூதரகத்தில் முன்னாள் அமைச்சு ஆலோசகர்/ பணிப்பாளரும் அவ்வாறே சார்க் அபிவிருத்தி நிதியின் நாட்டுக்கான பணிப்பாளருமாவர். அரச சேவகர் சேமலாப நிதிக்கான திறைசேரியின் முன்னாள் பிரதிநிதி, (IT&AR)/CIO முன்னாள் சிரேஷ்ட உதவிச் செயலாளர், பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட மீள்நிலைத் திட்டத்தின் செயற்றிறன் அபிவிருத்தியின் முன்னாள் உதவித் திட்ட முகாமையாளர், துறைமுகம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சின் திட்ட மற்றும் மீள்நிர்மாண முன்னாள் உதவிச் செயலாளர், இலங்கை அவிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஒரு முன்னாள் பயிலுனர், வவுனியா பிரதேச செயலக முன்னாள் சமுர்த்தி முகாமையாளர் மற்றும் அதே மாவட்டத்தின் மாவட்ட செயலகத்தில் ஒரு முன்னாள் அபிவிருத்தி திட்ட உதவியாளர் என பல்வகை பதவிகளை வகித்துள்ளார்.



### திரு. ஆர்.எம்.விஜேசிங்க
**பணிப்பாளர்**

ரோயல் கல்லூரியில் கல்வி பயின்ற திரு. விஜேசிங்க, ஒரு வழக்கறிஞர், பிரஸ ல்சிலுள்ள விரிஜி பல்கலைக் கழகத்திலிருந்து சர்வதேச சட்ட ஒத்துழைப்பில் சட்ட முதுமானிப் பட்டத்தையும் அதேபோன்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தின் ஒரு சொலிசிட்டர், அவுஸ்திரேலிய ஆட்புல உயர் நீதிமன்றத்தின் ஒரு சொலிசிட்டர் மற்றும் பாரிஸ்டர் மற்றும் அவுஸ்திரேலிய மேல் நீதிமன்றத்தின் பாரிஸ்டர் தகைமைகளையும் கொண்டுள்ளார். தனியார் மற்றும் பொதுத் துறைகளில், உலகளவில் பெற்றுக்கொண்ட முன்னைய மற்றும் தற்போதைய சட்ட அனுபவங்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களில் சிறந்த அனுபவ வளத்தை திரு.விஜேசிங்கவிற்கு அளித்துள்ளன. டிசம்பர் 2011 இலிருந்து சிரேஷ்ட பொது முகாமையாளராக, தற்போது கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையகங்கள் லிமிடட் நிறுவனத்தில் பணியாற்றுவதுடன், உலகில் மிகப் பெரிய துறைமுக இயக்குபவராக விளங்கும், சைனா மேர்ச்சன்ஸ் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கு சிரேஷ்ட வெளிநாட்டு ஆலோசகராகவும் கடமைகளை மேற்கொள்கிறார் என்பதுடன் தற்போது ஹம்பாந்தோட்டை சர்வதேச போர்ட் குறூப் தனியார் நிறுவனத்துடன், அதன் பிரதான நிறைவேற்று அதிகாரிக்கான, சிரேஷ்ட சட்ட ஆலோசகராகவும் சம்பந்தப்படுகிறார். அத்தோடு மகநெகும வீதி நிர்மாண உபகரண தனியார் நிறுவனம், மற்றும் டொப்பாஸ் ஹோட்டல்கள் நிறுவனம் என்பவற்றில் பணிப்பாளராகவும் பதவிகள் வகிப்பதுடன் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தேசிய நிகழ்ச்சி நிரல் சபையின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார். அவுஸ்திரேலிய பொதுச் சேவையின் பகுதியாகவுள்ள, அவுஸ்திரேலிய ஓய்வூதிய சேமலாப ஆணையகத்தின் ஒரு உதவிப் பணிப்பாளராக பணியாற்றியும், மற்றும் தேசிய லொத்தர் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றிய, திரு.விஜேசிங்க பொதுச் சேவையில் ஒரு சிறந்த அனுபவ வளத்தைப் பெற்றுக் கொண்டார். ஒரு சட்ட வழக்கறிஞராக தகுதி பெற்றவுடன் மஹாராஜா நிறுவனங்களின் குழுமத்தில் இணைந்து கொண்ட திரு. விஜேசிங்க, 1989 இல் அவுஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்து செல்லும் வரை, அங்கு குழும ஆளணி முகாமையாளர் பதவியை வகித்தார்.



### திரு. டபிள்யு.ஆர். பெரேரா
**பணிப்பாளர்**

ஆனந்தாக் கல்லூரியில் கல்வி கற்ற திரு. பெரெரா, ஓர் அசாதாராண தொழில் முயற்சியாளர் என்பதுடன் உலகை மாற்றுவதற்கு அதன் ஆற்றலைப் பயன்படுத்துகிறார். அவரது தனிப்பட்ட குணாதிசயம் வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் அவரைத் தூக்கி நிறுத்துகிறது. அவர்களது எண்ணங்கள் மற்றும் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குமான ஓர் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் அச்சமயத்தில் அவர்கள் முன்னுள்ள எந்தப் பொருள் மீதும் முற்றிலுமான பிரசன்னம் மற்றும் கவனத்தைச் செலுத்துவார்.

வறுமைக்கு ஏதுநிலை கொண்ட, அதனால் பாதிக்கப்பட்ட மற்றும் வாடுகின்ற மக்களின் தேவைகள் மற்றும் வலுப்படுத்துதல் என்பவை மீது குறிப்பான கவனத்துடன் கொலன்னாவை நகர சபைப் பிரதேசத்தின் குடியிருப்பாளர்களின் மனித நன்னிலையை மேம்படுத்துதல் மற்றும் அடிப்படை மனிதத் தேவைகளைத் திருப்தி செய்ய உதவுதல் என்பதற்காக 2002 – 2006 காலப்பகுதியின் போது ஒரு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராக தனது சமூகப் பணிகளை மேம்படுத்தினார். உண்மையாகவும் மிகவும் உதவி தேவைப்படும் மக்களின் உரிமைகள் மற்றும் சிறந்த நலன்களுக்காக அவர் போராடுகிறார்.



## திரு. எம்.வை. ஹுசைன்
**பணிப்பாளர்**

பெற்றோலியத் தொழில் துறையில் 45 வருடங்களுக்கும் மேலான அனுபவத்துடன் திரு.ஹுசைன் ஒரு தொழில்சார் தகைமை கொண்டவராவர். பெற்றோலியத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள மிகவும் மதிப்பு வாய்ந்த சர்வதேச ஸ்தாபனங்களிலான அனுபவங்களுடன் அவர் பல தொழில்சார் சர்வதேச மட்ட பயிற்சிகளுக்கான வெளிப்படுத்தலைக் கொண்டுள்ளார். கனடாவின், வடக்கு அல்பேர்டா தொழில்நுட்ப நிறுவகத்தினால் வழங்கப்பட்ட ''சுத்திகரிப்பு செய்முறை செயற்பாடுகளில் மாஸ்டர் தர போதானாசிரியர்'' எனும் சர்வதேச சான்றிதழ் பெற்றவராவர். திரு.ஹுசைன் தகரீரிலுள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் சிரேஷ்ட பரிசீலித்தல் பொறியியலாளராகப் பணியாற்றியதுடன் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் (HSE) முகாமைத்துவத்திற்கு அமைய Dual reforming, Hydrotreating & Hydrocracker ஆகிய இரு பரிசீலித்தல் இயந்திரத் தொகுதிகளை நிறுவுதல் மற்றும் பாவனையிலிடுதல் என்பவற்றுக்கு பொறுப்பானவராகவும் மற்றும் பரீட்சார்த்த இயக்கங்களைக் கவனிக்கும் வசதி மற்றும் கள ஒருங்கிணைத்தல் என்பவற்றில் ஆர்வத்தோடு ஈடுபட்டார். 2001 – 2009 வரையான காலப்பகுதியில் ADNOC தொழில்நுட்ப நிறுவகத்தில் தொழில்நுட்ப செய்முறை பயிற்சி வழிகாட்டுனராகப் பணியாற்றினார். கற்றுக்கொள்வதை அதிகரிப்பதற்கு பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி ADNOC ஊழியர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களை அவர் வழங்கியதுடன் பொறியியல், புரொசெஸ் ஒப்பரேட்டர்ஸ், ஷிப்ட் சுப்பர்வைசர்ஸ், ஷிப்ட் கன்ட்ரோலர்ஸ் மற்றும் சீனியர் பனல் ஒப்பரேட்டர்ஸ் என்பவற்றுக்காக ஐக்கிய அரபு அமீரக நாட்டவர்களைப் பயிற்றுவித்தார். திரு.ஹ’சைன் பெற்றோலியத் தொழில் துறையில் மிகுந்த அறிவைப் பெற்றுள்ளார். 1969 இலிருந்து 2016 வரையான காலப்பகுதியில், திரு.ஹுசைன் ADNOC, ARAMCO மற்றும் பஹரைன் நஷனல் கேஸ் கம்பனி (BNGC) என்பவற்றில் பணியாற்றியதுடன் அபுதாபி அரசாங்கத்தின் பிரதான எண்ணெய் சுத்திகரித்தல் இயந்திரத் தொகுதிகளின் செயற்பாடுகளையும் அவர் மேற்பார்வை செய்தார்.



## திரு.பி.பி.சமன் ரோஹித்த
**பணிப்பாளர்**

பெயின்ற் மற்றும் இரசாயன உற்பத்தி முகாமைத்துவ பதவியில் 17 வருடங்களிற்கும் மேற்பட்ட அனுபவங்களைக் கொண்ட திரு. ரோஹித்த, பணிப்பாளராகவும் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் தனது சேவையை வழங்கினார். இரசாயனத் தொழிலில் ஒரு முன்னணிக் குழு நிறுவனமாகவுள்ள, ஸ்ராண்டர்ட் கெமிக்கல்ஸ் லிமிட்டெட் என்பதில் தற்போது ஒரு பணிப்பாளராகப் பணியாற்றுகிறார். 2009 இலிருந்து 2013 வரையான காலப்பகுதியில், திரு. ரோஹித்த ரோவெக்ஸ் பெயின்ற் இன்டஸ்ட்ரிஸ் தனியார் நிறுவனத்தில் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார். அந்நிறுவனத்தை சிறந்த செயற்படுதல் மற்றும் நிதி நிலைமைக்கு மேலுயர்த்துவதற்கு அனைத்து செயற்பாடுகளையும் அவர் மேற்பார்வை செய்தார். மேலும், 1996 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியின் போது, திரு. ரோஹித்த, கெமிசேல்ஸ் ஹோல்டிங் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார். பிரபலமான நிறுவனங்களில் உயர் நிலைப் பதவிகளை வகித்து, முகாமைத்துவத் திறனில் ஒரு சிறந்த அனுபவத்தை அவர் ஈட்டியுள்ளமை கூட்டுத் தாபனத்தின் நன்னிலை நோக்கிப் பங்களிக்கின்றது.

# கூட்டாண்மை முகாமைத்துவம்



**திரு. ஈ.ஏ.எஸ்.எதிரிசிங்க**
**பதில் சுத்திகரிப்பு முகாமையாளர்**

திரு. எதிரிசிங்க இரசாயன பொறியியல்துறையில் ஓர் இளமானிப் பட்டத்தைக் கொண்டிருப்பதுடன், ஒரு பட்டயம் பெற்ற இராசயன பொறியியலாளர் மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவகம் மற்றும் இலங்கை சக்தி வள முகாமையாளர்கள் சங்கம் என்பவற்றின் உறுப்பினருமாவர்.

அவர் 1988 இல் இ.பெ.கூ உடன் இணைந்து கொண்ட நான்கு வருடங்களின் பின் இரண்டு வருட காலப் பகுதிக்கு சவுதி அரேபியாவிலுள்ள, யான்பு, சவுதி அரம்கோ எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தில் ஒரு விசேட கலவைப் பொறியியலாளராக இணைந்து கொண்டார். 1996 இல் இ.பெ.கூ. இல் அவர் முன்னர் வகித்த அதே பதவியில் மீளவும் இணைந்து கொண்டு 2002 இல் பிரதி முகாமையாளர் தொழில்நுட்ப சேவைகள் (செய்முறை) பதவியுயர்வு பெற்றார். அதன் பின் 2005 இல் அவர் பிரதி முகாமையாளர் தொழில்நுட்ப சேவைகள் (செயல்திட்டங்கள்) பதவிக்கும், 2009 இல் முகாமையாளர் செயற்பாடுகள் பதவி, மற்றும் 2014 இல் பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர் (உற்பத்தி & செயற்பாடு) நிலைக்கும், பதவி உயர்த்தப்பட்டார். தற்போது அவர் இ.பெ.கூ இன் பதில் சுத்திகரிப்பு முகாமையாளராவர்.



**திரு.எஸ்.டபிள்யு. கமகே**
**பிரதி பொது முகாமையாளர் (மனித வளம் & நிர்வாகம்)**

திரு. கமகே ருஹுணுப் பல்கலைக் கழகத்திலிருந்து உயிரியல் விஞ்ஞானத்தில் இளமானிப் பட்டத்தைக் பெற்றுள்ளதுடன் அதன் பின்னதாக நெதர்லாந்தின் வெகனிங்கன் விவசாயப் பல்கலைக் கழகத்திலிருந்து விஞ்ஞானத்தில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றார். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானிப் பட்டம், வணிக மற்றும் நிதி நிர்வாகத்தில் ஒரு பட்டப்பின்படிப்பு டிப்ளோமாச் சான்றிதழ் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திலிருந்து பயிற்சி மற்றும் முகாமைத்துவத்தில் ஒரு பட்டப்பின்படிப்பு சான்றிதழையும் கொண்டுள்ளார். அத்தோடு அவர் ஆளணி மற்றும் அபிவிருத்தி பட்டய நிறுகத்தின் (CIPD-UK) ஒரு இணை உறுப்பினருமாவர்.

அவர் இ.பெ.கூ உடன் 1991 இல் ஒரு முகாமைத்துவ பயிலுனராக இணைந்து கொண்டதுடன் ஓர் எண்ணற்ற முகாமைத்துவ நிலை பதவிகளில் கூட்டுத்தாபனத்துடன் பணியாற்றுவதில் தொடர்ச்சியான இருபத்தெட்டு வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளார். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இ.பெ.கூ இன் விமான போக்குவரத்துச் சேவைச் செயற்பாடுகளில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த அவர் சர்வதேச விமான நிலையங்களில் விமான எரிபொருள் மீள்நிரப்பு செயற்பாடுகளில் “Shell-UK” சான்றிதழ் பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியாக சேவையாற்றியுள்ளார்.

2009 ஆம் வருடத்தில், மனித வளங்கள் மற்றும் நிர்வாக பிரதிப் பொது முகாமையாளர் எனும் அவரின் தற்போதைய நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டார்.



**திரு. எம்.கே.கருசிங்க**
**பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் & வழங்கல் சங்கிலி)**

திரு. கருசிங்க கொழும்புப் பல்கலைக கழகத்தில் விஞ்ஞான பாடத்துறையில் இளமானிப் பட்டத்தையும் பின் சுவீடன், மல்மோ, உலக கடல்சார் பல்கலைக் கழகத்திலிருந்து கடல்சார் விவகாரங்களில் ஒரு முதுமானிப் பட்டத்தையும் பெற்றார். அத்தோடு, அவர் இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு வணிக நிர்வாக முதுமானிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். அவர் ஐக்கிய இராச்சிய கப்பல்தரகர்கள் பட்டய நிறுவகத்தின் ஒரு உறுப்பினரென்பதுடன் (MICS (UK)), இலங்கை, வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவகத்தின் ஒரு கூட்டாண்மை உறுப்பினரும் (MISMM) ஆவர்.

தற்போது, அவர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகம் மற்றும் வழங்கல் சங்கிலி பகுதி பிரதிப் பொது முகாமையாளராவர்.



### திரு.டபிள்யு.எம்.கே.ஆர்.பி. விக்கிரமசிங்க

### பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)

திரு.விக்கிரமசிங்க பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானத்துறையிலிருந்து ஓர் இளமானிப் பட்டத்தையும் அவ்வாறே கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து வணிக முகாமைத்துவத்தில் ஒரு முதுமானிப் பட்டத்தையும் கொண்டுள்ளார். அத்தோடு அவர், இலங்கை இரசாயன நிறுவகத்தின் ஓர் உறுப்பினரென்பதுடன் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சான்றிதழ் பெற்ற ஓர் உறுப்பினருமாவர். மேலதிகமாக, தென்னாபிரிக்காவிலிருந்து மனிதவள தலைமைத்துவ சிறப்பு முகாமைத்துவம், வணிக நடத்தை தொடர்பாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஏற்பாட்டியல் மற்றும் சந்தைப்படுத்தல் பங்காண்மை, ஐக்கிய இராச்சியத்தின் அவேசியா நிறுவனத்தில் சேர்க்கைளுடன் மேற்பரப்பு மேம்படுத்துதல், சிங்கப்பூர், அக்குயுலன் நிறுவனத்திலிருந்து மேற்பரப்பு படலங்களில் ரியோலொஜிக்கல் (Rheological) மாற்றிகள், என்பவை தொடர்பான தொழில்சார் பயிற்சிகளையும் அவர் பெற்றுள்ளார். 1992 இலிருந்து 2008 வரை முன்னர் CIC எனப்பட்ட, கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) நிறுவனத்தில், சிரேஷ்ட உற்பத்தி முகாமையாளராக பணியாற்றினார். அங்கு, அவரது முக்கிய நடவடிக்கைகள் இலங்கையிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்காக கைத்தொழில் ரீதியான மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் திரவக் குழம்புப் பொலிமர்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவையாக அமைந்திருந்தன. அத்தோடு குழம்பு உற்பத்திப் பொறிகள் தொடர்பான நிதி மூலதனம் மற்றும் மேற்செலவுகள் என்பவற்றின் பாதீடு திட்டமிடல், சமனிலைப் புள்ளி அட்டை முறைமையின் அமுல்படுத்துதல், கண்காணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகிய விடயங்களில் ஆழ்ந்த நடைமுறைரீதியான அனுபவத்தைக் கொண்டுள்ளார். இ.பெ.கூ இல் அவரது தற்போதைய பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் பதவியில், உள்நாட்டு எரிபொருள் சந்தைகள், விவசாய இரசாயன செயற்பாடு, தார், உராய்வுநீக்கிகள் மற்றும் விசேட உற்பத்திகள், மற்றும் வாடிக்கையாளர் பேணலும் கூட்டாண்மைத் தொடர்பாடல் அலகு மற்றும் சேவை நிலைய உபகரண வேலைப் பட்டறை என்பவை உட்பட கூட்டுத்தாபனத்தின் சந்தைச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றுக்கும் பொறுப்பாக உள்ளார். அவரின் மேலதிகமான பொறுப்புகள், வணிகச் சூழலில் சவால்களை முகங் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இ.பெ.கூ இன் கூட்டாண்மைத் திட்டங்கள் மற்றும் குறிக்கோள்களை எட்டுவதற்கு தேவையான வணிகச் சூழலை உருவாக்குதலை உள்ளடக்குகிறது.



### திரு.வி.என். வீரசூரிய

### பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

திரு.வீரசூரிய ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திலிருந்து வணிக முகாமைத்துவத்தில் ஒரு இளமானிப் பட்டத்தையும் மற்றும் அதே பல்கலைக் கழகத்தின் பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் ஒரு முதுமானிப் பட்டத்தையும் பெற்றார். இவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் ஒரு சிரேஷ்ட அங்கத்துவமும், CPA (ASA) இன் ஒரு இணை அங்கத்துவமும் மற்றும் CMA (FCMA) இன் ஒரு சிரேஷ்ட அங்கத்துவமும் கொண்டுள்ளார்.

அவர் தனது தொழில் வாழ்க்கையை பி.ஆர்.டி சில்வா & கோ, பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் 1994 ஆம் ஆண்டு ஒரு கணக்காய்வு எழுதுவினைஞர் மற்றும் வரி மேற்பார்வையாளராக ஆரம்பித்தார். அதன் பின், மைக்ரோசெல்ஸ் நிறுவனத்தில் ஒரு கணக்காளராகவும், இலங்கை வங்கியாளர்கள் நிறுவகத்தில் நிதி முகாமையாளராகவும், துடாவை சகோதரர்கள் நிறுவனத்தில் முகாமைத்துவக் கணக்காளராகவும், விகொம் (Vcom) சர்வதேச நிறுவனத்திற்காக குழு நிதி மற்றும் நிர்வாக முகாமையாளராகவும், Nkar டிராவல்ஸ் மற்றும் டூர்ஸ் நிறுவனத்தின் குழு நிதி முகாமையாளராகவும், அவுஸ்திரேலியா, மெல்பேர்னிலுள்ள Fez Freez தனியார் நிறுவனத்தில் நிதி மற்றும் நிர்வாக முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். 2017 இல் இ.பெ.கூ இல் நிதிப் பிரதிப் பொது முகாமையாளராக இணைவதற்கு முன் ஹண்டர் & கொம்பனி தனியார் நிறுவனத்தில் நிதி முகாமையாளராகவும் பணியாற்றினார். அனைத்துக் கணக்கியல் மற்றும் நிதி தொடர்பான நடவடிக்கைகள், திறைசேரி முகாமைத்துவம், வரி மற்றும் காப்புறுதி, வரவுசெலவுத் திட்டமிடல் மற்றும் இணங்குதல், கணக்கியல் மற்றும் நிதிக் கொள்கைகளை அரசாங்க விதிமுறைகள் மற்றும் அறிக்கைப்படுத்தும் நெறிமுறைகளுடன் அமைவாக இருக்கும் வகையில் வகுத்தல் மற்றும் இ.பெ.கூ இன் நடவடிக்கைகளுக்காக பல்வேறு வகை அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சை அறிவுறுத்துதல் என்பவற்றை மேற்பார்வை செய்கிறார்.



### திரு.எம்.ஏ.டி.மல்லிகாராய்ச்சி

### பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள் & கூட்டாண்மை விவகாரங்கள்) (பதில்)

திரு.மல்லிகாராய்ச்சி பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து பொறியியல் (உற்பத்தி) துறையில் ஒரு இளமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் செயல்திட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் ஒரு உறுப்பினர், அவ்வாறே இலங்கை, பொறியிலயாளர்கள் நிறுவகத்தின் ஒரு இணை உறுப்பினருமாவர். முன்னணி உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்வி, தொழில்சார் மற்றும் கைத்தொழில் வளாகங்களில் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் தொடர்பான ஒரு எண்ணற்ற பட்டப்பின் படிப்பு பயிற்சித் திட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். விமானப் போக்குவரத்து எரிபொருள் செயற்பாடுகள் முகாமைத்துவம், விமானப் போக்குவரத்து எரிபொருள் தர உத்தரவாதம், கடலிற்கு வெளியிலான எண்ணெய் மேடைகள் & கடல் கீழான குழாய் அமைப்புகள் போன்ற நிர்மாண செயல்திட்டங்கள் தொடர்பான செயல்திட்ட தர உத்தரவாதம், விமானப் போக்குவரத்து எண்ணெய் குதங்கள் & எரிபொருள் குழாய் அமைப்பு முறைகள் தொடர்பான செயல்திட்ட முகாமைத்துவம் & ஒப்பந்த நிர்வாகம், பொறியியல் & செய்முறை வடிவங்கள், பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் ஆரோக்கியம், பாதுகாப்பு, சுற்றாடல் (HSE) விழிப்புணர்வு என்பவற்றின் உறுதிப்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட விடயதானங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழில்துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். அவர் தனது தொழில்வாழ்க்கையை ஜினசேன குறுாப் நிறுவனத்தில் 1996 ஆம் ஆண்டு ஒரு பொறியியலாளராக ஆரம்பித்து பின் இன்டர்பச் புரொசிலீன் தனியார் நிறுவனத்தில் ஒரு உதவி இயந்திரப் பொறியியலாளராகச் சேவையாற்றினார். அவர் இ.பெ.கூ இல் 1999 ஆம் ஆண்டு ஒரு இயந்திரப் பொறியியலாளரக இணைந்து கொலன்னாவை முனையத்தில் கடமையளிக்கப்பட்டார். பின்னர் இ.பெ.கூ இல் இயந்திரப் பொறியியலாளர் (விமான எரிபொருள் மீள்நிரப்பு நிலையம்), அவ்வாறே பண்டாரநாயக்க விமானநிலையத்தில் இ.பெ.கூ இன் விமான எரிபொருள் செயற்பாட்டுக்கான செயல்திட்ட பொறியியலாளர் (எரிபொருள் குழாய் முறைமைகள் செயல்திட்டம்), விமான எரிபொருள் செயற்பாடுகள் பிரதி முகாமையாளர், விமான எரிபொருள் குத செயல்திட்ட முகாமையாளர், விமான எரிபொருள் செயற்பாடுகள் முகாமையாளர், மற்றும் இறுதியாக, 2017 இலிருந்து தொழிலநுட்ப சேவைகள் மற்றும் கூட்டாண்மை விவகாரங்களுக்கான பதில் பிரதிப் பொது முகாமையாளர் எனப் பல்வேறு பதவிநிலைகளை அவர் வகித்துள்ளார்.







### திரு.டி.எம்.பி.திசாநாயக்க
### பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (பராமரிப்பு & செயல்திட்டங்கள்)

திரு. திசாநாயக்க இயந்திரப் பொறியியல் துறையில் ஓர் இளமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளதுடன், ஒரு பட்டயப் பொறியியலாளரும் மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் ஒரு உறுப்பினருமாவர். அத்தோடு, அவர் சட்டத்திலும் ஓர் இளமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளதுடன் ஒரு சட்ட வழக்கறிஞருமாவர்.

அவர் இ.பெ.கூ உடன் 1988 இல், கூட்டுத்தாபன எண்ணெய் சுத்திகரித்தல் பகுதியில் ஓர் இயந்திரப் பொறியியலாளராக இணைந்து கொண்டார். இ.பெ.கூ சுத்திகரித்தல் பகுதியுடனான அவரது மூன்று தசாப்த கால தொழில் வாழ்க்கையில், பிரதி பொறியியல் முகாமையாளர், பொறியியல் முகாமையாளர் (இயந்திரவியல்), சிரேஷ்ட பொறியியல் முகாமையாளர், சிரேஷ்ட பொறியியல் முகாமையாளர் (பராமரித்தல் மற்றும் செயல்திட்டங்கள்), மற்றும் இறுதியாக, 2016 தொடங்கி, பிரதி சுத்திகரித்தல் முகாமையாளராக (பராமரித்தல் & செயல்திட்டங்கள்) ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

### திரு.எல்.ஜீ.எம்.ஆர்.பெரேரா
### பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (மின்சாரம் & கருவிகள்)

திரு. பெரெரா மொரட்டுவைப் பல்கலைக் கழகத்திலிருந்து மின்னனுவியல் & தொலைத்தொடர்பு துறையில் ஓர் இளமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளார். அவர் தனது தொழில் வாழ்க்கையை இ.பெ.கூ இல் ஓர் உபகரணப் பொறியியலாளராக 1992 இல் ஆரம்பித்தார். கருவிமயமாக்கல் கட்டுப்பாட்டுச் செய்முறைத் துறையில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவங்களைக் கொண்டுள்ளதுடன் கருவியியல் திணைக்களத்தில் பல்வேறு பதவிநிலைகளையும் வகித்துள்ளார். பிரதி சுத்திகரித்தல் முகாமையாளராக (மின்சாரம் & கருவிகள்) அவரது தற்போதைய பதவிநிலையில், அவர் மின்சாரம், கருவி & சுத்திகரித்தலின் பொருட்கள் திணைக்களம் என்பவற்றுக்கு தலைமை தாங்குகிறார்.

### திரு.சி.ஆர்.கே.கமகே
### பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்)(பதில்)

திரு.கமகே மொரட்டுவைப் பல்கலைக் கழகத்திலிருந்து பொறியியல் இளமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளதுடன் அவர் ஒரு பட்டயப் பொறியியலாளர் மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் ஒரு சிரேஷ்ட உறுப்பினராவர். மேலும் அவர், ஐக்கிய அமெரிக்காவின், மொபியஸ் நிறுவனத்தில் UT, PT, DT, MT, RT, IR Level – II, சான்றிதழளிக்கப்பட்ட அதிர்வு பகுப்பாய்வு மட்டம் – I மற்றும் அழிவுமுறையற்ற பரிசீலித்தலுக்கான சங்கத்தின் சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். அவர் தனது தொழில் வாழ்க்கையை இயந்திரப் பொறியியலாளராக இ.பெ.கூ சுத்திகரித்தலில் 1993 வருடத்தில் ஆரம்பித்தார். அவர் சுத்திகரித்தலில் செயல்திட்டங்கள், பராமரித்தல், பரிசோதனை & தொழில்நுட்ப சேவைகள் ஆகிய பொறியியல் துறைகளில் 26 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் 2018 ஒக்டோபரில் பதில் பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்) ஆக நியமிக்கப்படுவதற்கு முன் பிரதி பொறியியல் முகாமையாளர் (பரிசோதனை) மற்றும் பொறியியல் முகாமையாளர் (பரிசோதனை) ஆக பதவிகளை வகித்திருந்தார். தற்போது அவர் பரிசோதனை, ஆய்வுகூடம், தொழில்நுட்ப சேவைகள் உள்ளடங்கிய தொழில்நுட்ப சேவைகள் திணைக்களத்திற்கு தலைமை வகிக்கிறார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ அணி



திருவாட்டி.எம்.சீ.டீ.பெரேரா
சிரேஷ்ட முகாமையாளர் (நிதி)



திரு. கே.டபிள்யு. புஷ்பலால்
முகாமையாளர்(மனித வளங்கள்)



திருவாட்டி. ஆர்.ஏ.கே.சி.ஆரியரட்ன
தலைமைச் சட்ட அதிகாரி



திரு. டபிள்யு.டி.எல்.சி. அபயகுணவர்த்தன
முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) (பதில்)



திரு. டபிள்யு.கே.எஸ். குணவர்த்தன
முகாமையாளர்
(ஆராய்ச்சி & அபிவிருத்தி)



திரு. எஸ்.டி.எஸ். ராஜபக்ச
முகாமையாளர்
(பெறுகை & களஞ்சியங்கள்)



மேஜர். எம்.ஆர்.எஸ்.பி. சமரசிங்க
முகாமையாளர்
(பாதுகாப்பு & புலன்விசாரணை)



திரு.ஜி.பி.கே.விஜயக்கோன்
முகாமையாளர்
(பொறியியல் & வளாகங்கள்)



திருமதி. எம்.எஸ்.ஆர்.
பெர்ணான்டோ
முகாமையாளர்
(தகவல் தொழில்நுட்பம்)



திரு. ஆர்.ஏ.டீ.ஐ.ரணசிங்க
முகாமையாளர் (கணக்காய்வு)



திரு. பி.ஏ.யு.ஆர்.கருணரட்ன
முகாமையாளர் (கப்பல்)



திரு.கே.கே.ஏ.ஜயவிக்கிரம
முகாமையாளர் (வர்த்தகம்) (பதில்)



திரு.பி.எஸ்.எஸ். பெரெரா
முகாமையாளர் (விவசாய
இரசாயனங்கள்)



திரு. என்.பி.எம்.பி. ஜீவசிறி
முகாமையாளர்
(செயற்பாடு – கையிருப்பு &
முனையச் செயற்பாடுகள்) (பதில்)



திரு.ஆர்.டபிள்யு.எஸ்.ராஜசிங்க
பிரதி முகாமையாளர் (விமான
எரிபொருள் செயற்பாடுகள்)



திரு.கே.ஜி.எச்.கோதாகொட
முகாமையாளர் (சுத்திகரித்தல்
செயற்பாடுகள்)



திரு. ஜி.எம்.யு.டபிள்யு. டொலஸ்வெல
முகாமையாளர் (மசகெண்ணெய் & விசேட உற்பத்திகள்)



திரு.ஆர்.ஏ.எஸ். ராஜபக்ச
முகாமையாளர் (பொருட்கள்)



திரு. கே.ஏ.கே.கே.குருப்பு
முகாமையாளர் (பொறியியல் செயல்திட்டங்கள்)



திரு. கே.வி.ஜே.சந்திரவன்க
முகாமையாளர்
(பொறியியல் - மின்னியல்)



திரு. டபிள்யு.ஏ.என்.ஆர்.விக்கிரமசிங்க
முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்)



திரு.ஏ.ஐ.வனசேகர
பிரதி முகாமையாளர் (ST – செயற்பாடுகள்)



திருவாட்டி. ஏ.எஸ். பிரேமகாந்தி
முகாமையாளர்
(பொருளாதாரம் & திட்டமிடல்)



திரு. எச்.கே.என். ரத்னசிறி
பிரதி முகாமையாளர்
(தொழில்நுட்ப சேவைகள் - ஆய்வகம்)



திரு.ஆர்.எம்.எம்.டபிள்யு.பண்டார
பிரதி முகாமையாளர் (தீ & இடர்காப்பு)



திருவாட்டி. சி.என். விதானராய்ச்சி
சிரேஷ்ட மருத்துவ அதிகாரி



திரு.ஏ.பி. கோரளகெதர
முகாமையாளர் (செயலகம்) (பதில்)



திரு.பி.எப்.டபிள்யு.தயாநாத்
முகாமையாளர் (பொறியியல் - சிவில்)



திரு.ஆர்.ஏ.பி.திலங்க
முகாமையாளர்
(பொறியியல்- எந்திரவியல்)



திரு.டபிள்யு.எஸ்.ரபேல்
முகாமையாளர்
(பொறியியல் - உபகரணம்)

# கூட்டுத்தாபன கட்டமைப்புரீதியான வரைபு




DGM (A / HR)
DGM (F)
DGM (TS&CA)
DGM (MKT)
DGM (C & SC)
CLO
CIA
Mgr. Security& Inves.
Head of Secretary
Mgr. HR
Snr. Mgr.(F)
Mgr. IT
Mgr. (Eng. & Premises)
Operations Mgr. (AV)
Manager (R&D)
Mgr. (OP)
MKT Mgr.
Head of CC & CCU
Marketing Mgr. (Lubs & SP)
Mgr. Agro
Mgr. Shipping
Commercial Mgr.
Mgr . Supplies
Mgr (Legal)
Mgr (Internal Audit)

# எமது வணிகம்

| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| மசகு எண்ணெய் | வாகன (ஆட்டோ) எரிபொருள் | மின் உற்பத்திக்கான எரிபொருள் | விமான எரிபொருள் | கைத் தொழில்களுக்கான எரிபொருள் |
| 46 உற்பத்தி வகை | பெற்றோலியம்-92<br>பெற்றோலியம்-95<br>LAD<br>LSD | உலை<br>LAD<br>நப்தா | ஜெட் A -1<br>AV - வாயு | உலை<br>LAD<br>கரைப்பான்<br>மண்ணெண்ணெய் |
| **1,583**<br>ரூ. மிலி | **412,716**<br>ரூ. மிலி | **74,757**<br>ரூ. மிலி | **64,190**<br>ரூ. மிலி | **11,011**<br>ரூ. மிலி |

| | | | | |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| வீட்டுப்பாவனை எரிபொருள் | தார் | விவசாய இரசாயனம் | கப்பல் எரிபொருள் | ஏற்றுமதி |
| மண்ணெண்ணெய் LPG | வீதித் தார் பீப்பாய்த் தார் | 11 உற்பத்தி வகை | எரிபொருள் எண்ணெய் | எரிபொருள் எண்ணெய் நப்தா |
| 17,688 | 1,066 | 151 | 495 | 8,595 |
| ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |





# முகாமைத்துவ மீளாய்வு

# முகாமைத்துவ மீளாய்வு

# செயற்படும் சூழல் மற்றும் மூலோபாயம்

## உலக சுற்றாடல்

சக்திக்கான கேள்வியில் ஓர் அதிகரிப்பு காணப்படுகையில், விசேடமாக ஆசியாவின் பொருளாதாரங்கள் எழுச்சி பெறும் பின்னணியில், சக்திக்கான உலகக் கலவைக்கூறு சுத்தமான புதுப்பிக்கத்தக்க மூலவளங்கள் நோக்கி குறிப்பிடத்தக்க வகையில் நகர்ந்தது. புதைபடிவ எரிபொருள் கைத்தொழிலுக்கு அந்த நகர்வின் தாக்கம் பலமானதாக இருந்ததுடன் இனி வரும் காலத்தில் அது மேலும் வலுவானதாக வருவதற்கு எதிர்பார்ப்பு உள்ளது. பெற்றோலிய விலைகளிலான தளம்பல்களுக்கு மேலாக, கைத்தொழில் யுகத்திலிருந்து விலகி நிலைபேண்தகு யுகத்திற்கு நகர்வதற்கான உலக உந்துதல் இத்துறையின் கரிசனத்திற்கான காரணத்தை உருவாக்கியுள்ளது.

**கச்சா எண்ணெய் விலை (FOB) - USD/BBL**




சர்வதேச கச்சா எண்ணெய் (பிரெண்ட்) விலைகள் வருடத்தின் கடைசி இரண்டு மாதங்களில் சரிவைச் சந்திப்பதற்கு முன் 2018 இன் போது ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவு செய்தது. ஈரான் மீது ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தகத் தடையுடன் தொடர்பான விநியோகக் கரிசனங்கள் ஆகஸ்ட் நடுப்பகுதியிலிருந்து ஒக்டோபர் 2018 ஆரம்பம் வரை எண்ணெய் விலைகளில் ஒரு மேல்நோக்கிய போக்கை விளைவித்தது. உயர்ந்த மட்டத்திற்கு உலக பொருளிருப்புகளின் கட்டியெழுப்புதல் மற்றும் மெதுவான உலகப் பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்ததாக உயர்ந்த மட்டத்தில் அமெரிக்க சக்சா எண்ணெய் உற்பத்தி 2018 இன் இறுதியில் விலைகள் மீது கீழ்நோக்கிய அழுத்தத்தை பிரயோகித்தது. அதற்கமைய, 2017 இல் அமெரிக்க டொலர்கள் 54.76 ஆக இருந்ததுடன் ஒப்பிடும் போது, 2018 இல் சராசரி கச்சா எண்ணெய் (பிரெண்ட்) விலை பீப்பாய் ஒன்றுக்கு அமெரிக்க டொலர்கள் 71.76 ஆக இருந்தது. எண்ணெய் விலைகள் அதிகரித்தும் பிரெண்ட் கச்சா விலை அமெரிக்க டொலர்கள் பீப்பாய்க்கு 71.76 அளவிற்கு எட்டியவேளையிலும், 2011 இன் உயர்ந்தபட்சக் குறியீடான பீப்பாய்க்கு அமெரிக்க டொலர்கள் 115 என்பதிலிருந்து இன்னமும் ஒரு நீண்ட தூரம் தள்ளியே இருந்தது. எனவே, நிறுவனங்கள் புதிய அபிவிருத்தியை தேடி ஆராய்கையில், எண்ணெய்த் துறைக்கு எதிரானவை கவனமாகவும் மற்றும் அக்கறையுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

**சர்வதேச எண்ணெய் விலைகள் - USD/BBL**




## உள்நாட்டுச் சூழல்

இலங்கை மத்திய வங்கிக்கு அமைய, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) 2018 இல் 3.2% இல் இருந்து, அதற்கு முந்திய வருடத்தில் பதிவு செய்த 3.4% இலிருந்து ஒரு சரிவைக் காண்பித்தது. சேவைத் துறை நடவடிக்கைகள் 4.7% ஆல் விரிவடைந்து, விவசாயம் 4.8% எனும் ஒரு இலக்கத்திற்கு மீள்திரும்பியதாக மத்திய வங்கி கூறுகின்றது, ஆனாலும் இந்த ஆதாயப் பேறுகள், 0.9% ஆக இருந்த, கைத்தொழிலான ஒரு கணிசமான மந்தநிலையால் எதிரீடு செய்யப்பட்டது. இலங்கைப் பொருளாதாரத்தின் மொத்த அளவு 88.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக கணிப்பிடப்பட்டது, ஆளொருவருக்கான மொ.உ.உ 4,102 அமெரிக்க டொலர்களுக்கு ஒரு சிறிதளவிலான வீழ்ச்சியைக் காண்பித்தது. இறக்குமதிச் செலவீனத்தின் அதிகரித்த வளர்ச்சி வீதம் ஏற்றுமதி வருமானத்தின் வளர்ச்சியை விஞ்சியதினால் வரலாற்றில் முதல் தடவையாக வர்த்தகப் பற்றாக்குறை 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடந்ததுடன். அது உத்தியோகபூர்வ ரீதியில் மிகவுயர்ந்த மட்டத்தில் இருந்தது. உலக ரீதியாக, நிதிக் கொள்கை இயல்பாக்கல், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவில், உலக நிதி நிலைமைகள் இறுக்கமடைவதை ஏற்படுத்தியது, அதன் மூலம் மேலெழும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்து மூலதன வெளிப்பாய்ச்சல்களை ஏற்படுத்தி மற்றும் நாணயமாற்று வீதங்கள் மீது அழுத்தத்தை அதிகரித்தன.

மத்திய வங்கி ஒரு சந்தை அடிப்படையிலான நாணயமாற்று வீதக் கொள்கையை அவசியமான வகையில் கடைப்பிடித்தது ரூபாயின் பெறுமதியில் ஒரு கூர்மையான தேய்மானத்தை விளைவித்தது, ஆனால் எவ்வாறாயினும் பெருமளவிலான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் முறையற்ற ஊகம் அங்கேயிருந்த போது சந்தையில் அதிகரித்த தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அது நடவடிக்கைகளை எடுத்தது. மொத்தப் பணவீக்கம் உணவு வகையைச் சார்ந்தவற்றின் விலை நகர்வுகளுடன் கூடுதலாகப் பொருந்தும் வகையில் அதிகம் ஏறிஇறங்கியது. அங்கு உணவு விலைகள் 2018 இல் குறைவடைந்தமைக்கு பெரிதும் காரணம், அவ்வருடத்தின் போது நிலவிய சாதகமான காலநிலைத் தன்மைகளாகும்.

வருடத்தின் இறுதிப் பகுதியில் நிலவிய அரசியல் குழப்பங்கள் வரவுசெலவுத் திட்ட செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்துதலில் தாமதங்களை ஏற்படுத்தியதால், குறிப்பாக பாதிக்கப்பட்ட குறைந்த அரச முதலீடு காரணமாக, செலவீனம் மற்றும் நிகர கடன் வழங்குதல் குறைவடைந்து, 2018 இல் மொ.உ.உ இன் 13.3% இற்கு அரசாங்க வருமானம் வீழ்ச்சியடைந்தது. குறைந்த மூலதனச் செலவும் கூட பொருளாதார நடவடிக்கை மந்தமடைவதற்கு பங்களித்தது.

மத்திய வங்கி துணைநில் வைப்பு வசதி வீதத்தை (து.வை.வ.வீ) 75 அடிப்படைப் புள்ளிகளாலும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தை (து.க.வ.வீ) 50 அடிப்படைப் புள்ளிகளாலும் அதிகரித்தது, கொள்கை வீத வீச்சை 100 அடிப்படைப் புள்ளிகளுக்கு மேலும் குறுக்கியது. அதற்கமைய, 2018 இறுதியில், து.வை.வ.வீ மற்றும் து.க.வ.வீ முறையே 8 சத வீதம் மற்றும் 9 சத வீதத்தில் நின்றன. வருமான திரட்டலில் வீழ்ச்சி இருந்தபோதிலும், 2018 இன் போதான இறைத்துறைச் செயற்பாடுகள் ஓர் அதிகரித்த ஆரம்ப மிகைகள் மற்றும் ஒரு குறைவான பாதீட்டுப் பற்றாக்குறை என்பவற்றுடன் சில முன்னேற்றங்களை எடுத்துக் காட்டியது.

## இலங்கையில் பெற்றோலிய விலைகள்

பெற்றோலிய உற்பத்திகளுக்கான விலை மறுசீரமைப்புகள் என்பது வாழ்க்கைச் செலவு மற்றும் உற்பத்திச் செலவு அதேபோன்று மொத்த பேரினப் பொருளியல் ஸ்திரத்தன்மை என்பவற்றின் மீதான அதன் நேரடித் தாக்கத்தின் காரணமாக இலங்கையில் நீண்டகால கொள்கைப் பிரச்சினையாக உள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் ஆதிக்கம் செலுத்தப்படும் இலங்கைப் பெற்றோலியத்துறை, மூலோபாயரீதியில் ஒரு முக்கியமான அரச உரிமை கொண்ட வணிகத் தொழில்முயற்சியாக உள்ளதுடன், அண்ணளவாக சில்லறைச் சந்தைப் பங்கின் 86 சதவீதத்தை அது கணக்கில் கொள்கிறது. நாட்டின் முதனிலை மற்றும் துணைநிலைச் சக்தித் தேவையை திருப்தி செய்வதற்கு இலங்கை இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மீதே அதிகமாகத் தங்கியுள்ளது. மேலும், ஒரு சிறிய நிகர எண்ணெய் இறக்குமதி நாடாக, இலங்கை உலக சந்தையில் ஒரு விலை ஏற்பாளர் மட்டுமே. உற்பத்திக் கிரயம் மீது பெற்றோலிய விலைகளின் உயர் தாக்கம், மற்றும் அதனால் வாழ்க்கைச் செலவு காரணமாக, பெற்றோலிய விலைகளை நிர்ணயம் செய்தல் எப்போதுமே நாட்டில் அரசியல் ரீதியாக கூருணர்வு கொண்ட ஒரு பிரச்சினையாக உள்ளது.

கடந்த தசாப்தத்தில் உலக சந்தைகளில் எண்ணெய் விலைகள் பாரிய ஏற்றத்தாழ்வுகளைக் காட்டியுள்ளது. அந்த வகையில், பொது மக்கள் உட்பட, அனைத்துப் பாதிக்கப்பட்ட தரப்புகளையும் போதுமான மற்றும் ஒப்புரவான வகையில் பிரதிபலித்துக் கவனத்தில் கொள்வதற்கு கடந்த வருட மே மாத நடுப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட டீசல் மற்றும் பெற்றோலுக்கான விலைச் சூத்திரத்தின் அங்கீகரித்தல் இத்திசை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கையாகும். பெற்றோலிய உற்பத்திகளுக்கான செலவு அதன் கிரயம், காப்புறுதி மற்றும் சரக்குக் கட்டணம், களஞ்சியப்படுத்தல் மற்றும் தொகை விநியோகத்திற்கான முனையக் கட்டணங்கள், போக்குவரத்துச் செலவு, நாணயமாற்று வீத வேறுபாட்டுக் கிரயம், வரிகள், இ.பெ.கூ இன் நிதிச் செலவுகள் மற்றும் ஆளணி மற்றும் மேற்செலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. எவ்வாறாயினும், விலைச் சூத்திரம் முக்கியமாக நிதிச் செலவு மற்றும் நாணயமாற்று வீத வேறுபாடுகள் மற்றும் முனையக் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்குவதில்லை.

## மானியப்படுத்திய எண்ணெய் விலைகளின் பொருளாதாரம்

நுகர்வோர் மானியங்கள் முழுமையான கிரயப் பிரதிபலிப்பு விலை மற்றும் தீர்மானிக்கப்பட்ட விலை என்பவற்றின் வேறுபாடாக பொதுவில் தீர்மானிக்கப்படுகின்றன. மொத்த விநியோகச் செலவு, போக்குவரத்துச் செலவு, இலாப வரம்புகள் மற்றும் வரி என்பவற்றைக் கொண்ட முழுக் கிரய பிரபலிப்பு விலையே ஒரு உற்பத்திப் பொருளின் மொத்தக் கிரயமாக உள்ளது. லீற்றருக்கு மிக அதிகமான கிரய மானியத்தை மண்ணெண்ணெய் கொண்டு 2018 ஆம் வருடத்தில் ரூ.14,735 மில்லியன்கள் தொகை மானியத்தை உருவாக்கியது. டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இடையிலான விலை இடைவெளி அதிகமாக உள்ளபோது மண்ணெண்ணெய் மீதான மானியம் போக்குவரத்துத் துறையால் அதிகம் துஷ்பிரயோகிக்கப்பட்டது. ஏதேனும் விலைப் பொறிமுறை

| உற்பத்தி | லீற்றருக்கான நட்டம் (ரூ.) | மொத்த நட்டம் (ரூ.மிலி) |
|---|---|---|
| மண்ணெண்ணெய் | (56.86) | (14,735) |

இல்லாதவிடத்து, விற்பனை வருமானம் மற்றும் மொத்தக் கிரயம் என்பவற்றுக் கிடையிலான வேறுபாடு எரிபொருள் மானியங்களின் கணிப்பிடுதலுக்கான அடிப்படையை அளிக்கிறது.

தீர்மானித்த விலைகள் கிரய - மீள்வசூலித்தல் மட்டங்களுக்கு கீழாக இருப்பதிலிருந்து கிடைக்கப்பெறும் பெற்றோலிய மானியங்களுக்கு நிதியளிப்பதற்காக முறைசார்ந்த வகையிலான வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகள் அங்கில்லை, மற்றும் அதற்கமைய, கடந்த பல வருடங்களாக கடுமையான நிதி இழப்புகளை அறிவிப்பதன் மூலம் மானிய செலவுகளின் ஒரு பகுதியை இ.பெ.கூ தாங்கிக் கொள்வதற்கு முனைகிறது. இதன் பயனாக, நட்டங்களை மறைப்பதற்கும் மற்றும் திரவத்தன்மை தேவைப்பாடுகளைத் திருப்தி செய்வதற்கும் இ.பெ.கூ வங்கிக் கடன் பெறுதல் மீது தங்கியிருக்க வேண்டியிருந்தது. இ.பெ.கூ இனால் பெறப்பட்ட கூடுதல் கடன் பெறுதல்கள் அரச வங்கிகளின் ஐந்தொகைகளைப் பாதித்ததுடன், அதனால் மத்திய வங்கியின் நிதிக் கொள்கைச் செயற்பாடுகளை சிக்கலாக்கியது. அதே சமயம், இ.பெ.கூ இன் கடன் பெறுதல்கள் எழுப்பும் அரசாங்கத்தின் நிகழ்சாத்திய பொறுப்புகளுக்கு பக்கபலமாக இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவாதங்களை வழங்க வேண்டியிருந்தது.

## இலாபத்தன்மையை பாதிக்கும் முக்கிய காரணிகள்

கேள்வி அதே நிலையில் இருந்த போதிலும், வருமானம் 14.61% ஆல் (அண்ணளவாக ரூ.75 பில்லியன்) மீளாய்விற்குட்பட்ட வருடத்தின் போது போக்குவரத்து, விமானத்துறை, ஏற்றுமதி மற்றும் வீட்டுப்பாவனைத் துறைகள் என்பவற்றில் அதிகரித்தது. சக்திவலுத் துறையில் கேள்வி 2017 உடன் ஒப்பிடுகையில் 33.65% (439 மில்லியன் லீற்றர்) ஆல் வீழ்ச்சியுற்றது. கச்சா எண்ணெயின் சராசரி விலை 2017 வருடத்தின் 54.89 அமெரிக்க டொலர்களிலிருந்து 2018 இல் 72.02 இற்கு அதிகரித்தது. மேலும், வருடாந்த சராசரி நாணயமாற்று வீதம் 2017 ஆம் வருடத்தின் ரூ.155.41 இலிருந்து 2018 ஆம் வருடம் ரூ.164.10 இற்கு அதிகரித்தது. இலாபத்தில் கணிசமான குறைதல் நாணய மாற்று வீதத்தின் ஒரு தேய்மானத்துடன் இணைந்ததாக பெற்றோலிய உற்பத்திகள் இறக்குமதியின் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மொத்த நட்ட நிலைமையை ஏற்படுத்தியதுடன் கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள் அதன் மொத்த நட்ட நிலைமைக்குச் சமாந்தரமாக குறைவடைந்தது. கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மையை பாதிக்கும் முக்கிய காரணிகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

## எரிபொருளின் மானியப்படுத்துதல்

பெற்றோலிய உற்பத்திகள் அரசாங்கம் விலைகளைக் கட்டுப்படுத்தும் பொருள் வகைகளில் ஒன்றாகும். இது, இந்தப் பொருட்கள் மக்களிற்கு அத்தியாவசியமானவை மற்றும் அதன் விலை வாழ்க்கைச் செலவைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கின்றது என்ற காரணத்தினாலாகும். இது தொடர்பாக மக்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்கதான மானியங்கள் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தை பரஸ்பர ரீதியாக பாதித்ததுடன் அதன் இலாபத்தில் அது இழந்தது, முழு நாட்டிற்குமாக அரசு மேற்கொண்ட பெரும் சமூக சேவைகளின் ஒரு பகுதியாக இருந்தது. குறைந்த வருமானம் கொண்ட குடித்தனங்கள் மற்றும் மீனவ சமூகங்களின் இலகுவான வாழ்க்கைக்கு ஓர் அதிகரித்த மானியப்படுத்தப்பட்ட விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதில், மண்ணெண்ணெய் சட்ட விரோதமான வகையில் போக்குவரத்துத் துறைகளால் பாவிக்கப்படுவது இந்த மானியம் துஷ்பிரயோகிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதற்கு உரியதொன்றாக உள்ளது. 2017 வருடத்துடன் ஒப்பிடும் போது மண்ணெண்ணெய்க்கான கேள்வி 30.8% அதிகரித்தமை இதனைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

| சவால் | தாக்கங்கள் | வெற்றி கொள்வதற்கான மூலோபாயங்கள் |
|---|---|---|
| பெற்றோலிய உற்பத்தியை மானிய விலையில் விற்பனை செய்தல் | மானிய விலைகளில் விற்பனை செய்வது வருமானம், இலாபத்தன்மை மற்றும் காசுப் பாய்ச்சலில் ஒரு குறிப்பிடத்தக்க எதிர்மறைத் தாக்கத்தைக் கொண்டுள்ளது.<br><br>இ.பெ.கூ காசுப் பாய்ச்சல் பிரச்சினைகளை முகம் கொடுக்கும் போது வட்டி உள்ள கடன்களுடன் அதன் இலாபத்தன்மையை மேலும் கீழே இழுக்கிறது. | மண்ணெண்ணெய்க்காக ஒரு கிரய பிரதிபலிப்பு எரிபொருள் விலை முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்துதல்<br><br>1971 ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 17 இன்படி மானிய உரித்தைப் பெறுவதற்கு அரசாங்கத்துடன் பேசுதல்.<br><br>செலவினைக் கட்டுப்படுத்தல் மூலோபாயங்கள் |

## மேல்நோக்கி நகரும் உலக விலை நிலவரங்களில் இ.பெ.கூ ஒரு விலை ஏற்பாளர்

பெற்றோலிய மூலவளங்கள் இல்லாது, இலங்கை அதன் அனைத்து பெற்றோலிய உற்பத்திகளை உலக சந்தை விலைகளில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. மேலதிகமாக, இலங்கையின் களஞ்சியக் கொள்ளளவுத்திறன், விலைகள் குறைவாக இருக்கும் போது கையிருப்பை கணிசமானளவு வைத்திருப்பதற்கு போதுமானதல்ல. இந்த இரண்டு காரணிகள் உலக சந்தையின் விலைத் தளம்பல்களுக்கு இ.பெ.கூ ஐ வெளிப்படுத்துகின்றன.

2017 இன் பீப்பாய் ஒன்றுக்கு 54.89 அமெரிக்க டொலர்களிலிருந்து 2018 இல் பீப்பாயொன்றுக்கு 72.02 அமெரிக்க டொலர்கள் சராசரி விலை அதிகரித்தலுடன் மீளாய்வின் கீழுள்ள வருடத்தின் போது முர்பான் FOB அபுதாபி கச்சா எண்ணெய் விலையை 31% ஆல் அதிகரித்தது. இது குறிப்பிடத்தக்க வகையில் விற்பனைக் கிரயத்தை பாதித்தது. மேற்குறித்த நிலைமையின் கீழும் வருடத்தின் போது பெற்றோல், சுப்பர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றுக்கான கேள்வி அதிகரித்தது. உயர்ந்த மட்டத்திற்கு உலக எண்ணெய் கையிருப்பை கட்டியெழுப்புதல் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உயர் மட்டத்திலான கச்சா எண்ணெய் உற்பத்தியுடன் இணைந்தாக உலகப் பொருளாதாரத்தின் மந்தமான வளர்ச்சி என்பன 2018 இன் இறுதியில் விலைகளில் கீழ்நோக்கிய அழுத்தத்தை பிரயோகித்தது.

| சவால் | தாக்கங்கள் | வெற்றி கொள்வதற்கான மூலோபாயங்கள் |
|---|---|---|
| உலக சந்தையில் விலை ஏற்பாளர் | உயர் விலைகள் இலாபங்களில் இடைவெளியை இட்டதுடன் பணத்தை அழுத்தத்திற்கு உட்படுத்தியது. உலக சந்தையில் நாங்கள் ஒரு விலை ஏற்பாளராக இருத்தல். | உலக சந்தையில் விலைகள் குறைந்திருக்கும் போது பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சியக் கொள்திறனை அதிகரித்தல். |

## ரூபாய் மதிப்பிறக்கம்

டொலருக்கெதிரான ரூபாயின் மதிப்பிறக்கம் ரூ.82,717 மில்லியனில் (2017 - ரூ.4,922 மில்லியன்) ஒரு குறிப்பிட்ட எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி, 2017 இல் கூட்டுத்தாபனம் ஈட்டிய ரூ.2.82 பில்லியன் இலாபத்திற்கெதிராக ரூ.105.02 பில்லியன் நட்டத்தை (வரிக்கு முந்திய இலாபம்) இ.பெ.கூ இற்கு ஏற்படுத்தியது. வெளிநாட்டு நாணயக் கடன்களை தீர்ப்பதற்கு சந்தையில் அமெரிக்க டொலர்கள் கிடைக்காமை மற்றும் இ.பெ.கூ அரச வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு கொண்டிருந்த கட்டாயம் என்பன மற்றைய வங்கிகளால் அளிக்கப்பட்ட போட்டிதன்மையான வட்டி வீதங்களின் அனுகூலங்களைப் பெறமுடியாமல் செய்தமையால், அது இலாபத்தின் அடிமட்டத்தை மேலும் பாதித்தது.

### சராசரி நாணயமாற்று வீதம் (ரூ/அ.டொ)




| சவால் | தாக்கங்கள் | வெற்றி கொள்வதற்கான மூலோபாயங்கள் |
|---|---|---|
| ரூபாய் மதிப்பிறக்கம் | ரூபாயின் மதிப்பிறக்கம் இலாபத்தன்மை மற்றும் காசுப் பாய்ச்சல்களில் ஒரு குறிப்பிட்ட எதிர்மறை தாக்கத்தைக் கொண்டிருந்தது. | அனைத்து வர்த்தக வங்கிகளிலிருந்து பேச்சுவார்த்தை மூலம் போட்டி வட்டி வீதங்களில் அமெரிக்க டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு இ.பெ.கூ ஐ இயலச் செய்தல். |
| | அமெரிக்க டொலர்களை போட்டித்தன்மையான வீதத்தில் கொள்வனவு செய்வதற்கான இயலாமை நாணயமாற்று வீதத்திலிருந்தான இழப்பை அதிகரித்தது | |
| | | அமெரிக்க டொலர் கடன்களை ரூபாய்களிலான கடன்களாக மாற்றுவதற்கு அரசாங்கத்தின் இடையீடு. |

## எண்ணெய் சுத்திகரித்தல் களஞ்சியப்படுத்தல் பற்றாக்குறை

போதுமானதல்லாத கச்சா எண்ணெய் சுத்திகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் கொள்திறன், பல்வேறு கச்சா எண்ணெய் வகைகள் மற்றும் அவற்றிலிருந்து சுத்திகரிக்கப்படும் உற்பத்திகள் என்பவற்றை ஒரே வகைத் தாங்கிகளில் களஞ்சியப்படுத்துவதற்கு முடியாது செய்கின்றன. இதனால், இந்த உற்பத்திகள் சிலவற்றுக்கான களஞ்சிய வசதிகள் உள்ளபோதிலும், ஏனைய உற்பத்திகளுக்கு தாங்கிகளின் கொள்திறன் போதுமானதல்ல. அதன் சுத்திகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் கொள்திறன்களை விரிவுபடுத்தி மற்றும் தரமுயர்த்துவதற்கு கூட்டுத்தானத்தின் இயலுமையை நிதி மட்டுப்படுதல்கள் பாதித்தபோதிலும், இதனை மேற்கொள்ளாதிற்கான தடை, விலைகள் குறைந்திருக்கும் போது அதிக கையிருப்புகளைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கு இ.பெ.கூ ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பதனாலாகும்.

சுத்திகரித்தல் செய்முறை ஊடாக உருவாக்கப்பட்ட மேல்மிஞ்சிய கீழ்மட்ட உற்பத்திகளின் மீள்ஏற்றுமதி மூலமாக அடைந்த நட்டம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது

| உற்பத்தி | லீற்றருக்கான நட்டம் (ரூ.) | மொத்த நட்டம் (ரூ.மிலி) |
|---|---|---|
| எரிபொருள் எண்ணெய் | (11.26) | (317) |
| நப்தா | (7.60) | (747) |

| சவால் | தாக்கங்கள் | வெற்றி கொள்வதற்கான மூலோபாயங்கள் |
|---|---|---|
| களஞ்சியங் களுக்கான பற்றாக்குறை | எண்ணெய் சுத்திகரித்தல் கொள்திறன் மற்றும் களஞ்சியப்படுத்தலிலான பற்றாக்குறை எங்களது வருமானம் மற்றும் கிரயக் கட்டமைப்பில் ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளன. | சந்தைக் கேள்வியுடன் தொடர்புபட்டதாக கச்சா எண்ணெய மற்றும் சுத்திகரித்த உற்பத்திகள் ஆகிய இரண்டிற்குமான களஞ்சியப்படுத்தல் கொள்திறன் வசதியை அதிகரித்தல். |
| | போதியதல்லாத களஞ்சியப்படுத்தல் காரணமாக கீழ்மட்ட உற்பத்திகளை இ.பெ.கூ நட்டத்தில் ஏற்றுமதி செய்ய வேண்டியமை. | கொள்திறனை மேம்படுத்துகையில் உயர் பயன் ஈட்டும் உற்பத்திகளை உருவாக்குவதற்கு சுத்திகரித்தல் செயற்பாட்டை தரமுயர்த்துதல். |

## டொலர் கடன்களைத் தீர்ப்பது தொடர்பான இடையூறுகள்

இ.பெ.கூ அதன் அரசிறைச் சவால்களை எதிர்கொள்வதற்கு அது கிரமமாகப் பெற வேண்டிய டொலர் கடன்களைத் தீர்ப்பதற்கு தேவையான நிதிகள் இல்லாமையால் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக சவாலுக்குட் படுத்தப்பட்டது. நாணயமாற்று வீத ஏற்றத்தாழ்வுகளுக்கான வெளிப்படுத்தலையோ அன்றேல் சந்தையில் போதியளவில்லாத டொலர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் அது உதவும் என்பதையோ ரூபாய் நிதி கிடைக்கும் தன்மை உள்ளடக்கவில்லை. இவை நிலுவையிலுள்ள கடன்களின் சுமுகமான தீர்த்தலை இடையூறு செய்வதுடன் கூட்டுத்தாபனத்தின் நன்மதிப்புச் சான்றுகளையும் பாதிக்க விட்டுவிடுகிறது. கூடுதல் வட்டி கொடுப்பனவு செய்தல் போன்ற பதிலிறுப்புகள் நிகர சொத்துகள் மீது எதிர்மறை அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நிதி நிலைமையை உருவாக்குகின்றது.

| சவால் | தாக்கங்கள் | வெற்றி கொள்வதற்கான மூலோபாயங்கள் |
|---|---|---|
| டொலர் கடன்களைத் தீர்த்தல் | நிலுவையாக உள்ள கடன்கள் நிதிக் கிரயம் அதேபோன்று நாணமாற்று இழப்புகளாக இலாபத்தன்மையை எதிர்மறையாகப் பாதிக்கின்றன. | வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு வங்கிகளுடன் பேசுதல்<br><br>பயனுறுதியான திறைசேரி முகாமைத்துவம்<br><br>அமெரிக்க டொலர் கடன்களை இலங்கை ரூபாய்க் கடன்களாக மாற்றுவதற்கு வங்கிகள் மற்றும் திறைசேரியுடன் பேசுதல்<br><br>இ.பெ.கூ இன் சிறந்த நலன்களுக்காக அமெரிக்க டொலர் கடன்களை தீர்ப்பதற்கான சுய அதிகாரத்தைக் கோருதல். |

## சிதைவடைந்த குழாய்க் கட்டமைப்புகள்

கொழும்புத் துறைமுகத்திலிருந்து முனையத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளைக் கொண்டு செல்வதற்கு உபயோகிக்கப்படும் குழாய்க் கட்டமைப்புகள் மிகவும் பழுதுற்ற நிலையிலுள்ளன. பல சந்தர்ப்பங்களில், சட்டவிரோத நில ஆக்கிரமிப்பு, அவர்களை அங்கிருந்து அகற்றி குழாய்க் கட்டமைப்புகளில் பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுவதை அரசியல் ரீதியான ஒரு பிரச்சினையாக்கியுள்ளது. இந்தப் பிரச்சினை பல வருடங்களாகத் தீர்க்கப்படாது அமுங்கிக் கிடந்து, அதனால், எண்ணெய் கொண்டு செல்லும் வழியில் குழாய்களில் கசிவுகள் அல்லது ஒழுக்குகளைக் குறைப்பதற்கு இ.பெ.கூ குறைந்த அழுத்தத்தில் எண்ணெயை அனுப்புவதற்கு கட்டாயப்படுத்தப்படுகிறது. இது எண்ணெய் கொண்டு செல்லும் செய்முறையை மந்தமாக்குவதுடன் கப்பல் நிறுத்துமிடத்தில் நெரிசல் அதேபோன்று எண்ணெய் அனுப்புதலிற்கு கூடுதல் நேரம் என இரண்டையும் ஏற்படுத்தி இ.பெ.கூ பெரும் தாமதக் கட்டணங்களை செலுத்துவதற்கு நிர்ப்பந்திக்கிறது.

| சவால் | தாக்கங்கள் | வெற்றி கொள்வதற்கான மூலோபாயங்கள் |
|---|---|---|
| சிதைவடைந்த குழாய்த் தொகுதிகள் | உற்பத்திகளை இடம்மாற்றி அனுப்பும் சமயங்களில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒழுக்கு ஏற்படல்.<br><br>தாமதங்கள் இறக்குமதிச் செலவை அதிகரிக்கும் வேளையில் இ.பெ.கூ இன் நற்பெயரையும் பாதிப்பதன் மூலம் இலாபத்தன்மையை மோசமாகப் பாதிக்கின்றன. | குழாய்த்தொகுதிகளை தரமுயர்த்தல் மற்றும் பராமரித்தல்.<br><br>புதிய குழாய்த்தொகுதிகளை நிர்மாணித்தல் |

# பிரிவுசார் செயலாற்றுகை

முகாமைத்துவ வினைத்திறன் நோக்கங்களிற்காக இ.பெ.கூ அதன் செயற்பாடுகளை பல்வேறு முக்கிய பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளதுடன் மீளாய்வின் கீழான வருடத்தில் அவை சம்பந்தப்பட்ட செயலாற்றுகைகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

| | விற்பனைகள் | லாபம் |
|---|---|---|
| | ரூ. மிலி. | ரூ. மிலி. |
| போக்குவரத்து | 412,716 | (96,042) |
| மின்வலு உற்பத்தி | 74,757 | (10,669) |
| விமானப் போக்குவரத்து | 64,189 | 3,841 |
| கைத்தொழில் | 13,661 | (75) |
| வீட்டுப்பாவனை | 17,688 | (14,619) |
| விவசாய இரசாயனம் | 151 | (19) |
| ஏற்றுமதி & கப்பற் போக்குவரத்து | 9,090 | (1,132) |
| மொத்தம் | **592,253** | **(118,715)** |

## போக்குவரத்துத் துறை

இந்தத் துறை இ.பெ.கூ இற்காக மிகவுயர்ந்த வருமானத்தை ஈட்டி, ரூ.413 பில்லியன்களைப் பங்களித்தது, இது 2017 உடன் ஒப்பிடுகையில் ஒரு 20.9% அதிகரிப்பாகும். தனியார் வாகனங்களை உபயோகிப்பதற்கு பொதுமக்களின் விருப்பங்கள் கேள்வியை பெருப்பிப்பதற்கு ஒரு தொடர்சியான போக்கைக் கண்டது.

பெற்றோல் 92, சுப்பர் டீசல் மற்றும் பெற்றோல் 95 என்பன குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்தன. உயர்ந்த தரத்திலான வாகனங்களின் இறக்குமதி அதேபோன்று அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கடுமையான புகை உமிழ்வுக் கட்டுப்பாட்டு விதிகள் காரணமாக சுப்பர் டீசல் மற்றும் பெற்றோல் 95 இற்கான கேள்வி உயர்ந்தது. இது காலத்திற்கான ஒரு போக்கு, 2020 இலும் இது தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தகரீதியான வாகன உரிமையாளர்களினால் மண்ணெண்ணெயின் தொடர்ச்சியான துஷ்பிரயோகம் மண்ணெண்ணெய்க்கான கேள்வியில் ஒரு தொடர்புபட்ட அதிகரிப்பைக் கண்டதுடன் அது விற்பனை செய்வோர் மற்றும் சில்லறை விற்பனைகள் என இரண்டையும் பாதித்தது. அரசாங்கத்தாலான விலைச் சூத்திரத்தின் அறிமுகம் காரணமாக வருடத்தில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் ஒரு சில சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்தன. நவெம்பர் வரையும் மேல்நோக்கிய விலை மறுசீரமைப்புகள் இந்தத் துறையில் ஒரு வருமான அதிகரிப்புக்கு பங்களித்தன.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் போது மொத்தமாக 24 புதிய மீள்நிரப்பு நிலையங்கள் திறந்த வைக்கப்பட்டன. 2017 மற்றும் 2018 இல் வழங்கப்பட்ட நிர்மாணக் கடிதங்களின்

| பயனுறுதல் திகதி | LP 95 | LP 92 | LAD | LSD |
|---|---|---|---|---|
| 22.01.2015 | 128 | 117 | 95 | 110 |
| 11.05.2018 | 148 | 137 | 109 | 119 |
| 11.07.2018 | 155 | 145 | 118 | 129 |
| 11.08.2018 | 157 | 145 | 118 | 130 |
| 11.09.2018 | 161 | 149 | 123 | 133 |
| 11.10.2018 | 169 | 155 | 123 | 141 |
| 02.11.2018 | 169 | 145 | 116 | 141 |
| 16.11.2018 | 164 | 140 | 111 | 136 |
| 01.12.2018 | 159 | 135 | 106 | 131 |
| 22.12.2018 | 149 | 125 | 101 | 121 |

படி அவை இன்னமும் பூர்த்தி செய்யப்படவுள்ளதுடன் அவை நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்ததும், இந்த மீள்நிரப்பு நிலையங்கள் தற்போது நடைமுறையிலுள்ள நிலையங்களை விட சிறந்த வசதிகளுடன் உரியதாக இருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சேவை மேம்படுத்துதல் மற்றும் சுற்றாடல் சிநேகபூர்வ மீள்நிரப்பு நிலையங்களை ஸ்தாபிக்கும் கொள்கைப்படி கூட்டுத்தாபனம் உரிமை கொண்டுள்ள விற்பனையாளர் நடத்துகின்ற குறைந்தது ஒரு 10 நிலையங்களை இ.பெ.கூ மீள்திருத்துகிறது.

### போக்குவரத்துத் துறையிலான நட்டம் (ரூ. மிலி.)




போக்குவரத்துத் துறையின் கேள்வி மற்றும் விலைகளில் அதிகரிப்பு இருந்தபோதிலும், விற்பனை விலை மொத்தக் கிரயத்தையும் உள்ளடக்குவதற்கு போதுமானதாக இல்லாததினால் இ.பெ.கூ ரூ.96 பில்லியன் நட்டத்தைச் சந்தித்தது. விலைச் சூத்திரம் எரிபொருள் விலை மறுசீரமைப்பு அடிப்படையில் உதவிய போதிலும், அது நிதிக் கிரயங்கள் மற்றும் நாணயமாற்று வீத வேறுபாடுகளை உள்ளடக்கவில்லை.

## சக்திவலுத் துறை

2018 வருடத்தின் போது நாட்டில் நிலவிய காலநிலை நிலைமை காரணமாக, மின்வலு உற்பத்திக்கான கேள்வி 2017 வருடத்துடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்ததுடன் அதனால் சக்திவலுத் துறைக்கான எரிபொருள் விற்பனை 31.5% ஆல் குறைவடைந்தது. இந்தத் துறை இ.பெ.கூ இன் இரண்டாவது மிகப் பெரிய வருமானம் ஈட்டுவதாக தொடர்ந்துமிருந்து, ரூ.74.7 பில்லியன்களைப் பங்களித்த வேளையில், 2017 வருடத்தில்

### சக்திவலுத் துறை விற்பனைகள்



பதிவு செய்யப்பட்ட ரூ.109.20 பில்லியன்களுடன் ஒப்பிடும் போது ஒரு 31.54% வீழ்ச்சியைக் குறிப்பிட்டது.

டீசல் ஒரு ரூ.20.53 பில்லியன் வருமானத்தை ஈட்டியது (2017 - ரூ. 37.7 பில்லியன்)இ ஆனால் ரூ. 6.6 பில்லியன் நிகர நட்டத்தை ஏற்படுத்தியது. எரிபொருள் எண்ணெய் 800 ரூ. 21.65 பில்லியனை ஈட்டியது, ஆனால் நிகர நட்டமாக ரூ.0.87 பில்லியனாக இருந்தது. நப்தா மற்றும் குறைந்த சல்பர் என்பவற்றிலிருந்தான வருமானம் முறையே ரூ.7.44 பில்லியன் மற்றும் ரூ.17.5 பில்லியன் ஆகும். எந்த இடையூறுகளின்றி மின்வலுத் துறையிலிருந்தன கேள்வியைத் திருப்திப்படுத்துவதற்கு இ.பெ.கூ இயலுமாக இருந்தது பாராட்டத்தக்கது.

## விமானப் போக்குவரத்துத் துறை

வருடத்தின் போது இந்தத் துறை ரூ.64.19 பில்லியன்களை வருமானமாக ஈட்டி, முன்னைய வருடத்தை விட 48.9% அதிகரிப்பை பதிவுசெய்ததுடன் ரூ.3.8 பில்லியன் இலாபத்தை அடைந்தது. கிரயப் பிரதிபலிப்பு விலை முறைமையின் அறிமுகத்துடன், ஜெட் A-1 மற்றும் விமான எரிவாயு (Avgas) என்பவற்றின் விலைகள் சர்வதேச எண்ணெய் விலைகளுடன் ஒத்திருக்கும் வகையில் சீர்செய்யப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் விமானப் போக்குவரத்துக்கான எரிபொருளுக்கான கேள்வியினளவு 9.33% அதிகரித்தது. உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களிடமிருந்து ஜெட்-A1 இற்கான கேள்வி சுற்றுலாத் தொழில்துறையின் ஏற்றம் காரணமாக சாதகமான வகையில் தாக்கம் கொண்டிருந்தது.

இ.பெ.கூ ஜனவரி 2018 இல் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் விரிவாக்க செயல்திட்டத்தை ஆரம்பித்ததுடன் அது பூர்த்தியடைந்ததும் அதன் செயற்பாட்டுக் கொள்திறன் நவீன தொழில்நுட்பத்துடன் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், குறைந்தபட்ச செலவில் முத்துராஜவெலவிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு உற்பத்தியை கொண்டு செல்வதற்கு ஜெட் A-1 இற்கான களஞ்சிய வசதிகள் மற்றும் குழாய்க் கட்டமைப்பு என்பவற்றுக்கான சாத்தியக்கூறு மற்றும் கொள்முதல் செய்முறையை கூட்டுத்தானம் ஆரம்பித்தது. இந்தச் செயல்திட்டங்கள் செலவை மேலும் குறைவடையச் செய்து, மற்றும் பயனாக எரிபொருள் விலைகளில் ஒரு குறைவை ஏற்படுத்தும்.

### விமான எரிபொருள் விற்பனை மற்றும்




### விமான எரிபொருள் விற்பனை




## கைத்தொழில் துறை

இந்தத் துறையிலிருந்தான வருமானம் ரூ.13.66 பில்லியனாக இருந்து, முன்னைய வருடத்தை விட 7.4% அதிகரிப்பைக் காட்டியது. எரிபொருள் எண்ணெய் 800 பிரதான பங்களிப்பாளராக ரூ.8.8 பில்லியன் வருமானத்தை ஈட்டியது. 2017 இல் ஒரு நட்டம் ஏற்படுத்தும் பிரிவாக இருந்ததைக் கவனத்தில் கொள்கையில், தார் உற்பத்தி விற்பனை ரூ.110 மில்லியன் இலாபத்தை இவ்வருடத்தில் ஈட்டியமை பாராட்டத்தக்கதாகும். சந்தை மீளெழுவதின் கவனத்துடன் இ.பெ.கூ வீதித் தாரை உற்பத்தி செய்வதை ஆரம்பித்தது என்பது குறிப்பிடப்படுதல் வேண்டும். இதில் உலை எண்ணெயை உபயோகித்து சுத்திகரித்தல் மூலமாக வீதித் தார் உருவாக்கப்படுகிறது. இது ஒரு குறித்த அளவிற்கு சந்தைப் பங்கை திரும்பப் பெறுவதற்கு உதவியது. கட்டுமான அபிவிருத்தி செயல்திட்டங்களுக்காக ஒரு குறைந்த செலவில் உயர் தரத்திலான தாரை வழங்குவதன் மூலம் சந்தைப் பங்கை கட்டியெழுப்புவதற்கு இது உதவும் என நம்பப்பட்டது.

## வீட்டுப்பாவனைத் துறை




உராய்வுநீக்கி அல்லது மசகெண்ணெய் விற்பனை, மசகெண்ணெய் உற்பத்திகளின் விநியோகச் சங்கிலிப் பிரச்சினைகள் காரணமாக 2017 வருடத்துடன் ஒப்பிடுகையில் 19.8% ஆல் வீழ்ச்சியடைந்தது. விற்பனை வீழ்ச்சி அடைந்தபோதிலும், இந்தக் கூறு ரூ.130 மில்லியன் இலாபத்தை ஈட்டுவதற்கு இயலுமாக இருந்தது. ஒரு மசகெண்ணெய் கலக்கும் இயந்திரத் தொகுதி வழங்குனரால் இலங்கையில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது என்பதுடன் இழந்த சந்தைப் பங்கை மீளக் கைப்பற்றும் முகமாக மசகெண்ணெய் உற்பத்திகளை ஒரு குறைந்த விலையில் வழங்குவதற்கு இது வசதியளிக்கும்.

**கைத்தொழில் உராய்வுநீக்கி மண்ணெண்ணெய்**




**கப்பல் எரிபொருள் விற்பனை – நட்டம் (ரூ.மிலி)**




## விவசாயத் துறை

இந்தத் துறையிலான விற்பனை ரூ.75 மில்லியனிலிருந்து ரூ.151 மில்லியனிற்கு அதிகரித்ததுடன் அதன் பயனாக மீளாய்வின் கீழான வருடத்தின் போது மொத்த நட்டம் ரூ.121 மில்லியனிலிருந்து ரூ.19 மில்லியனாகக் குறைவடைந்தது. கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களின் கடுமையான கடைப்பிடித்தலுக்கு உட்பட்டு தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு கிளைபோசேட் உர வகையை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு இ.பெ.கூ அனுமதிகளைப் பெற்றுக்கொண்டது. கிளைபோசேட் அதற்கமைய 2018 வருடம் இறக்குமதி செய்யப்பட்டு நவெம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் விற்பனை செய்யப்பட்டது. கிளைபோசேட் விற்பனை விவசாயத் துறையின் நட்டத்தைக் குறைப்பதற்கு உதவியது.

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, சர்வதேச தரநியமத்திற்கான ஸ்தாபனத்தின் (ISO) செயலாற்றுகை மீளாய்வுகள் ISO 18001 இற்காவும் அதே போன்று OHSHAS 2007 இற்காகவும் நடத்தப்பட்டன. 117 விவசாய இரசாயன விற்பனையாளர்கள் அதிக சாத்தியம் கொண்ட பகுதிகளில் நியமிக்கப்பட்டதுடனும் மற்றும் 56 தேயிலை மற்றும் பெருந்தோட்ட வாடிக்கையாளர்கள் நியமிக்கப்பட்டதோடும் விநியோக வலையமைப்பில் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## கப்பல் எரிபொருள் விநியோகம் மற்றும் ஏற்றுமதி

கப்பல்களுக்கு எரிபொருள் வழங்குவதிலிருந்தான வருவாய் ரூ.495 மில்லியன்களாக இருந்ததுடன் உலை எண்ணெய் மற்றும் நப்தா என்பவை குறைந்த விலையில் விற்கப்பட வேண்டியிருந்ததால் இ.பெ.கூ ரூ.68 மில்லியன் நட்டத்தை ஈட்டியது. இது மேல்மிஞ்சிய எரிபொருளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்கு போதுமான வசதிகள் இல்லாமையின் காரணத்தினால் ஏற்பட்டதாகும்.

வருடத்தின் போது இ.பெ.கூ நப்தா மற்றும் உலை எண்ணெய் என்பவற்றை ஏற்றுமதி செய்து ரூ.8.59 பில்லியனை ஒரு வருமானமாகப் பெற்றது, ஆனால் ரூ.1.06 பில்லியன் நட்டத்தை ஈட்டியது. சக்திவலுத் துறையிலிருந்து இந்த இரு உற்பத்திகளுக்குமான கேள்வியிலான ஒரு வீழ்ச்சி நாட்டில் அதிக மழைவீழ்ச்சியுடன் இணைந்து உலை எண்ணெய் மற்றும் நப்தா என்பவற்றைக் களஞ்சியப்படுத்துவதில் அழுத்தத்தைப் பிரயோகித்தது. இதன் பயனாக, அவை கிரயத்திற்கும் கீழான ஒரு விலையில் மீளேற்றுமதி செய்யப்பட வேண்டியிருந்தது.

# சுத்திகரித்தல்

ஆட்டோ டீசல் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் 35% பிரதிநிதித்துவம் செய்கின்றதுடன் மொத்த சுத்திகரிப்பு உற்பத்திகளில் இரண்டாவது பெரிய அளவாக 27% உடன் எரிபொருள் எண்ணெய் பிரதிநிதித்துவம் செய்கிறது.

## செய்முறைப்படுத்திய கச்சா



■Murbun Crude ■Saharan Blend ■DAS Crude

## சுத்திகரித்த உற்பத்திகள்



■பெற்றோல் 92 ■மண்ணெண்ணெய் ■ஆட்டோ டீசல் ■எரிபொருள் எண்ணெய் 800 ■நப்தா ■அஸ்பெயிட் ■அட்டுர் ■லங்கா பெற்றோலிய எரிவாயு

| | 2018 | 2017 |
|---|---|---|
| குறூட் டிஸ்டிலேசன் அலகு | 89.70% | 96.20% |
| நப்தா யுனிபைனர் அலகு | 87.85% | 87.80% |
| பிளட்போமர் அலகு | 89.09% | 90.30% |
| காஸ் ஒயில் யுனிபைனர் அலகு | 66.43% | 81.60% |
| விஸ்பிரேக்கர் அலகு | 85.30% | 85.00% |
| எல்.பி.ஜி மெரொக்ஸ் டிரீட்டர் அலகு | 85.35% | 93.50% |
| பிட்டுமான் புளொவர் | 25.84% | - |
| எல்.பி.ஜி அலகு | 85.67% | 93.50% |
| கெரொசின் மெரொக்ஸ் அலகு | 75.31% | 69.90% |
| வோட்டர் இன்டேக் ஸ்டேசன் | 43.84% | 38.10% |

செய்முறைப்படுத்தபட்ட கச்சா எண்ணெய் 1,675,337 மெட்ரிக் தொன்கள் அளவாக இருந்ததுடன் சராசரி உள்ளெடுத்தல் ஸ்டிரீம் (Stream) நாளொன்றுக்கு (TPSD) 5123 மெட்ரிக் தொன்களாகவும் மற்றும் கலண்டர் நாளொன்றுக்கு 5141 தொன்களாகவும் இருந்தது. சுத்திகரித்தல் பிரிவு 327.42 நாட்கள் செயற்பாட்டிலிருந்ததுடன் கச்சா எண்ணெய் வடிகட்டும் அலகு 89.70% செயற்படும் நேர வினைத்திறனைப் பதிவு செய்தது.

எரிபொருள் எண்ணெய் மற்றும் வாயுவின் நுகர்வு, அளவின் அடிப்படையில் 2.68% ஆல் அதிகரித்தது, ஆனால் ரூபாயின் பெறுமதி மதிப்பிறக்கத்துடன் இணைந்ததாக சந்தையில் குறிப்பிடத்தக்க கிரய அதிகரிப்பின் காரணமாக பெறுமதி அடிப்படையில் 60.63% ஆல் அதிகரித்தது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மெட்ரிக் தொனொன்றுக்கான உண்மையான மொத்த செயற்பாட்டுச் செலவு 36.76% ஆல் அதிகரித்தது. இது பிரதானமாக, வருடத்தின் போது சுயமாகப் பாவிக்கப்பட்ட அதிகரித்த எரிபொருள் மற்றும் வாயு எண்ணெய் செலவுகள் காரணத்தினாலாகும். வரவுசெலவுத் திட்டமிட்ட செலவுடன் ஒப்பிடும் போது உண்மையான செயற்பாட்டுச் செலவு 8.03% ஆல் குறைவடைந்தது.

இயந்திரப் பொறித் தொகுதியில் செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்தும் முகமாக, சுத்திகரித்தல் செயற்பாடுகள் ஒவ்வொரு மூன்று வருடத்திற்கொரு முறை திருத்த வேலைகளுக்காக இடைநிறுத்தப்படுகின்றன. 2018 இன் போது செயற்பாடுகள் பெப்ரெவரி 18 இலிருந்து மார்ச 27 வரை பழுதுபார்த்தல் மற்றும் திருத்துதலுக்காக இடைநிறுத்தி அதன்மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்துகையில் முறைமையின் செயலிழத்தலுக்கு எதிராக பாதுகாப்புகளை உறுதிப்படுத்தியது.

சொந்தப் பாவனை எரிபொருள் செய்முறைப்படுத்துதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் கையாளும் இழப்புகள் ஒன்றுபட்டு 2017 இன் 0.717% உடன் ஒப்பிடுகையில் 0.330% ஆக இருந்தது.

சொந்தப் பாவனை எரிபொருள் விலகலாக, கச்சா எண்ணெயின் தொன் ஒன்றுக்கான செய்முறைப்படுத்தல் செலவு, மதிப்பிறக்கம் மற்றும் வங்கிக் கட்டணங்கள் 10.57% ஆல் அதிகரித்த வேளையில், சொந்தப் பாவனை எரிபொருள் எண்ணெய் மற்றும் வாயு என்பவற்றின் அதிகரித்த கிரயம் காரணமாக சொந்தப் பாவனை எரிபொருள் செலவு உட்பட கச்சா எண்ணெயின் தொன் ஒன்றுக்கான மதிப்பிறக்கம் மற்றும் வங்கிக் கட்டணங்கள் 37.38% ஆல் அதிகரித்தது.

பீப்பாய் ஒன்றுக்கான சராசரி இறக்குமதிச் கிரயம் (CIF) 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 இல், சர்வதேச எரிபொருள் விலைகளில் அதிக தளம்பல்கள் காரணமாக குறிப்பிடத்தக்கை வகையில் அதிகரித்தது.

| | 2018 US$ | 2017 US$ |
|---|---|---|
| முர்பான் கச்சா | 80.01 | 56.41 |
| தாஸ் | 83.63 | 65.39 |

(CIF அடிப்படையிலான கிரயம்)

## பெற்றோலிய உற்பத்திகளின் B2B விநியோகம்

லாப்ஸ் காஸ் நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் என்பவற்றுக்கான எல்.பி.ஜி விநியோகங்கள் முறையே 6,169 மெ.தொ மற்றும் 16,764 மெ.தொ. இருந்த வேளையில் இலங்கை மின்சார சபை மற்றும் ஆசியா பவர் என்பவற்றுக்கு விநியோகித்த எரிபொருள் எண்ணெய் அளவு முறையே 126,309 மெ.தொ ஆகவும் 10,745 மெ.தொ ஆகவும் இருந்தது.

சப்புகஸ்கந்த விநியோக முனையம்

சப்புகஸ்கந்த விநியோக முனையம் இ.பெ.கூ சொந்தமாகக் கொண்டுள்ள விநியோக முனையம் என்பதுடன் அது சுத்திகரிப்பினால் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் பகுதியை (ஆட்டோ டீசல், பெற்றோல் 92 மற்றும் மண்ணெண்ணெய், உலை எண்ணெய் மற்றும் ஜெட் A-1) விநியோகிக்கின்றது.

முனையம் திருத்தியமைக்கப்பட்டதுடன் வீதி இணைப்புகள் ஊடாக விமான நிலையத்திற்கு ஜெட் A-1 எரிபொருளை விநியோகிப்பதற்காக அதன் மேற் பொருத்துகைக் குழாய்க் கட்டமைப்புச் (gantry) செய்முறை தன்னியக்கமயப்படுத்தப்பட்டுள்ளது. முனையத்தின் செயற்பாட்டு வினைத்திறன் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2018 | |
|---|---|---|
| உற்பத்தி | கையாளப்பட்ட அளவு (மிலி.லீ) | இ.பெ.கூ இன் மொத்த விற்பனை (மிலி. லீ) |
| பெற்றோல் 92 | 51.37 | 1,337.39 |
| ஆட்டோ டீசல் | 212.04 | 2,120.16 |
| எரிபொருள் எண்ணெய் | 158.90 | 362.07 |
| மண்ணெண்ணெய் | 24.15 | 259.16 |
| ஜெட் A-1 | 42.88 | 630.43 |
| மொத்தம் | 489.34 | 4,709.21 |


HYUNDAI
25DF -7
CEYPETCO




# பெறுமதியை நாங்கள் எவ்வாறு உருவாக்கிறோம்

# பெறுமதியை நாங்கள் எவ்வாறு உருவாக்கிறோம்

## நிதி மூலதனம்

### வருவாய்

இ.பெ.கூ இற்கான வருவாய் பிரதானமாக பெற்றோலிய உற்பத்திகளை உள்நாட்டில் விற்பனை செய்வதன் மூலம் பெறப்படுகின்றது. மீளாய்வின் கீழுள்ள வருடத்தில், உள்நாட்டு விற்பனைகள் வருவாயின் முக்கியமான மூலவளமாகத் தொடர்ந்துமிருந்தது. மே 2018 இல் கிரயப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கட்டுப்பாட்டுத் தேவைப்பாடுகளினால் குறிப்பிடப்படுகின்ற வகையில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் மாதாந்தம் மறுசீரமைக்கப்பட்டன என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். அதற்கமைய, மீளாய்விற்கு உட்பட்ட வருடத்தில் உலக சந்தையில் உள்ள விலைத் தளம்பல்களுக்குச் சமாந்தரமாக பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் மாற்றம் பெற்றன. விலைப் பொறிமுறை சர்வதேச எரிபொருள் சந்தையின் தளம்பல்கள் காரணமான நட்டங்களை குறைப்பதற்கு உதவுவதில் கூட்டுத்தாபனத்திற்கு நேர்மறையான வகையில் பங்களித்தது.

### விற்பனைகள் (ரூ.பிலி)




RS. 592 BN
வருமானம்

RS. 13.7 BN
நிதி மற்றும் ஏனைய வருமானம்

RS. 329 BN
மொத்த சொத்துகள்

## வருவாய்க் கட்டமைப்பு




ஆட்டோ டீசல், 2018 ஆம் வருடம் அதிவுயர்வான வருமானத்தை தொடர்ந்து ஈட்டுகையில், பெற்றோல் 92 இரண்டாவது உயர் வருமானம் ஈட்டுவதாக இருந்தது. 2017 வருடத்துடன் ஒப்பிடுகையில் பெற்றோல் 92 இற்கான கேள்வி 10% ஆல் அதிகரித்தது. பெற்றோல் 95 மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றின் கேள்விகளிலான அதிகரிப்பு கூடுதல் வினைத்திறனான மற்றும் சுற்றாடல் சிநேகபூர்வமான எரிபொருளுக்கு நுகர்வோர்களின் விருப்பங்களைச் சுட்டிக்காட்டுகிறது. மண்ணெண்ணெய்க்கான கேள்வியிலுள்ள அதிகரிப்பு பஸ்வண்டிகள் மற்றும் பார ஊர்திகள் போன்ற பாரமான போக்குவரத்து மேற்கொள்பவர்களால் அதிக மானியப்படுத்தப்பட்ட விலை காரணமாக மண்ணெண்ணெய் கலப்பு செய்யப்படுவதைப் பிரதிபலிக்கிறது. எவ்வாறாயினும், இந்த நடைமுறையினைக் குறைப்பதற்கு பல்வேறு கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. சல்பர் இல்லாத சுற்றாடல் சிநேகபூர்வமான யூரோ 4 உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தியதின் மூலம் அதன் சுற்றாடல் சிநேகபூர்வமான செயற்பாடுகளை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அதிகரித்தது.

## ஏனைய வருமானம்

வருடத்தின் போது இ.பெ.கூ பங்கிலாப வருமானம் ரூ.434 மில்லியனை ஈட்டியது, அது பிரதானமாக அதன் துணை நிறுவனமான CPSTL இலிருந்து பெறப்பட்டது. ஊழியர் வட்டி வருமானமான ரூ.215 மில்லியன் ஏனைய வருமானத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. அனைத்து முதலீட்டு ஆதன வருமானம், வாடகை வருமானம் மற்றும் மீள்நிரப்பு நிலைய உபகரணங்களன் விற்பனை வருமானம் என்பனவும் இந்த நிரலின் கீழ் இனங் காணப்பட்டுள்ளன.

## நாணயமாற்று வீத வேறுபாடு

வருடத்தின் போது நாணயமாற்று வீத வேறுபாட்டின் இ.பெ.கூ மீதான எதிர்மறைத் தாக்கம் ரூ.82,717 மில்லியனாகும் என்பதுடன் இது 2017 வருடத்திற்கு எதிராக ரூ.77,795 மில்லியன் அதிகரிப்பாகும். பெற்றோலிய உற்பத்திகளை இ.பெ.கூ இறக்குமதி செய்வதனால் வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக இலங்கை ரூபாயின் கடுமையான மதிப்பிறக்கம் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தியது. 2018 இல் இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருக்கு எதிராக அண்ணளவாக 16.4% ஆல் (2017 இல் 2.50%) மதிப்பிறங்கியது. இரண்டு அரச வங்கிகளிலிருந்தும் அமெரிக்க டொலர்களை எடுத்ததினால் இ.பெ.கூ அனைத்து வெளிநாட்டு நாணயக் கடன்களை அடைத்தது. எவ்வாறாயினும், வெளிநாட்டு நாணயக் கடன்களை அடைப்பதற்கு சந்தையில் அமெரிக்க டொலர்கள் இல்லாதிருந்தமை நாணயமாற்று வீதத் தாக்கத்தை மேலும் மோசமாக்கியது.

## நாணயமாற்று இழப்பு (ரூ.மில்)




## நிதி வருமானங்கள்

இ.பெ.கூ ஒரு வங்கி மேலதிகபற்றைப் பெற்றுக் கொள்ளாதிருப்பதை உறுதிப்படுத்துகையில் தினசரி மேல்மிச்சமாகும் பணம் வட்டி ஈட்டும் மூலங்களில் முதலீடு செய்யப்பட்டன. அதன் ஒரு பயனாக முதலீடுகளிலிருந்தான வருமானம் ரூ.258 மில்லியனால் அதிகரித்ததுடன் வங்கி மேலதிகபற்று வட்டியும் செலுத்துவதற்கு ஏற்படவில்லை. மொத்த நிதி வருமானம் 2017 வருடத்துடன் ஒப்பிடும் போது 16% ஆல் முன்னேற்றம் அடைந்தது. இலங்கை மின்சார சபை, IPPகள் மற்றும் ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் என்பவற்றின் அநேகமான விலைப்பட்டியல்கள் தீர்க்கப்படாது வருடத்தின் போது நிலுவையாக இருந்ததினால் வாடிக்கையாளர்களின் தாமதமான தீர்த்தல்கள் மீதான வட்டிக் கட்டணங்கள் ரூ.1.5 பில்லியனால் அதிகரித்தது. மேலும், திறைசேரி முறிகள், நிலையான வைப்புகள், மற்றும் கோரல் வைப்பு நிதிகள் என அந்த நிதிப்பத்திரங்களுடன் கட்டி எழுப்பப்பட்ட தேறிய வட்டி வருமான முதலீடுகள் இந்த முன்னேற்ற நிலைக்கு பங்களித்தன.

## நிதி வருமானம்




## நிதிச் செலவீனங்கள்

வருடத்தின் போது இ.பெ.கூ ரூ.12.06 பில்லியன் நிதிச் செலவு செய்தது, இது முன்னைய வருடத்தை விட ஒரு 14.5% அதிகரிப்பாகும். இ.பெ.கூ இந்தச் செலவைக் குறைப்பதற்கு கடுமையாக முயற்சிக்கின்றது என்பதுடன் இந்த வருடமும் ஏதேனும் மேலதிக பற்றை ஏற்படுத்தாது பயனுறுதியான வகையில் அதன் நிதிகளை முகாமைத்துவம் பண்ணியமை பாராட்டத்தக்கதாகும். சந்தையில் அமெரிக்க டொலர்கள் கிடைக்காமை கடன் நிலுவையில் ஓர் அதிகரிப்புக்கு இட்டுச்சென்றதுடன் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலுவுகளில் ஓர் அதிகரிப்பையும் விளைவித்தது.

## வருமான வரிச் செலவு

2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி, வரியிடப்படக்கூடிய வருமானத்திலிருந்து வரியிடப்படக்கூடிய வணிக நட்டத்தைக் கோருவதற்கு கூட்டுத்தாபனம் உரித்துடையதாகும். அதன்படி, பொருள்சார் வரிப் பொறுப்பு வருடத்திற்காக எழவில்லை.

## இலாபத்தன்மை

சர்வதேச எரிபொருள் சந்தையிலுள்ள உயர் தளம்பல், மண்ணெண்ணெயை ஓர் உயர்ந்த மானிய விலையில் விற்றல் மற்றும் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் கடுமையான மதிப்பிறக்கம் என்பன ஒட்டுமொத்த இலாபத்தன்மையில் ஒரு பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தின. வீதசாரங்கள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

| | 2017 | 2018 |
|---|---|---|
| மொத்த இலாப விடுமிகை | 6.05% | -0.58% |
| செயற்பாட்டு இலாப விடுமிகை | 1.61% | -4.44% |
| நிகர இலாப விடுமிகை | 0.24% | -20.16% |

இ.பெ.கூ 2018 வருடத்தின் போது மொத்த நட்டத்தை ஈட்டியது. சர்வதேச எண்ணெய் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்த போதிலும், மே 2018 வரைக்கும் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை விலைகள் மாற்றமின்றி இருந்தது. மே 2018 இலிருந்து டீசல் மற்றும் பெற்றோலுக்கான விலைச் சூத்திரத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியதுடன் அது நட்டங்களைக் குறைப்பதற்கு பங்களித்தது. மேலும், அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாய் நாணயத்தின் கடுமையான மதிப்பிறக்கம் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை மீது எதிர்மறையாகப் பாதித்தது.

## மொத்த இலாபம்/நட்டம் (ரூ.மிலி)




மொத்த முழுமையான வருமானம் 2018 இல் ரூ.104.77 பில்லியன் நட்டம் ஈட்டுவதில் முடிவடைந்தது. அது முந்திய வருடத்தில் ஈட்டிய இலாபத்துக்கு எதிராக ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடாக இருந்தது. கூட்டுத்தாபனம் பின்வரும் காரணங்களினால் பிரதானமாக நட்டத்தை ஈட்ட வேண்டியதாக இருந்தது:

- சர்வதேச எண்ணெய் விலை நகர்வுகளுக்கு அமையும் வகையில் மே 2018 வரை கிரயப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறையொன்றின் இல்லாமை மற்றும் அரசாங்கத்தால் சில்லறை விலை தீர்மானிக்கப்படுவதின் காரணத்தால் உயர்ந்த மானிய வீதங்களில் பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை. சர்வதேசத்தில் கச்சா எண்ணெயின் விலைகள் அதிகரிக்கப்பட்ட போதிலும் கூட, பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விலைகள் ஜனவரி 2015 இலிருந்து நிலையானதாக தொடந்திருந்தது.

- அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாய் 16.4% ஆல் மதிப்பிறங்கியதால் இ.பெ.கூ ஒரு நாணயமாற்று வேறுபாடாக ரூ.82.72 பில்லியன் நட்டத்தை சந்திக்க வேண்டியிருந்தது.

- பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான வட்டிச் செலவு ரூ.12.60 பில்லியன் தொகையை அடைந்ததுடன் அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய மானிய வகைகள் மூலமாக அமெரிக்க டொலர் கடன்களை அடைப்பதற்கு நடைமுறைப்படுத்தககூடிய ஒரு பொறிமுறை இல்லாமை, இ.பெ.கூ ஆல் முகம் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய தடைகளில் ஒன்றாக இருந்தது. மேலதிகமாக, இ.பெ.கூ அமெரிக்க டொலர்களை அரசு சொந்தமாகக் கொண்டுள்ள இரண்டு வர்த்தக வங்கிகளிலிருந்து மட்டுமே கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் ஏனைய அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து போட்டித்தன்மையான வீதத்தில் அமெரிக்க டொலர்களைக் கொள்வனவு செய்வதில் மட்டுப்படுத்தப்பட்டன.

- வருடத்தில் நல்ல மழைவீழ்ச்சியை அடுத்து நீர் மின்னுற்பத்திக்கான நகர்வுடன் உலை எண்ணெய் மற்றும் நப்தா என்பவற்றுக்கான உள்நாட்டுக் கேள்வி வீழ்ச்சி அடைந்ததினால், இ.பெ.கூ மேல்மிஞ்சிய அந்த கீழ்மட்ட உற்பத்திகளை மீள ஏற்றுமதி செய்ய வேண்டியிருந்தது. இ.பெ.கூ இந்த உற்பத்திகளை வைத்திருப்பதற்கு போதிய களஞ்சிய வசதிகளைக் கொண்டிருக்காததினால், அவற்றை குறைந்த விலைகளில் விற்பனை செய்வதற்கு கூட்டுத்தாபனம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுத்த போதிலும், கூட்டுத்தாபனம் பல்வேறு மூலோபாயங்கள் மூலம் அதன் நட்டத்தைக் குறைப்பதற்கு முயற்சித்தது:

- நிதிச் செலவைக் குறைப்பதற்கு நாணயக் கடித அறவீடுகள் மற்றும் ஏற்றுக்கொள்ளல் தரகுப்பணம் என்பவற்றை குறைப்பதற்கு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

- காசை வெறுமனே பயனற்றதாக வைத்திருக்காது திறைசேரி செயற்பாடுகள் பயனுறுதியான வகையிலும் மற்றும் வினைத்திறனான வகையிலும் முகாமைத்துவம் செய்யப்பட்டது. இ.பெ.கூ மேலதிகபற்றுக்காக வங்கியை நாடாதிருப்பதை உறுதிப்படுத்தும் வேளையில், தினசரி மேல்மிஞ்சிய பணம் வட்டி ஈட்டும் மூலங்களில் முதலீடு செய்யப்பட்டன. இ.பெ.கூ வருடத்தின் போது நிலையான வைப்புகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் கோரல் வைப்புகள் என்பவற்றிலிருந்து ரூ.4.7 பில்லியனை வருமானமாக ஈட்டியதுடன் வங்கி மேலதிகபற்று வட்டி எதனையும் செலுத்தவில்லை.

- இறக்குமதிக் கொள்வனவுச் செய்முறைகள் கூடுதல் வெளிப்படையானவையாக வந்ததுடன் பல வழங்குனர்கள் விலைக்கூறல்களைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்புகளைப் பெற்றனர். தரத்துடனான பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியில் இது போட்டித்தன்மைக்கு சாதகமான வகையில் பங்களித்ததுடன் இறக்குமதி விலைகளில் ஒரு ஒட்டுமொத்த குறைப்பை ஏற்படுத்தியது.

- மே 2018 இலிருந்து பெற்றோல் மற்றும் டீசலுக்காக அரசாங்கத்தால் ஒரு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அது நட்டங்களைக் குறைப்பதற்கு உதவியது.

- கிரயப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறையொன்று விமான எரிபொருள் துறையில் தொடரப்பட்டதுடன் அது இத்துறையிலிருந்து ரூ.3.8 பில்லியன் இலாபத்தை அடைவதற்கு உதவியது.

- கப்பல் நிறுவன மூல ஆவணங்கள் இல்லாது கப்பல் உத்தரவாதம்/வங்கி நட்ட உத்தரவாதத்தை உபயோகித்து சரக்குகளை இறக்கியமை.

- அதிக நடைமுறை சார்ந்த முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன, எவ்வாறாயினும் அவை மேலும் முன்னேற்றங்களைத் தேவைப்படுத்துகின்றன. எரிபொருள் கையாளுதல் மற்றும் விநியோகப் பணிகள் என்பவற்றில் பல குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- செலுத்த வேண்டிய வரி மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பன முப்படைகள், பொலிஸ், மற்றும் இரயில்வேத் திணைக்களம் என்பவற்றிலிருந்து வரவேண்டிய வர்த்தக வருமதித் தொகைகளுக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டன.

## ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இ.பெ.கூ இன் சொத்து அடித்தளத்திற்கு ரூ.595 மில்லியன் பெறுமதியான ஆதனம், பொறி (இயந்திரங்கள்) மற்றும் உபகரணம் என்பன சேர்க்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட நிலத் துண்டுகளை மீள்விலை மதிப்பிடுவதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தை ஈடுபடுத்துவதன் மூலம் இ.பெ.கூ மீள்விலை மதிப்பீடு செய்தது. வருடத்தின் போது ரூ.24 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை இ.பெ.கூ அகற்றியது. வருடத்தின் போதான தேய்மானம் ரூ.957 மில்லியனாகும்.

## கையிருப்புகள்

வருடத்தின் போது கையிருப்புகளின் பெறுமதி 2017 வருடத்திற்கெதிராக 28.95% ஆல் அதிகரித்தது. சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் அதிகரிப்பு முடிவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்பை ஏற்படுத்தின.

## வர்த்தக வருமதிகள்

அரசுடமை தொழில் முயற்சிகளால் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளின் செலுத்தாமை காரணமாக 2017 வருடத்துடன் ஒப்பிடும் போது வர்த்தக வருமதி 12.5% ஆல் அதிகரித்தது. வருடத்தின் போது வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பவற்றுக்கெதிராக முப்படைகள், பொலிஸ் மற்றும் இரயில்வேத் திணைக்களம் என்பவற்றிலிருந்து வர்த்தக வருமதித் தொகையில் ரூ.11.94 பில்லியனை இ.பெ.கூ கொடுப்பீடு செய்வதற்கு இயலுமாகவிருந்தது. ஸ்ரீ லங்கன் எயர் லைன்ஸ், இலங்கை மின்சார சபை மற்றும் IPPs மற்றும் ஆயுதப் படைகளிலிருந்து டிசம்பர் 31, 2018 திகதியன்றான செலுத்தப்படாத நிலுவைகளாக முறையே ரூ.25.6 பில்லியன், ரூ.47.6 பில்லியன், ரூ.6.7 பில்லியன் மற்றும் ரூ.0.82 பில்லியன், இருந்தன.

## குறுகிய கால முதலீடுகள்

வெளிநாட்டு நாணய கடன்களை அடைப்பதற்கு சந்தையில் அமெரிக்க டொலர்கள் இல்லாமையின் காரணமாக மேம்படுத்தப்பட்ட கடன் சேகரிப்பு மற்றும் கூட்டுத்தானத்திலுள்ள நிதிகள் மூலமாக ஒப்புரவில்லாத குறுகிய கால முதலீடுகளில் இ.பெ.கூ முதலீடுகளை மேற்கொண்டது. இதற்கமைய குறுகிய கால முதலீடு 829% ஆல் அதிகரித்தது.

## கடன்கள் மற்றும் கடன்படல்கள்

முக்கியமாக சந்தையில் போதுமான டொலர்கள் இல்லாததின் காரணமாக கடன்கள் அடைக்கப்படாமை மற்றும் அது ஏற்படுத்திய ஒரு பாரிய நாணயமாற்று வேறுபாடு என்பவற்றின் விளைவாக வருடத்தின் போது கடன்களும் மற்றும் கடன்படல்களும் ரூ.116 பில்லியன்களால் அதிகரித்தது. நட்டம் ஏற்படுத்தும் காரணிகளுள் இது பிரதானமான ஒன்றாக இருந்தது. மேலும், வருடத்தின் போது விமானநிலைய விரிவாக்க செயல்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு மக்கள் வங்கியிலிருந்து 7.725 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் பெறப்பட்டது.

## தக்கவைத்த வருவாய்கள்

2008 இலிருந்து ஈட்டிய நட்டங்களுடன் எதிர்மறை தக்கவைத்த வருவாய்கள் ரூ.325.57 பில்லியனுக்கு அதிகரித்தது. இலாபங்கள் 2014, 2016 மற்றும் 2017 இல் மாத்திரமே ஈட்டப்பட்டன. கிரயப் பிரதிபலிப்பு இல்லாத விலைக் கட்டமைப்பு இந்த நட்டங்களுக்கான பிரதான காரணமென்பதுடன் அவை வட்டி அறவிடப்படும் வங்கிக் கடன்கள் மூலமாக நிதியளிக்கப்பட்டன, இது இ.பெ.கூ இன் நிதிச் செயலாற்றுகையை மோசமாக்கியது.

## பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்க்கை

| சேர்க்கப்பட்ட பெறுமதி | 2018 ரூ.மில்லியன் | 2017 ரூ.மில்லியன் |
|---|---|---|
| ரூபாய்கள் மில்லியன் | | |
| விற்பனை வருமானம் | 520,967 | 445,950 |
| ஏனைய வருமானம் | 13,702 | 11,738 |
| பொருட்கள் & சேவைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை | (495,874) | (293,965) |
| தேய்மானம் | (957) | (923) |
| சேர்க்கப்பட்ட பெறுமதி | 37,838 | 162,800 |

| | | |
|---|---|---|
| பின்வரும் வகையில் பிரயோகிக்கப்பட்டது | | |
| ஊழியர்களுக்கு | | |
| ஊதியம் & ஏனைய நன்மைகள் | 6,019 | 5,236 |
| மூலதனம் வழங்குபவர்களுக்கு செலுத்துவதற்கு | | |
| கடன்கள் மீதான வட்டி | 12,065 | 10,531 |
| கூட்டுத்தாபனத்திற்கு | | |
| தக்கவைத்த இலாபம் | (105,051) | 1,056 |
| அரசாங்கத்திற்கு | | |
| வரிகள் மற்றும் தீர்வைகள் | 124,805 | 145,978 |
| சேர்க்கப்பட்ட பெறுமதி | 37,838 | 162,800 |

2018 நிதியாண்டின் போது இ.பெ.கூ இனாலான பொருளாதாரப் பங்களிப்பு மேலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு கடனளித்தவர்கள், அரசாங்கம், ஊழியர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் மத்தியில் மீள்விநியோகிக்கப்பட்டது.

# உருவாக்கப்பட்ட மூலதனம்

நாட்டிற்கு ஒரு மேம்பட்ட சேவையை வழங்கவதற்கான இ.பெ.கூ இன் திட்டத்தில், மூலதன செயல் திட்டங்களிலான முதலீடுகள் முக்கியமானவை. வாடிக்கையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்கும் முகமாக இருக்கும் சொத்துத் தொகுதிக்கு இ.பெ.கூ ரூ.595 மில்லியன் பெறுமதியான சேர்க்கைகளை, அது மேலும் இட்டது. வருடத்தின் போது, முக்கியமான செயல்திட்டங்களில் பல திருப்தியான வகையில் மேற்கொள்ளப்பட்டன.
அதே சமயம், இ.பெ.கூ சிறிய மற்றும் மூலதனக் கொள்வனவுகளையும் கூட பூர்த்தி செய்வதற்கு முடிந்தது.

வருடத்தின் போது பூர்த்தி செய்யப்பட்ட முக்கியமான செயல்திட்டங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- சுத்திகரித்தலுக்கான ஆவிக் கொதிகலன் வெற்றிகரமாக நிறுவப்பட்டது.
- ஜெட் A-1 விநியோக வசதி சப்புகஸ்கந்தை விநியோக முனையத்திற்கு இணைக்கப்பட்டது.
- சப்புகஸ்கந்தை விநியோக முனையத்தின் தன்னியக்கமயமாக்கல்.
- ஜெட் A-1 உற்பத்திகளுக்காக சர்வதேச தர நியமங்களைத் திருப்தி செய்வதற்கு கொலன்னாவை எண்ணெய் அமைவில் எண்ணெய் வடிகட்டல் கலன்களின் பொருத்துதல்.
- சீனக்குடா சுற்று விடுதியில் சூரிய சக்தி முறைமைப் பொருத்துதலைப் பூர்த்தி செய்தமை.
- கச்சா எண்ணெய் SPM ஐ சீரமைத்தல்
- கொழும்புத் துறைமுகத்தில் டொல்பின் கொள்கலன் இறங்குதுறையைப் பராமரித்தல்

## நடந்து கொண்டிருக்கும் பெரிய திட்டங்களின் நிலை

1. சுத்திகரிப்பாலைக்காக கழிவு நீர் சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி – விலைக்கேள்வி ஆவணத்திற்கு அவசியமான திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் ஒரு புதிய விலைமனு மீளழைத்தலுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2. கச்சா எண்ணெய் வடிகட்டல் தூண், காஸ் ஒயில் ஹைட்ரோடிரீட்டர் யுனிட் ரியக்டர் & பிளட்போர்மர் யுனிட் என்பவற்றின் முற்புற பொறியியல் வடிவத்தை (FEED) மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த தரப்புகளைத் தெரிவு செய்வதற்கு ஆர்வத்தை தெரியப்படுத்துவதற்கான (EOI) அழைப்புகள் விடப்பட்டன என்பதுடன் ஒரு விலைமனு கோரியவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

3. கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய நிலை II கட்டம் 2 அபிவிருத்தி செயல்திட்டத்துடன் புதிய நுழைவாயில் E இல் விமான எரிபொருள் மீள்நிரப்புதல் முனையம் & தற்போதிருக்கும் குழாய் முனை முறைமை என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் தரமுயர்த்துதல் மற்றும் ஒரு எரிபொருள் குழாய் முனை முறைமையைப் பொருத்துதல் என்பன ஜனவரி 2018 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

4. முத்துராஜவெலவிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையோடு ஜெட்A-1 எண்ணெய் அனுப்பும் குழாய் நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூற்று ஆய்வு அநேகமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கொள்வனவு செய்முறை ஆரம்பிக்கப்படவுள்ளது.



Renovated Filling Station

RS. 34,034 MN
மொத்த நிலையான சொத்துகள்

1,278
மொத்த நிரப்பு நிலையங்கள்

RS. 595 MN
நிலையான சொத்துகள் மீதான முதலீடுகள்

5. சுத்திகரிப்பாலையிலிருந்து நீர் உள்ளெடுத்தலுக்கு நீர்க் குழாயை மாற்றுவதற்கும் மற்றும் கபின் (gabion) சுவரை நிறுவுவதன் மூலம் ஆற்றங்கரையை சீர்செய்வதற்கும் விலைமனு ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## டிசம்பர் 31, 2018 அன்றாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஆனால் வணிகரால் நடத்தப்படுபவை | 248 |
| வணிகருக்கு சொந்தமானதும் வணிகரால் நடத்தப்படுபவை | 1030 |
| மொத்தம் | 1,278 |
| 2018 இல் திறக்கப்பட்ட புதிய நிரப்பு நிலையங்கள் | 24 |

ஒரு கொள்கையாக, இ.பெ.கூ அது சொந்தமாக் கொண்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் திருத்தியமைப்பதைத் தொடர்ந்தது. அதற்கமைய, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை அளிக்கும் முகமாக வருடாந்தம் பத்து நிரப்பு நிலையங்கள் திருத்தியமைக்கப்படுகின்றன.

மாவட்ட ரீதியாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலயங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| | லங்கா சேவை நிலையங்கள் | லங்கா நிரப்பு நிலையங்கள் | டிப்போக்கள் |
|---|---|---|---|
| கொழும்பு | 17 | 100 | 8 |
| கம்பஹா | 2 | 114 | 18 |
| களுத்துறை | 1 | 37 | 10 |
| கண்டி | 2 | 51 | 10 |
| மாத்தளை | 1 | 17 | 6 |
| நுவரெலியா | 2 | 13 | 3 |
| காலி | 1 | 49 | 17 |
| மாத்தறை | 1 | 30 | 10 |
| ஹம்பாந்தோட்டை | 2 | 24 | 8 |
| யாழ்ப்பாணம் | 2 | 44 | 39 |
| மன்னார் | 0 | 10 | 24 |
| முல்லைத்தீவு | 0 | 9 | 14 |
| வவுனியா | 0 | 12 | 11 |
| மட்டக்களப்பு | 1 | 31 | 16 |
| அம்பாறை | 3 | 43 | 14 |
| திருகோணமலை | 1 | 14 | 23 |
| குருநாகல் | 4 | 84 | 11 |
| புத்தளம் | 1 | 59 | 22 |
| அநுராதபுரம் | 3 | 40 | 13 |
| பொலன்னறுவை | 2 | 21 | 5 |
| பதுளை | 2 | 23 | 1 |
| மொனராகலை | 3 | 19 | 3 |
| இரத்தினபுரி | 2 | 33 | 12 |
| கேகாலை | 1 | 26 | 4 |
| கிளிநொச்சி | 0 | 9 | 10 |
| | 54 | 912 | 312 |

## எதிர்கால செயல்திட்டங்கள்

இலங்கையில் பெற்றோலியத் தொழில்துறையை ஒரு நிலைபேறான தொழில்துறையாக ஆக்குவதற்கு எதிர்வரும் காலத்தில் குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சில பிரதான செயல்திட்டங்களை இ.பெ.கூ முகாமைத்துவம் இனங்கண்டுள்ளது.

1. சுத்திகரிப்பாலை மற்றும் துறைமுகம் என்பவற்றிலிருந்து ஒரே சமயத்தில் எரிபொருள் பெறுவதை செயற்படுத்துவதற்கு கொலன்னாவையிலுள்ள குழாய்க் கட்டமைப்பு/வால்வு என்பவற்றை மாற்றியமைத்தல்.

2. ஜெட் A-1 எரிபொருளை குழாய் மூலம் கொண்டு செல்வதற்கு சுத்திகரிப்பாலை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் சுத்திகரிப்பாலை மற்றும் முத்துராஜவெல என்பவற்றை இணைத்தல்.

3. சப்புகஸ்கந்தவிலுள்ள பொறித்தொகுதிக்கு ரயில்வே பாதையை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் சப்புகஸ்கந்தவில் எண்ணெய் தாங்கி வண்டிகளில் எண்ணெய் கொண்டு செல்வதை அறிமுகப்படுத்துதல்.

4. முத்துராஜவெல மற்றும் கொலன்னாவை முனையங்களை இணைத்தல்.

5. சுய சேவைப் பம்பிகளுடன் தன்னியக்கப்படுத்தி நிரப்பு நிலையங்களை இணைத்தல்

குறுகிய கால செயல்திட்டங்களுக்கு உள்நாட்டில் திரட்டப்படும் நிதிகளை உபயோகிப்பதற்கும் மற்றும் நீண்ட கால செயல்திட்டங்களுக்காக வெளிவாரியான நிதிகளைப் பெறுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

# ஆளணி மூலதனம்

ஸ்தாபனத்தின் வெற்றிக்கு முக்கியமான காரணிகள் விசுவாசம் மற்றும் பற்றுறுதியுடனான ஊழியர்களைக் கொண்டிருப்பதாகும். பெற்றோலிய வணிகத்தில் சந்தை வழிகாட்டியாகவும் மற்றும் 85% சராசரி சந்தைப் பங்குடன் ஊழியர் ஈடுபாடு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. இ.பெ.கூ இன் ஊழியர்கள் வெற்றிக்கு தங்களது உயர்ந்த பட்ச பங்களிப்பை நல்குகின்றதுடன் பதிலுக்கு கூட்டுத்தாபனம் அவர்களை மிகவும் சிறந்த முறையில் நடத்துகிறது.

### ஊழியர் பலம்

| | |
|---|---|
| நிரந்தர ஊழியர்கள் | 2455 |
| ஒப்பந்தம் | 2 |
| பயிலுனர் தொழில்நுட்பவியலாளர்கள் | 92 |
| பயிலுனர்கள் (வெளிவாரிக் கல்வி நிறுவகங்களிலிருந்து) | 221 |
| மொத்தம் | 2770 |

### பால்நிலை ரீதியில் ஊழியர்கள்




### மாகாண ரீதியாக நிரந்தர ஊழியர்கள்

| | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| மேல் | 1803 | 286 |
| கிழக்கு | 24 | 1 |
| வடக்கு | 19 | 4 |
| ஊவா | 15 | 3 |
| வட மேல் | 36 | 13 |
| மத்திய | 60 | 19 |
| சப்பிரகமுவ | 25 | 11 |
| தென் | 90 | 11 |
| வட மத்திய | 30 | 5 |
| மொத்தம் | 2102 | 353 |

(குறிப்பு – ஜனவரி 2019 இல் மீளிணைத்துக் கொள்ளல் காரணமாக நிதிசார் கூற்றில் உள்ள இளைப்பாறுதல் நன்மைப் பொறுப்புக் கணிப்பிடுதலின்படி நிரந்தரமான ஊழியர்கள் எண்ணிக்கை 2461 ஆகும்)

### வயது ரீதியாக ஊழியர்கள்




**2,770**

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை

**19**

புதிய ஆட்சேர்ப்புகள்

**RS. 6,019 MN**

ஊழியர் கிரயம்

## தர அடிப்படையில் ஊழியர்கள்




## வெகுமதிகள் மற்றும் அங்கீகாரம்

சந்தை வீதத்துடன் இசைந்ததாக நிதிசார் மற்றும் நிதிசாரா என இருவகையான ஊக்குவிப்புகளுடன் ஒரு கவர்ச்சிகரமான ஊதியப் பொதி ஊழியர்களுக்கு அளிக்கப்படுகிறது. அது ஒரு முறைசார் சம்பளக் கட்டமைப்பு என்பதுடன் பால், வயது அல்லது இனத்துவ ரீதியான வழிகளில் பாரபட்சப்படுத்தவில்லை. வெகுமதித் திட்டம் அவர்களது வருகை மற்றும் செயலாற்றுகை என்பவற்றோடு இணைந்துள்ளதுடன் ஊழியர்களுக்கு பல ஊக்குவிப்புகள் உரிய வகையில் கொடுப்பனவு செய்யப்படுகின்றன. சம்பள அதிகரிப்புகள் மற்றும் ஏனைய சில நிபந்தனைகள் ஊழியர்களுடன் (சங்கங்கள்) கைச்சாத்திட்டுள்ள கூட்டு ஒப்பந்தங்களுடன் இணைந்ததாக நிர்வகிக்கப்படுகின்றன. இ.பெ.கூ, விசுவாசமான ஊழியர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு அவர்களது பங்களிப்பை எப்பொழுதும் மதிக்கின்றது. ஊழியர்கள், அவர்களின் நீண்டநாள் மற்றும் பங்களிப்பு என்பவற்றுக்கு அமைவாக வெகுமதியளிக்கப்படுகின்றனர், அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## புதிய ஆட்சேர்த்தல்கள்




## சேவை விருதுகள் 2018

| | |
|---|---|
| 20 சேவை வருடங்கள் | 37 |
| 25 சேவை வருடங்கள் | 40 |
| 30 சேவை வருடங்கள் | 30 |
| 35 சேவை வருடங்கள் | 16 |
| மொத்தம் | 123 |

இ.பெ.கூ ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) மற்றும் ஊழியர் நம்பிகை நிதியம் (ஊ.ந.நி) என்பவற்றின் நன்மைகளுக்கு தகுதியுடையவர்களாவர். இளைப்பாறுதலுக்கு பின் ஊழியர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் முகமாக இ.பெ.கூ, ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி என்பவற்றுக்கு முறையே 15% மற்றும் 3% பங்களிப்பை நல்குகிறது. மேலதிகமாக, கூட்டுத்தாபனம் பணிக்கொடைச் சட்டத்திற்கு அமைவாக இளைப்பாறுதலின் போது பணிக்கொடையையும் மற்றும் நலன்பேணல் சங்கம் மூலமாக மேலதிக இளைப்பாறுதல் நன்மைகளையும் அளிக்கின்றது.


சேவை விருதுகள் BMICH

## பன்மைத்துவம் மற்றும் சம வாய்ப்பு

இ.பெ.கூ பாரபட்சமற்ற ஒரு வேலைகொள்வோர் என்பதுடன் ஊழியர் தொகுதி வயது, பால்நிலை, மதம் மற்றும் இனம் என ஓர் ஆரோக்கியமான கலவையைக் கொண்டுள்ளதாக உள்ளது. ஊழியர்கள் அவர்கள் நியமிக்கப்பட்ட வேலைக்கான தகைமை மற்றும் பொருந்தும் தன்மை என்பவற்றின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுகின்றனர். மேலும், பால்நிலையைப் பொருட்படுத்தாது கூட்டுத்தாபனம் ஒரு சமமான ஊதியக் கொள்கையைக் கொண்டுள்ளது. ஒரே வேலை வகையான வேலையிலுள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய இருவரும், ஒரே விதமான ஊதியப் பொதியைப் பெறுகின்றதுடன் அனைத்து ஊழியர் வகைகளுக்கான பெண்களுக்கு ஆண்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் ஊதியம் என்பன 1:1 எனும் விகிதாசாரத்தில் உள்ளது.

## பயிற்சி

இ.பெ.கூ கலாசாரம் அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் அதன் ஊழியர்களின் வளர்ச்சியை எப்போதும் முன்னேற்றுகிறது. இ.பெ.கூ அதன் ஊழியர்களுக்கு உள்ளக அதே போன்று வெளிவாரியான பயிற்சிகளை வழங்குவதுடன் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவகங்களில் பயிற்சி உட்பட, உயர் கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நிதி உதவிகளையும் அளிக்கின்றது. இ.பெ.கூ 2018 வருடத்தின் போது பட்டப்பின்படிப்பு பட்டம் மற்றும் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைகளுக்காக விசேடமாக ரூ.1.74 மில்லியனைச் செலவு செய்துள்ளது.


Staff Training at Aviation Katunayake

இ.பெ.கூ ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கும் இ.பெ.கூ கலாசாரம் விரிவடைந்து உள்ளதுடன் வருடத்தின் போது அத்தகைய பிள்ளைகள் 25 பேர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஒரு ஆக்கவளமான மற்றும் தரமான சேவையை வழங்கும் முகமாக, இ.பெ.கூ உற்பத்தித்திறன் மற்றும் தர முன்னேற்றம் மீது பல பயிற்சித் திட்டங்களை நடத்துகிறது.

## ஆரோக்கியம் & இடர்காப்பு

இயல்பாகவே தீப்பற்றக்கூடிய தன்மையான உற்பத்திகள் காரணமாக உயர்ந்த ஆரோக்கிய மற்றும் இடர்காப்பு கட்டுப்பாடுகளை இ.பெ.கூ கொண்டுள்ளது. மேலும், இ.பெ.கூ இலுள்ள முறையான ஆரோக்கியம் மற்றும் இடர்காப்பு முறைமைகள் சமுதாயத்தை ஒரு முழுமையானதாக பாதுகாக்கையில் செயற்பாடுகளின் சுமுகமான நடைபெறுதலையும் அது பாதுகாக்கிறது. ஆகையால், அனைத்து இடர்காப்பு முன்னெச்சரிக்கைகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டு அனைத்துச் சமயங்களிலும் அவதானிக்கப்படுகிறது. இடர்காப்பு கருவிகள் வேலை ஆரம்பிக்கும் போது பரிசீலிக்கப்படுவதுடன் கருவிகள் சிறந்த செயற்படும் தன்மையில் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிசீலிப்புப் பட்டியல்களுடன் கிரமமானதும் மற்றும் மாதாந்த பரிசீலிப்புகள் மற்றும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறந்த அலுவலகப் பேணல் மதிப்பாய்வுகள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டதுடன் செயற்பாடுகள், பொறியியல் மற்றும் முகாமைத்துவ இடர்காப்பு கூட்டங்கள் ஒவ்வொரு காலாண்டிலும் நடத்தப்பட்டன. 'இடர்காப்பு, ஆரோக்கியம் மற்றும் சுற்றாடல் வாரம்' நவெம்பர் 12 இலிருந்து 19 வரை நடத்தப்பட்டது.


Fire Training at Head Office

தீயணைப்பு பயிற்சி வகுப்புகள் ஊழியர்களுக்கு கிரமமாக நடத்தப்பட்டதுடன் சரியான கையாளுதல், உற்பத்திகளின் போக்குவரத்து செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் சமுதாயத்திற்கு ஏதேனும் ஆரோக்கிய ரீதியான தீமைகளைத் தவிர்ப்பதற்கும் மாதாந்தம் தீயணைப்பு அப்பியாசங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இடர்காப்பு நடவடிக்கைகளுக்கு ஊழியர்களின் விழிப்புணர்வுகளை அதிகரிக்கும் ஒரு நோக்கில், இ.பெ.கூ "மாதத்திற்கான நபர்'' விருது உட்பட இலக்கு அடிப்டையாகக் கொண்ட இடர்காப்பு விருது அளிக்கும் திட்டத்தை இ.பெ.கூ தொடர்ந்தது.

## சுத்திகரிப்பாலையில் ஆரோக்கியம் & இடர்காப்பு

| | 2018 | 2017 |
|---|---|---|
| வேலை நேரத்தில் அல்லாத விபத்துகள் | 1 | 2 |
| முதலுதவி விபத்துகள் | 5 | 3 |
| அறிவிக்கப்பட்ட சிறிய தீக்கள் | - | 1 |


Blood donation campaign at Head Office

## ஊழியர் நன்னிலை

ஒரு பற்றுறுதியானதும் மற்றும் ஈடுபாட்டுடனுமான ஊழியர்களைப் பேணுவதற்கு ஊழியர் நன்னிலை அத்தியாவசியமானதாகக் கருதப்படுகிறது. சலுகை வட்டி வீதங்களிலான கடன் திட்டங்கள் உட்பட வருடத்தின் போது பல்வேறு நன்னிலை நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஊழியர்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கு உதவும் முகமாக வருடத்தின் போது 53 வீட்டுக் கடன்கள், 437 வீட்டு மேம்படுத்தல் கடன்கள், 10 மற்றும் 30 மோட்டார் வாகனக் கடன்கள் மற்றும் 95 பைசிக்கிள்/முச்சக்கர வண்டிக் கடன்களை இ.பெ.கூ வழங்கியது.


Pirith Chanting at Refinery

## கைத்தொழில் ரீதியான உறவுகள்

முழு நாட்டினதும் நாளாந்த செயற்பாடுகளுக்காக பெற்றோலிய உற்பத்திகளின் தடைகளற்ற வழங்கல் இன்றியமையாததொன்றாகும். ஆகையால், நாட்டின் சக்திவலுப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் இலட்சியத்துடன், கைத்தொழில் ரீதியான உறவுகளின் முகாமைத்துவம் கூட்டுத்தாபனம் அதே போன்று முழுப் பொருளாதாரத்திற்குமே முக்கியமானதாக அமைகிறது. தடையற்ற செயற்பாடு, உற்பத்தித்திறன், வணிக தொடர்ச்சி மற்றும் இலாப வளர்ச்சி என்பவற்றுக்காக ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் இணக்கமான தொழில் உறவுகளைப் பேணுவது அத்தியாவசியம். இ.பெ.கூ இன் ஊழியர்கள் ஒன்பது தொழில் சங்கங்களுடன் இணைந்துள்ளார்கள். தரமான மற்றும் நேரத்திலான சேவை வழங்குதல் ஊடாக வாடிக்கையாளர்கள், அரசாங்கம், விநியோகஸ்தர்கள் போன்ற வெளிவாரியான பாத்தியதை கொண்டவர்களுக்கும் தொழில் ரீதியான உறவுகள் நீடிக்கப்பட்டுள்ளது. அவ்விதமாக, தொழில் உறவுகளின் முகாமைத்துவத்திற்கு இ.பெ.கூ ஒரு உயர்ந்த முன்னுரிமையைக் கொடுக்கிறது.

## சிறார் உழைப்பு, கட்டாய வேலை அல்லது நிர்ப்பந்திக்கப்பட்ட வேலை

இ.பெ.கூ இன் அனைத்து ஊழியர்களும் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பதுடன் கூட்டுத்தாபனத்திலுள்ள தொழிற்சங்கங்கள் தொழில் உரிமைகளின் ஏதேனும் மீறுதலுக்கு ஒரு தடையாகச் செயற்படுகின்றன. இ.பெ.கூ சிறார் உழைப்பு, கட்டாய வேலை அல்லது நிர்ப்பந்திக்கப்பட்ட வேலை என்பவற்றை ஊக்குவிப்பதில்லை.

# சமூக மற்றும் உறவு மூலதனம்

சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு முதன்மை அம்சம் நாணய நன்மதிப்பு மற்றும் கட்டுப்பாட்டு இணக்கப்பாடு என இ.பெ.கூ நம்புகிறது. இ.பெ.கூ சமூகம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு (CSR) நேரடியாக ரூ.5 மில்லியன் செலவு செய்கிறது. பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளிக்கும் சேவைகளை இ.பெ.கூ வழங்குகின்றதுடன், நல்ல ஆளுமை மற்றும் நீண்ட கால நிலைபேறுதன்மையை பாதுகாத்தல் என்பவற்றைக் காண்பிக்கிறது. எல்லாச் சமயத்திலும் சிறந்த உற்பத்தி மற்றும் சிறந்த தரத்தில் வழங்குவதன் மூலம் நாடு முழுவதிற்கும் எங்கள் சேவை பரந்துள்ளது.

## எங்கள் வர்த்தகப் பங்காளர்களுக்கு பெறுமதி சேர்த்தல்

கூட்டுத்தாபனம், குறிப்பாக அரச திறைசேரி, இலங்கை மத்திய வங்கி, வங்கிகள், கச்சா எண்ணெய வழங்குனர்கள், கப்பல் நிறுவனங்கள், உள்நாட்டு வழங்குனர்கள் மற்றும் விற்பனை வியாபாரிகள் மற்றும் இவ்வாறானவர்கள் போன்ற, மூலோபாயப் பங்காளர்களுடன் அதன் தொடர்புகளை பேணி மற்றும் மேம்படுத்துவதைத் தொடர்ந்தது. பெற்றோலிய மூலவளங்களை இலங்கை கொண்டிராததினால் அவை வெளி மூலங்களிலிருந்து கொள்வனவுப் பெறுகை செய்யப்படுதல் வேண்டும். எந்தத் தடங்கல்களுமின்றி உள்நாட்டு சந்தைக்கு தரமான, நம்மிக்கையான மற்றும் கட்டுப்படியான உற்பத்திகளை வழங்கும் முகமாக, கையிருப்பு மீளாய்வுக் குழுவின் முனைப்பான ஈடுபாட்டுடன் நன்கு வரையறுக்கப்பட்ட கொள்வனவு நடைமுறைகள் அமுலிலுள்ளன. ஈரானியத் தடைகளின் பின்னர், முர்பான எண்ணெய் கீழ்மட்ட உற்பத்திகளை விட நடுத்தர மற்றும் இலகு வடிகட்டல்களில் உயர்ந்த உற்பத்திப் பெறுகைகளை வழங்குவதிலிருந்து இ.பெ.கூ அதன் கச்சா எண்ணெய் கலப்பிற்கு முர்பான் எண்ணெயை உபயோகிப்பதற்கு தொடங்கியது. இருப்பினும் கீழ்மட்ட உற்பத்திகள் விளைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

| பெறுகை வகை | பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| கீழ் அதிகாரமளித்த பெறுகைகள் | 747 | 36.4 |
| திணைக்கள பெறுகைக் குழு | 166 | 475.2 |
| அமைச்சு பெறுகைக் குழுக்கள் | 2 | 264.8 |
| அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுக்கள் | 2 | 8,471.9 |
| மொத்தம் | 917 | 9,248.3 |

## அரசாங்கத்திற்கான கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கு மிகப் பெரிய வரி செலுத்துபவர்களில் இ.பெ.கூ ஒன்றாகும் என்பதுடன் வருடத்தின் போது அது ரூ.124,805 மில்லியன் (2017 - ரூ.145,978 மில்லியன்) பங்களித்தது, இது இ.பெ.கூ இன் நிகர வருமானத்தின் ஒரு 23.93% ஆகும்.

### அரசாங்கத்திற்கான பங்களிப்பு




வருடத்தின் போது இ.பெ.கூ ரூ.27.4 பில்லியனை சுங்கத் தீர்வைகளாக கொடுப்பனவு செய்தது, அது முன்னைய வருடத்தின் தொகையை விட 47.5% குறைவானதாகும். பொதுமக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமையை இலகுபடுத்தும் ஒரு நோக்கோடு நாட்டில் பெற்றோலிய விலை மட்டங்களைப் பேணும் முகமாக காலத்திற்கு காலம் அரசாங்கம் சுங்கத் தீர்வைகளை திருத்தியமைக்கிறது. மேலும், நவெம்பர் மாதத்தில் ஓட்டோ டீசலின் சுங்கத் தீர்வைகளின் குறைத்தல் காரணமாக கலால் வரி 1% ஆல் ரூ.67.69 பில்லியனிற்கு குறைவடைந்தது.

## உற்பத்திப் பொறுப்பு

நாடு முழுவதிலுமாக, வெவ்வேறு பகுதிகளில் எழுந்தமான வகையில் தெரிவு செய்யப்பட்ட நிரப்பு நிலையங்களுக்கு விஜயம் செய்து ஏதேனும் இடர்கள் அல்லது குறைபாடுகள் உள்ளனவா எனக் கண்டறிவதற்கு இடர்காப்பு பரிசோதனைகள் மற்றும் பாதுகாப்பு ஆய்வுகளுக்கான ஒரு முறைப்படியான திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நடைமுறைகளுக்கான கடைப்பிடித்தல், இடர்காப்பற்ற நடைமுறைகள், நிலையப் பராமரிப்பு ஆபத்துக் கண்டறிதல் போன்றவை மீதான பின்னூட்டலைப் பெற்றுக் கொள்வது இதன் முக்கியமான குறிக்கோளாக இருந்தது. பிராந்திய முகாமையாளர்கள்,

**RS. 125 BN**
அரசாங்கத்திற்கான பங்களிப்பு

**917**
பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைகள்

**RS. 9,248 MN**
பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைகளின் பெறுமதி

பிரதேச முகாமையாளர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களை அறிவூட்டுவதும் மற்றொரு குறிக்கோளாக இருந்தது. இதுவொரு வெற்றிகரமான திட்டமாக இருந்ததுடன் இந்த முறையூடாக பல திருத்த நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன. மேலும், இது இ.பெ.கூ பிராந்திய உத்தியோகத்தர்கள் அதேபோன்று நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் ஊழியர்களிடையே ஆரோக்கியமான ஆர்வத்தையும் உருவாக்கியது. இலங்கையில் தடை செய்யப்பட்ட எந்த உற்பத்திகளையும் இ.பெ.கூ விற்பனை செய்வதில்லை. 2018 வருடத்தில் நாட்டிற்கு கிளைபோசேற் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட தனியொரு நிறுவனமாக, இ.பெ.கூ கிளைபேசேற்றை இறக்குமதி செய்து கட்டுப்பாட்டாளர்களால் அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் விற்பனை செய்தது.

## உற்பத்தி மற்றும் சேவைப் பெயர் குறிப்பிடல்

உடல்நலம் மற்றும் இடர்காப்பு என்பவற்றைப் பாதுகாப்பதற்கு பெற்றோலியப் பொருட்களுக்காக சரியான உற்பத்தி மற்றும் சேவைப் பெயர் குறிப்பிடல் முக்கியமானதாகும். ஆகையால், சரியான பொருள் அதன் சம்பந்தப்பட்ட தேவைக்காக உபயோகிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தும் அதே வேளையில் பெயர் குறிப்பிடல் ஒரு சமூகப் பொறுப்பாகக் கருதப்பட முடியும். மேலும், பெயர் குறிப்பிடல் இ.பெ.கூ இன் அடையாள விம்பத்தை எடுத்துக் காட்டுவதுடன் போட்டியிடுவதற்கு ஒரு சந்தைப்படுத்தும் சாதனமாகவும் செயற்படுகிறது.

## கல்விக்கு ஆதரவளித்தல்

ஒரு பொறுப்புள்ள கூட்டாண்மைப் பிரஜையாக இ.பெ.கூ அது சம்பந்தப்படுகின்ற சமூகங்களின் வாழ்க்கைத் தரங்களிற்கு ஆதரவைளிப்பதைத் தொடர்ந்தது. நாட்டில் ஒரேயொரு கச்சா எண்ணெய சுத்திகரிக்கும் ஆலையாக பல மாணவர்கள் இ.பெ.கூ இல் பயிற்சி நாடுவதுடன் எங்களது உத்தியோகத்தர்கள் நாட்டின் எதிர்கால முன்னேற்றம் என்ற நோக்கில் பயிற்சிகளை நடத்துவதில் தங்களது பெறுமதியான நேரங்களைச் செலவிடுகின்றனர்.

# மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள்

பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆலை உள்ளகப் பயிற்சி நடத்தப்பட்டது

NAITA பயிலுனர்களுக்காக மாதாந்த மற்றும் வருடாந்த மதிப்பீடுகள் நடத்தப்பட்டன

இலங்கைப் படைகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளால் பதின்மூன்று பயிற்சி சார்ந்த கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இ.பெ.கூ இன் செயற்பாடுகள் இலங்கைப் பொருளாதாரத்தில் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் பெரும் தாக்கங்களைக் கொண்டிருந்தது. மறைமுகப் பொருளாதாரத் தாக்கங்கள் ஒட்டுமொத்த தேசியப் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் என்பவற்றில் தாக்கம் ஏற்படுத்தும் ஏனைய தொழில் துறைகளின் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் செய்முறைகள் மூலமாக ஒன்று சேர்கின்றன. நேர்மறையான பொருளாதாரத் தாக்கங்களை அதிகப்படுத்துவதற்கான இ.பெ.கூ கொள்கை பின்வருமாறு:

- பொதுமக்களிற்கு மானிய விலைகளில் எரிபொருள் வழங்குதல்
- கூடுதல் வினைத்திறனான மற்றும் சுற்றாடல் சிநேகபூர்வமான தரமான பெற்றோலியப் பொருட்களை வழங்குதல்
- பெற்றோலிய உற்பத்திகளுக்கான அணுகுவழித்தன்மையை மேம்படுத்துதல்
- மறைமுக தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல்
- சுரண்டப்படுதலுக்கு எதிராக வறிய விவசாயிகளைப் பாதுகாக்கும் ஒரு நோக்கில் விவசாய இரசாயனங்கள் குறைந்த விலைகளில் வழங்கப்படுகின்றன.

# சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் இறக்குமதிக் கலவை

வழங்குனர்கள் மூலமாக நாட்டிற்கு அமெரிக்க டொலர்கள் 1955 மில்லியன் (DAP அடிப்படை) பெறுமதியான சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளை இ.பெ.கூ இறக்குமதி செய்ததுடன் அதன் விபரங்கள் கீழ் வருமாறு:




மேலதிகமாக, வருடத்தின் போது அமெரிக்க டொலர்கள் 1024 மில்லியன் (DAP அடிப்படை) பெறுமதியான கச்சா எண்ணெயை இ.பெ.கூ இறக்குமதி செய்தது.

## வணிகப் பங்காண்மை

வாடிக்கையாளர்களுக்ககு உற்பத்திகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து மாகாணங்களிலும் 1278 விற்பனையாளர்கள் வலையமைப்பை இ.பெ.கூ இயக்குகிறது. சந்தை முன்னணியில் உள்ளவராக, எந்தப் பிரதேசமாக இருப்பினும் உற்பத்திகள் கிடைப்பதற்கான அணுகுவழியைப் பேணுவதற்கு எரிபொருள் விநியோக வலையமைப்பின் ஒரு பரந்துபட்ட உள்ளடக்கம் இ.பெ.கூ இன் ஒரு முக்கிய கரிசனமாக உள்ளது.

மாகாண ரீதியிலான நிரப்பு நிலையங்கள்

| | |
|---|---|
| மேல் | 307 |
| வடக்கு | 184 |
| வட மேல் | 181 |
| கிழக்கு | 146 |
| தென் | 142 |
| மத்திய | 105 |
| வட மத்திய | 84 |
| சப்பிரகமுவ | 78 |
| ஊவா | 51 |
| மொத்தம் | 1278 |

# புலமைசார் மூலதனம்

புலமைசார் மூலதனம் கலாசாரம், தார்மீக நெறிகள், விழுமியங்கள், நிறுவன ரீதியான அறிவு, முறைமைகள். செய்முறைகள் & நடைமுறைகள், கற்றல் மற்றும் வர்த்தக நாமப் பெறுமதி என்பவற்றுடன் இணைந்ததான புலனாகதவற்றை உள்ளடக்கியுள்ளன.

## எங்கள் குறியீடு

ஒரு அரசாங்கத் தொழில் முயற்சியாக “எதிர்காலத்தை சக்திப்படுத்துதல்” என்பதுடனான எங்களது குறியீடு 58 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டதுடன் பெற்றோலிய உற்பத்திகள் மக்களின் வாழ்க்கைச் செலவின் முக்கிய பாகத்தை எடுத்துக் கொள்வதாலும் மற்றும் இலங்கையர்களின் வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவதற்கு எங்களது குறியீட்டின் கீழான நியாயமான வர்த்தகம் முன்னிற்பதாலும் அது நாட்டின் மக்களுக்கு மிகவும் நெருக்கமானது.

## எங்களது பெறுமானம்

கூட்டுத்தாபனத்தின் கலாசாரத்தினுள் கட்டியெழுப்பப்பட்ட அதன் சொந்த தார்மீகத் தரங்கள் மற்றும் பெறுமானங்களை இ.பெ.கூ கொண்டுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள ஒவ்வொரு நபரினதும் வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைத் தரங்கள் என்பவற்றுக்கு எங்களது உற்பத்திகள் தாக்கத்தைக் கொண்டிருப்பதினால், மக்கள் சரியான உற்பத்தியைப் பெற்றுக்கொள்கிறார்கள் மற்றும் பொருளுக்கான வழிவகையைக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதி செய்வதற்காக முற்றிலும் தரநியமப்படுத்தப்பட்ட உற்பத்தியை பேணுவதற்கு நாங்கள் பற்றுறுதி கொண்டுள்ளோம். பெற்றோலிய உற்பத்திக்கான சர்வதேச தரநியமங்களை இ.பெ.கூ எப்போதும் பின்பற்றுகிறது. அதன் பெறுமானத்தை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடனான நிபுணத்துவத்தை உருவாக்குவதற்கு ஒரு பன்மைத்துவ வகையான தொழில்நுட்ப, செயற்பாட்டு மற்றும் வாடிக்கையாளர் கையாளும் பயிற்சிகளை இ.பெ.கூ வழங்குகிறது. எங்களது சரக்குக் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு இயற்கைக்கு பாதகமில்லாத வகையில் உற்பத்திகள் மற்றும் சேவை அபிவிருத்திக்காக முனைப்புடன் பங்களிக்கின்றது.

## செய்முறை மேம்படுத்துதல்கள்

தார் சந்தையை மீளக் கைப்பற்றுவதற்கும் மற்றும் தரமான வீதித் தாரை விநியோகிக்கும் நோக்கத்தோடு வீதித் தார் உற்பத்தியை இ.பெ.கூ மீளவாரம்பித்தது. உலை எண்ணெயை உபயோகித்து சுத்திகரித்தல் ஊடாக வீதித் தார் காற்றூதுதலை இ.பெ.கூ ஆரம்பித்ததுடன் இச்செய்முறை இலங்கையில் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயல்திட்டங்களுக்காக ஒரு குறைந்த செலவில் உயர் தரத்திலான வீதித் தார் உற்பத்தியின் வழங்கலுக்கு உதவுகிறது. வீதித் தார் உற்பத்தி மூலமான தார் விற்பனை 2017 இல் சந்தித்த நட்ட நிலைமையை ரூ.110 மில்லியன் இலாப நிலைக்கு மாற்றி இழந்த சந்தைப் பங்கை மீளக் கைப்பற்றி நிரூபிக்குமளவிற்கு வழிவகுத்தது. பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் வாடிக்கையாளர்கள் அவர்களது எரிபொருள் கொள்வனவுகளை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மற்றும் பயனுறுதியான சேவைகளை வழங்கவதற்குமான கூப்பன் வழங்கும் மற்றும் மீள ஈடுசெய்யும் மனிதச் செய்முறையைக் குறைத்து கடன் கூப்பன் விநியோக (CCD) முறைக்கு வசதியளிப்பதற்கு கூட்டுத்தானம் ஒரு செயலியை உருவாக்கியது. வியாபார ஒப்பந்தக்கார்களுக்கு எரிபொருளின் வழங்கல் மற்றும் அதன் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்தி உதவும் வேளையில் புதிய முறைமை கூப்பனின் பாதுகாப்புத் தன்மையை மேம்படுத்தும். இந்த முறைமை மிகவும் குறுகிய காலத்தினுள் வியாபார ஒப்பந்தக்காரர்களுக்கு நிதியை விடுவிப்பதற்கு செலவை ஈடுசெய்யும் செய்முறையை துரிதப்படுத்துகிறது.

## தொடர்ச்சியான கற்றல் மற்றும் அபிவிருத்தி

ஓர் அறிவுத் தளம், தற்போதைய வணிகச் சூழலில் எந்தவொரு நிறுவனத்திற்கும் ஒரு முக்கியமான புலனாகாத சொத்தை உருவாக்குகிறது. அறிவுத் தளம் கொண்ட நிறுவனத்தை உருவாக்குவது ஒரு முக்கியமான மூலோபாயம் என்பதால், தங்களது கடமைகள் மற்றும் பொறுப்புகளை பூர்த்தி செய்வதற்கு அவர்களது தகுதிகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு பல்வேறுபட்ட பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இ.பெ.கூ அறிவுத் தளத்தைக் கட்டியெழுப்புகிறது. இ.பெ.கூ உடன் 20 இற்கும் மேற்பட்ட வருட சேவைகளுடன் 874 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். மேலும், தற்போதுள்ள தொழில்படையின் ஒன்றுதிரட்டிய சேவை அனுபவம் 39,200 வருடங்களைக் கடந்து செல்கிறது. இது கூட்டுத்தாபனத்தின் அறிவுத் தள நிர்மாணத்தைக் காட்டுகின்றது. கூட்டுத்தாபனத்தின் கற்றல் மற்றும் உதவும் கலாசாரம் ஊழியர்களின் உணர்வுபூர்மான அறிவுப் பேணுதலை உறுதிப்படுத்துகிறது.



Bitumen production at Refinery

**874**

20 வருடங்களுக்கும் மேற்பட்ட சேவை அனுபவம் கொண்ட ஊழியர்கள் தொகை

**39,200 YRS**

திரட்டிய சேவை அனுபவம்

**RS 9.9 MN**

உள்நாட்டுப் பயிற்சிச் செலவு

# இயற்கை மூலதனம்

நாங்கள் சுற்றாடலை போஷித்து வாழ்வதற்கும் மற்றும் அதனைப் பாதுகாப்பதற்கும் கடப்பட்டவர்களாவோம். முழுமையான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் சுற்றாடலுக்கான அதன் பொறுப்பை இ.பெ.கூ பேணியது. இ.பெ.கூ இன் நடவடிக்கைகள் சமுதாயத்திலுள்ள ஒரு பெரும் எண்ணிக்கையான மக்களைப் பாதிக்குமென்பதால் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களின் நிலைபேணும் வகையிலான பாவனையை பேணுகையில் சுற்றாடல் பாதுகாத்தல் தொடர்பாக தனது ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கு இ.பெ.கூ பற்றுறுதி கொண்டுள்ளது.

## கழிவு முகாமைத்துவம்

கழிவு முகாமைத்துவம் மற்றும் காற்று உமிழ்வு பற்றி இ.பெ.கூ அதிகம் கரிசனை கொண்டுள்ளது. 2018 இன் போது கழிவுநீர் சுத்திகரித்தல் இயக்கத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டது. ISO நடைமுறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் மாசடைந்த மற்றும் மாசடையாத கழிவு என பிரிப்பது மூலம் அதன் கழிவு நீர் முகாமைத்துவத்தை கூட்டுத்தாபனம் மேம்படுத்தியது.

## நீர்

ஒரு கணிசமான அளவு தண்ணீர் வருடத்தின் போது நீர் எடுக்கும் மூலத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் மிகுதித் தொகையான தண்ணீர் நீர் வழங்கல் சபையிலிருந்த பெறப்பட்டது. சுத்திகரிப்பு ஆலையினால் பாவனை செய்யப்பட்ட நீரின் அளவு கீழே தரப்பட்டுள்ளது.

| | 2018 | 2017 |
|---|---|---|
| சுழற்சி முறை சுத்திகரிப்பு நீர் | 767,540 மெ.தொ | 558,564 மெ.தொ |
| நீர் வழங்கல் சபை | 164,718 மெ.தொ | 179,728 மெ.தொ |
| மொத்தம் | 932,258 மெ.தொ | 738,292 மெ.தொ |

## சுத்திகரிப்புச் செயற்பாடுகளின் சக்திப் பாவனை உழளெரஅிவழைெ ழக சநகைெநசல ிநசயவழைெளெ

| | 2018 | 2017 |
|---|---|---|
| எரிபொருள் வாயு நுகர்வு | 43,117 மெ.தொ | 37,616 மெ.தொ |
| எரிபொருள் எண்ணெய் நுகர்வு | 48,886 மெ.தொ | 51,989 மெ.தொ |
| திட்டவட்ட சக்தி நுகர்வு (MMK Cal/கச்சா மெ.தொ) | 0.5510 | |



Introduction of Euro 04 to the market

**932,258** MT
நீர்ப் பாவனை

**52.5** %
சாதாரண இழப்பிலான குறைவு

**0.55** MMK CAL/MT OF CRUDE
குறிப்பிட்ட சக்திப் பாவனை




சக்திவலு நுகர்வு இ.பெ.கூ இன் கிரயக் கட்டமைப்பில் ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளவாறே வாயு உமிழ்வதன் மூலமாக சுற்றாடலிலும் தாக்கம் ஏற்படுத்துகிறது. எதிர்பார்க்கப்பட்ட சாதாரண இழப்பு 2018 வருடத்தின் போது 52.5% ஆல் (11,847 மெ.தொ இலிருந்து 5,627 மெ.தொ) குறைவடைந்தது.

சுத்திகரிப்பு ஆலைக்கான மின்சார நுகர்வு (இ.மி.ச வழங்கல்) மாதமொன்றுக்கு சாதாரண நேரங்களில் 197.0 மெ.வாட்ஸ் மற்றும் 274.3 மெ.வாட்ஸ் இடையில் வேறுபட்டது. உச்ச நேரங்களின் போதான மின் நுகர்வு 54.9 மெ.வாட்ஸ் மற்றும் 81.0 மெ.வாட்ஸ் இடையில் வேறுபட்டது. இ.மி.ச இன் மின் வழங்கலுக்கான அதிகபட்ச கேள்வி 1216 கி.வோட்ஸ் இருந்து 1421கி.வோட்ஸ் வரை வேறுபட்டது.

## மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் சிநேகபூர்வ நடவடிக்கைகள்

இ.பெ.கூ சந்தைக்கு சுற்றாடல் சிநேகபூர்வமான பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிப்பதற்கு எப்போதும் முயற்சித்தது. ஒரு கூடுதல் வினைத் திறனான மற்றும் சுற்றாடல் சிநேகபூர்வமான உற்பத்தியை சந்தைக்கு உறுதிப்படுத்துவதற்கு இ.பெ.கூ யூரோ 4 ஓட்டோ எரிபொருளை அறிமுகம் செய்தது.

## உயிரியல்பன்மைத்துவம்

எண்ணெய்ச் சிதறல்கள், எரிபொருள் உமிழ்தல் போன்றவை மூலமாக உயிரியல் பன்மைத்துவத்திற்கு எதிர்மறையான தாக்கங்களை கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் கொண்டிருப்பதற்கு முடியும். கடுமையான செயல் நடைமுறைகள் அமுலில் இடப்பட்டுள்ளதுடன் உயிரியல்பன்மைத்துவத்திற்கு எதிர்மறைப் பாதிப்புகளை குறைப்பதற்கு இ.பெ.கூ அனைத்து முன்னெச்சரிக்கைகள் மற்றும் இடர்காப்பு முறைகளை எடுக்கின்றது.

| விபரணம் | உயிரியல் பன்மைத்துவத்திற்கான தாக்கம் |
|---|---|
| வாழ்விடப் பாதுகாத்தல் | அவ்வாறான தரவு எதுவும் பதியப்படவில்லை |
| இயற்கை மாறுபடும் அளவிற்கு வெளியில் சூழலியல் செய்முறைகளிலான மாற்றங்கள் | அவ்வாறான தரவு எதுவும் பதியப்படவில்லை |
| பாதிக்கப்பட்ட இனங்கள் | அவ்வாறான தரவு எதுவும் பதியப்படவில்லை |
| பாதிக்கப்பட்ட பகுதிகளின் அளவு | அவ்வாறான தரவு எதுவும் பதியப்படவில்லை |
| தாக்கங்களின் கால அளவு | அவ்வாறான தரவு எதுவும் பதியப்படவில்லை |
| திரும்ப இயலுமான அல்லது திரும்ப இயலாத் தன்மையான தாக்கங்கள் | அவ்வாறான தரவு எதுவும் பதியப்படவில்லை |

## இணக்கம்

2018 வருடத்தின் போது இ.பெ.கூ சுற்றாடல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் ஒத்திணங்காமைக்காக கணிசமான அபராதங்கள் எதனையுமோ அல்லது பணமல்லாத தடைகளையோ கொடுப்பனவு செய்யவில்லை.

# பாத்தியதையுடையோர் ஈடுபாடுகள் & எதிர்காலப் பார்வை

## பாத்தியதையுடையோர் ஈடுபாடுகள்

| பாத்தியதை உடையோர் வகை | ஈடுபடுதல் பொறிமுறை | பாத்தியதைஉடையோர் சக்தி & ஆர்வம் |
|---|---|---|
| அரசாங்கம் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் | • காலவொழுங்கிலான கலந்துரையாடல்கள் மற்றும் அரசாங்கம் மற்றும் கட்டுப்பாட்டாளர்களுக்கு அறிவித்தல்.<br>• இ.பெ.கூ இன் செயலாற்றுகை மற்றும் இணக்கப்பாடுகள் மீது காலவொழுங்கு அறிக்கையிடம் முறைமை.<br>• அரசிறை/பேரினப் பொருளாதார தீர்மானம் மேற்கொள்ளும் செய்முறைகளுக்காக அரசாங்கத்திற்கு தகுந்த சமயத்தில் தகவல் சமர்ப்பித்தல். | உயர்வு |
| வாடிக்கையாளர்கள் | • உற்பத்தி முன்னேற்றப் பிரச்சாரங்கள்<br>• நிரப்பு நிலையங்கள் மூலமான ஈடுபடுதல்<br>• வாடிக்கையாளர் திருப்தி மதிப்பாய்வுகள்<br>• சந்தை மார்க்கங்கள் ஊடான தொடர்பாடல்கள்<br>• பிராந்திய அலுவலகங்களினால் ஒன்லைன் (online) மற்றும் உள்ளூர் ஈடுபடுதல் | இடைத்தரம் |
| ஊழியர்கள் | • செயலாற்றுகை மதிப்பீடுகள்<br>• ஊழியர் ஈடுபடல் நடவடிக்கைகள்<br>• தொழிற் சங்கங்களுடன் சந்திப்புகள்<br>• விளையாட்டு & ஏனைய நிகழ்வுகள்<br>• ஊழியர்களுக்கு நலன்புரி வசதிகள் | உயர்வு |
| சமூகம் | • பிராந்திய அலுவலக ஈடுபடுதல்கள்<br>• கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR) நடவடிக்கைகள் மற்றும் அனுசரனைகள்<br>• ஊடக மற்றும் ஏனைய சமூக நிகழ்வுகள் | குறைவு |
| வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் | • வெளிப்படையான விலைக்கோரல் செய்முறை<br>• வழங்குனர் பதிவு செய்முறைகள்<br>• கிரமமான சந்திப்புகள், எழுத்து மூலத் தொடர்பாடல் & உறவு முகாமைத்துவம் | இடைத்தரம் |

## எதிர்காலப் பார்வை

உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகளுக்கான கிரயப் பிரதிபலிப்பான, வெளிப்படையான விலைப் பொறிமுறை இ.பெ.கூ ஆல் அடைந்த நட்டங்களைக் குறைப்பதற்கு உதவியது. எவ்வாறாயினும், தற்போதுள்ள சூத்திரம் இ.பெ.கூ ஆல் அடையப்பட்ட முழுச் செலவுகளையும் உள்ளடக்கவில்லை. மேலும், தாமதமின்றி மானிய விடயத்தை தீர்ப்பதற்கு அரசாங்கத்தை நாங்கள எதிர்பார்த்திருக்கிறோம் என்பதுடன் அரசாங்கம் இதற்கு ஒரு குறித்த தொகை வங்கிக் கடன் பெறல் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடுமென நாம் நம்புகிறோம்.

போட்டித் தன்மையான வீதங்களில் அமெரிக்க டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு இ.பெ.கூ இற்கு சுதந்திரம் கொடுக்கப்படுமாயின், அது அதன் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கு முடியும். பெற்றோலிய ஆய்வு முயற்சிகளில் அரசாங்கம் வெற்றியடையும் போதும் மற்றும் எரிவாயு வர்த்தகப்படுத்தல் செய்முறைகள் பயன் கொண்டவையாக வரும் பொழுதும், உள்நாட்டு எரி வாயுவின் பாவனை சாத்தியமாகுவதற்கும் மற்றும் வடிகட்டிய இறக்குமதிகளின் இறக்குமதி மட்டுப்படுத்தப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுத்திகரிப்பு ஆலை திருத்தம் நடைமுறைப்படுத்தப்படின், களஞ்சியக் கொள்திறனின்மையால் உலை எண்ணெய் மற்றும் நப்தா என்பவற்றின் விற்பனையிலிருந்தான நட்டத்தை தவிர்ப்பதற்கான இயலுமையைக் கொண்டிருக்கும். அதற்கு, அரசாங்க உத்தரவாதமொன்றுடன் வெளிவாரி நிதிக்காக ஒரு கொள்கைத் தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். செலவைக் குறைக்கும் வேளையில் பெற்றோலிய உற்பத்திகளுக்கு தடையற்ற அதிகரித்த கேள்வியை கருத்தில் கொள்வதற்கு வளர்ச்சி மற்றும் வினைத்திறன்கள் என்பவற்றுக்கான உந்துதல் மீது கவனம் கொள்வதை இ.பெ.கூ தொடரும். சந்தை முன்னணியாளர் அந்தஸ்தைப் பேணுவதற்கு மூலோபாய முன்னுரிமைகள் நடைமுறையில் இடப்பட்டுள்ளதுடன் ஒரு அரச தொழில் முயற்சியாக அரசாங்கத்தின் ஆதரவை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு இ.பெ.கூ எண்ணுகிறது. சுற்றாடல் சிநேகபூர்வமான புதிய பீடைகொல்லிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தனது செயற்பாடுகளை விரிவாக்குவதற்கு விவசாயப் பிரிவு திட்டமிடுகிறது. தற்போதைய எண்ணெய் சுத்திகரித்தல் செய்முறை தொழில்நுட்ப ரீதியில் மாற்றியமைக்கப்பட்டு உலை எண்ணெய் போன்ற கீழ்மட்ட உற்பத்திகளை உயர் விளைவு கொண்ட உற்பத்திகளாக தரமுயர்த்தும் பொழுது நட்டத்தை ஏற்படுத்தும் நிலைமை தவிர்க்கப்பட முடியும். மறுபுறத்தில், குறைந்த கேள்வியுள்ள காலங்களின் போது மேல்மிஞ்சிய உற்பத்திக்கு இடமளிப்பதற்கும் மற்றும் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகள் குறைவாக இருக்கும் பொழுது கச்சா எண்ணெயைக் கூடுதலாகக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் களஞ்சிய கொள்திறன் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.






# இடரேதுநிலை முகாமைத்துவ அறிக்கை

# இடரேதுநிலை முகாமைத்துவ அறிக்கை

ஒரு மாறுந்தன்மையான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சூழலுள் நாட்டின் மிகப் பெரிய பெற்றோலிய உற்பத்திகள் வழங்குனராக இ.பெ.கூ இன் செயற்பாடுகளின் ஓர் உள்ளார்ந்த அம்சமாக இடரேதுநிலை முகாமைத்துவம் வந்துள்ளது.

இடரேதுநிலை முகாமைத்துவத்தின் நோக்கம்:

- சுற்றுச் சூழல், சந்தை மற்றும் உள்ளக பிறழ்நடத்தைகள் என்பவற்றுக்கு இடரேதுநிலை கொண்டதாக இருப்பதிலிருந்து கூட்டுத்தாபனத்தைப் பாதுகாப்பது
- வளர்ச்சி மற்றும் இடரேதுநிலை என்பவற்றை முறையாகச் சமன்செய்தல்
- நீண்டு நிலைத்திருக்கும் இருப்பை உத்தரவாதப்படுத்துதல்
- தீ அல்லது விபத்துகள் போன்ற எதிர்மறையான நிகழ்வுகளிலிருந்து எங்களது ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சொத்துகளைக் காப்பாற்றுதல்.

## இ.பெ.கூ இன் இடரேதுநிலை முகாமைத்துவக் கட்டமைப்பு




இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானச் சட்டம், நல்லாட்சி மீதான நிதிச் சட்டம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் வழிகாட்டல்கள், அரச தொழில் முயற்சிகளுக்கான சிறந்த நடைமுறைகள், ஏனைய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இ.பெ.கூ இன் இடரேதுநிலை முகாமைத்துவக் கட்டமைப்பு, கூட்டுத்தாபனத்தைப் பாதிக்கும் முக்கிய இடரேதுநிலைகளை இனங்காண்பதற்கும் மற்றும் நாட்டிற்கு சுமுகமான சக்தி விநியோகத்தை உறுதிப்படுத்தும் ஒரு நோக்கில் இடரேதுநிலைகளைப் பகுப்பாராய்ந்த பின் பயனுறுதியான வகையில் அவற்றை சமாளிப்பதற்குமாக முன்னெச்சரிக்கையாக உருவாக்கப்பட்டது. பயனுறுதியான திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதலுக்கு இட்டுச் செல்லும் வகையில் கூட்டுத்தாபனம் அதன் எதிர்கால நடவடிக்கைகளை ஒரு நிலையான மற்றும் கட்டுப்பாடான விதத்தில் செயலாற்றுவதற்கு இயலச் செய்கிறது.

இ.பெ.கூ இன் இடரேதுநிலை முகாமைத்துவச் செய்முறை இரண்டு உறுதியான பாதுகாப்பு முறைகளால் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது

## உள்ளகக் கட்டுபாட்டு முறைமை மற்றும் உள்ளக, வெளியகக் கணக்காய்வுகள்

1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச்சட்டம், நிதி ஒழுங்குவிதிகள், நல்லாட்சி மீதான வழிகாட்டல்கள், அரச தொழில் முயற்சிகளுக்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் பல்வேறு ஏனைய ஒழுங்குவிதிகள் இ.பெ.கூ இடரேதுநிலை முகாமைத்துவக் கட்டமைப்புக்கான ஒரு உறுதியான அடித்தளத்தை ஸ்தாபிக்கின்றன.

### 1. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

மேற்குறிப்பிட்ட சட்டங்களுக்கு அமைவாக தெளிவாக வரையறுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளால் வடிவமைக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகளின் ஒரு முழுமையான முறைமையை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது. அது, இ.பெ.கூ உடன் இணைந்ததான இடரேதுநிலைகளை கண்டுபடித்து, சமாளித்து மற்றும் தடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தை இயலச்செய்கிறது.

### 2. உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வு

இடரேதுநிலை முகாமைத்துவச் செய்முறையில் உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வு ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள்

அவர்கள் இனங் கண்ட இடரேதுநிலைகளைச் சமாளிப்பதற்கு சீர்செய்யும் நடவடிக்கைகள் மற்றும் மேம்படுத்தல்களை பரிந்துரைக்கும் முகமாக கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஏனைய செயற்பாட்டு முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை என்பவை பற்றி ஆராய்கின்றனர். பணிப்பாளர்கள் சபையால் ஸ்தாபிக்கப்பட்ட கணக்காய்வு குழு கணக்காய்வின் முக்கியமான கண்டறிதல்கள் மற்றும் முகாமைத்துவத்தின் பதிலிறுப்புகளை மீளாய்கின்றன.

### இடரேதுநிலையைச் சமாளிப்பதற்கான மூலோபாயம்

இடரேதுநிலையை சமாளிப்பதற்கு கூட்டுத்தாபனம் பிரயோகிக்கும் மூலோபாயங்கள் இடரேதுநிலையின் தன்மை மற்றும் தீவிரம் என்பவை மீது தங்கியுள்ளது. இடரேதுநிலை இனங்காணப்பட்டதும், இ.பெ.கூ ஒன்றில்

- நிகழும் சாத்தியத்தை தவிர்க்கும், அல்லது
- இடரேதுநிலையை மற்றொரு தரப்புக்கு மாற்றும், அல்லது
- இடரேதுநிலையின் பின்விளைவுகளை ஏற்று அதற்காக பாதீட்டில் ஏற்பாடளிக்கும்.

## இ.பெ.கூ இன் ஆளுகைக் கட்டமைப்பு

கூட்டுத்தாபனத்தின் இடரேதுநிலை முகாமைத்துவக் கட்டமைப்பின் பயனுறுதித்தன்மை ஒரு நன்கு வரையறை செய்யப்பட்ட ஆளுகைக் கட்டமைப்பால் ஆதரவளிக்கப்படுகிறது. இடரேதுநிலை முகாமைத்துவத்தின் உச்ச பொறுப்பு தலைவரால் தலைமை வகிக்கப்படும் பணிப்பாளர்கள் சபையுடன் பிணைக்கப்பட்டுள்ளதுடன் சபை மற்றும் நிறைவேற்று மட்டங்கள் ஆகிய இரண்டு ஏனைய ஆளுகைக் குழுக்களால் வலுப்படுத்தப்படுகிறது. இந்தக் குழுக்கள் தெளிவாக வரையறை செய்யப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளுடன் செயற்படுகின்றன. ஆளுகைக் கட்டமைப்பு இந்த அறிக்கையின் ஆளுகைப் பகுதியின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

## இ.பெ.கூ இற்கான இடரேதுநிலை வெளிப்படுத்தல்

கூட்டுத்தாபனம் வெளிப்படுத்தப்பட்டுள்ள இடரேதுநிலைகளின் ஒரு சுருக்கமான விபரம் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள இடரேதுநிலை முகாமைத்துவ நடவடிக்கைகள் மற்றும் இடரேதுநிலையை மேலும் குறைப்பதற்கான ஏதேனும் யோசனைகளுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| இடரேதுநிலை | தாக்கம் | பதிலிறுப்பு | மூலோபாயங்கள் |
|---|---|---|---|
| பொருளாதார இடரேதுநிலை | | | |
| நாட்டின் பணவீக்க வீதம் கூட்டுத்தாபனத்துக்கு அழுத்தத்தைப் பிரயோகிக்கிறது. பெற்றோலிய உற்பத்திகளை வழங்குகின்ற சந்தை முன்னணியாள ராகவும் அதே போன்று ஒரு அரசுடமை நிறுவனமாகவும், இலாபம் ஈட்டுவதை விட சமூக மற்றும் பொருளாதார சந்தர்ப்ப சூழ்நிலைகளைத் திருப்திப்படுத்தும் முகமாக சில பெற்றோலிய உற்பத்திகள் உயர்ந்த மானிய வீதத்தில் வழங்கப்பட்டன. பெற்றோலிய விலைகளில் சிறிய மாற்றங்களும் முழுப் பொருளாதாரத்தை மோசமான வகையில் பாதித்தன. | பணவீக்க வீதம் போன்ற எதிர்மறைப் பொருளாதாரக் காரணிகள் கிரயத்தை அதிகரித்து வருமானத்தைக் குறைத்து இலாபத்தை பாதிக்கின்றன. | அடிக்கடி இடப்படும் கடுமையான கிரய முகாமைத்துவ நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் ஆகிய இரண்டையும் சமனிலைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு பெற்றோலிய உற்பத்திகளை கட்டுப்படியாகும் விலைகளில் விற்பனை செய்வதற்கு இ.பெ.கூ இற்கு இயலும் வகையில் கடுமையான கிரய முகாமைத்துவ முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. | விசேடமாக மண்ணெண்ணெய்க்காக ஒரு முழுமையான கிரய பிரதிபலிப்பு விலைப் பொறிமுறை அறிமுகம். |
| பொருள் விலை இடரேதுநிலை | | | |
| இலங்கை பெற்றோலிய மூலவளங்களைக் கொண்டிருக்க வில்லை என்பதுடன் சக்திவலுத் துறையின் கணிசமான பகுதி பெற்றோலிய இறக்குமதிகள் மூலமாகவே ஊட்டம் அளிக்கப்படுகிறது. அதனால், விலைகள் இ.பெ.கூ இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாக முற்றிலும் வழங்குனர்களின் கைகளிலுள்ளது. | உலக எண்ணெய் விலை அதிகரிப்பு எதிர்மறையான வகையில் விற்பனைக் கிரயம், விடுமிகைகள் மற்றும் காசு நிலைமை என்பவற்றில் தாக்கம் கொண்டுள்ளது. | கையிருப்பு மீளாய்வுக் குழு தொடர்ச்சியான வகையில் நாட்டின் கையிருப்பு நிலைமையை கண்காணிக்கின்றதுடன் உலக விலை ஏற்ற இறக்கங்கள், போக்குகள், மற்றும் விலை தொடர்பான வாய்ப்புகள் என்பவற்றின் பகுப்பாய்தலின் பின் கொள்வனவை உச்சப்படுத்துகிறது. | மொத்தக் கிரயப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறையை அறிமுகப்படுதியது<br>உலக சந்தையில் விலைகள் குறைந்துள்ள போது சரக்குகளைக் களஞ்சியப்படுத்து வதற்கு களஞ்சியப்படுத்தல் கொள்ளவை அதிகரித்தது |
| உற்பத்தி இடரேதுநிலை | | | |
| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளைப் பெறுவதற்கு கச்சா எண்ணெய் செய்முறைப்படுத்தப்படுகிறது. | உற்பத்தி விளைவின் தரம் மற்றும் விரயம் இலாபத்தன்மையைப் பாதிக்கின்றன. | உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பாலையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு கொள்திறன் மற்றும் தொழில்நுட்பத்தை அதிகரித்தல். | சுத்திகரிப்பாலைச் செயற்பாடுகளை தரமுயர்த்துதல்<br>சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருளைக் களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சியப்படுத்தல் கொள்ளவை அதிகரித்தல். |

# அபிவிருத்தி முன்னெடுத்தலுக்கு உந்துதலளித்தல்

| இடரேதுநிலை | தாக்கம் | பதிலிறுப்பு | மூலோபாயங்கள் |
|---|---|---|---|
| செயற்பாட்டு இடரேதுநிலை | | | |
| செய்முறையின் வினைத்திறன் மற்றும் முறைமைகள் இ.பெ.கூ இன் செயற்பாடுகளின் உற்பத்தித் திறனைப் பாதிக்கிறது. | கட்டுப்பாடுகளின்மை அல்லது பயனுறுதியற்ற கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகளின் தவறுதல்கள் மூலவளங்கள் மற்றும் நேரம் ஆகிய இரண்டிலும் மிதமிஞ்சிய விரயத்தை விளைவிப்பதுடன், கடைசியில் சுமுகத்தன்மை, தொடர்ச்சி மற்றும் வழங்கலின் தரம் அதேபோன்று இலாபத்தன்மை என்பவற்றைப் பாதிக்கின்றன. | தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு செயற்பாட்டு இடரேதுநிலை முகாமைத்துவக் கொள்கையின் ஸ்தாபித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br><br>செயற்பாட்டு ரீதியிலான பிரச்சினைகளை விரைவாகக் கண்டறிவதற்கு இருக்கும் ஆய்வுச் செய்முறைகளின் பாவித்தலைத் தொடர்தல்.<br><br>மூலோபாய தொழில் முயற்சிகளுக்காக அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட நெறிகள் மற்றும் கொள்வனவு நடைமுறைகளைத் தொடர்தல். | அண்மையிலான தொழில்நுட்பம் அதே போன்று கணக்காய்வுச் சாதனங்கள் என்பவற்றின் அனுகூலத்தைப் பெறுவதற்கு செய்முறைக் கட்டுப்பாட்டு முறைமைகளை இற்றைப்படுத்துதலும் மற்றும் அதன்மூலம் ஒரு சமனான வாய்ப்புடன் தனியார் துறையுடன் கூட்டுத்தாபனம் போட்டியிடுவதற்கு இயலச்செய்தல். |
| இடர்காப்பு இடரேதுநிலை | | | |
| கூட்டுத்தானத்தால் கையாளப்படும் உயர் தளம்பல் கொண்ட உற்பத்திகளுக்கு கடுமையான இடர்காப்பு தரநியமங்கள் தேவை. | இடர்காப்புத் தரநியமங்களுக்கான அவதானமின்மை வணிக செயற்பாடுகளைப் பாதிக்கின்றதுடன் மனித உயிர்கள் மற்றும் கூட்டுத் தாபனத்தின் சொத்துக்களை ஆபத்திலிடுகின்றன. | ஸ்தாபனரீதியான ஆரோக்கியம் மற்றும் இடர்காப்பு மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பன உள்ளன<br><br>இடரேதுநிலைகளைக் குறைப்பதற்கு அல்லது ஒழிப்பதற்கு கிரமமான பயிற்சிகள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. | அனைத்து ஊழியர்களுக்குமான தொடர்ச்சியான பயிற்சியின் ஒரு முறைமை ஸ்தாபிக்கப்பட்டது. |
| சந்தை இடரேதுநிலை | | | |
| இ.பெ.கூ தனியே ஒரு தனியார்துறை நிறுவனம் மட்டும் போட்டியிடும் ஒரு போட்டித்தன்மையான சிலர் உரிமைச் சந்தையாகும். | போட்டி தொடர்பில் வாடிக்கையாளர்கள் மத்தியில் மாறும் மனப்பாங்குகள் அதேபோன்று பேரினப் பொருளாதார நிலைமைகள் வருமான விடுமிகைகள் மற்றும் இ.பெ.கூ இன் காசு நிலைமையைப் பாதிக்கின்றன. | உற்பத்தி பொருள் வகைகளைப் பன்முகப்படுத்தல்<br><br>வாடிக்கையாளர்களுடன் நிலைபேறான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.<br><br>கடன்பட்டோர்களிடமிருந்து பணத்தை திரட்டுதல் | அரசாங்க நிறுவனங்களிலிருந்தான வருமதிகளைக் கட்டுப்படுத்துவது உட்பட கடன் கட்டுப்பாட்டை மேம்படுத்துதல். |
| மனித வள இடரேதுநிலை | | | |
| ஒரு பரிணாம வளர்ச்சியடையும் தொழிலில் உயர் தகுதியான பணியாளர்களை கவர்தல், ஆட்சேர்த்தல், பயிற்றுதல் மற்றும் தக்க வைத்தல் என்பன ஒரு தொடர்ச்சியான தேவையாகும்.<br><br>மனித வளத்தை மேம்படுத்துகையில் தொழில் சம்பந்தமான சட்ட வழக்கு நடவடிக்கைகளைக் குறைப்பது அல்லது ஒழிப்பது இ.பெ.கூ இற்கு சவாலானது. | ஒரு போதுமானதல்லாத, முறையற்ற வகையில் இடப்பட்ட அல்லது பொருத்தமற்ற தொழில் குழாம் செயற்பாட்டு வினைத்திறன்களை மோசமான வகையிலும் மற்றும் மறைமுகமான வகையில் பெற்றோலிய உற்பத்திகளின் தரம் மற்றும் இ.பெ.கூ இன் மதிப்பை பாதிக்கின்றது. மனித வளங்களுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகள் இ.பெ.கூ இற்கு ஓர் அனாவசியமான செலவாகும். | ஒரு வலுவான பயிற்சி முறைமையை ஸ்தாபித்தல்<br><br>வேலைகொள்வோர்-ஊழியர்களின் ஒரு ஒப்புரவான உறவுமுறையை உருவாக்குவதற்கு ஊழியர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதித்துவத்துடன் வெற்றி-வெற்றி ஈடுபடல் பொறிமுறையை ஸ்தாபித்தல்.<br><br>ஊழியர் முரண்படுதல் நிலைமைகளைக் குறைப்பதற்கு ஊழியர் நலன்புரி, ஊக்குவிப்புகள் மற்றும் ஏனைய நன்மைத் திட்டங்களை ஸ்தாபித்தல். | செயலாற்றுகை அடிப்படையிலான வெகுமதி மற்றும் பதவியுயர்வு திட்டத்தை அறிமுகப்படுத்து கையில் ஆணை மீறுதலுக்கான தண்டனைகள் குறித்து ஊழியர்களுக்கு சமனான வகையில் தெளிவுபடுத்துதல். |
| தகவல் தொழில்நுட்ப இடரேதுநிலை | | | |
| தகவல் இடைப்பரிமாற்றம் மற்றும் சான்றடிப்படையில் சரியான சமயத் தீர்மானம் மேற்கொள்ளுதல் நவீன பெற்றோலியத் துறை வணிக செயற்பாடுகளில் முக்கியமானது. ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் உபயோகிக்கப்படுவதற்கு இவை நவீன தொழில்நுட்ப அபிவிருத்தி சார்ந்த அறிவைத் தேவைப்படுத்துகிறது. | தவறான தரவு மற்றும் தகவல் திரட்டல் மற்றும் ஆரம்பநிலைப்படுத்தல், தரவின் நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பு என்பன குறிப்பிடத் தக்கதான வகையிலும் மற்றும் எதிர்மறையான வகையிலும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு வினைத்திறனைப் பாதிக்கின்றது. | இ.பெ.கூ அதன் வணிகப் பரிமாற்ற வடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு ஏஸ்யூ முறைமையை உபயோகிக்கிறது.<br><br>தகவல் தொழிலநுட்பம் மற்றும் பாவனைக் கணக்காய்வு விழிப்புணர்வை நடத்துதல், அதே போன்று புதிதாக வரும் தொழில்நுட்பத்தை பாவிப்பது தொடர்பாக ஊழியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் மீளப் பயிற்றுவித்தல். | SAP முறைமை நிர்வாக உரிமைகள் மீது முழுமையான கட்டுப்பாடுகளை எடுத்தல். |
| நாணயமாற்று வீத இடரேதுநிலை | | | |

| இடரேதுநிலை | தாக்கம் | பதிலிறுப்பு | மூலோபாயங்கள் |
|---|---|---|---|
| இ.பெ.கூ இன் உள்நாட்டு வணிகப் பரிவர்த்தனைகள் இலங்கை ரூபாய் நாணயத்தில் இருக்கையில் அதன் கொள்வனவுகள் மற்றும் கடன்கள் அமெரிக்க டொலர்களில் கொடுப்பனவு செய்யப்படுகின்றன. | அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கம் நாணயமாற்று வீத நட்டங்களை அதிகரித்தது. | அனைத்து வங்கிகளாலும் குறிப்பிடப்படும் நாணயமாற்று வீதங்கள் ஒரு நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றதுடன் டொலர்கள் வங்கி குறிப்பிடும் வீதத்தில் அல்லாது சந்தை நடத்தை கண்காணித்தலின் பலனான சந்தை வீதத்தில் கொள்வனவு செய்யப்படுகின்றது. | அரச உடைமையுள்ள வர்த்தக வங்கிகளிலிருந்து மட்டும் கொள்வனவு செய்வதை மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அனுமதிபெற்ற எந்த வர்த்தக வங்கிகளிலிருந்தும் போட்டித்தன்மையான வீதத்தில் அமெரிக்க டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தைப் பெறுதல்.<br>அமெரிக்க டொலர் கடன்களை இலங்கை ரூபாய்க் கடன்களாக மாற்றுதல். |
| **வட்டி வீத இடரேதுநிலை** | | | |
| உள்ளக ரீதியாக நிதியை திரட்டுவதற்கு அவர்களால் இயலாத போது நாட்டில் பெற்றோலிய உற்பத்திகளின் சுமுகமான பாய்ச்சலை உறுதிப்படுத்துவதற்கு இ.பெ.கூ நிதிகளைக் கடன் பெறுகிறது. | கடன்பெறுதல்களின் வட்டி வீதம் இ.பெ.கூ இன் இலாபத் தன்மையை வட்டிச் செலவு மற்றும் நிதிக் கட்டணங்கள் என்பவை மூலமாக அனுகூலமற்ற வகையில் பாதிக்கின்றன. | வெளிநாட்டுக் கடன் வட்டி வீதங்களைக் குறைத்தல். | அரசாங்கம் தாமதமின்றி மானியம் அம்சத்தை தீர்த்தல் வேண்டும்.<br>மானிய அம்ச வருமதி எனும் வழி மூலம் அரசாங்கம் ஒரு குறித்த தொகை வங்கிக் கடன் பெறலை மேற்கொள்வதற்கு முடியும். |
| **திரவத்தன்மை இடரேதுநிலை** | | | |
| கூட்டுத்தாபனத்தின் அரசிறைக் கடப்பாடுகளை ஒரு கால அடிப்படையில் திருப்தி செய்வதற்கு இயலாமை திரவத்தன்மை இடரேதுநிலையின் ஒரு விளைவாகும். | சமயத்தில் தீர்ப்பதற்கு இயலாத போது மேலதிக வட்டியைக் கொடுப்பனவு செய்வது வட்டிச் செலவு, காசுப் பாய்ச்சல் மற்றும் பொறுப்பு நிலை மீது எதிர்மறையாகப் பாதிக்கிறது. மேலும், சொத்தொன்றை விரைவாக வர்த்தகம் செய்வதற்கான இயலாமை எதிர்பார்க்கப்படும் இலாபத்தன்மையை பாதிக்கிறது. | எதிர்கால திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மை நிலை தொடர்ச்சியான வகையில் கண்காணிக்கப்படுகிறது.<br>வங்கிகள் மற்றும் பொதுத் திறைசேரியுடன் சுமுகமான உறவுகளைப் பேணுவதன் மூலம் கூட்டுத்தாபனம் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலோபாயங்களை ஏற்பாடு செய்துள்ளது.<br>கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை நிலை என்பவற்றை சமனிலைப்படுத்துவதன் மூலம் மேல் மிஞ்சிய பணம் பொருத்தமான வகையில் முதலீடு செய்யப்படுகிறது. | அரசாங்க நிறுவனங்கள் உட்பட கடன்பெற்றோர்களிடம் இருந்து மீள்வசூலித்தலை அதிகரித்தல். |
| **கடன் இடரேதுநிலை** | | | |
| இ.பெ.கூ அதன் உற்பத்திகளைக் கடனிற்கு விற்பனை செய்வதால் கடன் இடரேதுநிலை தோன்றுகிறது.<br>ஒரு வாடிக்கையாளரினால் கொடுப்பனவு செய்யாமையில் இருந்து கொடாநிலை இடரேதுநிலை உருவாகின்றது.<br>ஒரு குறிப்பிட்ட வாடிக்கையாளர், துறை அல்லது உற்பத்திக்கு அதிகரித்த கடன் வெளிப்படுத்தலில் இருந்து கடன் செறிவு இடரேதுநிலை தோன்றுகிறது. | நிறுவனம் அதன் நிலுவையை நேரத்திற்கு தீர்ப்பதற்கு முடியாதபோது மேலதிக வட்டியைக் கொடுப்பனவு செய்வது வட்டிச் கிரயம், காசுப்பாய்ச்ல் மற்றும் பொறுப்பு நிலைமை என்பவற்றை எதிர்மறையான வகையில்பாதிக்கிறது.<br>மேலும், சொத்தொன்றை விரைவாக வர்த்தகம் செய்வதற்கான இயலாமை எதிர்பார்க்கப்படும் இலாபத்தன்மையை பாதிக்கிறது. | இ.பெ.கூ இன் வருமதிகள் வேறுபட்ட துறைகளுக்கு அளிக்கப்படும் ஒரு எண்ணற்ற உற்பத்தி வகைகளுடன் நன்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.<br>இ.பெ.கூ அரசாங்க நிறுவனங்களிலிருந்து வரவேண்டிய வருமதிகளுக்கு எதிராக அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் தீர்வைகளை எதிரீடு செய்தது. | வருட இறுதியில் வர்த்தக வருமதிகளில் சுமார் 75% ஆனவை அரசாங்கம் தொடர்புபட்ட ஸ்தாபனங்களிலிருந்து ஆனவை என்பதாலும் அவை பதிலுக்கு கூட்டுத்தாபனம் கடன்களை வசூலிப்பதில் அழுத்தத்தை இடுவதால் அரசாங்க நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்களை மேலும் குறைத்தல். |





# கூட்டாண்மை ஆளுகை

# கூட்டாண்மை ஆளுகை

பூரணமான கூட்டாண்மை ஆளுகை, பாத்தியதையுடையோர் பெறுமதி, கூட்டுத்தாபனத்தின் வளங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் மற்றும் மூலோபாய வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைவதற்குமான ஒரு வலுவான அடித்தளத்தை அளிக்கின்றது. நம்பிக்கை மற்றும் நாணயத்தின் மிக உயர்ந்த மட்டங்களை தனது செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளில் பொதித்து ஈற்றில் சிறந்த ஆளுகையை உறுதிப்படுத்துவதற்கு முக்கிய உந்தல் சக்தியாக இருப்பது பொதுமக்கள் வைத்துள்ள ஆர்வமும் மற்றும் அரச தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினாலான (கோப்) சுயாதீன மீளாய்வும் ஆகும்.




## பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபை கூட்டுத்தாபனத்தின் பிரதான உந்து சக்தியாக உள்ளதுடன், அது மூலோபாயம், நிதி மற்றும் நற்பெயர் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கிறது. 1961 ஆம் ஆண்டு 28ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், சபை செயற்படுவதற்கான எல்லைகளை நிர்ணயித்து சிறந்த கூட்டாண்மை ஆளுகையை உறுதிப்படுத்துகிறது. பணிப்பாளர்களுக்கான கட்டமைப்பு மற்றும் பதவிக் காலம் உட்பட, அவர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளையும் அது நிர்ணயிக்கிறது. கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரால் நியமிக்கப்படுகிறது. சபை உறுப்பினர்களுள், ஒரு பணிப்பாளர் பொதுத் திறைசேரியின் ஒரு பிரதிநிதியென்பதுடன் மற்றொரு பணிப்பாளர் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் ஒரு பிரதிநிதியாகவும் இருப்பர். 2018 வருடத்தின் போது தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் தவிர்த்து மற்றைய அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாதவர்களாகும்.

| பணிப்பாளர் | பணிப்பாளர் அந்தஸ்து | நியமனத் திகதி | விலகல் திகதி |
|---|---|---|---|
| திரு. டி.ரணத்துங்க | தலைவர் | 29.05.2017 | 26.10.2018 |
| திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர | முகாமைத்துவப் பணிப்பாளர் | 12.06.2018 | 26.10.2018 |
| திரு.கே.ஏ.விமலேந்திரராஜா | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 19.11.2015 | |
| திரு.ஏ.தி.பண்டார ஹேரத் | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 29.05.2017 | 26.10.2018 |
| திரு.ஆர்.ஏ.என்.ஜயசுந்தர | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 29.05.2017 | 26.10.2018 |
| திரு.எஸ்.தனத்துங்க | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 29.05.2017 | 26.10.2018 |
| திரு.டபிள்யு.எஸ்.பெரெரா | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 29.05.2017 | 26.10.2018 |
| திரு.எஸ்.விஜேசிங்க | பதில் தலைவர்;முகாமைத்துவப் பணிப்பாளர் | 12.11.2018 | 17.12.2018 |
| திரு.ஏ.எச்.எஸ்.விஜேசிங்க | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 28.11.2018 | 17.12.2018 |
| திரு.எஸ்.லியனகம | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 28.11.2018 | 17.12.2018 |
| திரு.கே.ஐ.டி.பி.குலரட்ன | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 28.11.2018 | 17.12.2018 |

தற்போதைய பணிப்பாளர்கள் சபையின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன

| பணிப்பாளர் | பணிப்பாளர் அந்தஸ்து |
|---|---|
| திரு.ஜி.எஸ்.விதானகே | தலைவர் |
| திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| திரு.கே.ஏ.விமலேந்திரராஜா | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு.எம்.விஜேசிங்க | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு. எம்.வை.ஹுசைன் | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு.டபிள்யு.ஆர்.பெரெரா | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு.பி.பி.எஸ் ரோஹித்த | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |

தற்போதைய பணிப்பாளர்களின் தகைமைகள் மற்றும் அனுபவங்களை சுட்டிக்காட்டும் சுருக்கமான நிபுணத்துவக் குறிப்பு பக்கங்கள் இந்த அறிக்கையின் 26 இலிருந்து 30 வரையான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2018 இல் சபை கூட்டத் தொடர்கள்

கிரமமான சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறுகையில், விசேட சபைக் கூட்டங்கள் தேவை கருதிய சமயங்களில் கூட்டப்படுகின்றன. கூட்டாண்மை மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள் இச்சந்திப்புகளில் அழைப்பின் பேரில் கலந்து கொள்வார்கள். சபைக் கூட்டங்கள் ஒரு முறைசார் நிகழ்ச்சிநிரலுக்கமைய நடத்தப்படுவதுடன் கூட்டங்களிற்கு முன்னதாக கூட்டாண்மை முகாமைத்துவத்தால் சம்பந்தப்பட்ட விரிவான பின்னணித் தகவல்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். வருடத்தின் போது 15 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சபைக் கூட்டங்களில் ஒவ்வொரு பணிப்பாளரினதும் வருகைகளை கீழ்வரும் அட்டவணை காண்பிக்கிறது.

## பணிப்பாளர்களின் சுயாதீனம்

1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின்படி, பணிப்பாளர்கள் சபையில் மூன்று வருடங்களுக்கு மேற்படாத ஒரு ஆரம்ப பதவிக்காலத்தை, அவர்களின் மீள்நியமனத்திற்கு உட்பட்ட வகையில் கொண்டிருப்பார்கள். தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன், சபை கூட்டாண்மை முகாமைத்துவத்திடமிருந்தும், தேவையாயின் வெளிவாரித் தொழில்சார் தகைமையாளர்களிடமருந்தும் சம்பந்தப்பட்ட தகவல்களை ஆராயும். சபை அதன் பொறுப்புகளை வினைத்திறனான வகையில் ஆற்றுவதற்கு பொருத்தமான தகவல்களை உரிய நேரத்தில் சபைக்கு வழங்குவதற்கு கூட்டாண்மை முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

### சபை வருகைப் பதிவு 2018

| பணிப்பாளர் | வருகைப் பதிவு |
|---|---|
| திரு.டி.ரணத்துங்க | 10/13 |
| திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர | 12/13 |
| திரு.கே.ஏ.விமலேந்திரராஜா | 10/15 |
| திரு.ஏ.தி.பண்டார ஹேரத் | 13/13 |
| திரு. ஆர்.ஏ.என்.ஜயசுந்தர | 13/13 |
| திரு.எஸ்.தனத்துங்க | 12/13 |
| திரு.டபிள்யு.எஸ்.பெரெரா | 13/13 |
| திரு.எஸ்.விஜேசிங்க | 2/2 |
| திரு.ஏ.எச்.எஸ்.விஜேசிங்க | 2/2 |
| திரு.எஸ்.லியனகம | 2/2 |
| திரு.கே.ஐ.டி.பி.குலரட்ன | 0/2 |

## சபையின் வகிபாகம்

கூட்டுத்தாபனத்தின் வெற்றி மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றுக்கான முழுமையான பொறுப்பும் மற்றும் பொறுப்புக்கூறலும் சபையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் வகிபாகம், பாத்தியதையுடையோர்களின் சிறந்த நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளையில், கூட்டுத்தாபனத்தின் மூலோபாய நெறிப்படுத்தல் மற்றும் முழுமையான செயலாற்றுகை நோக்கி சிறந்த தலைமைத்துவத்தை அப்பியாசிப்பதில் முதன்மைக் கவனம் செலுத்துகிறது.

கூட்டுத்தாபனத்தின் தொலைநோக்கின் அடைதலுக்கும் கூட சபை பொறுப்பானதாகும். இந்தப் பொறுப்பை மேற்கொள்ளுகையில், இ.பெ.கூ இன் மூலோபாயத்தைப் பயனுறுதல், அதன் தொழில்பாட்டு ரீதியிலான செயலாற்றுகை மற்றும் நிதிப் பெறுபேறுகளை மேற்பார்த்தல், அதே போன்று இ.பெ.கூ இன் கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்பின் இறுதிப் பாதுகாவலனாக இருத்தல் ஆகியவற்றுக்கான இறுதிப் பொறுப்புக் கூறலையும் சபையே கொண்டுள்ளது. மேலதிகமாக, சட்ட நியதித் தேவைப்பாடுகள் மற்றும் தார்மீகத் தராதரங்கள் என்பவற்றுடன் இணங்குவதற்கும் சபையே பொறுப்பானதாகும்.

பணிப்பாளர்கள் சபை அதன் ஏதேனும் அதிகாரங்கள் அல்லது கடமைகளை ஏதேனும் பணிப்பாளர் அல்லது ஊழியருக்கு ஒப்படைக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்டவரும் பணிப்பாளர்கள் சபையின் பொதுவான அல்லது விசேட நெறிப்படுத்தல்களுக்கு உட்பட்டு அதிகாரத்தை அல்லது ஒப்படைத்த கடமையை அப்பியாசித்தல் அல்லது செயலாற்றுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான கொள்கைகளை உருவாக்கியும் மற்றும் நடைமுறைப்படுத்தியும் மற்றும் அவற்றின் பயனுறுதியான அமுல்படுத்தலை உறுதிப்படுத்தும் ஒரு செயல்முனைப்பான முறைமையை அப்பியாசிப்பதற்கு சபை முயற்சி செய்கிறது. உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அணியின் அனைத்து உறுப்பினர்களுடனும் சபை உறுப்பினர்கள் நேரடியாக தொடர்பாடுவர்.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு அப்பால், வருடாந்த நிதிசார் கூற்றுகள், வருடாந்தப் பாதீடுகள், கூட்டாண்மைத் திட்டம், நடவடிக்கைத் திட்டம் என்பவற்றுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் கிரமமான அடிப்படையில் நிதிச் செயலாற்றுகை மீளாய்தல் என்பவற்றுக்கான பொறுப்புகளையும் சபை கொண்டுள்ளது. முக்கியமான நியமனங்கள், ஊழியர் பதவியுயர்வுகள், முக்கியமான மூலதன முதலீட்டுச் செலவுகள் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு கடன் வசதிகள் தொடர்பான அனுமதி வழங்குதல்களையும் சபை மேற்பார்வை செய்கிறது.

## உப குழுக்கள்

கணக்காய்வுக் குழுவினால் சபை உதவப்படுகிறதுடன் அதன் மூலம் சபையின் பிரதான கடமைகள் சிலவற்றை அது நிறைவேற்றுகிறது. மேலதிகமாக, முகாமைத்துவக் குழு, கையிருப்பு மீளாய்வுக் குழு, பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகிய நான்கு உப குழுக்கள் செயலில் உள்ளன.

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு சபைக்கு பொறுப்புக்கூறல் கடப்பாட்டுடன் முகாமைத்துவத்திலிருந்து ஒரு சுயாதீனமான பாத்திரத்தை வகிக்கின்றது. கணக்காய்வுக் குழு சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இந்த வருடாந்த அறிக்கையின் பக்கங்கள் 84 & 85 இல் கணக்காய்வுக் குழு அறிக்கையில் அதன் கட்டமைப்பு, வகிபாகம், கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் கணக்காய்வுக் குழுவின் வருகைப் பதிவு என்பன விபரிக்கப்பட்டுள்ளன.

## முகாமைத்துவக் குழு

வருடத்தின் போது, முகாமைத்துவக் குழு நான்கு பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன் அதில் ஒருவர் குழுவின் தலைவராக இருந்தார். கூட்டங்களில் பங்கேற்பதும் கூட தலைவரின் செயற்பாடுகளிலொன்றாக இருந்தது. மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் போது பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட வேண்டிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு குழு எட்டுத் தடவைகள் சந்தித்தது. குழு அதன் அறிக்கையை இறுதி அனுமதிக்காக சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கிறது.

கட்டமைப்பு மற்றும் வருடத்தின் போதான வருகை

| குழு உறுப்பினர் | வருகைப் பதிவு |
|---|---|
| திரு.டி.ரணத்துங்க | 4/8 |
| திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர | 8/8 |
| திரு.ஏ.தி.பண்டார ஹேரத் | 6/8 |
| திரு.எஸ்.தனத்துங்க | 8/8 |
| திரு.ஈ.ஏ.எஸ்.எதிரிசிங்க | 8/8 |
| திரு.வி.என்.வீரசூரிய | 8/8 |
| திரு.எம்.ஏ.டி.மல்லிகாராய்ச்சி | 6/8 |
| திரு.எம்.கே.கருசிங்க | 8/8 |
| திரு.டபிள்யு.எம்.கே.ஆர்.பி.விக்கிரமசிங்க | 6/8 |
| திரு.கே.டபிள்யு.எஸ்.பி.விதான | 7/8 |
| திருவாட்டி.ஆர்.ஏ.கே.சி.அரியரட்ன | 7/8 |

## கையிருப்பு மீளாய்வுக் குழு

கையிருப்பு மீளாய்வுக் குழு தற்போதைய கையிருப்பு நிலைமையை ஆராய்ந்த பின்னர் அடுத்த மூன்று மாதங்களுக்கான கையிருப்புத் தேவைப்பாட்டை மதிப்பிடுகிறது. அது, CPSTL, IOC, PUCSL மற்றும் இ.மி.ச பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் வாராந்தம் கூடுகிறது. நாட்டில் எதிர்வு கூறப்பட்டுள்ள கேள்வி, சுத்திகரிப்பாலை உற்பத்திச் செயற்றிறன்கள் மற்றும் தாங்கிகளின் களஞ்சியக் கொள்திறன் என்பவற்றுக்கு கவனம் கொடுத்த பின் இறக்குமதி செய்ய வேண்டிய அளவுகள் மற்றும் கப்பலில் சரக்கேற்றல் என்பன திட்டமிடப்படுகின்றன. இந்த கூர்மையான கண்காணித்தல் செய்முறையானது இறக்குமதி, சுத்திகரித்தல் மற்றும் வைத்திருக்கும் செலவு என்பவற்றைக் குறைக்கும் வேளையில் நாட்டில் எரிபொருளின் தடைகளற்ற வழங்கலுடன் சுமுகமான செயற்பாட்டுக்கு கூட்டுத்தாபனத்தை இயலச் செய்கிறது.

## பெறுகைக் குழுக்கள் (PC) மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் (TEC)

இ.பெ.கூ இற்கு நிதி ரீதியாக கூடுதல் அனுகூலமான மற்றும் தர ரீதியாக மிகச் சிறந்த சேவைகள் மற்றும் வழங்கல்களைப் பெறுவதற்கும் மற்றும் தாமதங்களைக் குறைத்து, வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் NPA ஆல் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு செயற்படுகின்றன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொள்வனவுகளின் தொழில்நுட்ப அம்சங்களுக்கு கவனம் செலுத்துகையில் பெறுகைக் குழு ஒரு கொள்வனவின் ஏனைய அம்சங்கள் மீது கவனம் எடுக்கிறது.

கொள்வனவின் பெறுமதியின் அடிப்படையில் பின்வரும் பெறுகைக் குழுக்கள் இ.பெ.கூ இல் செயற்படுகின்றன.

- பிராந்திய பெறுகைக் குழு
- திணைக்கள ரீதியான பெறுகைக் குழு
- செயல்திட்டப் பெறுகைக் குழு
- அமைச்சு பெறுகைக் குழு
- அமைச்சரவை நியமன பெறுகைக் குழு

## இறுதி மூலத்துடனான உறவுகள்

கூட்டுத்தாபனத்தின் வணிகத் தொடர்ச்சி, அதன் அனைத்துப் பாத்தியதையுடையோர்களுடன் இணக்கமான மற்றும் அர்த்தமுள்ள ஈடுபாட்டின் மீது தங்கியுள்ளது. கூட்டுத்தாபனம் மற்றும் அதன் பாத்தியதை கொண்டவர்களுக்குமிடையில் பரஸ்பர புரிந்து கொள்ளுதலை மேம்படுத்துவதின் முக்கியத்துவத்தை இ.பெ.கூ அங்கீகரிக்கின்றது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தில், கூட்டுத்தாபனத்தின் இறுதி மூலமாக பொறுப்பெடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்பு இலங்கை அரசாங்கம் என்பதாகும். கூட்டுத்தாபனம் அதன் செயற்பாடுகளை சமாளிப்பதற்கு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றுடன் நெருக்கமாக இணைகிறது. முக்கிய விரிவாக்க திட்டங்களுக்காக ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களையும் மற்றும் அந்த நிறுவனங்களிலிருந்து நிதியையும் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கிறது. அரசாங்கத்துடன் தொடர்பாடுவதில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் முக்கியமான தொடர்பு கொள்ளும் நபராக இருப்பதுடன் அத்தகைய தொடர்பாடல்கள் வாய் மற்றும் எழுத்து மூலமான இரு வகைகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. இ.பெ.கூ சட்ட ரீதியாகத் தேவைப்படும் மற்றும் ஏனைய தொடர்புபட்ட தகவல்கள் அனைத்தையும் சிறந்த சாத்தியமான விதத்தில் அரசாங்கத்திற்கு வழங்குகின்றது.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

கூட்டுத்தாபனம் சுமுகமாக செயற்படுவதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஒரு பயனுறுதியான முறைமை அத்தியாவசியமாகும். கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதையும் மற்றும் சரியான தகவல்கள் பேணப்பட்டும் மற்றும் நம்பகமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிசெய்வதையும் இந்த முறைமை நோக்காகக் கொண்டது. உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நிதி, செயற்பாடு மற்றும் இடரேதுநிலை முகாமைத்துவத்துடன் கூடிய இணக்கப்பாட்டுக் கட்டுப்பாடுகள் உட்பட, அனைத்து வகைக் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. நடைமுறையில், கொள்கைகள் மற்றும் வணிகக் குறிக்கோள்களை அடைவதற்குத் தவறும் இடரேதுநிலையை ஒழிப்பதை விட, ஓர் ஏற்றுக்கொள்ளத்தக்க இடரேதுநிலை வரைவாக்கத்தினுள் இ.பெ.கூ இன் முக்கிய இடரேதுநிலை விடயங்களை, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை சமாளிக்கிறது. அதற்கமைய, முகாமைத்துவத்தின் பொருள் ரீதியான கூற்றுத் திரிபு மற்றும் நிதித் தகவல்கள் மற்றும் பதிவுகள் அல்லது நிதி இழப்புகள் அல்லது மோசடி என்பவற்றுக்கு எதிராக உள்ளகக் கட்டுப்பாடுகளின் முறைமை தனியே ஒரு நியாயமான ஆனால் முழுமையானதல்லாத உறுதிப்பாட்டை மாத்திரமே வழங்குவதற்கு முடியும்.

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் அனைத்து உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் அவற்றின் துல்லியத்தன்மை மற்றும் பயனுறுதித்தன்மை என்பவற்றை மீளாய்வதற்கும் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மேம்படுத்தல்களுக்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

## உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் தொழில்சார் ரீதியாகத் தகுதி பெற்ற ஒரு பட்டயக் கணக்காளரால் தலைமையளிக்கப்படுகிறது. இடரேதுநிலை கொண்ட விடயப் பரப்புகளை இனங் காண்பதற்கும் மற்றும் பரிவர்த்தனை நடவடிக்கைகளின் முழுமையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், உள்ளகக் கட்டுப்பாடுகளை அணுகுவதற்கு கணக்காய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்கள் உபயோகத்தில் இருந்தன. மேலதிகமாக, முகாமைத்துவத்திற்கு அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும் நோக்கத்துடன் விசேட விசாரணைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். உற்பத்தி இழப்புகள் மற்றும் வருவாய் இழப்புகள் விடயங்கள் தொடர்பான இடரேதுநிலைகளின் இனங் காணுதல், கணக்காய்வுக் கேள்விகளுக்கான பதில்களுடன் கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை தொடர்பான கலந்துரையாடல் மற்றும் கணக்காய்வுத் திட்டங்களின் காலவொழுங்கிலான மீளாய்வுடன் மேற்கொள்ளப்பட்ட உண்மையான வேலை ஆகியன உள்ளகக் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயற்பாடுகளாகும்.

## கூட்டாண்மை முகாமைத்துவம்

காலத்திற்கு காலம் பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்ட மூலோபாய வழிப்படுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் அனுமதிக்கப்பட்ட நடைமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் வழமையான விவகாரங்களை தலைவரும் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளரும் நிர்வகிக்கின்றனர். சுத்திகரிப்பாலைச் செயற்பாடுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் உட்பட தலைமை அலுவலக செயற்பாடுகள் என இரு பரந்த வகைகளில் இ.பெ.கூ இன் செயற்பாடுகள் மற்றும் பிரதான நிர்வாக நடவடிக்கைகள் பிரிக்கப்பட முடியும். சுத்திகரிப்பாலை செயற்பாடுகள் சுத்திகரிப்பாலை முகாமையாளரால் தலைமையளிக்கப்படுவதுடன் அவர் மின்னியல் & உபகரணங்கள், உற்பத்தி & செயற்பாடுகள், பராமரிப்பு & செயல்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் போன்ற வேறுபட்ட முக்கிய பகுதிகளுக்குப் பொறுப்பான பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர்களால் ஒத்தாசை அளிக்கப்படுகிறார். சிறந்த முகாமைத்துவத்திற்காக, தலைமை அலுவலகம் பல்வேறு செயல் நடவடிக்கைகளுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு செயல் நடவடிக்கையும் ஒரு பிரதிப் பொது முகாமையாளர் அல்லது ஒரு முகாமையாளரால் தலைமை தாங்கப்பட்டு, அவர்கள் கூட்டுத்தாபனத்தின் நாளாந்த செயற்பாடுகளில் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு ஒத்தாசை அளிக்கின்றனர். கூட்டாண்மை முகாமையாளர்கள் அவர்களது சம்பந்தப்பட்ட செயற்பாட்டு பரப்புகளில் கல்விசார் பட்டப்படிப்புகள், மற்றும் சம்பந்தப்பட்ட தொழில்சார் தகைமைகளுடன் அனுபவம் மற்றும் தகுதிகள் என்பவற்றோடு நன்கு சமனிலை கொண்டவர்களாக உள்ளனர். சிரேஷ்ட மற்றும் கூட்டாண்மை முகாமையாளர்களின் சுருக்கமான சுயவிபரங்களுடன் அவர்களது தகுதிகள் என்பன குறிப்பிடப்பட்டு இந்த அறிக்கையின் 31 இலிருந்து 35 வரையான பக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## இணக்கப்பாடு மற்றும் ஒளிவுமறைவின்மை

அனைத்துப் பிரயோகமாகும் சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள், தரநியமங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் கோவைகள் என்பவற்றுடன் இணக்கப்பாடாக இருத்தல் கூட்டுத்தாபனத்தின் வெற்றி மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றுக்கு அடிப்படையானவையாகும். இ.பெ.கூ இன் கூட்டாண்மை ஆளுகை, இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைக் கோவையில் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் 2003 இல் நிதி அமைச்சின் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாளுகைக்கான பொதுத் தொழில்முயற்சிகள் வழிகாட்டல்கள் என்பவற்றால் கட்டமைக்கப்பட்டுள்ளது. வலுவான கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளைப் பாதுகாக்கும் அந்தத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பணிப்பாளர்கள் சபை பற்றுறுதி கொண்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் அனைத்து நடவடிக்கைகளிலும் ஒளிவுமறைவின்மையைப் பேணுவதற்குப் பற்றுறுதி கொண்டுள்ளது. கூட்டுத்தானம் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRS/LKAS) மற்றும் தொடர்பான ஒழுங்குவிதிகளுடன் இணங்குகிறது. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் நாளாந்த செயற்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நிதிசார் கூற்றுகள் வருடாந்தம் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. நிதிச் சட்டத்துடன் இணங்கும் வகையில், கணக்காய்வாளர் நாயகம் கூட்டுத்தாபனத்தின் வெளியகக் கணக்காய்வை மேற்கொள்கிறார்.





# கணக்காய்வுக் குழு அறிக்கை

# கணக்காய்வுக் குழு அறிக்கை

இ.பெ.கூ இன் கணக்காய்வுக் குழு, பணிப்பாளர்கள் சபை மற்றும் நிறைவேற்றுத் தரம் இல்லாத பணிப்பாளர்கள் ஆகியோர்களின் ஒரு உபகுழுவாகும். இவர்களில் சம்பந்தப்பட்ட தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டவர்கள் கணக்காய்வுக் குழுவுக்கு பணிப்பாளர்கள் சபையால் நியமிக்கப்பட்டதுடன் அது சபைக்கு பொறுப்புக்கூறும் கடப்பாட்டைக் கொண்டதாகும். பணிப்பாளர்கள் சபைக்கு அதன் பரிந்துரைகளுடன் கண்டறிதல்களை அறிக்கைப்படுத்தும் கணக்காய்வுக் குழுவின் முக்கியமான வகிபாகம், நிதிசார் அறிக்கையிடல், கணக்காய்வுச் செய்முறைகள், முழுமையான உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடரேநிலை முகாமைத்துவ முறைமையின் பேணல் என்பவற்றின் நம்பகமான முழுமைத்தன்மையை உறுதிப்படுத்துவதாகும். குழுவின் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வணிக செயற்பாடுகளில் முகாமைத்துவ இணக்கப்பாட்டைக் கண்காணித்தல்.
- நிதிசார் கூற்றுகளின் முழுமைத்தன்மை மற்றும் அவற்றுள் உள்ளடங்கியுள்ள முக்கியமான அறிக்கையிடல் முடிவுகள்.
- நிதிசார் அறிகைகயிடல் முறையில் போதுமான வெளிப்படுத்துகைகளை உறுதிப்படுத்துதல்.
- உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டின் நடவடிக்கைகள் மற்றும் பயனுறுதித்தன்மைகள்.
- உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் இடரேதுநிலை முகாமைத்துவ முறைமைகளின் பயனுறுதித்தன்மை.
- கூட்டுத்தானம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற இடரேதுநிலைகளை மீளாய்தல், இடரேதுநிலை மற்றும் அவற்றின் தாக்கத்தை தணிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.
- வருடத்திற்கான கணக்காய்வுத் திட்டத்தினை ஆராய்தல் மற்றும் அனுமதித்தல்.
- கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையை மீளாய்தல் மற்றும் முகாமைத்துவ சீர்செய்யும் நடவடிக்கைகளுக்காக பிற்தொடர்ச்சி செய்தல்.
- கோப் குழு பரிந்துரைகளின் மீளாய்தல் மற்றும் அமுல்படுத்துதலை உறுதிசெய்தல்.

## குழுவின் கட்டமைப்பு

கணக்காய்வுக் குழு, பணிப்பாளர்கள் சபையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் மீளாய்வுக்கு உட்பட்ட இந்த வருடத்தின் போது, கூட்டுத்தாபனம் ஐந்து (05) கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்தியுள்ளது. 79ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் மூன்று நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களான திரு. கே.ஏ.விமலேந்திரராஜா (தலைவர்), திரு. ஆர்.ஏ.என். ஜயசுந்தர மற்றும் திரு. ஏ.பண்டார ஹேரத் ஆகியோர் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாகச் செயற்பட்டதுடன் 80, 81, 82 மற்றும் 83 ஆவது கணக்காய்வுக் குழுக்களுக்கான உறுப்பினர்களாகவும் தொடர்ந்தனர். பொது வர்த்தகத் தொழில்முயற்சிகளில் கணக்காய்வுக் குழுக்களை நடத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள திறைசேரிச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறான பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறிப்பான கடமைகள் ஆகிய விடயங்களைக் உள்ளடக்கி குழுவின் கணக்காய்வுப் பட்டயம் தயார் செய்யப்பட்டது.

## கணக்காய்வுக் குழுவின் பணிகள்

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான தன்மை, நேரப் பொருத்தப்பாடு மற்றும் அவை காணப்படும் தன்மை மற்றும் வணிக செயற்பாடுகள், நிதிசார் அறிக்கையிடல் முறையில் வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை தொடர்பிலான இணக்கப்பாடு என்பவற்றை குழு தீர்மானிக்கிறது. நிதிசார் கூற்றுக்களை தயார் செய்தலுக்காக பயன்படுத்திய SLFRS/LKAS உட்பட அறிக்கையிடல் முறைமையுடன் ஏற்றுக்கொண்டதும் மற்றும் இணங்கிக் கொண்டதுமான கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலையான தன்மையையும் கூட அது உறுதிப்படுத்துகிறது. மேற்குறிப்பிட்டவற்றை விட, கூட்டுத்தாபனம் வெளிப்படுத்தப்பட்டுள்ள இடரேதுநிலைகள் மற்றும் இடரேதுநிலையைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பயனுறுதித்தன்மை என்பவற்றையும் குழு மீளாய்கிறது. கணக்காய்வாளர் நாயகம் மற்றும் கோப் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதையும் குழு உறுதிப்படுத்துகிறது.

## கணக்காய்வுக் குழுவினால் செயலாற்றப்பட்ட பணிகள்

கணக்காய்வுக் குழு அதன் பொறுப்புகளை ஆற்றும் பொருட்டு பின்வரும் பணிகளை செயலாற்றியது.

- இ.பெ.கூ இன் அனைத்து சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் போதுமான தன்மையை மீளாய்தல்.
- கூட்டுத்தாபனத்தால் முகங் கொடுக்கப்பட்ட முக்கியமன மூலோபாய பிரச்சினைகளைக் கலந்துரையாடல்.

- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அவற்றிலுள்ள அவதானிப்புகளைக் கலந்துரையாடல்.
- 2018 வருடத்துக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்தலும் அனுமதித்தலும்.

## கூட்டங்கள்

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, மேற்குறிப்பிட்டவாறு கணக்காய்வுக் குழுவிடம் நம்பிக்கைப் பொறுப்பளிக்கப்பட்ட கடமைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு ஐந்து (05) கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடைபெற்றன.

| கூட்ட இல. | திகதி | பங்குபற்றல் | உறுப்பினர் பிரசன்னம் |
|---|---|---|---|
| 79 | 13.03.2018 | 3/3 | திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>திரு.ஏ.தி.பண்டார ஹேரத்<br>திரு. ஆர்.ஏ.என்.ஜயசுந்தர |
| 80 | 02.04.2018 | 2/3 | திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>திரு. ஆர்.ஏ.என்.ஜயசுந்தர |
| 81 | 02.06.2018 | 3/3 | திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>திரு.ஏ.தி.பண்டார ஹேரத்<br>திரு. ஆர்.ஏ.என்.ஜயசுந்தர |
| 82 | 21.08.2018 | 3/3 | திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>திரு.ஏ.தி.பண்டார ஹேரத்<br>திரு. ஆர்.ஏ.என்.ஜயசுந்தர |
| 83 | 04.09.2018 | 3/3 | திரு.கே.ஏ.விமலேந்திரராஜா<br>திரு.ஏ.தி.பண்டார ஹேரத்<br>திரு. ஆர்.ஏ.என்.ஜயசுந்தர |

## உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு

உள்ளகக் கணக்காய்வின் முக்கியமான செயற்பாடுகள், வருட ஆரம்பத்தில் கணக்காய்வுக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் மூலமாக அமுல்படுத்தப்படும் கணக்காய்வு நடைமுறைகளூடாக உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல், இடரேதுநிலைப் பகுதிகளை இனங்காணுதல் மற்றும் பரிவர்த்தனை நடவடிக்கைககளின் துல்லியத்தன்மை மற்றும் முழுமையான தன்மையைச் சரிபார்த்தல் என்பவற்றை உள்ளடக்குகிறது. கணக்காய்வுச் செய்முறைகளின் போது இனங்காணப்பட்ட விடயங்களை சுட்டிக்காட்டுவதற்கு கணக்காய்வுக் கேள்விகள் எழுப்பப்பட்டன. மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, பல்வேறு முக்கியத்துவக்குரிய விடயங்கள், உற்பத்தி இழப்புகள், வருமானமிழப்புப் பகுதிகள் என்பவற்றுக்கு தொடர்புபட்ட இடரேது நிலைகளை இனங்காணுதல், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளைக் கலந்துரையாடுதல் மற்றும் கணக்காய்வுக் கேள்விகளுக்கு மறுமொழியளித்தல் மற்றும் உண்மையாக மேற்கொண்ட பணிகள் மீதான அடிப்படையில் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுச் செயலின் செயற்பாடுகளை மீளாய்தல் பற்றி முகாமைத்துவத்திற்கு அவதானித்தல்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு விசேட விசாரணை ஆய்வுகளில் உள்ளகக் கணக்காய்வுச் செயல் ஈடுபடுகிறது.

மீளாய்விற்கு உட்பட்ட வருடத்தில் உள்ளகக் கணக்காய்வினால் செயலாற்றப்பட்ட பணிகளின் சாராம்சம்.

- 2018 மாதாந்த நிதிசார் கூற்றுக்களை மீளாய்தல் செய்தமை.
- 2017 வருடத்திற்கான நிதிசார் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையைக் கலந்துரையாடியமை.
- உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையின் போதுமான தன்மையை மீளாய்தல் செய்தமை மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பலவீனங்கள் பற்றித் தொடர்பாடியமை.
- கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளைக் கலந்துரையாடியமை.
- நிதிசார் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்காக கோப் குழுப் பரிந்துரைகளின் தற்போதைய நிலைமையைக் கலந்துரையாடியமை.
- முன் கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

## முடிவுரை

கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை கூட்டுத்தாபனத்தின் விவகாரங்கள் அதன் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளுக்கு அமைவாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளமைக்கு ஓர் உறுதிப்பாட்டை வழங்குகின்ற போதிலும், கணக்காய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சில விடயங்களைக் கவனத்தில் கொள்வதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகள் உட்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அது தேவைப்படுத்தப்பட்டுள்ளது, என்பது கணக்காய்வுக் குழுவின் அபிப்பிராயமாகும்.



கே.ஏ.விமலேந்திரராஜா
தலைவர் - கணக்காய்வுக் குழு






# பணிப்பாளர்கள் அறிக்கை

# பணிப்பாளர்கள் அறிக்கை

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 32(2) இற்கமைவாக, 2018 டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்காக கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுவின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகளுடன் இணைந்ததாக வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர்கள் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு அரசுடைமை வணிகத் தொழில் முயற்சியாகும். கூட்டுத்தாபனம் ஒரு பணிப்பாளர்கள் சபையால் முகாமைத்துவம் செய்யப்படுகிறது.

கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இல.609, கலாநிதி. டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 எனும் முகவரியில் அமைந்துள்ளது. இந்த வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் வெளியிட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRSs/LKASs) மற்றும் 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் அதற்குப் பிந்தியதான திருத்தங்களின் ஏற்பாடுகள் என்பவற்றுக்கமைவாக சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்களுடன் தயார் செய்யப்பட்டு மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## பிரதான நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகள் இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல் மற்றும் விற்பனை செய்தல் என்பவையாகும். கூட்டுத்தாபனம் அதன் பெற்றோலிய உற்பத்திகள் சிலவற்றை ஏற்றுமதியும் செய்கின்றது.

## துணை நிறுவனம்

இ.பெ.கூ, 2/3 என்ற ஒரு பங்கு உரிமையுடன் கூடிய, வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் (CPSTL) எனும் ஒரு துணை நிறுவனத்தைக் கொண்டுள்ளது. CPSTL இன் பிரதான நடவடிக்கைகள் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் ஏற்பாடு மற்றும் விநியோக வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளின் வழங்கல் என்பவையாகும்.

## கூட்டுத்தாபனம் மற்றும் குழுவின் நிதிக் கூற்றுகள்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் டிசம்பர் 31, 2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகள் பிரதிப் பொது முகாமையாளரால் (நிதி) முறையாகக் கைச்சாத்திடப்பட்டு மற்றும் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டது.

## நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

கூட்டுத்தாபனம் மற்றும் குழுமத்தின் விவகாரங்களின் நிலைமை பற்றிய ஒரு உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்ற, நிதிசார் கூற்றுகளின் தயார்ப்படுத்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்காக பணிப்பாளர்கள் சபை பொறுப்பானதாகும். இந்த அறிக்கையில் 116 இலிருந்து 147 வரையான பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ள முழுமையான வருமானத்தின் கூற்று, நிதிசார் நிலைமையின் கூற்று, உரிமையாண்மைகள் மாற்றங்களின் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தராதரங்கள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் என்பவற்றால் ஆணைப்படுத்தப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் தயார் செய்யப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## முக்கியமான கணக்கியல் கொள்கைகளும் மற்றும் வருடத்தின் போதான மாற்றங்களும்

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, ‘நிதிசார் கூற்றுக்களின் சமர்ப்பணம்’ தொடர்பான இலங்கை கணக்கீட்டுத் தராதரம் இல.1 இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு முன்னைய வருடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றுடன் ஒத்திணைகின்றதான SLFR 9 மற்றும் SLFRS 15 என்பவற்றின் அமுல்படுத்தல் தவிர்த்து, அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் இருக்கவில்லை.

## நிதிசார் பெறுபேறு

கூட்டுத்தாபனத்தின், டிசம்பர் 31, 2018 முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் பெறுபேறுகளின் சுருக்கம் முன்னனைய வருடத்தின் ஒப்பீட்டு பெறுபேற்றுப் பெறுமானங்களுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| | 2018 ரூ. பில்லியன் | 2017 ரூ. பில்லியன் |
|---|---|---|
| வருமானம் | 592.25 | 516.77 |
| கழி : விற்பனை வரிகள் (கலால் தீர்வை & தே.க.வ) | (71.29) | (70.82) |
| நிகர விற்பனை வருமானம் | 520.97 | 445.95 |
| விற்பனைச் செலவுகள் | (523.98) | (418.96) |
| மொத்த இலாபம் | (3.01) | 26.99 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 0.81 | 0.68 |
| விற்பனை & விநியோகச் செலவுகள் | (14.91) | (15.50) |
| நிர்வாக ரீதியான செலவுகள் | (6.02) | (4.96) |
| நிதிசார் அறவிடுதல்கள் | (12.06) | (10.53) |
| நிதிசார் வருமானம் | 12.90 | 11.06 |
| நாணயமாற்று வீத வேறுபாடு | (82.72) | (4.92) |
| இலாபம் / (நட்டம்) வரிக்கு முந்தியது | (105.02) | 2.82 |

## வருமானம் & இலாபங்கள்

கூட்டுத்தாபனத்தின் வருமானம் 2017 வருடத்துடன் ஒப்பிடும் போது 14.6% அதிகரித்து கூட்டுத்தாபனத்தின் வரலாற்றில் மிகவுயர்ந்த வருமானத்தைப் பதிவு செய்தது. மீளாய்வின் கீழான வருடத்தின் போது வருமானம் மற்றும் இலாபம்/(நட்டம்) பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

| | விற்பனை ரூ. மிலி. | இலாபம்/(நட்டம்) ரூ. மிலி. |
|---|---|---|
| போக்குவரத்து | 412,716 | (96,042) |
| மின்வலு உருவாக்கம் | 74,757 | (10,669) |
| விமான எரிபொருள் | 64,189 | 3,841 |
| தொழில்துறை | 13,661 | (75) |
| வீட்டுப்பாவனை | 17,688 | (14,619) |
| விவசாய இரசாயனம் | 151 | (19) |
| கப்பல் எரிபொருள் | 9,090 | (1,132) |
| மொத்தம் | 592,253 | (118,715) |

## வரிவிதிப்பு

வருமான வரிச் செலவு 2017 ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் படி கொடுப்பனவு செய்யப்பட்டது. கூட்டுத்தாபனம் ஒரு நட்டத்தை ஈட்டியதால், பொருண்மை ரீதியான வருமானவரிப் பொறுப்பு எழவில்லை. விபரங்கள் பக்கம் 127 இல் நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்பு 07 இல் தரப்பட்டுள்ளன.

## விசேட கட்டணம்

2014 வருடத்தின் போது, பொதுத் திறைசேரி ரூ.10 பில்லியனை ஒரு விசேட கட்டணமாக கொடுப்பனவு செய்வதற்கு அறிவுறுத்தியதுடன், வருமானக் கூற்றிலிருந்து 2014 வருடத்திற்காக ரூ.250 மில்லியன், 2015 வருடத்திற்காக ரூ.750 மில்லியன் மற்றும் 2016 இலிருந்து 2024 வரையான காலத்திற்காக ரூ.1,000 மில்லியனையும் ஒரு செலவாக அறவிடுவதற்கும் வேண்டிக்கொண்டது. அதற்கமைய, ரூ.1,000 மில்லியன் 2018 வருடத்திற்காக தீர்க்கப்பட்டது.

## கொடைகள்

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இ.பெ.கூ ரூ.5 மில்லியனிற்கும் அதிகமாக செலவு செய்தது.

## ஆதனம், பொறி & உபகரணம்

கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் ஆதனம், பொறி & உபகரணம் இன் விபரங்கள் பக்கம் 128 இலுள்ள நிதிசார் கூற்றுகளின் குறிப்பு 08 இல் தரப்பட்டுள்ளன.

## பங்களிக்கப்பட்ட மூலதனம்

கூட்டுத்தாபனத்தின் மொத்தப் பங்களிக்கப்பட்ட மூலதனம் டிசம்பர் 31, 2018 அன்றான திகதிப்படி ரூ.28,487.125 மில்லியனாகும் (2017 - ரூ.28,487.125 மில்லியன்).

## ஒதுக்கங்கள்

கூட்டுத்தாபனத்தின் மூலதன ஒதுக்கங்கள் டிசம்பர், 31, 2018 அன்றான திகதியில் ரூ.4,992.686 மில்லியன்களாக இருந்தது (2017 – 4,992.686 மில்லியன்).

## பணிப்பாளர்கள்

தற்போது பதவிகளை வகிக்கும் பணிப்பாளர்களின் பெயர்கள்:

| பணிப்பாளரின் பெயர் | நிறைவேற்று / நிறைவேற்றுத் தரமல்லாத அந்தஸ்து |
|---|---|
| திரு.ஜி.எஸ்.விதானகே (தலைவர்) | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர (முகாமைத்துவப் பணிப்பாளர்) | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| திரு.கே.ஏ.விமலேந்திரராஜா | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு.மோகன் விஜேசிங்க | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு. மொஹமட் யூசுப் ஹுசைன் | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு.டபிள்யு.ஆர்.பெரேரா | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |
| திரு.பி.பி.சமன் ரோஹித்த | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் |

## பணிப்பாளர்கள் கூட்டங்கள்

சபைக் கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழு கூட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியதான கூட்டங்களின் விபரங்கள் 78 இலிருந்து 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. வருடத்தின் போது நடைபெற்ற கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை வருடாந்த அறிக்கையின் பக்கம் 79 இல் தரப்பட்டுள்ளது.

## பணிப்பாளர்களின் ஊதியம்

வருடத்தின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பணிப்பாளர்களின் ஊதியம் பின்வருமாறு

| | 2017 ரூ. மிலி | 2018 ரூ. மிலி |
|---|---|---|
| பணிப்பாளர்கள் ஊதியம் | 1.388 | 1.595 |

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்

கூட்டுத்தாபனத்துடன், நேரடி மற்றும் மறைமுகம் ஆகிய இரு வகைகளிலுமான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள், நிதிசார் கூற்றுகளின் குறிப்பு 31 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## இடரேதுநிலை முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை

இடரேதுநிலைகளைச் சமாளிப்பதற்கான முழுமையான பொறுப்பை பணிப்பாளர்கள் சபை ஏற்றுக் கொள்கிறது. இந்த நோக்கத்திற்காக, பணிப்பாளர்கள் சபை கூட்டுத்தாபனத்தில் ஒரு பயனுறுதியான மற்றும் முழுமையான உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஒரு முறையை ஆரம்பித்துள்ளனர். இடரேதுநிலையைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்பட்ட குறிப்பான நடவடிக்கைகள் அறிக்கையின் 70 இலிருந்து 75 வரையான பக்கங்களில் இடரேதுநிலையைச் சமாளித்தல் என்பதன் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

## கூட்டாண்மை ஆளுகைப் பணிப்பாளர்களின் அறிவித்தல்கள்

பணிப்பாளர்கள் சபை பின்வருபவற்றை அறிவிக்கிறது:

- வணிகத்தை மேற்கொள்வதில் கூட்டுத்தாபனம் அனைத்துப் பிரயோகமாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியதையும் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் முரண்படும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை;
- கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்படும் ஒப்பந்தங்களில் அனைத்து பொருள்சார் நலன்களை வெளிப் படுத்தியிருத்தலை;
- உறுதுணையான கருதுகோள்களுடன் பணிப்பாளர்கள் சபை கூட்டுத்தாபனத்தின் கூட்டாண்மை/வணிகத் திட்டங்களை மீளாய்ந்தும் மற்றும் முன்காணக்கூடிய எதிர்காலத்தில் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு கூட்டுத்தாபனம் போதுமான மூலவளங்களைக் கொண்டுள்ளதென்பதில் திருப்தியுறுவதினால் வணிகம் ஒரு தொடர்ச்சியாக இயங்கும் தன்மை கொண்டது. அதற்கமைய, தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு என்பதன் அடிப்படையில் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் நிதிசார் கூற்றுகள் தயார்செய்யப்படுவதை;
- நிதிசார், செயற்பாடு மற்றும் இணக்கப்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடரேதுநிலை முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஒரு மீளாய்வை பணிப்பாளர்கள் நடத்தியதையும் மற்றும் அவற்றின் பயனுறுதித்தன்மைகள் மற்றும் அவற்றுடனான வெற்றிகரமான கடைப்பிடித்தலை;
- கூட்டாண்மை ஆளுகை விதிகள் மற்றும் ஒழுங்கவிதிகளுடன் நடைமுறைகள் மற்றும் வழக்கங்கள் இணங்கியிருந்தமை இந்த அறிக்கையின் கூட்டாண்மை ஆளுகை அறிக்கைப் பகுதியின் 76 இலிருந்து 81 வரையான பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

## மனித வளங்கள்

அதன் வணிக நோக்கு மற்றும் தூர நோக்கு என்பவற்றை யதார்த்தமானதாக நிலைமாற்றுவதில் மனித வளங்கள் பெறுமதியான வகிபாகத்தைக் கொண்டிருப்பதை கூட்டுத்தாபனம் அங்கீகரித்துள்ளது. அதன்படி, கூட்டாண்மை இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவது நோக்கி அதன் மனித வளத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் அவர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அனைத்து வகையான ஊழியர்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் மூலம் தங்களது அறிவு மற்றும் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு போதுமான வாய்ப்புகளை அளிப்பதை எங்களது மனித வளக் கொள்கை வலியுறுத்துகிறது. அதன் மனித வளங்களினுள் ஒரு உயர் மட்டத் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ செயலாற்றல் திறன் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு மனித மூலதனத்தின் அபிவிருத்தி, கூட்டுத்தாபனத்திற்கான ஒரு முன்னுரிமைக் குறிக்கோளாக வந்துள்ளது.

## நிலுவையிலுள்ள வழக்கு நடவடிக்கைகள்

பணிப்பாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வழக்கறிஞர்களின் அபிப்பிராயத்தின்படி, நிதிசார் கூற்றுகளின் குறிப்பு 28 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நிலுவையிலுள்ள வழக்கு நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் ஸ்திரத்தன்மை அல்லது அதன் எதிர்கால செயற்பாடுகள் மீது எந்த பொருண்மை ரீதியான பாதிப்புகளையும் ஏற்படுத்தமாட்டாது.

## சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

பிரயோகமாகும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் முரண்படும் எந்த நடவடிக்கைகளிலும் கூட்டுத்தாபனம் ஈடுபடவில்லை.

## சுற்றாடல் பாதுகாப்பு

பொருத்தமான சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு கூட்டுத்தாபனம் அதன் சிறந்த முயற்சிகளை உபயோகித்தது.

## நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அனைத்து சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் நியதிச்சட்ட அதிகாரங்களுக்கு உரித்தான அனைத்து சட்டபூர்வமான கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் மற்றும் இருக்கும் நிதிசார் இயலாற்றல்களுடன் கொடுப்பனவு செய்யப்பட்டன என பணிப்பாளர்கள், தங்களது அறிவு மற்றும் நம்பிக்கை என்பவற்றுக்கு எட்டியவகையில் திருப்தி அடைகின்றனர்.

## நிதிசார் நிலைக் கூற்றுத் திகதிக்குப் பின்னதான நிகழ்வுகள்

இந்த அறிக்கையின் பக்கம் 145 இல் நிதிசார் கூற்றுகளின் குறிப்பு 29 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர்த்து, நிதிசார் கூற்றுகளுக்கு சீரமைவுகளைத் தேவைப்படுத்தும் விடய முக்கியத்துவம் கொண்ட எந்த நிகழ்வும் நிதிசார் நிலைக் கூற்றின் திகதிக்கு பின்னதாக நடைபெறவில்லை.

## தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு

கூட்டுத்தாபனத்தின் தோற்றப்பாட்டை மேம்படுத்துகின்றதும், செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் மற்றும் எதிர்காலத்திற்காக வலுப்படுத்தப்பட்ட வர்த்தகத் திறனை உறுதிப்படுத்தும் ஒரு நோக்குடன் பணிப்பாளர்கள் சபை கூட்டாண்மைத்

திட்டத்தை தயார் செய்தது. அதன்படி, நிதிசார் கூற்றுகள் ஒரு தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாட்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு மற்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

## கணக்காய்வாளர்களின் நியமனம்

கணக்காய்வாளர் நாயகமே கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளராவர். இலங்கை ஜனநாயக சோசலிசக் அரசியலமைப்பின் 154 உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி அவர் நியமிக்கப்பட்டுள்ளார். கணக்காய்வாளரின் கணக்காய்விற்கான ஊதியம் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 31 ஆவது பிரிவிற்கமைவாக தீர்மானிக்கப்படும்.

## கணக்காய்வாளர்களின் ஊதியம் மற்றும் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தங்களிலான நலன்கள்

கூட்டுத்தாபனத்தால் டிசம்பர் 31, 2018 முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுகளில் கணக்காய்வுக் கட்டணம் ரூ.2 மில்லியன் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் அறிந்தவரை, கூட்டுத்தாபனம் அல்லது அதன் துணை நிறுவனத்துடனான ஒப்பந்தங்களில் வேறு எந்த உறவை அல்லது நலனை கணக்காய்வாளர்கள் கொண்டிருப்பதற்கு முடியாது.

## அறிக்கையின் உள்ளடக்கங்களுக்கான ஏற்றுக்கொள்ளல்

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 32(3) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு, பணிப்பாளர்கள் சபை இந்த வருடாந்த அறிக்கையின் உள்ளடக்கங்களை இத்தால் ஏற்றுக்கொள்கின்றனர்.

இந்த வருடாந்த அறிக்கை பணிப்பாளர்கள் சபைக்காகவும் மற்றும் சார்பாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது.

திரு.ஜி.எஸ்.விதானகே
(தலைவர்)

திரு.என்.ஆர்.ஆர்.ஜயசேகர
(முகாமைத்துவப் பணிப்பாளர்)


0
1
2
3
4
5
6
7
8
x1000rpm
0
20
40
60
80
100
120
140
km/h
650 km
36076 km
ODO




# நிதிசார் கூற்றுகள்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. POE/A/CPC/1/18/01 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 26 June 2019

தலைவர்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், பிரிவு 12 இற்கமைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனத்தினதும் டிசம்பர் 31, 2018 அன்றானவாறு, முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

**1. நிதிசார் கூற்றுகள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ("கூட்டுத்தாபனம்") நிதிக் கூற்றுகள் மற்றும் டிசம்பர் 31, 2018 முடிவடைந்த வருடத்திற்கான கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனம் ("குழுமம்") என்பவற்றின் டிசம்பர் 31, 2018 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை கொண்டுள்ளதான ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் ஒரு பொழிப்பு உட்பட, நிதிசார் கூற்றுகள் மீதான குறிப்புகள் என்பவற்றின் கணக்காய்வு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 154 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு எனது அறிக்கை காலக் கிரமத்தில் பட்டியல் படுத்தப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர்த்து, கூட்டுத்தாபனம் மற்றும் குழுமத்தின் இணைத்துள்ள நிதிசார் கூற்றுகள், டிசம்பர் 31, 2018 அன்றானவாறு கூட்டுத்தாபனம் மற்றும் குழுமத்தின் நிதி நிலைமை, மற்றும் அவற்றின் நிதிசார் செயலாற்றுகை மற்றும் முடிவடைந்த வருடத்திற்கான அவற்றின் காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக ஓர் உண்மையானது மற்றும் நியாயமானது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயங்களுக்கான அடிப்படை

1.2.1 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு

மீளாய்விற்குட்பட்ட வருட முடிவில், கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் வரிக்குப் பிந்திய தேறிய நட்டமாக ரூ.105,050.6 மில்லியனையும் மற்றும் 2018 வருடத்திற்காக முற்றும் அடங்கிய மொத்தச் செலவாக ரூ.104,769.6 மில்லியனையும் மற்றும் தேறிய சொத்துகளில் ஓர் எதிர்மறையான ரூ.281,761.5 மில்லியனையும் ஏற்படுத்திய விடயத்திற்கு அவதானம் செலுத்தப்பட்டது. மீளாய்விற்குட்பட்ட வருட முடிவில், கூட்டுத்தாபனத்தின் ஒன்றிணைக்கப் பட்ட நட்டத்தில் நாணய மாற்று வீத வேறுபாட்டிலான எதிர்மறையான தாக்கம் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட கடன்கள் மீது உற்ற வட்டிச் செலவு என்பவை மேலும் அதிகரிப்பதற்கு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன. இது, கூட்டுத் தாபனத்தின் தேறிய சொத்து நிலைமையில் மேலும் எதிர்மறை நிலையைத் தக்க வைப்பதை ஏற்படுத்தியது. அதனால், அரசாங்கத்திடமிருந்தான நிதி உதவியின்றி ஒரு தொடர்ந்தியங்கும் கோட்பாட்டுடன் செயற்படுவதற்கான கூட்டுத்தாபனத்தின் இயலுமை ஐயத்திற்குரியதாகிறது.

1.2.2 இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் (LKAS) வேறுபடுதல்

(அ) LKAS 2 இன் பந்தி 10 இற்கமைவாக, கையிருப்புகளை தற்போதைய அமைவிடத்திற்கும் மற்றும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து பிற செலவுகளும் கையிருப்புக் கிரயமாகக் கருதப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் எரிபொருள் மற்றும் பெற்றோலிய உற்பத்தி தயாரித்தல் களுக்கான இறக்குமதியின் போது உற்ற ரூ.67,691.9 மில்லியன் கலால் தீர்வைத் தொகை கையிருப்புச் செலவாகக் கருதப்படமால் வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப் பட்டிருந்தது. அதன் பயனாக, மீளாய்விற்குபட்ட வருடத்தின் விற்பனைகளின் உண்மையான கிரயம், வருமானம் மற்றும் முடிவுக் கையிருப்புகளின் பெறுமதிகள் என்பன நிதிசார் கூற்றுகளில் காட்டப்படவில்லை.

(ஆ) LKAS 16 – ஆதனம், பொறி & உபகரணம்: முற்றிலுமாக தேய்மானம் அளிக்கப்பட்ட ரூ.4,821.48 மில்லியன் பெறுமதியான சொத்துகள், அவற்றின் பயனுள்ள பொருளாதார ஆயுட் காலத்திற்கு மீள்மதிப்பீடு செய்யப்படாதும் மற்றும் அதன்படி கணக்கீடு செய்யப்படாதும், கூட்டுத்தாபனத்தால் தொடர்ந்தும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஒரு மாதிரிக் கணக்காய்வுச் சோதனைப் பரிசீலிப்பில், மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 12 காணிகள் மீள்விலை மதிப்பீடு செய்யப்படவில்லை என்பது தெரியவந்தது. அதனால், அச்சொத்துகளின் நியாயப் பெறுமதியின் சரியானநிலை ஐயத்திற்குரியதாகும்.

(இ) LKAS 36 – பெறுமதியிழப்பு: 2018 வருடத்திற்காக கூட்டுத்தாபனத்தால் ஒரு பெறுமதியிழப்புச் சோதனை மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

### 1.2.3 துணை நிறுவனத்தின் நிதிசார் கூற்று மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

மீளாய்விற்குட்பட்ட வருடத்திற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்களின் (CPSTL) நிதிசார் கூற்றுகள், கூட்டுத்தாபனம் மற்றும் குழுமத்தின் தொடர்புபட்ட நிலுவைகள்/பரிவர்த்தனைகள் என்பவற்றுடன் ஓர் இணக்கமின்மையை ஏற்படுத்தும் என்பதனால் பின்வரும் விடயங்கள் காரணமாக என்னால் அவற்றுக்கு ஒப்புதல் மறுக்கப்பட்டது.

(அ) மீளாய்விற்குட்பட்ட வருடத்தின் கீழ், வியாபார வருமதிகளான ரூ.174.7 மில்லியன் தொடர்பில் 19 தரப்புகளுக்காக நீண்ட காலங்களுக்கு ஏற்பாடளிக்கப்பட்டிருந்த பெறுமதியிழப்பு, நிறுவனத்தால் திருப்பப்பட்டும் மற்றும் இலாபம் மற்றும் நட்டக் கணக்கில் சார்த்தப்பட்டது. எவ்வாறாயினும், அந்த திருப்புதலுக்கு முன்னதாக அவற்றின் மீள்பெறும் தன்மையை மதிப்பீடு செய்வதற்கு ஏதேனும் மதிப்பிடுதல் செய்யப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் இருக்கவில்லை. மேலும், வேறு ஏதேனும் இணைந்த சான்றுகள் மூலமாக இந்த வியாபார வருமதி நிலுவைகளின் உளதாம் தன்மை மற்றும் துல்லியத்தன்மை என்பன கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.

(ஆ) **கையிருப்பு**

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிசார் நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூ.657 மில்லியன் பெறுமதியான கையிருப்பு உருப்படிகளின் பெறுமதி மதிப்பீட்டின் துல்லியத் தன்மை மற்றும் பூரணமான தன்மை பின்வரும் காரணங்களினால் கணக்காய்வில் நம்பிக்கைக்கு உரியவையாக கருதப்படுவதற்கு முடியவில்லை.

(i) பாரிய அளவுகளில் 2500 இற்கும் மேற்பட்ட கையிருப்பு வகைகள் தொழில் முயற்சி மூலவளத்திட்டமிடல் (ERP) முறைமையில், அதாவது நிறுவனத்தின் SAP, அந்த கையிருப்பு உருப்படிகளின் பெறுமதிகளை முறைமையில் பதிவு செய்யாது உள்ளெடுத்துக் கொண்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) நிறுவனத்தின் நடைமுறைப்படி, ஒவ்வொரு வருட முடிவிலுமாக, மெதுவாக நகரும் கையிருப்புப் பொருட்களிற்கான ஓர் ஏற்பாடளித்தல் அவற்றின் பரிசோதனையிலிருந்து 3 இற்கும் மேற்பட்ட வருடங்களுக்கு அனைத்துக் கையிருப்புப் பொருட்களுக்கும் மேற் கொள்ளப்பட்டிருந்தது. நிறுவனத்தின் பதிவுகளின் படி, மீளாய்விற்குட்பட்ட வருட இறுதியன்றானவாறு ரூ.230.2 மில்லியன் பெறுமதியான 3 வருடங்களிற்கும் மேற்பட்ட மெதுவாக நகரும் கையிருப்புகள் காண்பிக்கப்பட்ட போதிலும் ரூ.15.6 மில்லியன் மாத்திரமே அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரூ.214.6 மில்லியனால் ஏற்பாடளித்தலின் குறைத்தலுக்கு முன்னதாக ஒரு முறையான தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை.

(இ) **நிறுவனங்களிற்கிடைப்பட்ட நிலுவை மிகுதிகள்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (இ.பெ.கூ) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) என்பவற்றுக்கிடையிலான நிலுவை மிகுதிகளின் துல்லியமான தன்மை, மதிப்பீடு மற்றும் உளதாம்தன்மை பின்வரும் காரணங்களுக்காக கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

(i) எக்ஸிம் (Exim) வங்கிக் கடன் தீர்த்தலைக் கருத்தில் கொண்டு லீற்றரொன்றுக்கு 13 சதவீத கட்டணத்தில் கடனின் வட்டிப் பகுதியை அவர்களது கணக்கிலிருந்து நீக்குவதற்காக, இ.பெ.கூ இடமிருந்தான ஒரு வருமதித் தொகையான ரூ.1,173 பதிவழிக்கப்பட்டிருந்தது. எனினும், நிறுவனத்தால் இது தொடர்பில் எந்தவொரு பெறுமதியிழப்பு ஏற்பாடளித்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலே (i) இல் காட்டிய தொகை உட்பட, ரூ.2,475.8 மில்லியன் வேறுபாடொன்று நிறுவனத்தின் நிதிசார் கூற்றுகளில் இ.பெ.கூ இடமிருந்து வருமதியாகக் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் மற்றும் அதனுடன் தொடர்புபட்டதான இ.பெ.கூ இன் மீளாய்விற்குட்பட்ட வருட முடிவிலான நிதிசார் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் இடையில் அவதானிக்கப்பட்டது.

(iii) LIOC இடமிருந்து பெற்றுக் கொண்ட மீதி உறுதிப்படுத்தலுக்கமைய, கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.351.5 மில்லியன், ஆனால் இ.பெ.கூ இன் நிதிசார் கூற்றின்படி சம்பந்தப்பட்ட தொகையானது ரூ.406.59 மில்லியனாக காண்பிக்கப் பட்டுள்ளது. அதனால், இவ்விரண்டு மிகுதித் தொகைகளுக்கும் இடையில் இணக்கம் காணப்படாத ரூ.55.1 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிறுவனத்தின் நிதிசார் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டவாறு சென்மதிகளாகவுள்ள வருமானவரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), பிடித்து வைக்கப்பட்ட வரி (WHT), உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் பொருளாதாரச் சேவைக் கட்டணம் (ESC) என்பவற்றின் மொத்தத் தொகைக்கும் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் (IRD) பேணப்பட்ட பதிவுகளில் மீளாய்வின் கீழான வருட முடிவில் காண்பிக்கப்பட்ட மிகுதிகளுக்குமிடையில் ரூ.199.8 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) மேலதிக கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) மற்றும் உள்ளீட்டு பெறுமதி சேர் வரி (VAT) தொகைகளான முறையே ரூ.6.8 மில்லியன் மற்றும் ரூ.8.06 மில்லியன் என்பன முறையே 2008 மற்றும் 2010 வருடங்களிலிருந்து மீளறவிட முடியாதவையாக உள்ளதினால் அவற்றின் மீளப் பெறுதல் ஐயத்திற்கு உரியதாகும். எனினும், மீளாய்விற்குட்பட்ட வருட இறுதியிலானவாறும் கூட இது தொடர்பில் ஏற்பாடளித்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) பிடித்து வைக்கப்பட்ட வரி (WHT) மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) வெளியிடல் என்பவற்றின் சென்மதித் தொகைகளான முறையே ரூ.19.1 மில்லியன் மற்றும் ரூ.13.9 மில்லியன் என்பவற்றின் நம்பகத்தன்மையும் ஐயத்திற்குரியது, ஏனெனில் இத்தொகைகள் தீர்த்து வைக்கப்படாது நீண்ட காலங்களாக வருடா வருடம் தொடர்ச்சியாக முன்கொணரற்பட்டு வருகின்றன.

(எ) அண்ணளவாக ரூ.5,195 மில்லியன் பெறுமதியளவான முற்றிலுமாக தேய்மானம் அளிக்கப்பட்ட சொத்துகள், அவற்றின் பயனுள்ள ஆயுட் காலத்திற்காக மீள்மதிப்பீடு செய்யப்படாதும் மற்றும் LKAS 16 இன் பிரிவு 51 இற்கமைவாகவும் கணக்கீடு செய்யப்படாதும் தொடர்ச்சியாக உபயோகிக்கப்பட்டும் வருகின்றன. மேலும், நிறுவனம் அது ஆரம்பித்ததிலிருந்து அதன் சொத்துகளை மீள் மதிப்பீடு செய்யாததுடன் இத்தேவைக்காக ஒரு முறையான மீள்மதிப்பீட்டுக் கொள்கை ஸ்தாபிக்கப்படவும் இல்லை. அதனால், நிதிசார் கூற்றில் காண்பிக்கப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துகள், அச்சொத்துகளின் நியாயப் பெறுமதியைப் பிரதிபலிக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஏ) 2017 இல் மீண்டெழும் செலவாக இனங் காணப்பட்ட தொகையான ரூ.32.6 மில்லியன் நடைமுறை மூலதனக் கணக்கிலிருந்து (WIP) செலவுக் கணக்கிற்கு (திருத்துதல் மற்றும் பராமரித்தல்) மாற்றப்பட்டு மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் திருப்பல் செய்யப்பட்டது. எனினும், அந்தத் திருப்பலுக்கு ஒரு முறையான அடிப்படை அவதானிக்கப்படவில்லை. அதன் விளைவாக, மீளாய்விற்குட்பட்ட வருடத்திலான தேறிய இலாபம் மற்றும் செலவுகள் என்பன அத்தொகைகளினால் முறையே உயர்த்தி குறிப்பிடப்பட்டும் மற்றும் குறைத்தும் குறிப்பிடப்பட்டன.

(ஒ) பல போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் கப்பல் கட்டணங்கள் நிறுவனத்தால் LKAS 01 இன் பிரிவுகள் 27 மற்றும் 28 இற்கு முரணாக காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஓ) 2018, செப்டெம்பர் 8 அன்று, முத்துராஜவெல SPBM இலும் மற்றும் 2018, ஒக்டோபர் 12 அன்று, கொலன்னாவை நிலையத்தில் அறிவிக்கப்பட்ட இரண்டு பெரும் எரிபொருள் கசிதல் காரணமாக ஏற்பட்ட ரூ 150 மில்லியனுக்கு மேற்பட்டதாக கணிப்பீடு செய்யப்பட்ட மொத்த இழப்பிற்கு நிறுவனத்தால் மீளாய்விற்குட்பட்ட வருட முடிவிலான நிதிசார் கூற்றுகளில் எந்தவொரு ஏற்பாடளித்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) இலங்கை இறைவரி மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகிய திணைக்களங்களிலிருந்தான வருமதியாக 2012 ஆம் ஆண்டிலிருந்து நிதிசார் கூற்றுகளில் தொடர்ச்சியாக ரூ.1,135.8 மில்லியன் மிகுதி முன்கொணரப்பட்டு வருகின்றது. மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் நிதிசார் கூற்றுகளில் இது தொடர்பாக எந்த ஏற்பாடளித்தல்களும் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்கள் படி, 2007 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகைகளுக்காக இடம்பெற்ற ஹெட்ஜிங் பரிவர்த்தனைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் முடிவில் மக்கள் வங்கிக்கு கூட்டுத் தாபனத்தால் ரூ.4,591.2 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளது. எனினும், இது கூட்டுத்தாபனத்தின் கணக்குகளிற்கு கொண்டு வரப்படவில்லை.

(இ) SAP முறைமைப் பதிவுகளின் பிரகாரம், 6.6 கி.லீ பெற்றோல் 90 ஒக்டேன் மற்றும் 7,718.7 கி.லீ LFP 1500 H என்பன மீளாய்வாண்டின் இறுதியில் காண்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அச் சரக்குக் கையிருப்பு கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பௌதிக சரக்கு கையிருப்பு சரிபார்த்தலில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால், அச்சரக்குக் கையிருப்பின் உளதாம் தன்மை ஐயத்திற்கானது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிசார் நிலைமைக் கூற்றில் பெறுமதி சேர் வரியின் ஏனைய வருமதி மிகுதிகளின் கீழ் மொத்தமாக ரூ.437.8 மில்லியன் காட்டப்பட்டுள்ளது இதில், ரூ.326.4 மில்லியன் தொகை 2011 இலிருந்து தொடர்கிறது. மேலும், வரிப் பட்டியல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துணை ஆவணங்கள் இது தொடர்பில் கிடைக்கும்படியாக இருக்கவில்லை. அதனால், இந்த மிகுதிகளின் மீள்பெறுகைச் சாத்தியம் ஐயத்திற்கு உரியதாகும்.

(உ) மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்காது அன்றேல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு வரிப் படிவத்திலும் முன்கொணரப் பட்ட மிகுதியாக காட்டப்படாது இருந்த போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்தான வருமதியாக 2010 இலிருந்து நிதிசார் கூற்றுகளில் ரூ.376 மில்லியன் தொகை தொடர்ச்சியாக முன்கொணரப்பட்டு வருகிறது. மேலும், ஏனைய வருமதிகளின் கீழ் காட்டப்பட்ட இந்த மிகுதி மாற்று வழிமுறைகள் மூலமாக மீளப்பெறப்படுவதற்கான சாத்தியம் குறித்தும் உறுதிப்படுத்துவதற்கு முடியாதுள்ளது.

### 1.2.5 இணக்கப்பாடற்ற வேறுபாடுகள்

(அ) 2018 வருடத்திற்கான நிதிசார் கூற்றின் படி, மீளாய்வின் கீழான வருட இறுதியில் இலங்கை மின்சார சபையிடமிருந்து வருமதியான தொகை ரூ.46,813.1 மில்லியன். ஆனால், இலங்கை மின்சார சபையின் பதிவுகளின் படி, இது ரூ.46,029 மில்லியனாகும். ஆகையால், இவ்விரண்டு பதிவுகளிற்கும் இடையில் ரூ.778.3 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இதில், இலங்கை மின்சார சபையிடமிருந்து வரவேண்டிய தொகையான ரூ.753.6 மில்லியன் 2013 ஆண்டிலிருந்து நிலுவையாக உள்ளது. இந்தத் தொகையை மீளப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுகளின் பிரகாரம், டிசம்பர் 31, 2018 அன்றானவாறு இலங்கை சுங்கத்திற்கு சென்மதியாக உள்ள தேறிய தொகை ரூ.8,318.5 மில்லியனாகும். எனினும், இலங்கை சுங்கத்தின் பதிவுகளின் படி, அது ரூ.5,597.4 கூட்டுத் தாபனத்திலிருந்தான வருமதியாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே ரூ.2,721.1 மில்லியன் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுகளின் படி, டிசம்பர் 31, 2018 அன்றானவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சென்மதியான உள்ள தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) மற்றும் வருமான வரி என்பன முறையே ரூ. 612.2 மில்லியன் மற்றும் ரூ. 6,948.2 மில்லியனாகும். எனினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பதிவுகள் அவற்றை முறையே ரூ.1,476.8 மில்லியன் மற்றும் ரூ. 4,974.6 மில்லியனாக உள்ளது. எனினும், முறையே ரூ.864.6 மில்லியன் மற்றும் ரூ.1,973.6 மில்லியன் வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை.

(ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பதிவுகளின் படி, மீளாய்வுக்கு கீழான வருட இறுதியன்றானவாறு சென்மதியாகவுள்ள பெறுமதி சேர் வரி (VAT) மிகுதி ரூ.29.5 மில்லியனாகும். ஆனாலும், நிதிசார் கூற்றுகளின் படி, அத்தொகை ரூ.437.8 மில்லியனாகும். எனவே, இவ்விரு மிகுதிகளுக்குமிடையே ரூ.408.3 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வின் கீழான வருட இறுதியன்றானவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதிவுகளில் கூட்டுத்தாபனத்திடமிருந்து புரள்வு வரித் தொகையாக ரூ.19.3 மில்லியன் மற்றும் பெறுமதி சேர் வரியாக (VAT) ரூ.1.555.6 மில்லியன் தொகையும் வருமதிகளாகக் காட்டப்பட்டுள்ளன. எனினும், மீளாய்வின் கீழான வருடத்தில், கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுகளில் அதனுடன் தொடர்புபட்டதாக எந்தவொரு மிகுதிகளும் காண்பிக்கப்படவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (SLAuSs) இணங்க மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழ், எனது பொறுப்புகள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் பகுதியின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகிறேன்.

### 1.3 முகாமைத்துவம் மற்றும் நிதிசார் கூற்றுகளுக்கான ஆளுகையுடன் பொறுப்பளிக்கப் பட்டவர்களின் பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டுத் நியமங்கள் அமைவான வகையில் ஓர் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கும் நிதிசார் கூற்றுகளின் தயார் செய்தலுக்கும் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக பொருண்மைப் பிறழ்கூற்றிலிருந்து விடுபட்ட நிதிசார் கூற்றுகளைத் தயார் செய்ய இயலுவதற்கு முகாமைத்துவம் அவசியம் எனத் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுக்கு முகாமைத்துவம் பொறுப்பானதாகும்.

நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது, தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாகத் தொடர்வதற்கு, CPSTL தொடர்பான விடயங்களைப் பொருத்தமானவாறு வெளிப்படுத்தியும் மற்றும் முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை கலைத்து விடுவதற்கோ அல்லது செயற்பாட்டை நிறுத்துவதற்கோ அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று ஏற்பாடு இல்லையென முகாமைத்துவம் நினைத்தாலன்றி கணக்கீட்டின் அடிப்படையாக தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை உபயோகிப்பதில் கூட்டுத்தாபனம் மற்றும் குழுமத்தின் ஆற்றலைக் கணிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பானதாகும்.

கூட்டுத்தாபனம் மற்றும் குழுமத்தின் நிதிசார் அறிக்கையிடுதல் செய்முறைகளை மேற்பார்ப்பது ஆளுகைக்கு பொறுப்பானவர்களாகப் பொறுப்பளிக்கப்பட்டவர்களது பொறுப்பாகும்.

2018 ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பகுதி 16 (1) இன்படி, கூட்டுத்தாபனம் வருடாந்த மற்றும் காலவொழுங்கிலான நிதிசார் கூற்றுகளை தயார் செய்வதற்கு இயலும் வகையில், கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானம், செலவீனம், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றின் முறையான ஏடுகள் மற்றும் பதிவுகளைப் பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து நிதிக்கூற்றுகள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர்நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுகளானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ கூட்டு மொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையா னவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் தீர்ப்புகளை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகிறேன். அத்துடன்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுகளிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுகளின் பொருண்மையான ஆபத்துகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்காதிற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப் பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனம் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுகளிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுகள் பிரதிநிதித்துவம் செய்கின்றவான என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கிறேன்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனம் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 இம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கூட்டுத்தாபனம் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கூட்டுத்தாபனம் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதைக் குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்படுபுடையதற்பாலதான எழுத்தினலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியொழுகாதுள்ளமையைக் குறிப்பிடுதல்.

| சட்டம்/பணிப்புரைக்கான குறிப்பிடுதல் | விபரணம் |
|---|---|
| (அ) ஜுன் 2, 2003 பொதுத் தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல.PED/12 - நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | |
| (i) வழிகாட்டல் 4.2.3 (ஆ) | துணை கம்பனியின் இலக்குகளை அடைவதை உறுதிப்படுத்தும் பொருட்டு துணை கம்பனியின் செயலாற்றுகையை சபை காலவொழுங்கு முறையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) வழிகாட்டல் 4.2.6 | காலாண்டுச் செயலாற்றுகை அறிக்கைகள் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் முயற்சிகள் திணைக்களத்திற்கு ஒவ்வொரு காலாண்டும் முடிவடையும் அன்றோ அல்லது அதனையடுத்து 30 நாட்கள் முடிவடை வதற்கு முன்னதாக அனுப்பி வைக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) வழிகாட்டல் 4.3 | சபைக் கூட்டத்தின் குறிப்புகள் வரிசை அமைச்சின் செயலாளருக்கு அவை உறுதிப்படுத்தப்பட்ட பின் 10 நாட்களிற்குள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) வழிகாட்டல் 5.2.4 மற்றும் 5.2.5 | (i) நிதியாண்டின் ஆரம்பத்திற்கு 3 மாதங்கள் முன்பதாக வரைபுப் பாதீடு பணிப்பாளர்கள் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) சபையால் அனுமதிக்கப்பட்ட மேம்படுத் தப்பட்ட இறுதிப் பாதீட்டின் பிரதிகள் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய் வாளர் நாயகத்திற்கு 2018 வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்கள் முன்னதாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| (v) வழிகாட்டல் 9.3 | பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி என்பவற்றின் ஒப்புதலோடு பொருத்தமான அமைச்சுகளினால் அங்கீகரிக் கப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வு களுக்காக கூட்டுத்தாபனம் ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கவில்லை. |
| (vi) வழிகாட்டல் 9.4 | கூட்டுத்தாபனம் 6 ஊழியர்களை அமைச் சரவையின் அனுமதியின்றி 2018 இல் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவித் துள்ளதுடன் அவர்களுள் 4 ஊழியர்களுக்கு கூட்டுத்தாபன நிதியை உபயோகித்து ஊதியம் வழங்கியுள்ளது. |
| (ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1997 ஆண்டின் ஒக்டோபர் 24 திகதி நிதிச் சுற்றறிக்கை இல.124 | ஒரு வெற்றிடமான பதவியொன்றின் கடமை களைக் கவனிக்கும் காலம் 3 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். எனினும், டிசம்பர் 31, 2018 திகதியன்றானவாறு முகாமையாளர் (விசாரணை), முகாமையாளர் சந்தைப்படுத்தல் (சில்லறை), பிராந்திய முகாமையாளர் (மத்திய) போன்ற 13 A தர பதவிகள் உட்பட 16 உத்தியோகத்தர்கள் வெற்றிடமான பதவிகளைக் கவனிப்பதற்காக ஒரு வருடத்திலிருந்து 10 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தனர். |
| (இ) பொது முயற்சிகள் திணைக் களத்தின் 2013 ஆண்டு நவெ ம்பர் 4 ஆம் திகதியிட்ட இல. FP/06/35/02/01 மற்றும் 2016 ஆண்டு ஏப்பிரல் 29 திகதியிட்ட இல. PED 03/2016 சுற்றறிக்கைகள் | மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் கூட்டுத் தாபனம் உழைக்கும் போது சேமியுங்கள் (PAYE) வரியை ஊழியர்களது தனிப்பட்ட ஊதியங்களிலிருந்து கழிக்காது ரூ. 259.9 மில்லியன் தொகையை தானே பொறுத்துக் கொண்டது. |
| (ஈ) அரசாங்கப் பெறுகை (2006) வழி காட்டல்களின் வழிகாட்டல் 4.2 | கூட்டுத்தாபனத்தால் ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கான பிரதான கொள்ளல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

- கீழ்க் குறிப்பிட்டவை தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எ) தேவைப்பாட்டின் படி, கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளைச் செயலாற்றவில்லை என்பதைக் குறிப்பிடுவதற்கு:

(அ) **மாதாந்த பாவனைக் கட்டணம் (MUF)**

2013 ஆண்டின் ஒக்டோபர் 29 திகதியிட்ட இல. 38/1140 சபைத் தீர்மானத்தின் பிரகாரம், 2014 ஜனவரி 1 இலிருந்து கூட்டுத்தாபனம் உரிமை கொண்டுள்ள வணிகர் செயற்படுத்தும் நிரப்பு நிலையங்கள் (CODO) மற்றும் திறைசேரி உரிமை கொண்டுள்ள வணிகர் செயற்படுத்தும் நிரப்பு நிலையங்கள் (TODO) அனைத்திலுமிருந்து ஒரு மாதாந்த பாவனைக் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை அனுமதித்தது. எவ்வாறாயினும், இந்தத் தீர்மானம் பல்வேறு காரணங்களுக்காக எதிர்பார்த்த வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் 2014 இலிருந்து கூட்டுத்தாபனம் வருடாந்தம் ரூ.300 மில்லியனுக்கும் அதிகமான தொகையை இழந்துள்ளது. அதன்படி, 2014 இலிருந்து 2018 வரை கூட்டுத்தாபனம் அண்ணளவாக ரூ.1,500 மில்லியன் திரட்டிய நட்டத்தைப் அடைந்துள்ளது. மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான வணிகர் களிடமிருந்தும் மாதாந்த பாவனைக் கட்டணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திரவ பெற்றோலிய வாயுவை விற்பனை செய்வது தொடர்பாக வாயுத் தொழில் துறையிலுள்ள நிறுவனத்திற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒக்டோபர் 20, 2006 இல் காலாவதியாகிவிட்டது. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் புதிய உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளாதும் அல்லது முன்னைய உடன்படிக்கையை மீள் புதுப்பிக்காதும் திரவ பெற்றோலியத்தை தொடர்ச்சியாக அந்த நிறுவனத்திற்கு விநியோகித்து வருகிறது. மேலும், கூட்டுத்தாபனம் திரவ பெற்றோலிய வாயுவை இன்னுமொரு தனியார் நிறுவனத்திற்கு ஓர் உடன் படிக்கையைச் செய்து கொள்ளாமல் விநியோகிக்கிறது.

(இ) **கணக்காய்வுக் குழு**

கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சபையினால் கிரமமான வகையில் மீளாய்வு செய்யப்படவில்லை. குழுவினால் வேண்டப்பட்ட தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முழுமையாகவும் மற்றும் தகுந்த நேரத்தில் வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- கீழ் குறிப்பிட்டது தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் தேவைப்பாட்டின் படி, கூட்டுத்தாபனத்தின் மூலவளங்கள் சிக்கனமான வகையில், வினைத்திறனான மற்றும் பயனுறுதியான வகையில், கால அட்டவணைகளுக்குள்ளான வகையிலும் மற்றும் பிரயோகமாகும் சட்டங்களுடன் இணங்கும் வகையிலுமாக பெறப்படவும் மற்றும் உபயோகிக்கப்படவில்லை என்பதைக் குறிப்பதற்கு

**(அ) பெறுகை மற்றும் ஒப்பந்தச் செய்முறை**

2012 ஆண்டு மார்ச் 22 இல் அமைச்சரவை அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மான இல.12/0295/510/003/TRB இன்படி, வாராந்த அடிப்படையில் உடன் கொள்வனவு ஆட்சேபிக்கப்பட்டதால், வரிசை அமைச்சு நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுடன் பெற்றோலிய உற்பத்திகளின் வழங்கல்களுக்கு கால அடிப்படையிலான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும். எனினும், 2018 இல் செய்து கொண்ட செல்லுபடியாகும் 78 ஒப்பந்தங்களில் (14 ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன) 52 (கப்பற் சரக்குகள்) மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு முரணான வகையில் உடன் கொள்வனவு என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) **கலால் தீர்வைக் கொடுப்பனவு**

கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், பெற்றோல் மற்றும் டீசலின் இறக்குமதிக்கான கலால் தீர்வை வார்நாமத்தில் (Bill of Lading) அல்லது Outturn அளவுகளில் குறிப்பிடப்பட்ட அளவில் எது கூடுதலாக உள்ளதோ அதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் படி, "இது நீண்ட காலத்திற்கு முன்பாக இலங்கை சுங்கத்தால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆரம்பிக்கப்பட்டது. குறைந்த பெறுமதி அடிப்படையில் கொடுப்பனவு செய்வது கூட்டுத்தாபனம் மீது தண்டப் பணம் விதிக்கப்படும் இடரேதுநிலையைக் கொண்டுள்ளது". எவ்வாறாயினும், இந்த நடைமுறையின் துல்லியத்தன்மை கேள்விக்குரியது.

(ஆ) **தீர்வைகள் மற்றும் வரிகளின் மீளப்பெறுதல்**

நிராகரிக்கப்பட்ட கப்பற் சரக்கின் சுமையிறக்கத்திற்கு முன்பாக சுங்கத் தீர்வைகள் மற்றும் வரிகளாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையான ரூ.1,617.2 மில்லியன் ரூ.648 மில்லியன் கலால் தீர்வையை உள்ளடக்கியுள்ளதுடன் 2017 ஜனவரியிலிருந்து கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட பின்னைய கட்டணங்களிலிருந்து அது மீளப் பெறப்படவில்லை அல்லது தீர்க்கப்படவில்லை.

(இ) **மூலதனச் செயல்திட்டங்கள்**

(i) மீளாய்விற்குட்பட்ட வருடத்தின் பாதீட்டில் இருந்து ஒரு தொகையான ரூ.504.1 மில்லியன் 20 மூலதனச் செயல்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் அவற்றின் மொத்த கணிப்பீட்டுச் செலவு ரூ.512.8 மில்லியனாகும். எனினும், இந்தச்

செயல்திட்டங்கள் மீளாய்வின் கீழான வருட இறுதி வரை நடைமுறைப்படுத்தப் படவில்லை.

(ii) 2017 மற்றும் 2018 இல் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 2 செயல்திட்டங்களின் மொத்தக் கணிப்பிடப்பட்ட செலவு ரூ.6,756.8 மில்லியனாகும். எனினும், 2018 வருட இறுதி வரை அவை ஆரம்பிக்கப்படவில்லை.

(iii) 2014 இலிருந்து 2018 காலப் பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட 4 மூலதனச் செயற் திட்டங்கள் அவற்றின் ஆரம்ப மதிப்பீட்டுக் கிரயத்தை 20.05 மில்லியனால் அல்லது 15 சதவீதத்திலிருந்து 85 சதவீதம் வரையால் விஞ்சியுள்ளது.

(ஈ) **கையிருப்பு மீளாய்வுக் குழு**

கையிருப்பு மீளாய்வுக் குழு கூட்டுத்தாபனத்திலிருந்தான உறுப்பினர்கள், CPSTL, JCT எண்ணெய் வங்கி மற்றும் LIOC, இலங்கை மின்சார சபை உறுப்பினர்கள், மற்றும் வரிசை அமைச்சிலிருந்து ஓர் அதிகாரி ஆகியோர்களை உள்ளடக்கி இருந்ததுடன் அதன் கூட்டங்கள் ஒவ்வொரு வாரமும் நடைபெற்றன. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் சரக்குகளின் கையிருப்பு மட்டங்கள் தொடர்பாக, ஒவ்வொரு பெற்றோலிய உற்பத்திக்கும் அதாவது மீள் கட்டளை மட்டம், உயர்ந்த மற்றும் குறைந்த பட்ச மட்டங்கள், மற்றும் மீள் கட்டளை அளவு போன்றவை தொடர்பில் முறையான பதிவுகளைப் பேணவில்லை. பெற்றோலிய உற்பத்திகளின் மீள் கட்டளை அளவு CPSTL இனால் சமர்ப்பிக்கப்பட்ட கையிருப்பு அளவு பராமரிப்பு அறிக்கை மீதான அடிப்படையில் மாத்திரமே தீர்மானிக்கப்பட்டதுடன் கையிருப்பு மீளாய்வுக் குழுவுக்கு பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புப் பராமரித்தல் தொடர்பான வேறேந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டதில்லை. எனினும், 2010 இல் SAP முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து சரக்கு கையிருப்புத் தேவைப்பாடு மீதான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ) **வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட கடன்கள்**

முந்திய வருட இறுதியிலான மிகுதிகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதியில் அமெரிக்க டொலர்களினால் குறிக்கப்பட்ட நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்கள் ரூ.1,311.6 மில்லியன் அல்லது 493 சதவீதம் மற்றும் ரூ.115,021.1 மில்லியன் அல்லது 64 சதவீதம் என்பவற்றால் முறையே அதிகரித்தது. இதன் விளைவாக, கடனின் மொத்த செலவு ரூ.94,770.6 மில்லியனாகியதுடன் அது வட்டிச் செலவாக ரூ.12,053.3 மில்லியனை உள்ளடக்கியதுடன் நாணய மாற்று வீத வேறுபாட்டில் மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் கூட்டுத்தாபனம் ரூ.82,717.3 மில்லியன் நட்டம் அடைந்தது. இதே வேளையில், மொத்த முதலீடு ரூ.83,180.3 மில்லியனால் அல்லது 176 சதவீதத்தால் அதிகரித்ததுடன் நிதிசார் கூற்றுகளின் படி, ரூ.7,732.9 மில்லியன் மாத்திரமே வட்டி வருமானமாக ஈட்டப்பட்டது. நிதிசார் கூற்றுகளில் தோன்றுமாற் போல, மீளாய்வாண்டின் இறுதியில், கூட்டுத்தாபனத்தால் கடன் பெற்ற நிதிகளை உபயோகித்து பல்வேறுபட்ட குறுகிய கால வைப்புகளில் ரூ.83,180.3 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. எனினும், அவர்களுக்கு இருந்த நிதியினை உபயோகித்து வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனம் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அவ்வாறு எடுத்திருப்பின், வட்டிச்

செலவுகள் மற்றும் நாணயமாற்று வீத வேறுபாட்டு மீதான வட்டிச் செலவு மற்றும் நட்டத்தைக் கணிசமாளவிற்கு குறைத்திருக்கலாம்.

கூட்டுத்தாபனம் ரூ.1,310.8 மில்லியன் (US$ 7,725 மில்லியன்) கடனை மக்கள் வங்கியிடமிருந்து செப்டெம்பரில் 2018 இல், அதனிடமிருந்த நிதி நிலைமையைக் கவனத்தில் கொள்ளாது பெற்றுக் கொண்டது. அதன் பயனாக, நாணய மாற்று வீத வேறுபாடு மீது ரூ.114.7 மில்லியன் இழப்பு கூட்டுத்தாபனத்தால் மீளாய்விற்குட்பட்ட வருடத்தின் போது பெறப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலுவையாக உள்ள மிகுதி ரூ.1,425.5 மில்லியனிற்கு அதிகரித்தது.

(ஊ) **சொத்துகள் முகாமைத்துவம்**

பின்வரும் சொத்துகள் அவை கையகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து வெறுமனே பயனற்று கிடக்கின்றன:

(i) **வனாத்தமுல்லவில் ஹல்கஹா கும்புற காணி** - லங்கா பெற்றோலிய வாயு செயல் திட்டம் மற்றும் ஒரு விளையாட்ட மைதானத் தேவைக்காக இந்தக் காணி ரூ.10.6 மில்லியனிற்கு பெறப்பட்டது. எனினும், இந்தக் காணி அதன் தேவையின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லையென்பதுடன் அது 700 இற்கு மேற்பட்ட அத்துமீறிக் குடியிருப்பவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

(ii) **மஹாஹேன காணி** – கிடைக்கப் பெறப்பட்ட ஆவணத் தொடர்புகளின் படி, கூட்டுத்தாபனம் ரூ.0.625 மில்லியன் செலவு செய்து இந்த காணியைக் கொள்வனவு செய்ததுடன் அது கணக்கில் கொள்ளப்படவில்லை. எனினும், இந்தக் காணி அது 1986 இல் கையகப்படுத்தப்பட்ட பின்னரும் அதன் முன்னைய உரிமையாளரால் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

(எ) **சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பாலை**

பாவனையிலுள்ள 47 வருடப் பழமையான சுத்திகரிப்பாலை (1969 இல் ஆரம்பிக்கப் பட்டது) ஓர் அடிப்படைச் சுத்திகரிப்பாலை என்பதுடன் நாட்டில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான அதிகரிக்கின்ற கேள்வியைத் திருப்தி செய்வதற்கு இயலாததாக உள்ளது. இச்சுத்திகரிப்பாலை, குறைந்த செலவில் பெற்றோலிய பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் கீழ் மட்ட உற்பத்திகளை தரமுயர்த்தி பெற்றோல் மற்றும் டீசல் போன்ற உயர் பெறுமதிப் பொருட்களாக்கி, அதன் மூலம் செயற்பாட்டு வினைத்திறனை உச்சப்படுத்துவதற்கான செயற்றிறன்கள் உட்பட, உயர்ந்த தொழில்நுட்பங்களுடன் செயற்படும் சுத்திகரிப்பாலைகளுடன் ஒப்பிடும் போது ஒரு குறைந்த செயற்றிறன் மிகையுடன் இயங்குகிறது. எனினும், ஒரு கிரயப் பயனுறுதியான விதத்தில் சந்தைக்கு அதன் உற்பத்திகளை வழங்குவதை உறுதி செய்யும் முகமாக, உத்தேசிக்கப்பட்ட சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு விரிவாக்க மற்றும் நவீனமயப்படுத்தும் (SOREM) செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தால் இயலாதுள்ளது.

முகாமைத்துவத்தால் குறிப்பிட்டவாறு, ஆரம்ப சாத்திய வள ஆய்வறிக்கை பூர்த்தி செய்யப்பட்டும் மற்றும் தேவையான காணி (35 ஏக்கர்கள்) இந்தத் தேவைக்காக கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட, இந்த செயல்திட்டத்திற்காக முதலீடு

செய்வதற்கு போதுமான நிதிப் பலமின்மை காரணமாக செயல்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இயலாதுள்ளது. செயல்திட்டத்திற்கான மொத்தச் செலவு 8 வருடங்களை விடக் குறைவான ஒரு மீள்செலுத்தல் காலத்துடன் US$ 2.1 பில்லியன் எனக் கணிக்கப்பட்டுள்ளதுடன் செயல்திட்டத்தின் தேறிய தற்போதைய பெறுமதி (NPV) US$ 1.535 மில்லியன் ஆகும். மேலும், இந்த தேவைக்காக ரூ.1,003 மில்லியனிற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட காணி இற்றை வரை பயனற்று வெறுமனேயுள்ளது.

(ஏ) **முயற்சிகள் வளத் திட்டமிடல் முறைமை (ERP)**

CPSTL இனால் அறிமுகம் செய்யப்பட்ட முயற்சி வளத் திட்டமிடல் (ERP) உடன் ஈடுபடுதல் தொடர்பாக தங்களது தனிப்பட்ட பொறுப்புகள் தொடர்பாக கூட்டுத்தாபனம் மற்றும் CPSTL மற்றும் LIOC என்பவற்றுக்கிடையில் ஏதேனும் உடன்படிக்கை அல்லது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் அங்கிருக்கவில்லை. மேலும், இந்த முறைமை, விசேடமாக எரிபொருள் கையிருப்பு மீளாய்வு நோக்கங்களுக்காக போதுமான வகையில் உபயோகிக்கப்படவில்லை.

(ஒ) **பொதுப் பயனர் வசதி**

கூட்டுத்தாபனம், LIOC மற்றும் CPSTL இடையில் மேற்குறித்த வசதிக்கான பங்குதாரர் உடன்படிக்கை மற்றும் பங்கு விற்பனைக் கொள்வனவு உடன்படிக்கை என்பன டிசம்பர் 31, 2008 இல் காலாவதியாகி விட்டன.

(ஓ) **சொத்துகளின் மீள்மதிப்பீடு**

மார்ச் 16, 2012 திகதியிட்ட சபைத் தீர்மான இல. 04/1114 இற்கமைய, காணிகள் மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக விலைமதிப்புத் திணைக்களத்தை (DOV) வைத்திருப்பதற்கும் அந்தப் பணிகளை 3 மாதங்களிற்குள் முடிப்பதற்கும் ஒரு அனுமதி அளிக்கப்பட்டது. பின், மேலும் ஓர் அனுமதி மே 12, 2012 இல் இந்தப் பணிக்காக ரூ5.5 மில்லியன் முற்கொடுப்பனவுடன் அளிக்கப்பட்டது. எனினும், இந்த அறிக்கைத் திகதி வரையும் கூட காணிகள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் மீள்மதிப்பீடு பூர்த்தி செய்யப்படவில்லை.

(ஔ) **எரிபொருள் வழங்கலுக்கான உடன்பாடுகள்**

மீளாய்விற்குட்பட்ட வருட இறுதியன்றானவாறு கூட இ.மி.ச, ஸ்ரீ லங்கன் எயர் லைன், முப்படைகள், இலங்கை புகையிரதத் திணைக்களம் போன்றவை உட்பட, 14 முக்கிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் வழங்கலுக்கான உத்தியோகபூர்வ உடன்படிக்கைகள் செய்யப்படவில்லை.

(க) **எண்ணெய் போக்குவரத்துக்கான குழாய்த் தொகுதி வலையமைப்பு**

(i) கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை பெற்றோலிய நிலையத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் உலை எண்ணெய் போன்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்களைக் கொண்டு

செல்வதற்காக பல தசாப்தங்களுக்கு முன்னதாக இடப்பட்டு பொருத்தப்பட்ட குழாய்த் தொகுதிகள் ஒரு பழுதுபார்ப்பதற்கான நிலையில் இருப்பதாகவும் அவற்றுள் சில மிகவும் பழுதடைந்த நிலையிலும் மற்றும் திருத்தியமைப் பதற்கும் முடியாத நிலையில் உள்ளதினால் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய முனையங்களுக்கு பெற்றோலிய உற்பத்திகளின் தேசியத் தேவைப்பாட்டின் ஒரு பாரிய அளவு இந்தக் குழாய்த் தொகுதிகள் ஊடாகவே கொண்டு செல்லப்படுவதினால் இவற்றின் பழுதுபார்த்தல் மற்றும் மாற்றீடு செய்தலுக்காக ஓர் அவசர தேவையுள்ளது. சீர்கெட்டுள்ள இந்தக் குழாய்த் தொகுதிகள் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய முடிவுப் பொருட்களின் கொண்டு செல்லுதல் காரணமாக கடுமையான எரிபொருள் நெருக்கடிக்கான ஒரு சாத்தியம் அங்கேயுள்ளது.

(ii) முத்துராஜவெல நிலையம் கரையிலிருந்து சுமார் 6 கி.மீ தொலைவிலும் மற்றும் முத்துராஜவெலவிலிருந்து 7.2 கி.மீ தொலைவிலுமாக கடலின் நடுவே அமைந்துள்ள ஒற்றைப் புள்ளி மிதவை நங்கூரமிடல் (SPBM) முறையிலான வசதியொன்றினூடாக எரிபொருளைப் பெற்றுக் கொள்கிறது. கடற் கொந்தளிப்பான நிலைமைகளில் அல்லது SPBM பராமரிப்புகளின் கீழ் உள்ள போது மாற்று முறையிலான வழங்கலுக்கான வளம் அங்கிருக்கவில்லை. அதே வேளை, முத்துராஜவெல முனையம் மற்றும் கொலன்னாவை நிலையம் என்பவற்றுக்கிடையில் முனையங்களுக்கிடையிலான உற்பத்தி பொருள் மாற்றங்களுக்கு இணைப்புகள் இல்லை என்பதுடன் அந்த முனையங்களின் உச்ச பயன்பாடும் இந்த மட்டுப்பாடுகள் காரணமாக தடைப்படுகிறது.

(iii) செப்டெம்பர் 13, 2012 அன்று அமைச்சரவை அமைச்சர்களால் நாடு முழுவதற்குமான குழாய்த் தொகுதி செயல்திட்டத்தின் (Cross Country Pipleline Project) நடைமுறைப்படுத்தலுக்காக அனுமதி அளிக்கப்பட்ட போதிலும், இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதி வரை கூட, அது அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ங) கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் கையேட்டின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் கூட்டுத்தாபனத்தால் மீளாய்விற்குட்பட்ட வருடத்தில் வணிகத் தரகு முறைகள் அளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ச) **திருகோணமலை எண்ணெய் குதம்**

இவ்வெண்ணெயக் குதம், ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர்கள் (10,000 மெட்ரிக் தொன்) கொள்திறன் கொண்ட 100 எண்ணெய்த் தாங்கிகளுடன் ஏனைய இணைந்த வசதிகளையும் கொண்டு, 1930 இல் நிர்மாணிக்கப்பட்டது. எண்ணெய் குதம் அமைந்துள்ள 358.553 ஹெக்டேர்கள் விஸ்தீரணம் கொண்ட காணி இலங்கை அரசாங்கத்தால் அப்போதைய பிரித்தானிய அரசாங்கத்தின் உயர் அரச அதிகாரிக்கு, 999 வருட கால குத்தகைக்கு இலங்கைக்கு சுதந்திரம் அளிக்கப்படுவதற்கு முன்னதாக வழங்கப்பட்டது. 1961 இல், இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, கூட்டுத்தாபனம் 250,000 ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை மூன்று தவணைகளில் செலுத்தி காணி, எண்ணெய்க் குதம், கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை ஏப்பிரல் 1, 1964 இலிருந்து

உரிமையாக்கியது. இருந்தபோதிலும், மேற்குறித்த காணிக்காக, அரசாங்கத்திட மிருந்து இற்றைய திகதி வரை சட்டபூர்வமான ஆவணங்கள் எதுவும் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

2003 இல், இலங்கை அரசாங்கம் LIOC உடனும் மற்றும் கூட்டுத்தாபனத்துடனும் 35 வருடங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் காணியை குத்தகைக்கு விடுவதற்கு ஓர் உடன்படிக்கைக்கையை ஏற்படுத்தவும் மற்றும் இணங்கிக் கொண்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் உடன்படிக்கை நிறைவேற்றப்படுவதற்குமாக இணங்கின. கூட்டுத்தாபனம் இது வரை எந்தவொரு குத்தகை ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை அல்லது தாங்கிகளை உபயோகிக்கவும் இல்லை. எனினும், LIOC அந்த சொத்துகளை 2003 இலிருந்து உபயோகித்து வருகின்றது.

(ஞ) **தண்டக் கொடுப்பனவு**

பொதுத் திறைசேரியிலிருந்து தொகையை மீளப் பெறுதல் என்ற அடிப்படையில் கப்பற் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் 2002 இலிருந்து நிலுவையாக இருந்த தொகையை தீர்ப்பதற்காக சுங்கத் திணைக்களத்திற்கு ரூ.57.7 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டது. எனினும், இற்றை வரை கூட பொதுத் திறைசேரியிலிருந்து அத்தொகையை மீளப் பெறுவதற்காக கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ட) **ஹெட்ஜிங் பரிவர்த்தனைகள்**

2007 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியின் போது எண்ணெய் பெறுகை தொடர்பாக இடம்பெற்ற ஹெட்ஜிங் பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் படி, டிசம்பர் 31, 2017 அன்றானவாறு அந்தப் பரிவர்த்தனைகள் மீது நாட்டுக்கான மொத்த இழப்பு ரூ.14,028 மில்லியனாகும். மேலும், வர்த்தக வங்கி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக US$ 8,648,300 ஐக் கோரி வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

WPC விக்கிரமரட்ன
கணக்காய்வாளர் நாயகம்

# முழுமையான வருமானக் கூற்று

| டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | இ.பெ.கூ 2018 | இ.பெ.கூ 2017 மீள்குறிப்பிடப்பட்டது | குழுமம் 2018 | குழுமம் 2017 மீள்குறிப்பிடப்பட்டது |
|---|---|---|---|---|---|
| | | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| வருமானம் | 2 | 520,967.224 | 445,950.386 | 522,238.384 | 446,625.013 |
| விற்பனைச் செலவு | | (523,982.111) | (418,961.837) | (531,324.830) | (425,879.817) |
| **மொத்த (நட்டம்)/இலாபம்** | | **(3,014.887)** | **26,988.549** | **(9,086.446)** | **20,745.196** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 3 | 812.825 | 670.446 | 1,076.449 | 878.366 |
| விற்பனை & விநியோக செலவுகள் | | (14,911.630) | (15,498.189) | (3,612.614) | (2,479.327) |
| நிர்வாகச் செலவுகள் | | (6,021.760) | (4,959.844) | (10,541.905) | (8,977.986) |
| **செயற்பாட்டு (நட்டம்)/இலாபம்** | **4** | **(23,135.452)** | **7,200.962** | **(22,164.516)** | **10,166.249** |
| நாணயமாற்று வீத வேறுபாடு | | (82,717.291) | (4,922.004) | (82,717.291) | (4,922.003) |
| நிதி வருமானம் | 5 | 12,889.174 | 11,067.082 | 13,007.051 | 11,256.523 |
| நிதிச் செலவுகள் | 6 | (12,065.056) | (10,530.811) | (12,065.056) | (10,654.884) |
| **வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)** | | **(105,028.625)** | **2,815.229** | **(103,939.812)** | **5,845.885** |
| வருமான வரிச் செலவு | 7 | (22.010) | (1,759.595) | (1,346.922) | (2,260.333) |
| **வருடத்திற்கான இலாபம்/ (நட்டம்)** | | **(105,050.635)** | **1,055.634** | **(105,286.734)** | **3,585.552** |
| **ஏனைய முழு வருமானம்** | | | | | |
| **இலாபம் அல்லது நட்டத்திற்கு மீளவும் வகைப்படுத்தப்படா உருப்படிகள்** | | | | | |
| இளைப்பாறல் நன்மைத் திட்டம் மீதான மீள்-அளவிடுதல் ஆதாயம்/ (இழப்பு) | 18 | 137.696 | (887.512) | 212.776 | (982.459) |
| ஆதனம், பொறி & உபகரணத்தின் மீள்மதிப்பிடுதல் | | 159.841 | 10,210.907 | 159.841 | 10,210.907 |
| ஏனைய முழு வருமானம் மீதான வரி | | - | - | (18.336) | 12.761 |
| **இலாபம் அல்லது நட்டத்தின் பின்னதாக மீள்வகைப்படுத்திய அல்லது படுத்தப்படக்கூடியதான விடயங்கள்:** | | | | | |
| OCI மூலமாக நியாயப் பெறுமதியில் நிதிசார் சாதனம் மீதான நிகர நட்டம் | 10.1 | (16.500) | (0.500) | (16.500) | (0.500) |
| **வருடத்திற்கான ஏனைய முழு வருமானம் / (செலவு)** | | **281.037** | **9,322.895** | **337.783** | **9,240.709** |
| **வருடத்திற்கான வரி நிகர, மொத்த முழு வருமானம் / (செலவு)** | | **(104,769.598)** | **10,378.529** | **(104,948.951)** | **12,826.261** |
| **மொத்த முழு வருமானமும் உரியதானது:** | | | | | |
| நிறுவனத்தின் உரிமையாளர்கள் | | (104,769.598) | 10,378.529 | (105,033.639) | 11,920.465 |
| கட்டுப்படுத்தா நலன்கள் | | - | - | 84.688 | 905.796 |
| | | **(104,769.598)** | **10,378.529** | **(104,948.951)** | **12,826.261** |

இங்கு காட்டிய சில தொகைகள் 2017 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன

பக்கங்கள் 116 இலிருந்து 147 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

# நிதிசார் நிலைமையின் கூற்று

| டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கானது | | - இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 மீள்குறிப்பிடப்பட்டது | 2018 | 2017 மீள்குறிப்பிடப்பட்டது |
| | குறிப்பு | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| **சொத்துகள்** | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துகள்** | | | | | |
| ஆதனம், பொறி & உபகரணம் | 8 | 23,406.070 | 23,608.585 | 39,452.925 | 40,363.333 |
| முதலீட்டுச் சொத்து | 8.3 | 38.681 | 40.128 | 38.681 | 40.128 |
| அருவச் சொத்துகள் | 8.4 | - | - | 127.342 | 0.278 |
| துணை நிறுவனத்திலான முதலீடு | 9 | 5,000.000 | 5,000.000 | - | - |
| நடைமுறையற்ற நிதிச் சொத்துகள் | 10 | 25,419.541 | 29,874.032 | 25,419.541 | 29,874.032 |
| வர்த்தக & ஏனைய வருமதிகள் | 11 | 12,970.642 | 8,963.640 | 14,109.473 | 9,407.897 |
| | | 66,834.934 | 67,486.385 | 79,147.962 | 79,685.668 |
| நடைமுறைச் சொத்துகள் | | | | | |
| கையிருப்புகள் | 13 | 56,934.359 | 44,152.978 | 57,591.197 | 44,559.109 |
| வர்த்தக & ஏனைய சென்மதிகள் | 11 | 94,907.195 | 86,990.589 | 100,401.890 | 90,589.895 |
| குறுகிய கால முதலீடுகள் | 14 | 99,314.811 | 10,685.474 | 99,314.811 | 10,685.474 |
| காசும் காசுச் சமானங்களும் | 15 | 11,279.951 | 9,385.759 | 14,428.596 | 10,859.879 |
| | | 262,436.316 | 151,214.800 | 271,736.494 | 156,694.357 |
| **மொத்த சொத்துகள்** | | **329,271.250** | **218,701.185** | **350,884.456** | **236,380.025** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்** | | | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | | | |
| பங்களிப்பு மூலதனம் | 16 | 28,487.125 | 28,487.125 | 28,487.125 | 28,487.125 |
| மூலதன ஒதுக்கம் | 17.1 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 | 4,992.686 |
| நியாயப் பெறுமதி நிதிச் சாதனம் | 10.1 | (38.000) | (21.500) | (38.000) | (21.500) |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 17.2 | 10,370.748 | 10,210.907 | 10,370.748 | 10,210.907 |
| வைத்திருப்பு ஈட்டல்கள் | | (325,574.048) | (220,661.110) | (314,063.990) | (208,887.009) |
| கட்டுப்பாடற்ற வட்டி | | - | - | 8,255.421 | 8,387.732 |
| மொத்த உரிமையாண்மை | | (281,761.489) | (176,991.892) | (261,996.010) | (156,830.059) |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | | | |
| இளைப்பாற்று நன்மைக் கடப்பாடு | 18 | 1,680.958 | 1,708.014 | 3,132.929 | 3,182.005 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | 23 | - | - | 1,997.626 | 1,017.152 |
| கடன்களும் கடன்பெறல்களும் | 19 | 1,539.455 | 189.898 | 1,539.455 | 189.898 |
| | | 3,220.413 | 1,897.912 | 6,670.010 | 4,389.055 |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் | 20 | 313,111.745 | 214,077.733 | 311,509.875 | 209,103.597 |
| கடன்களும் & கடன்பெறல்களின் நடைமுறைப்பாகம் | 19.1 | 37.980 | 75.959 | 37.980 | 75.959 |
| குறுகிய காலக் கடன்பெறல்கள் | 21 | 294,662.601 | 179,641.473 | 294,662.601 | 179,641.473 |
| | | 607,812.326 | 393,795.165 | 606,210.456 | 388,821.029 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்** | | **329,271.250** | **218,701.185** | **350,884.456** | **236,380.025** |

இங்கு காட்டிய சில தொகைகள் 2017 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன. பக்கங்கள் 116 இலிருந்து 147 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன. இந்த நிதிசார் கூற்றுகள், டிசம்பர் 31, 2018 அன்றானவாறும் மற்றும் முடிவடைந்த வருடத்திற்கான நட்ட நிலை தொடர்பாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் விவகாரங்களின் ஓர் உண்மையான மற்றும் நீதியான பார்வையைத் தருகின்றது.

வி.என். வீரசூரிய
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

இந்த நிதிசார் கூற்றுகளின் தயார் செய்தல் மற்றும் சமர்ப்பணத்திற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பானது. சபையின் சார்பில் அனுமதித்து மற்றும் கைச்சாத்திடப்பட்டது.

| ஜி.எஸ்.விதானகே | என்.ஆர்.ஆர்.ஜயசேகர | கே.ஏ.விமலேந்திரராஜா |
|---|---|---|
| தலைவர் | முகாமைத்துவப் பணிப்பாளர் | பணிப்பாளர் |

ஜுன் 8, 2019. கொழும்பு

# உரியாண்மையிலுள்ள மாற்றங்களின் கூற்று

| இ.பெ.கூ | பங்களிப்பு மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | மூலதன ஒதுக்கம் | நிதிச் சாதன நியாயப் பெறுமதி | வைத்திருப்பு ஈட்டல்கள் | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| **ஜனவரி 1, 2017 அன்றானவாறு** | **28,487.125** | **-** | **4,992.686** | **(21.000)** | **(219,305.658)** | **(185,846.847)** |
| காலத்திற்கு முன்னதான சீராக்கல்கள் | - | - | - | - | (1,523.574) | (1,523.574) |
| **ஜனவரி 1, 2017 அன்றான மீள் குறிப்பிட்ட மிகுதி** | **28,487.125** | **-** | **4,992.686** | **(21.000)** | **(220,829.232)** | **(187,370.421)** |
| வருடத்திற்கான இலாபம் | - | - | - | | 1,055.634 | 1,055.634 |
| ஏனைய முழு வருமானம் | | | | (0.500) | (887.512) | (888.012) |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 10,210.907 | | | | 10,210.907 |
| **டிசம்பர் 31, 2017 அன்றானவாறு** | **28,487.125** | **10,210.907** | **4,992.686** | **(21.500)** | **(220,661.110)** | **(176,991.892)** |
| | | | | | | |
| வருடத்திற்கான இலாபம்;(நட்டம்) | | | | | (105,050.635) | (105,050.635) |
| ஏனைய முழு வருமானம் | | | | (16.500) | 137.696 | 121.196டி |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 159.841 | | | | 159.841 |
| **டிசம்பர் 31, 2018 அன்றானவாறு** | **28,487.125** | **10,370.748** | **4,992.686** | **(38.000)** | **(325,574.048)** | **(281,761.489)** |

| **குழுமம்** | பங்களிப்பு மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | மூலதன ஒதுக்கங்கள் | நிதிச் சாதன நியாயப் பெறுமதி | வைத்திருப்பு ஈட்டல்கள் | பங்குதாரர்கள் நிதி | கட்டுப்படுத்தா வட்டி | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| **ஜனவரி 1, 2017 அன்றானவாறு** | 28,487.125 | - | 4,992.686 | (21.000) | (209,073.494) | (175,614.683) | 7,616.937 | (167,997.746) |
| காலத்திற்கு முன்னதான சீராக்கல்கள் | | | | | (1,523.574) | (1,523.574) | | (1,523.574) |
| **ஜனவரி 1, 2017 அன்றான மீள் குறிப்பிட்ட மிகுதி** | 28,487.125 | - | 4,992.686 | (21.000) | (210,597.068) | (177,138.257) | 7,616.937 | (169,521.320) |
| வருடத்திற்கான இலாபம் | | | | | 2,652.361 | 2,652.361 | 933.191 | 3,585.552 |
| ஏனைய முழு வருமானம் | | | | (0.500) | (942.302) | (942.802) | (27.395) | (970.198) |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 10,210.907 | | | | 10,210.907 | | 10,210.907 |
| செலுத்திய பங்கிலாபபம் | | | | | | | (135.000) | (135.000) |
| **டிசம்பர் 31, 2017 அன்றானவாறு** | 28,487.125 | 10,210.907 | 4,992.686 | (21.500) | (208,887.009) | (165,217.790) | 8,387.732 | (156,830.059) |
| | | | | | | | | |
| வருடத்திற்கான இலாபம் / (நட்டம்) | | | | | (105,352.507) | (105,352.507) | 65.773 | (105,286.734) |
| ஏனைய முழு வருமானம் | | | | (16.500) | 175.526 | 159.026 | 18.915 | 177.941 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 159.841 | | | | 159.841 | | 159.841 |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம் | | | | - | | - | (217.000) | (217.000) |
| | | | | | | | | |
| **டிசம்பர் 31, 2018 அன்றானவாறு** | 28,487.125 | 10,370.748 | 4,992.686 | (38.000) | (314,063.990) | (270,251.431) | 8,255.421 | (261,996.010) |

இங்கு காட்டிய சில தொகைகள் 2017 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்க வில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன. பக்கங்கள் 116 இலிருந்து 147 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

# காசுப் பாய்ச்சல்கள் கூற்று

| | | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | 2018 | 2017 மீள்குறிப்பிடப்பட்டது | 2018 | 2017 மீள்குறிப்பிடப்பட்டது |
| | | ரூ.மில் | ரூ.மில் | ரூ.மில் | ரூ.மில் |
| **செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | 24 | **(18,548.432)** | **(7,320.527)** | **(15,255.275)** | **(5,420.040)** |
| செலுத்திய வட்டி | 6 | (11,214.798) | (10,087.044) | (11,214.798) | (10,211.117) |
| செலுத்திய இளைப்பாறல் பணிக்கொடுப்பனவு | 18 | (152.227) | (127.985) | (325.892) | (225.201) |
| செலுத்திய வருமான வரி/பொ.சே.க (ESC) | | (6,613.479) | (3,157.005) | (7,220.087) | (3,289.121) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கிய நிகர காசு/(உபயோகித்தவை)** | | **(36,528.937)** | **(20,692.561)** | **(34,016.053)** | **(19,145.480)** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | | | | | |
| ஆதனம், பொறி & உபகரணத்தின் விற்பனை மூலமான வருமானம் | | 0.046 | 11.791 | 26.640 | 15.427 |
| ஆதனம், பொறி & உபகரணக் கொள்வனவு | 8 | (594.680) | (818.529) | (969.910) | (1,651.819) |
| பங்கிலாப வருமானம் | | 390.663 | 243.105 | 0.063 | 0.105 |
| பெறப்பட்ட வட்டி | 5 | 6,805.872 | 6,656.295 | 6,923.750 | 6,845.736 |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | | 5,663.025 | 1,115.053 | 5,663.025 | 1,115.053 |
| நிலையான வைப்புகளிலான முதலீடு | | (89,854.370) | 21,981.159 | (89,854.370) | 21,981.159 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்/ (உபயோகித்தவை)** | | **(77,589.443)** | **29,188.874** | **(78,210.802)** | **28,305.661** |
| **நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | | | |
| செலுத்திய பங்கிலாபங்கள் | | - | - | (217.000) | (135.000) |
| பெற்ற புதிய கடன்கள் | | 419,535.325 | 318,165.820 | 419,535.325 | 318,165.820 |
| கடன்களின் மீள்செலுத்துதல் | | (303,202.620) | (332,245.960) | (303,202.620) | (333,644.811) |
| **நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்ச்ல்கள்/ (உபயோகித்தவை)** | | **116,332.705** | **(14,080.140)** | **116,115.705** | **(15,613.991)** |
| காசு & காசுச் சமானங்களிலான நிகர நிகர அதிகரிப்பு;(குறைதல்) | | 2,214.325 | (5,583.827) | 3,888.851 | (6,453.810) |
| வருட ஆரம்பத்திலான காசும் & காசுச் சமானங்களும் | | 6,438.298 | 12,022.125 | 7,912.418 | 14,366.228 |
| **வருட இறுதியிலான காசும் & காசுச் சமானங்களும்** | 15 | **8,652.623** | **6,438.298** | **11,801.268** | **7,912.418** |

இங்கு காட்டிய சில தொகைகள் 2017 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன. பக்கங்கள் 116 இலிருந்து 147 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

# நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1.1 கூட்டாண்மைத் தகவல்கள்

### பொதுவானது

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) 1961 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானச் சட்டத்தின் கீழ் ஒரு அரச கூட்டுத்தாபனமாக கூட்டிணைக்கப்பட்டும் மற்றும் இலங்கையிலும் அமைந்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 609, கலாநிதி. டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### பிரதானமான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

| நிறுவனம் | பிரதானமான நடவடிக்கை |
|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், மற்றும் விற்பனை செய்தல் |
| துணை நிறுவனம் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் | பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோகம் |

### மூல நிறுவனம் மற்றும் இறுதிக் கட்டுப்படுத்தும் தரப்பு

கூட்டுத்தாபனம் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின்படி, கூட்டுத்தாபனத்தின் இறுதி மூலமான பொறுப்பேற்கும் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்பு, இலங்கை அரசாங்கமாகும்.

### வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் டிசம்பர் 31, 2018 முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுகளை பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்திற்கமைய வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி ஜுன் 8, 2019 ஆகும்.

### இணக்கப்பாட்டு அறிக்கை

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் நிதிசார் கூற்றுகள், முழுமையான வருமானக் கூற்று, நிதிசார் நிலைமையின் கூற்று, உரிமையாண்மை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRSs/LKASs) மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் அதற்கான பிந்திய திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக தயார் செய்யப்பட்டன.

## 1.2 தயார் செய்தலின் அடிப்படை

கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுகள் மற்றும் குழுவின் ஒன்றிணைத்த நிதிசார் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட SLFRS மற்றும் LKAS ஐ (இதன் பின்னகத்து "SLFRS" எனக் குறிப்பிடப்படும்) உள்ளடக்கி இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுக்கு அமைவாக தயார் செய்யப்பட்டன.

முதலீட்டு ஆதனங்கள், சில அலுவலக சொத்துகள் (ஆதனம், பொறி மற்றும் உபகரணம் எனவாக வகைப்படுத்தப்பட்டவை), நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டதும் மற்றும் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்ட வரையறுத்த பயன் கடப்பாடு நிதிசார் சொத்துகள் தவிர, நிதிசார் கூற்றுகள் அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்றுக் கிரய அடிப்படையிலுமாகத் தயார் செய்யப்பட்டன.

### கூற்றுகளின் சமர்ப்பணம் & செயல்முறை நாணயம்

நிதிசார் கூற்றுக்கள், செயல்முறை நாணயமான, இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதுடன் அனைத்துப் பெறுமதிகளும், வேறுவகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, கிட்டிய மில்லியன் பெறுமதிக்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

### பொருள்வகை மற்றும் ஒன்றுதிரட்டல்

ஒத்த தன்மையான ஒவ்வொரு பொருள்வகையின் உருப்படிகள் நிதிசார் கூற்றுகளில் தனியாக ஒன்றுபடுத்தப் பட்டுத் தரப்பட்டுள்ளன. அதே போன்று ஒவ்வாத் தன்மை அல்லது செயற்பாடு கொண்ட உருப்படிகள் அவை முக்கியமற்றவையாக இல்லாதிருந்தாலன்றி தனியான வகையில் கூட்டாகத் தரப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைத்தலின் அடிப்படை

டிசம்பர் 31, 2018 அன்றானதும் மற்றும் அவ்வருட இறுதிக்கானதுமான ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுகள் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனம் (ஒன்றாக 'குழுமம்' எனக் குறிப்பிடப்படும்) என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

துணைநிறுவனங்கள் என்பவை குழுமத்தால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களாகும். குழுமம் வெளிப்படுத்தப்படுகையில், அல்லது முதலீடு செய்யப்பட்டவற்றுடனான அதன் ஈடுபடுதலிருந்து கிடைக்கும் வேறுபட்ட பதிலீடுகளுக்கு, உரிமைகளைக் கொண்டிருக்கும் போதும், அல்லது முதலீடு செய்யப்பட்டவற்றின் மீதான அதன் அதிகாரம் மூலமாக அந்த பதிலீடுகளைப் பாதிக்கும் ஆற்றல் கொண்டுள்ள போதும் கட்டுப்படுத்தல் அடையப்படுகிறது.

குறிப்பாக, குழுமம் ஒரு முதலீட்டைப் பெறும் நிறுவனத்தை, பின்வரும் நிலைமைகளில் மாத்திரம் கட்டுப்படுத்துகிறது:

- முதலீட்டைப் பெறும் நிறுவனத்தின் மீதான அதிகாரம் (அதாவது, குழுமத்திற்கு இருக்கும் உரிமைகள், முதலீடு பெறும் நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு அளிக்கும் தற்போதைய ஆற்றல்)
- முதலீடு பெறும் நிறுவனத்துடனான அதன் ஈடுபாட்டிலிருந்து பெறப்படும் வேறுபடும் பதிலீடுகளுக்கான வெளிப்படுத்தல், அல்லது உரிமைகள்
- அதன் பதிலீடுகளைப் பாதிப்பதற்கு முதலீடும் பெறும் நிறுவனத்தின் மீது அதன் அதிகாரத்தை உபயோகிக்கும் ஆற்றல்

பொதுவாக, ஒரு பெரும்பான்மை வாக்குரிமைப் பங்குகளைக் கொண்டிருத்தல் கட்டுப்பாட்டு உரிமையை ஏற்படுத்துமென்பது ஒரு கருதுகோளாகும். இ.பெ.கூ, வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியம் களஞ்சிய முனையங்கள் நிறுவனத்தின் (CPSTL) 2/3 பங்குகளை உரிமை கொண்டுள்ளதுடன் இ.பெ.கூ CPSTL ஐ அதன் துணைநிறுவனமாகக் கருதுகிறது.

கட்டுப்பாட்டின் மேற்சொன்ன மூன்று அம்சங்களில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றில் மாற்றங்கள் உள்ளன என்பதை சான்றுகள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறிப்பிடின் குழுமம் முதலீடு பெறும் நிறுவனத்தை அது கட்டுப்படுத்துகிறதா அல்லது இல்லையா என்பதற்கு குழுமம் மீள் மதிப்பீடு செய்யும். துணைநிறுவனத்தின் மீது குழுமம் கட்டுப்பாட்டை பெறும் பொழுது ஒரு துணைநிறுவனத்தின் ஒருங்கிணைத்தல் ஆரம்பமாகின்றதுடன் துணைநிறுவனம் மீது கட்டுப்பாட்டை இழக்கையில் ஒருங்கிணைத்தல் முடிவுறுகின்றது.
வருடத்தின் போது துணைநிறுவனத்தின் பெறப்பட்ட அல்லது வெளியகற்றப்பட்ட சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் என்பன குழுமம் கட்டுப்பாட்டு அதிகாரத்தை பெற்றுக் கொண்ட திகதியிலிருந்தும் மற்றும் குழுமம் துணைநிறுவனத்தின் கட்டுப்பாட்டை இழக்கும் வரைக்குமாக ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

வேறுவகையில் குறிப்பிடப்பட்டாலன்றியும் மற்றும் டிசம்பர் 31 உடன் முடிவடையும் ஒரு பொதுவான நிதியாண்டை அவர்கள் கொண்டிருக்கும் போதும், துணைநிறுவனத்தின் நிதிசார் கூற்றுகள் குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கும் வகையில் தயார் செய்யப்படுகின்றன.

ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுகளைத் தயாரிக்கையில் குழுமத்தின் நிறுவனங்களிற்கிடைப்பட்ட அனைத்து நிலுவைகள் மற்றும் பரிவர்த்தனை நடவடிக்கைகள், வருமானம் மற்றும் செலவுகள் என்பன நீக்கப்படுகின்றன.

### கட்டுப்படுத்தா நலன்கள் (சிறுபான்மை பங்குரிமையாளர்கள்)

துணைநிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முழு வருமானத்தின் (OCI) ஒவ்வொரு பகுதியும் குழுமத்தின் குழுமத்தின் மூல உரிமையாளரின் பங்கு வைத்திருப்பவர்கள் மற்றும் சிறுபான்மைப் பங்குதாரர்களிற்கு அவை ஒரு பற்றாக்குறை நிலுவையை ஏற்படுத்துகிறதாயினும் கூட உரித்தானவையாகும்.

## 1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

### கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

வேறுவகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய வருடங்களில் உபயோகிக்கப்பட்டவற்றுடன் இணக்கமானவையாக இருந்தன.

### ஒப்பீட்டுத் தகவல்

சிறந்த சமர்ப்பணத்திற்காக பொருந்துமிடத்தும் மற்றும் தற்போதைய வருடத்துடன் அவற்றை ஒப்பிடக் கூடியதாக இருப்பதற்கும், முன்னைய வருடங்களின் நிதிசார் கூற்றுகளின் சமர்ப்பணம் மற்றும் வகைப்படுத்தல் என்பன திருத்தப்பட்டன.

### தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு

இந்த நிதிசார் கூற்றுகள் இ.பெ.கூ மற்றும் அதன் குழுமமும் ஒரு நிறுவனத் தொடர்ச்சி கொண்டவை, அதாவது காணக்கூடியதான எதிர்காலம் வரைக்கும் செயற்பாடுகளைத் தொடர்கின்றவை என்ற அனுமானத்தில் தயார் செய்யப்பட்டவையாகும். ஆகையால், கூட்டுத்தாபனம் மற்றும் குழுமம் என்பன டிசம்பர் 31, 2018 முடிவடைந்த வருடத்திற்காக தயார் செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகளின் படி, முறையே ஓர் எதிர்மறையான ரூ.282,761 மில்லியன் மற்றும் ரூ.261,996 மில்லியன் உரிமையாண்மை நிலையைக் கொண்டிருந்த போதிலும் கூட இ.பெ.கூ அதன் செயற்பாட்டின் அளவை ஒடுக்குதல் அல்லது பொருள்ரீதியாகக் குறைப்பதற்கான நோக்கத்தை அன்றேல் அவசியத்தைக் கொண்டிருக்கவில்லை.

### முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், கணிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களின் சாராம்சம்

இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் நிதிசார் கூற்றுகளைத் தயார்செய்தல் சில முக்கியமான கணக்கீட்டுக் கணிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களின் பாவித்தலைத் தேவைப்படுத்துகின்றது. அத்தோடு, கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செய்முறையில் அதன் தீர்மானத்தை அப்பியாசிப்பதற்கு அது முகாமைத்துவத்தையும் தேவைப்படுத்துகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாமானதாக இருப்பதற்கு நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட, வரலாற்று அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளையும் தீர்மானங்கள் மற்றும் கணிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதனால், உண்மையான அனுபவம் மற்றும் பெறுபேறுகள் இந்த தீர்மானங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளிலிருந்து மாறுபடலாம். கணிப்பீடுகள் மற்றும் அடிப்படையாகவுள்ள கருதுகோள்கள் என்பன ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மீளாராயப்பட்டு மற்றும் கணக்கீட்டுக் கணிப்பீடுகளுக்கான திருத்தங்கள் வாய்ப்புக் கொண்டவையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஓர் உயர் மட்டத் தீர்மானம் அல்லது சிக்கற்பாடு அல்லது நிதிசார் கூற்றுகளுக்கு கணிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் முக்கியமானவை எனும் பகுதிகள் பொருத்தமான குறிப்புகளில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் - பணிக்கொடை: குறிப்பு இலக்கம்: 1.4.12
- நிதிச் சொத்துகளின் பெறுமதி வீழ்ச்சி, குறிப்பு இலக்கம் 1.4.14
- ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பாவனைக் காலங்கள், குறிப்பு இலக்கம். 1.4.6
- ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு, குறிப்பு இலக்கம் 1.4.2

## 1.4 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

### 1.4.1 வருமானத்தை அடையாளங் காணுதல்

கொடுப்பனவு எப்போது கிடைக்கப் பெறுகிறதென்பதை பொருட்படுத்தாது, வருமானம் மற்றும் ஏற்பட்ட அதனுடன் இணைந்த செலவு அல்லது ஏற்படவுள்ள செலவு என்பன நம்பிக்கையான விதத்தில் அளவிடப்பட முடியுமாக இருக்கையில் கூட்டுத்தாபனத்திற்கு உள்வரும் பொருளாதார நன்மைகளின் சாத்தியமானளவிற்கு வருமானம் அடையாளப்படுத்தப்படுகிறது. கொடுப்பனவு மற்றும் நிகர விற்பனை வரிகளின் ஒப்பந்த ரீதியாக வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையை கவனத்தில் கொண்டு, பெற்ற அல்லது பெறப்படவுள்ள பயன்களின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகிறது. பிரதான கடப்பாடுற்றவராக அது உள்ளதினாலும் மற்றும் கையிருப்பு மற்றும் கடன் இடரேதுநிலைகளுக்கு வெளிப்படுத்தப்படுவதாலும் அனைத்து வருமான ஏற்பாடுகளிலும் அதுவே முதன்மையானது என குழுமம் முடிவுசெய்தது.

வருமானத்தை அடையாளம் காண்பதற்கு பின்வரும் குறித்த தன்மைகளும் திருப்தி செய்யப்படல் வேண்டும்.

#### பொருட்களின் விற்பனை

முக்கியமான இடரேதுநிலைகள் மற்றும் பொருட்களின் உடைமையுரிமையின் பயன்கள் வாங்கியவருக்கு மாற்றப்பட்ட பின், பயன்களின் பெறுகைச் சாத்தியம், இணைந்த செலவுகள் மற்றும் பொருட்களின் சாத்தியமான திருப்புதல் ஏற்புடையதான விதத்தில் கணிக்கப்பட முடிந்து, பொருட்கள் மற்றும் வருமானத்தின் தொகை ஏற்புடைய வகையில் அளவிடப்பட்டும், மற்றும் முகாமைத்துவ சம்பந்தப்படுதல் தொடராத சந்தர்ப்பத்தில் பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது அல்லது அடையாளம் காணப்படுகிறது.

#### வட்டி வருமானம் & செலவுகள்

கடன்தீர்ப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட அனைத்து நிதிசார் சாதனங்கள், வட்டிச் செலவு மற்றும் வருமானம் என்பன பயனுறுதியான வட்டி வீதத்தைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டன. பயனுறுதியான வட்டி வீதமென்பது, நிதிசார் சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலம் அல்லது ஒரு குறைவான காலம், பொருத்தமானவிடத்து, நிதிசார் சொத்து அல்லது பொறுப்பின் நிகரத் தொகை மூலமாக கணிக்கப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது பெறுகைகளை துல்லியமாக கழிக்கும் வீதமாகும்.

வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் சந்தேகமாக இருந்தாலன்றி அட்டுறு வட்டி, வட்டி வருமானமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வட்டி வருமானம் நிதிசார் வருமானத்தின் கீழும் வட்டிச் செலவு நிதிசார் செலவின் கீழும் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

#### பங்கிலாபங்கள்

கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை ஸ்தாபிக்கப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

## வாடகை வருமானம்
வாடகை வருமானம் குத்தகை நிபந்தனை மீதான ஒரு நேர் கோட்டு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றதுடன் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## ஆதனம், பொறி & உபகரணம் என்பவற்றின் விற்பனையிலிருந்தான இலாபம்/(நட்டம்)
ஆதனம், பொறி & உபகரணம் இன் விற்பனையிலிருந்து பெறப்படும் இலாபம்/(நட்டம்) விற்பனை நடைபெற்ற மாதத்தில் அங்கீகரிக்கப்பட்டு மற்றும் ஏனைய வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதலீட்டுப் பிணையங்களிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள்

பங்குகள் மற்றும் நிதிசார் சாதனங்களின் விற்பனையிலிருந்து எழுகின்ற இலாபங்கள் அல்லது நட்டங்கள் அப்பரிவர்த்தனை நடவடிக்கைகள் இடம்பெற்ற திகதியன்று கணக்கிடப்பட்டன.

## ஏனைய வருமானம்
ஏனைய வருமானம் ஓர் அட்டுறு கணக்கீட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

## வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து SLFRS 15 வருமானத்தின் தாக்கம்
ஒரு வாடிக்கையாளருடனான ஓர் ஒப்பந்தத்திலிருந்து எழும் வருமானம் மற்றும் காசுப்பாய்ச்சல்களின் தன்மை, தொகை, நேரம் மற்றும் நிச்சயமற்றதன்மை பற்றி நிதிசார் கூற்றுகளின் பயனுனர்களுக்கு பயனுள்ள தகவல்களை அறிக்கையிடுவதற்கு ஒரு நிறுவனம் பிரயோகிக்கும் கோட்பாடுகளை வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து ஸ்தாபிப்பது SLFRS15 வருமானத்தின் குறிக்கோளாகும். கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நடைமுறைப்படி, பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் பொருட்கள் அனுப்பப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகிறது, அல்லது வாடிக்கையாளருக்கு பொருட்களை விநியோகிக்கும் சந்தர்ப்பத்தில், சட்ட உரித்துடைமை வாடிக்கையாளருக்கு பொருட்களின் விநியோகித்தலின் பேரில் மாத்திரமே மாற்றப்படுகிறது.

அத்தகைய அனைத்து சந்தர்ப்பத்திலும், பொருட்கள் அனுப்பப்பட்டு அல்லது விநியோகிக்கப்பட்டு மற்றும் விற்பனையாளர்கள்/வாடிக்கையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் போதே வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

அதற்கமைய, SLFRS15 இன்படி வருமான அங்கீகரித்தலுக்கான மாற்றங்கள் மீது குறிப்பிடும் வகையிலான தாக்கங்கள் இல்லை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 1.4.2 செலவினங்களின் அடையாளப்படுத்தல்
வணிகத்தை கொண்டு நடத்துவதில் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றை ஒரு வினைத்திறனான நிலைமையில் பராமரிப்பதுடனும் தொடர்புபட்ட அனைத்து செலவினங்களும் வருடத்தின் வருமானக் கூற்றுக்கு எதிராக கழிக்கப்பட்டன.

## வரிவிதித்தல்
இக் காலத்திற்கான வரிச் செலவுகள் தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளைக் கொண்டுள்ளது.

### (I) தற்போதைய வரி
2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்பட்டு மற்றும் நிதிசார் கூற்றுகளில் குறிப்பிட்டவாறு வருமானம் மற்றும் செலவின அம்சங்களின் அடிப்படையில், வரிவிதிக்கும் அதிகாரங்களுக்கு செலுத்தப்பட்ட அல்லது மீளப்பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில், தற்போதைய மற்றும் முன்னைய காலங்களுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான வருமான வரி அளவிடப்படுகிறது.

உரிமையாண்மைகளில் நேரடியாக இனங் காணப்பட்ட உருப்படிகள் அல்லது உரிமையாண்மைகளில் இனங் காணப்பட்ட ஏனைய முழுமையான வருமானம் தொடர்பான தற்போதைய வருமானவரி பங்கு அல்லது ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகிறதேயன்றி இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அல்ல.

### (II) ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு
ஒத்திவைக்கப்பட்ட வரி, பொறுப்புகள் முறையை உபயோகித்து, அறிக்கைத் திகதியன்று, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகள் மற்றும் நிதிசார் அறிக்கையிடல் தேவைகளுக்காக அவற்றின் முன்கொணரற் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான தற்காலிக வேறுபாடுகள் மீது அளிக்கப்படுகிறது.

ஒரு வணிக கூட்டல்லாத ஒரு பரிவர்த்தனை நடவடிக்கையில் ஒரு சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகரித்தலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்பு எழுகின்றவிடம் தவிர்த்தும் மற்றும், பரிவர்த்தனை நடவடிக்கை சமயத்தில், கணக்கீட்டு இலாபத்தையோ அன்றேல் வரிவிதிப்பு இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத போது அனைத்து வரிவிதிப்பு தற்காலிக வேறுபாடுகளுக்காக ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்புகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள், உபயோகிக்காத வரிச் சொத்துகள் மற்றும் உபயோகிக்காத வரி நட்டங்களின் முன்கொணர்தல் பெறுமதி, கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிப்பு இலாபம் இருக்க முடியும் எனும் சாத்தியம் உள்ள அளவிற்கு, அனைத்து கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்காக அங்கீகரிக்கப்படுகின்றதுடன் முன்கொணர்ந்த உபயோகிக்காத வரிச் சொத்துகள் மற்றும் உபயோகிக்காத வரி நட்டங்கள் ஒரு வணிகக் கூட்டல்லாத ஒரு பரிவர்த்தனை நடவடிக்கையில் ஒரு சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து எழுகின்ற கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட வருமானவரி சொத்து தொடர்புபடுமிடம் தவிர்த்தும், மற்றும் பரிவர்த்தனை சமயத்தில், கணக்கீட்டு இலாபத்தையோ அன்றேல் வரிவிதிப்பு இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத போதும் உபயோகிக்கப்பட முடியும்.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி சொத்துகளின் முன்கொணரற் பெறுமதி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் மீளாய்வு செய்யப்படுகின்றதுடன் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து முழுமையாக அல்லது பகுதியாக உபயோகிக்கப்படுவதை அனுமதிப்பதற்கு போதுமான வரிவிதிக்கக்கூடிய இலாபம் இருப்பது இனியும் சாத்தியமில்லை எனும் அளவுக்கு குறைக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் மீள்மதிப்பிடப்படுகின்றதுடன் மற்றும் எதிர்கால வரிவிதிப்பு இலாபங்கள் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து மீளப் பெறப்படுவதை அனுமதிக்கும் என்பது சாத்தியமாக வந்துள்ள அளவிற்கு அங்கீகரிக்கின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள், அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருண்மைக் சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் (மற்றும் வரிச் சட்டங்கள்) மீதான அடிப்படையில், சொத்து பயனுறப்படும் பொழுது அல்லது பொறுப்பு தீர்க்கப்படும் வருடத்திற்கு பிரயோகமாவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது. உரிமையாண்மைகளில் நேரடியாக இனங்காணப்பட்ட உருப்படிகள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி உரிமையாண்மைகளில் அங்கீகரிகப்படுகின்றதேயன்றி வருமானக் கூற்றிலில்லை.

### (III) விற்பனை வரி
சொத்துகள் அல்லது சேவையின் ஒரு கொள்வனவில் ஏற்பட்ட விற்பனை வரி, வரிவிதிப்பு அதிகாரங்களிடமிருந்து மீளப் பெறமுடியாதவிடம் தவிர்ந்த சந்தர்ப்பத்தில், அதாவது விற்பனை வரி பொருத்தமானவாறு, சொத்தினது கிரயத்தின் ஒரு பகுதியாக அல்லது செலவின் பகுதியாக அங்கீகரிக்கப்படுகையில் வருமானங்கள், செலவு

மற்றும் சொத்துகள் நிகர விற்பனை வரித் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விற்பனை வரித் தொகையுடன் வருமதிகள் மற்றும் சென்மதிகள் குறிப்பிடப்பட்டு அது பெற வேண்டிய விற்பனை வரி வருமதி அல்லது செலுத்த வேண்டிய சென்மதி என்பவற்றின் நிகர தொகையை உள்ளடக்கியபோது, வரிவிதிப்பு அதிகாரம் அதனை நிதிசார் நிலைக் கூற்றின் வருமதிகள் மற்றும் சென்மதிகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கியது.

## கடன்படல் செலவுகள்

உத்தேசிக்கப்பட்ட பாவனை அல்லது விற்பனைக்கு தயாராகுவதற்கு ஒரு கணிசமான கால அவகாசத்தை அவசியம் எடுத்துக் கொள்ளும் சொத்துகளான தகுதி பெறும் சொத்தின் கைக்கொள்ளல், நிர்மாணம் அல்லது உற்பத்தி என்பவற்றுக்கு பொதுவான மற்றும் குறித்தான கடன்படுத்தல் செலவுகள் நேரடியான பங்கை அளிப்பதுடன், அந்த சொத்துகளின் கிரயங்களுக்கு சேர்க்கப்படுகின்றன. ஏனைய அனைத்து கடன்படல் செலவுகளும் அவை மேற்கொள்ளப்பட்ட காலத்திற்கு செலவில் கணக்கெடுக்கப்படுகின்றன.

## 1.4.3 வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகளும் நிலுவை மிகுதிகளும்

கூட்டுத்தாபனத்தின் செயல்முறை ரீதியானதும் மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமான இலங்கை ரூபாய்களிலேயே நிதிசார் கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயத்திலான பரிவர்த்தனைகள் முதலில் பரிவர்த்தனைத் திகதியன்று நடைமுறையிலிருந்த செயல்முறை நாணய வீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் குறிக்கப்பட்ட நாணயச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடும் திகதியன்று பிரயோகமாகும் செயல்முறை நாணயமாற்று வீதத்தில் மீள்மாற்றம் செய்யப்படுகின்றன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக் கூற்றுக்கு எடுக்கப்படுகின்றன. வரலாற்றுக் கிரய அடிப்படையில் ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அளவிடப்பட்ட நாணயச் சொத்துக்களல்லாத உருப்படிகள் ஆரம்பப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் நடைபெற்ற திகதியன்றான நாணயமாற்று வீதத்தை உபயோகித்து நாணயப் பெறுமதி மாற்றம் செய்யப்படுகின்றன.

நாணயச் சொத்துகளல்லாத உருப்படிகள் வெளிநாட்டு நாணயத்தில் நியாயப் பெறுமதி அடிப்படையில் அளவிடப்பட்டவை நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியிலான நாணயமாற்று வீதத்தை உபயோகித்து மாற்றம் செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயச் சொத்துகளல்லாத உருப்படிகளின் பெறுமதி மாற்றம் மூலமாக எழும் இலாபம் அல்லது நட்டம் உருப்படியின் நியாயப் பெறுமதியிலான மாற்றம் மூலமான இலாபம் அல்லது நட்டத்தின் அங்கீகரித்தலுடன் இணைந்ததாக கையாளப்படுகிறது (அதாவது, உருப்படிகளின் நியாயப் பெறுமதி அடிப்படையிலான பெறுமதி மாற்ற வேறுபாடுகளின் இலாபம் அல்லது நட்டம் ஏனைய முழுமையான வருமானத்தில் (OCI) அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது).

## 1.4.4 நடப்பு எதிர் நடப்பல்லாத வகைப்படுத்தல்

நிதிசார் நிலைமையின் கூற்றில் குழுமம் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை நடப்பு/நடப்பல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் சமர்ப்பிக்கின்றது. ஒரு சொத்து, அது பின்வரும் தன்மைகளை உடையதாக இருக்கும் போது நடப்பு ரீதியானதென வகைப்படுத்தப்படுகிறது:

- சாதாரண செயற்பாட்டுச் சுழற்சி வட்டத்தில் பயனுறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது அல்லது விற்கப்படுவதற்கு அல்லது நுகரப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டது
- பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுவது
- அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின் பன்னிரெண்டு மாதங்களினுள் பயனுறுவதற்கு எதிர்பார்க்கப்படுவது

அல்லது

- அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின் குறைந்தது பன்னிரெண்டு மாதங்களில் ஒரு பொறுப்பைத் தீர்ப்பதற்கு பரிமாற்றுதல் அல்லது உபயோகிக்கப்படுவதிலிருந்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலன்றி காசு அல்லது காசுக்கு சமனானது

ஏனைய அனைத்து சொத்துகளும் நடப்பல்லாத சொத்துகளாக வகைப்படுத்தப்படும்.

ஒரு பொறுப்பு பின்வருமாறு உள்ள போது நடப்பு ரீதியானது எனப்படும்:

- வழமையான செயற்படும் சுழற்சி வட்டத்தில் தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகையில்
- பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுகையில்
- அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின் பன்னிரெண்டு மாதங்களினுள் தீர்க்கப்படுவதற்கு உரியதானது

அல்லது

- அறிக்கைப்படுத்தும் காலத்தின் பின் குறைந்தது பன்னிரெண்டு மாதங்களில் பொறுப்பின் தீர்த்தலை ஒத்திவைப்பதற்கு நிபந்தனையற்ற உரிமை இல்லை எனப்படுகையில்

ஏனைய அனைத்து பொறுப்புகளையும் குழுமம் நடப்பல்லாதவையாக வகைப்படுத்துகிறது

ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புகள் நடப்பல்லாத பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

## 1.4.5 நியாயப் பெறுமதி அளவீடு

உரிமையாண்மைப் பங்குகளிலான முதலீடுகள் போன்ற நிதிசார் சாதனங்கள் மற்றும் நிலம் போன்ற நிதிசாரா சொத்துகளை, ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் நியாயப் பெறுமதியில் அளவிடுகின்றது. நிதிசார் சாதனங்கள் மற்றும் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிசாரா சொத்துகளுக்கான நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் அல்லது நியாயப் பெறுமதிகள் வெளிப்படுத்தப்பட்டவை பின்வரும் குறிப்புகளில் சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன்

- ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு 8)
- முதலீட்டு ஆதனம் (குறிப்பு 8.3)
- நிதிசார் சாதனங்கள் (கடன்தீர்ப்புக் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டவை உட்பட) (குறிப்பு 12.1)

அளவிடுதல் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களுக்கிடையில் ஒரு முறையான பரிவர்த்தனை நடவடிக்கையில் ஒரு சொத்தை விற்பனை செய்வதற்கு பெறப்படும் அல்லது ஒரு பொறுப்பை மாற்றுவதற்கு கொடுப்பனவு செய்யப்படும் விலையே நியாயப் பெறுமதியாகும். நியாயப் பெறுமதி அளவிடுதல் சொத்தை விற்பனை செய்வதற்கு அல்லது பொறுப்பை மாற்றுவதற்கான பரிவர்த்தனை நடவடிக்கை நடைபெறுகிறது என்ற ஊகத்தின் அடிப்படையிலானது

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தையில்

அல்லது

- முதன்மைச் சந்தையொன்று இல்லாத நிலையில், சொத்து அல்லது பொறுப்புக்கான மிகவும் அனுகூலமான சந்தையில்.

முதன்மை அல்லது மிகவும் அனுகூலமான சந்தை, குழுமத்தினால் அணுகும்படியான வழிவகையைக் கொண்டிருத்தல் வேண்டும். சந்தைப் பங்குபற்றுனர்கள் தங்களது சிறந்த பொருளாதார நலன்களைக் கருதி, சொத்து அல்லது பொறுப்பை விலையிடும் போது அவர்கள் தங்களது ஊகக் கருத்தினை உபயோகிப்பார்கள் என்பதைப் பயன்படுத்தி ஒரு சொத்து அல்லது பொறுப்பின் நியாயப் பெறுமதி அளவிடப்பட்டது.

ஒரு நிதிசாரா சொத்தின் ஒரு நியாயப் பெறுமதி அளவீடு, ஒரு சந்தைப் பங்குபற்றுனர், சொத்தை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பாவனைக்கு உபயோகித்தல் அல்லது சொத்தை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பாவனைக்கு உபயோகிக்கும் மற்றொரு சந்தைப் பங்குபற்றுனருக்கு விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை உருவாக்கும் ஆற்றலைக்

கணக்கில் கொள்கின்றது.

குழுமம் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான விலைமதிப்புத் தொழில்நுட்பங்களை உபயோகிக்கிறதுடன், அதற்கு நியாயப் பெறுமதியை அளவிடுவதற்கு போதுமான தரவுகள் கிடைக்கின்றமை, பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளை உபயோகிப்பதை அதிகப்படுத்துகிறதுடன், அவதானிக்கவியலாத உள்ளீடுகளை உபயோகிப்பதைக் குறைக்கின்றது. நிலம் மற்றும் முதலீட்டு ஆதனங்கள் போன்ற முக்கியமான சொத்துகள் மற்றும் ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடுகள் போன்ற முக்கியமான பொறுப்புகள் என்பவற்றின் விலைமதிப்பிடலுக்காக வெளிவாரி விலைமதிப்பீட்டாளர்கள் சம்பந்தப்படுவார்கள்.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்களின் தேவைக்காக, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இயற்றன்மை, குணாதிசயங்கள் மற்றும் இடரேதுநிலைகள் என்பவற்றின் அடிப்படையில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல்களை குழுமம் தீர்மானித்துள்ளது.

## 1.4.6 ஆதனம், பொறி & உபகரணம்

காணி தவிர்த்து ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன, நாளாந்த சேவையாற்றல் செலவுகள் விலக்கி, பெறுமதியில் திரட்டிய தேய்மானம் மற்றும் திரட்டிய சேத இழப்பு என்பவற்றைக் கழித்து செலவீனப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### அளவீடு

ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படுவதற்காக தகுதி பெறும் ஒரு ஆதனம், பொறி & உபகரணம் உருப்படி முதலில் சொத்தின் கைப்பெறுதலுக்காக நேரடியாகப் பங்களித்த அதன் கொள்வனவு அல்லது நிர்மாணத்துடன் இணைந்தான அதற்கான ஏதேனும் தற்செயலான செலவுகளுடனான அதன் செலவின் அடிப்படையில் ஆரம்பத்தில் அளவிடப்படுகிறது.

சுய நிர்மாணிக்கப்பட்ட சொத்துகள், அதன் உத்தேசிக்கப்பட்ட உபயோகத்திற்காக சொத்தினை ஓர் இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்குப் பங்களித்த பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு அல்லது நேரடிப் பங்களித்த வேறு ஏதேனும் செலவுகள் மற்றும் சொத்து அமைந்துள்ள இடத்திலிருந்து அதனைக் கழட்டி, அகற்றி மற்றும் அவ்விடத்தை மீட்டெடுத்த செலவுகள் மற்றும் தகுதிவாய்ந்த சொத்துக்களின் கடன்பெறல் செலவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய செலவு, சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் பாகத்தை மீள்மாற்றுவதற்கான செலவு, அதன் அங்கீகரித்தல் தகைமை திருப்தி செய்யப்பட்டு, செலவு மேற்கொள்ளப்படும் போது உள்ளடக்கப்படுகிறது.

### செலவீன மாதிரி

காணி தவிர, ஆதனம், பொறி & உபகரணத்திற்கு கிரய மாதிரியை குழுமம் பிரயோகிக்கின்றதுடன், கொள்வனவு அல்லது நிர்மாணித்தலுக்கான செலவில் அதனுடான ஏதேனும் தற்செயலான செலவு இணைத்தும், மற்றும் திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரட்டிய சேதார இழப்புகளைக் கழித்தும் பதிவு செய்கிறது.

### மீள்விலை மதிப்பிடல் மாதிரி

காணிகள், அவற்றின் மீள்விலை மதிப்பிடுதலின் பின்னர் இனங் காணப்பட்ட சேத இழப்புகளைக் கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகிறது. மீள்விலை மதிப்பிட்ட ஒரு சொத்தின் நியாயப் பெறுமதி அது கொண்டுள்ள பெறுமதித் தொகையிலிருந்து பொருண்மை ரீதியாக வேறுபடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு, விலை மதிப்பிடுதல் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. மீள்மதிப்பீட்டின் ஏதேனும் மிகைத்தொகை, அது வருமானக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் ஒரு மீள்மதிப்பீட்டுக் குறைவை எதிர்தீர்க்கும் அளவுக்கான ஒரு சந்தர்ப்பம் தவிர்த்து, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு ஒப்புரவான வகையில் வரவு வைக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் மீள்மதிப்பீட்டிலான அதிகரிப்பு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை, அது சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தில் இருக்கும் ஒரு மிகைதொகையை ஈடுசெய்கின்ற அளவிலான ஒரு சந்தர்ப்பம் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விற்பனை செய்யப்பட்ட குறித்த சொத்து தொடர்பான ஏதேனும் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கம், சொத்து அகற்றலின் பின், வைத்திருப்பு வருமானத்திற்கு மாற்றப்படும்.

### பின்னிட்ட செலவு

ஆதனம், பொறி & உபகரணம் இன் ஒரு உருப்படியின் பாகத்தை மாற்றீடு செய்யும் செலவு அப்பாகத்துடன் இணைந்ததான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் குழுமத்திற்குள் வந்து சேரும் மற்றும் அதன் கிரயம் உறுதியாக அளவிடப்பட முடியும் எனும் சாத்தியம் கொண்டதாக இருக்கும் பட்சத்தில் அது உருப்படியின் பெறுமதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

### மீட்டமைத்தல் செலவுகள்

எதிர்கால பொருளாதார நன்மைகளை மீட்டமைத்தல் அல்லது பேணும் முகமாக ஆதனம், பொறி & உபகரணத்தின் திருத்தியமைத்தல்கள் மற்றும் பராமரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அவை மேற்கொள்ளப்பட்டவாறு வருமானக் கூற்றில் அறவிடப்படுகிறது.

### அங்கீகார நீக்கம்

ஆதனம், பொறி & உபகரண உருப்படியொன்றின் கொண்டு செல்லும் தொகை, அவ்வுருப்படியின் அகற்றல் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படவில்லை எனும் போது அங்கீகாரத்தை இழக்கிறது. ஆதனம், பொறி & உபகரண உருப்படியொன்றின் அங்கீகார நீக்கத்திலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் உருப்படியின் அங்கீகாரம் நீக்கப்படும் போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

### பெறுமதித் தேய்மானம்

காணி ஒரு முடிவிலி ஆயுட்காலத்தைக் கொண்டுள்ளதினால் அது பெறுமதித் தேய்மானம் அடைவதில்லை. வேறுபட்ட வகைச் சொத்துகளுக்கு அவை உபயோகத்திற்கும் கிடைக்கும் திகதியிலிருந்து அவற்றின் கணிக்கப்பட்ட பயன்தரும் ஆயுளின் பொருத்தமான காலங்கள் மீதாக நேர்கோட்டு அடிப்படையில் அவற்றுக்கு பெறுமதித் தேய்மானத்தை குழுமம் அளிக்கின்றது. சொத்து அங்கீகார நீக்கப்படும் திகதியன்று பெறுமதித் தேய்மானம் முடிவுறுகிறது.

கணிக்கப்பட்ட பயனுள்ள ஆயுள், ஈற்றுப் பெறுமதி மற்றும் வணிகத் திட்டம் மற்றும் மூலோபாயங்கள், எதிர்பார்க்கப்பட்ட உபயோக மட்டம் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்தை உபயோகித்து எதிர்கால அபிவிருத்திகள் போன்ற காரணிகளின் அடிப்படையில் ஆதனம், பொறி & உபகரணத்தின் பெறுமதித் தேய்மான முறை என்பவற்றை குழுமம் வருடாந்தம் மீளாய்வு செய்கிறது.

சொத்துகளின் கணிக்கப்பட்ட பயனுள்ள ஆயுள் பின்வருமாறு:

| சொத்துகள் | வருடங்கள் |
|---|---|
| கட்டிடங்கள் | 35-50 வருடங்கள் |
| தாங்கிகள் | 20-40 வருடங்கள் |
| குழாய்த் தொகுதி | 5-40 வருடங்கள் |
| பொறி & உபகரணம் | 5-10 வருடங்கள் |
| கான்றிகள் & பம்பிகள் | 10-15 வருடங்கள் |
| வாகனங்கள் | 4-5 வருடங்கள் |
| தளபாடம், இணைப்புகள் & அலுவலக உபகரணம் | 3-10 வருடங்கள் |
| மிதவை | 10 வருடங்கள் |
| SPM வசதி – தாங்கிக் குதம் | 40 வருடங்கள் |
| விமான எரபொருள் வசதி மத்தள | |
| எரிபொருள் குழாய்முனை | 40 வருடங்கள் |
| எரிபொருள் குழாய்முனை முறைமை | 40 வருடங்கள் |
| உள்ளக வீதி வலையமைப்பு & வேலிகள் | 20 வருடங்கள் |

| | |
|---|---|
| மானிப்படுத்துதல் & மின்னிணைப்பு முறைமை | 10 வருடங்கள் |
| தீ அணைப்பு முறைமை | 10 வருடங்கள் |
| ஏனைய சொத்துகள் | 8 வருடங்கள் |
| முத்துராஜவெல PLEM | 10 வருடங்கள் |

குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், சொத்தின் ஈற்றுப் பெறுமதிகள், பயனுள்ள ஆயுள் மற்றும் பெறுமதித் தேய்மான முறை என்பன மீளாயப்பட்டு, பொருத்தமாயின் சீர்செய்யப்படுகின்றன.

### நடைமுறையிலுள்ள வேலை மூலதனம்

நடைமுறையிலுள்ள வேலை மூலதனம் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுகிறது. இவை மூலதனப்படுத்தலுக்கு காத்திருக்கும கட்டிடங்களின் நிர்மாணம், முக்கிய பொறி மற்றும் இயந்திரம் மற்றும் முறைமை அபிவிருத்தி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட நேரடி மூலதனத் தன்மையுடனான செலவுகளாகும்.

### நிதிசாரா சொத்துகளின் சேத இழப்பு

சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் சொத்துகளின் முன்கொணரற் பெறுமதி மீளப்பெறத்தக்கவையாக இல்லாதிருக்கலாம் என சுட்டிக்காட்டும் போதெல்லாம் சொத்துகள் சேத இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்தின் முன்கொணரற் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை மிஞ்சும் தொகையினால் ஒரு சேத இழப்பு நட்டம் அடையாளம் காணப்படுகிறது. மீளப்பெறத்தக்க தொகை சொத்தொன்றின் நியாயப் பெறுமதியில் விற்பனைக்கான செலவு மற்றும் பாவனையிலுள்ள பெறுமதியை கழித்துப் பெறுவதாகும்.

சேத இழப்பை கணிக்கும் நோக்கத்துக்காக, சொத்துகள் அவற்றின் மிகவும் தாழ்ந்த மட்டங்களில் குழுநிலைப்புடுத்தப்பட்டுள்ளன, அதற்காக தனியான இனங் காணப்படக்கூடிய காசுப்பாய்சல்கள் அங்கே உள்ளன (காசு பிறப்பாக்க அலகுகள்). சேத இழப்புக்கு உள்ளாகும் நிதிசாரா சொத்துகள் ஒவ்வொரு அறிக்கைத் திகதியில் சாத்தியமான சேத இழப்பின் தள்ளுபடிக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

### 1.4.7 முதலீட்டு ஆதனங்கள்

### அங்கீகரித்தலின் அடிப்படை

முதலீட்டு ஆதனம் என்பது வாடகைகள் ஈட்டுவதற்கு அல்லது மூலதன பெறுமதியேற்றத்திற்காக அல்லது இந்த இரண்டுக்குமாக ஆனால் வணிகத்தின் சாதாரண நடைமுறைத்தன்மையில் விற்பனைக்கல்லாது வைத்திருக்கப்படும் சொத்தாகும்.

### அளவீடு

நிதிசார்கூற்றுகளில் முதலீட்டு ஆதனம் கீழ்க் கிரய முறைமையின் கீழ் கணக்கிடப்படுகின்றது. அதற்கமைய சொத்தொன்று அங்கீகரிக்கப்பட்ட பின், அச்சொத்து அதன் கிரயத்திலிருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் சேத இழப்பு நட்டங்களை கழித்த பெறுமதியை முன் கொண்டு செல்கிறது.

### பெறுமதித் தேய்மானம்

கொள்வனவு செய்த திகதியிலிருந்து அது அகற்றப்படும் திகதி வரை சொத்து வகுப்பின் கணிப்பிட்ட ஆயுள் முழுவதற்கும் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதித் தேய்மானம் கணிக்கப்படுகிறது.

### அங்கீகார நீக்கம்

எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாததின் காரணத்தால் முதலீட்டு ஆதனங்கள் அவை தீர்த்து வைக்கப்பட்ட பின் அல்லது நிரந்தரமாக உபயோகத்திலிருந்து மீளப்பெறப்பட்ட பின் அவை அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன. சொத்தின் தீர்த்து வைத்தல் மூலமான நிகர தொகை மற்றும் அதன் முன்கொணரற் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு அங்கீகார நீக்க காலத்ததின் இலாப அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. முதலீட்டு ஆதனத்தின் அங்கீகார நீக்கத்திலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்குவதற்கு கருதப்பட வேண்டிய தொகை SLFRS 15 இன் பரிவர்த்தனை விலை தீர்மானிப்பதற்கான தேவைப்பாடுகளுக்கு அமைவாகத் தீர்மானிக்கப்படுகிறது.

முதலீட்டு ஆதனங்களிற்கும் மற்றும் அங்கிருந்துமான இடம்மாற்றங்கள் உபயோகத்தில் மாற்றம் இருந்தால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.4.8 அருவச் சொத்துகள்

### அங்கீகரித்தலின் அடிப்படை

சொத்துக்கு உரியதான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு உள்வரும் சாத்தியம் உடையதாகவும் மற்றும் சொத்தின் கிரயம் 'அருவச் சொத்துகள்' தொடர்பாக LKAS 38 - இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் அமைவாக, உறுதியாக அளவிடப்பட முடியுமாகவும் இருப்பின், ஓர் அருவச் சொத்து அங்கீகரிக்கப்படுகிறது. ஆரம்ப அங்கீகரித்தலின் பின், கிரயத்திலிருந்து ஏதேனும் திரட்டிய கடன்தீர்ப்பு மற்றும் ஏதேனும் திரட்டிய சேத இழப்பு நட்டங்களைக் கழித்த பின், உள்ள ஏதேனும் முன்கொணரற் பெறுமதி இருப்பின், அதனை அருவச் சொத்துகள் கொண்டிருக்கும்.

ஓர் அருவச் சொத்து, எதிர்கால பொருளாதார நன்மைகள் அதன் உபயோகம் அல்லது தீர்த்து வைத்தலில் இருந்து எதிர்பார்க்கப்படாத போது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன. சொத்தின் அங்கீகார நீக்கத்திலான ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் தீர்த்து வைத்தல் மூலமான நிகர தொகை மற்றும் அதன் முன்கொணரற் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டது) இலாப அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

### 1.4.9 துணைநிறுவனங்களில் முதலீடு

துணைநிறுவனங்களில் முதலீடு, ஏதேனும் சேத இழப்பு நட்டங்கள் இருப்பின் அவற்றைக் கழித்து வரும் செலவீனத்தில் குறிக்கப்படுகிறது.

### 1.4.10 கையிருப்புகள்

பாவனையில் இல்லாதவை மற்றும் மந்தகதியில் நகரும் உருப்படிகளுக்கான உரிய தள்ளுபடிக்கு ஏற்பாடளித்த பின், கையிருப்புகள் கிரயத்தின் குறைவான மற்றும் நிகர பயனுறுப் பெறுமதியிலும் மதிப்பிடப்படுகின்றன. நிகர பயனுறுதல் பெறுமதி (NRV) என்பது, சாதாரண வணிக ஏற்பாடுகளின் கீழ் கையிருப்புகள் விற்பனை செய்யப்படக் கூடியதான கணிப்பிடப்பட்ட விற்பனை விலையில் விற்பனையை மேற்கொள்வதற்கு கணிப்பிடப்பட்ட கிரயப் பூர்த்தி மற்றும் கணிப்பிடப்பட்ட கிரய அவசியம் என்பவற்றைக் கழித்து கணிப்பிடப்படுகிறது. நிகர பயனுறுதல் பெறுமதி (NRV) சந்தை நிலைமைகள் மற்றும் அறிக்கைத் திகதியிலுள்ள விலைகள் மற்றும் சமீபத்தைய சந்தைப் பரிவர்த்தனைகள் போக்கு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி மதிப்பிடப்படுகிறது.

தற்போதைய இடம் மற்றும் நிலைமைகளுக்கு கையிருப்புகளைக் கொண்டு வருவதில் மேற்கொள்ளப்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரத்தை உபயோகித்து கணக்கிடப்படுகிறது:

| மூலப் பொருட்கள் | முதல் வந்தது முதல் வெளியே (FIFO) அடிப்படையில் கொள்வனவுச் செலவு |
|---|---|
| முடிவுப் பொருட்கள்<br>அ) சுத்திகரிப்பு பொருட்கள் | கடன்பெறல் செலவுகள் நீங்கலாக, நேரடிப் பொருட்கள், நேரடி தொழில் என்பவற்றின் செலவுகள் மற்றும் சாதாரண தொழிற்பாட்டுச் செயற்றிறன் அடிப்படையில் உற்பத்தி மேற்செலவுகளின் ஒரு பொருத்தமான விகிதாசாரம். |
| ஆ) இறக்குமதிகள் | முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் கொள்வனவுக் கிரயம் |

| | |
|---|---|
| நடைமுறையிலுள்ள வேலை<br>அ) சுத்திகரிப்புப் பொருட்கள் | கடன்பெறல் செலவுகள் நீங்கலாக, நேரடிப் பொருட்கள், நேரடி தொழில் என்பவற்றின் செலவுகள் மற்றும் சாதாரண தொழிற்பாட்டுச் செயற்றிறன் அடிப்படையில் உற்பத்தி மேற்செலவுகளின் ஒரு பொருத்தமான விகிதாசாரம். |
| ஆ) இறக்குமதிகள் | முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் கொள்வனவுக் கிரயம் |
| ஏனைய முடிவுப் பொருட்கள் | - நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படை மீதான கொள்வனவுக் கிரயத்தில் |
| நுகரக்கூடியவைகள் & உதிரிகள் | - நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படை மீதான கொள்வனவுக் கிரயத்தில் |

## 1.4.11 காசு மற்றும் காசுச் சமானங்கள்

காசு மற்றும் காசுச் சமானங்கள் என்பவை, கையிலுள்ள பணம், கோரிக்கை வைப்புகள் மற்றும் குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள், காசின் அறிந்த தொகைகளுக்கு உடன் மாற்றக்கூடியவை மற்றும் பெறுமதியில் மாற்றங்களுக்கு முக்கியமில்லாத இடரேதுநிலை கொண்டவை என்பவையாகும். காசுப் பாய்ச்சல் நோக்கத்துக்காக, காசு மற்றும் காசுச் சமானங்கள் கையிலுள்ள பணம் மற்றும் வங்கியிலுள்ள மேலதிக பற்று நிலுவைகள் நீக்கிய வங்கியிலுள்ள நிகர பண வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. குறுகிய முதிர்ச்சிக் காலம் உடைய முதலீடுகள், அதாவது பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது குறைந்த காலம் கொண்டவையும் காசுச் சமானங்களாகக் கருதப்படுகின்றன.

## 1.4.12 ஏற்பாடளித்தல்கள் & பொறுப்புகள்

### ஏற்பாடளித்தல்கள்

ஒரு கடந்த கால நிகழ்வின் விளைவான ஒரு தற்போதைய கடப்பாட்டை (சட்ட ரீதியிலானது அல்லது படிப்படியானது) குழுமம் கொண்டிருக்கும் போது, அங்கு கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளைக் கருதும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவது சாத்தியமாகுகின்ற போதும் மற்றும் கடப்பாட்டுத் தொகையின் ஒரு நம்பகமான கணிப்பீடு மேற்கொள்ளப்பட முடியும் எனும் போதும் ஏற்பாடளித்தல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடளித்தலின் சில அல்லது அனைத்துத் தொகைகளுமே மீள ஈடுசெய்யப்படுவதை குழுமம் எதிர்பார்க்கும் போது, இந்த மீளீடுசெய்தல் ஒரு தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறது, ஆனால் அது மீளீடுசெய்தல் உண்மையில் நிச்சயமானதாக ஆகும் போது மட்டுமேயாகும். ஏதேனும் ஏற்பாடளித்தல் தொடர்பான செலவு ஏதேனும் மீளீடு செய்தலின் நிகரப் பெறுமானமாக வருமானக் கூற்றில் காண்பிக்கப்படுகிறது. பணத்தின் காலப் பெறுமதியின் தாக்கம் பொருட்படுத்தப்படக் கூடியதாயின், பணத்தின் காலப்பெறுமதியின் நடப்புச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு வரிக்கு முந்திய வீதத்திலும், மற்றும், பொருத்தமானவிடத்து, பொறுப்புக்கு குறிப்பானதான இடரேது நிலைகளைக் கவனத்தில் கொண்டும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப்பாய்சல்களை தள்ளுபடி செய்வதன் மூலமாக ஏற்பாடளித்தல்கள் தீர்மானிக்கப்படுகின்றன. தள்ளுபடி பாவிக்கப்படுமிடத்து, கால அவகாசம் காரணமாக ஏற்பாடளித்தலில் ஏற்படும் அதிகரிப்பு ஒரு வட்டிச் செலவாக அடையாளம் காணப்படுகிறது.

### வரையறுத்த நன்மைக் கடப்பாடுகள் - பணிக்கொடை

பணிக்கொடை தொடர்பாக நிதிசார் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பாகக் கொள்ளப்படுவது உத்தேசிக்கப்பட்ட அலகுக் கடன் முறையை உபயோகித்து அறிக்கைக் காலத்தின் முடிவிலுள்ள கடப்பாட்டின் தற்போதைய பெறுமானமாகும். வரையறுத்த நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி பல அனுமானங்களை உபயோகித்து ஒரு காப்பீட்டுக் கணிப்பிடல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. பணிக்கொடைக்கான கிரயத்தை தீர்மானிப்பதில் உபயோகித்த இந்த அனுமானங்கள் தள்ளுபடி வீதம், எதிர்பார்க்கப்பட்ட ஊழியர் புரள்வு மற்றும் சம்பள அதிகரிப்பு வீதம் என்பவற்றை உள்ளடக்குகிறது. இந்த அனுமானங்களிலான ஏதேனும் மாற்றம் பணிக்கொடை கடப்பாட்டின் முன்கொணரற் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வருட இறுதியிலும் பொருத்தமான தள்ளுபடி வீதத்தை முகாமைத்துவம் தீர்மானிக்கின்றது. இந்த வட்டி வீதமே, வரையறுத்த நன்மைக் கடப்பாட்டை தீர்ப்பதற்குத் தேவைப்படுமென எதிர்பார்க்கப்படும் கணிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்படுதல் வேண்டும். தள்ளுபடி வீதத்தைத் தீர்மானிப்பதில், இலங்கையில் கூட்டாண்மை முறிகளுக்காக ஓர் ஆழமான சந்தை இல்லாமையின் காரணத்தால் அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களை முகாமைத்துவம் கவனத்தில் கொள்கிறது. வரையறுத்த நன்மைக் கடப்பாடுகளுக்கான ஏனைய முக்கிய அனுமானங்கள் நடப்புச் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் சேவையின் ஆரம்பத்திலிருந்து இளைப்பாறல் பணிக்கொடைக்கான ஏற்பாடளித்தல், LKAS 19 - ஊழியர் நன்மைகள், உடன் இணங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஓர் ஊழியருக்கான பொறுப்பு அவரது தொடர்ச்சியான 5 வருட சேவைகளின் பூர்த்தியில் மட்டுமே எழுகிறது.

இது வெளிவாரியாக நிதியளிக்கப்படும் ஒரு வரையறுத்த நன்மைத் திட்டமல்ல.

காப்பீட்டுக் கணித்தல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை எழும் காலத்தில் ஏனைய முழுமையான வருமானத்தில் அறவிடப்படுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன.

### வரையறுத்த பங்களித்தல் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் & ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

சம்பந்தப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணைந்ததான வகையில் ஊழியர் சேமலாப நிதியப் பங்களித்தல்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்புகளுக்கு ஊழியர்கள் தகுதியுடைவர்களாவர். கூட்டுத்தாபனம் ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் 15% மற்றும் 3% என்பவற்றை ஊழியர்கள் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கு முறையே பங்களிக்கின்றதுடன் ஊழியர்கள் சேவைகள் அளித்த காலங்களின் போது அவற்றை ஒரு செலவினமாக வருமானக் கூற்றில் பதிகிறது.

## 1.4.13 மூலதன ஒதுக்கம்

அரசாங்கத் திரட்டு நிதியத்திலிருந்து பெறப்பட்ட குறித்த தொகைகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு பின்னுரிமையாளரின் வெளியிடப்பட்ட மூலதனத்தை ஈற்றில் உருவாக்குகின்ற, விற்பனை வருமானத்தின் மறுசீரமைக்கப்பட்ட நிகரப் பெறுமதி என்பன மூலதன ஒதுக்கத்துக்கு வரவு வைக்கப்படுகின்றன.

## 1.4.14 நிதிசார் சாதனங்கள்

### I) நிதிசார் சொத்துகள்

### ஆரம்பநிலை அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல்

ஆரம்பநிலை அங்கீகரித்தலில் நிதிசார் சொத்துகளின் வகைப்படுத்தல் அவற்றின் ஒப்பந்தரீதியிலான காசுப் பாய்ச்சல் இயல்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக மாதிரியிலும் தங்கியிருக்கின்றது. ஒரு கணிசமான நிதிசார் அம்சத்தைக் கொண்டிராத வர்த்தக வருமதிகள் அல்லது அதற்கு குழுமம் ஒரு நடைமுறை முறைமையைப் பிரயோகித்துள்ளவை தவிர, கூட்டுத்தாபனம் நிதிசார் சொத்தை அதன் நியாயப் பெறுமதியிலும் மற்றும் நியாயப் பெறுமதியில் இல்லாத ஒரு நிதிசார் சொத்தாக இருக்கையில், இலாபம் அல்லது நட்டம் ஊடாக, பரிவர்த்தனை நடவடிக்கைக் கிரயத்திலும் ஆரம்பத்தில் அளவிடுகிறது. ஒரு கணிசமான

நிதிசார் அம்சத்தைக் கொண்டிராத வர்த்தக வருமதிகள் அல்லது அதற்கு குழுமம் ஒரு நடைமுறை முறைமையைப் பிரயோகித்துள்ளவை பரிவர்த்தனை நடவடிக்கை விலையில் அளவிடப்படுகின்றன.

கடன்தீர்ப்புக் கிரயத்தில் பின்னதாக அளவிடப்பட்ட நிதிசார் சொத்துகள், ஏனைய முழுமையான வருமானம் (OCI) மூலமாகவும் மற்றும் இலாபம் அல்லது நட்டம் மூலமாகவும் நியாயப் பெறுமதியிடப்படுகிறது.

நிதிசார் சொத்து கடன்தீர்ப்புக் கிரயம் அல்லது ஏனைய முழுமையான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதற்கும் மற்றும் அளவிடப்படுவதற்கும், அது நிலுவையாகவுள்ள முதல் தொகை மீதான 'முதல் மற்றும் வட்டியின் தனிக் கொடுப்பனவுகளான' (SPPI) காசுப் பாய்ச்சல்களுக்கு அதிகரிப்பைக் கொடுத்தல் வேண்டும். இந்த மதிப்பீடு SPPI சோதனை எனக் குறிப்பிடப்படுவதுடன் ஓர் ஆவண மட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

நிதிசார் சொத்துகளை நிர்வாகிப்பதற்கான குழுமத்தின் வணிக மாதிரி காசுப் பாய்ச்சல்களை உருவாக்கும் முகமாக அதன் நிதிசார் சொத்துகளை அது எவ்வாறு முகாமைத்துவம் செய்கிறதென்பதைக் குறிப்பிடுகிறது. வணிக மாதிரி, ஒப்பந்தக் காசுப்பாய்சல்களை திரட்டுவதிலிருந்தா, அல்லது நிதிசார் சொத்துகளை விற்பனை செய்வதிலிருந்தா, அல்லது இவையிரண்டின் மூலமாகவா ஏற்படுத்தப்படும் என்பதைத் தீர்மானிக்கிறது.

சந்தையில் (வழமையையான வாணிப முறை) விதிமுறை அல்லது உடன்பாடு மூலமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நேரச் சட்டகத்திற்குள் சொத்துகளின் விநியோகத்தைத் தேவைப்படுத்தும் நிதிசார் சொத்துகளின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகள் வர்த்தகத் திகதியில், அதாவது குழுமம் சொத்தை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு உறுதியளிக்கின்ற திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமம் அதன் நிதிசார் சாதனங்களை பின்வரும் வகைகளில் வகைப்படுத்துகிறது:

## அ. கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் சொத்துகள்

பின்வரும் இரு நிபந்தனைகளும் திருப்தி செய்யப்படின் குழுமம் நிதிசார் சொத்துகளை கடன்தீர்ப்புக் கிரயத்தில் அளவிடுகிறது:

- ஒப்பந்தக் காசுப்பாய்சல்களை திரட்டும் முகமாக நிதிசார் சொத்துகளை வைத்திருக்கும் குறிக்கோளோடு ஒரு வணிக மாதிரியினுள் நிதிசார் சொத்து வைத்திருக்கப்படல், மற்றும்
- நிதிசார் சொத்தின் ஒப்பந்தக் காலங்கள் குறிப்பிட்ட திகதிகளில் நிலுவையாகவுள்ள முதல் தொகை மீது முதல் மற்றும் வட்டியின் தனிக் கொடுப்பனவுகளான காசுப் பாய்ச்சல்களுக்கு அதிகரிப்பைக் கொடுக்கும் போதும்

கடன்தீர்ப்புக் கிரயத்திலான நிதிசார் சொத்துகள் பின்னர் பயனுறுதியான வட்டி வீத (EIR) முறையை உபயோகித்து அளவிடப்படுவதுடன் சேத இழப்புக்கும் உட்படுகின்றன. சொத்து அங்கீகாரம் நீக்கப்படுகையில், புதுப்பிக்கப்படுகையில் அல்லது குறைக்கப்படுகையிலான இலாப, நட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

குழுமத்தின் கடன்தீர்ப்புக் கிரயத்திலுள்ள நிதிசார் சொத்துகள் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், மற்றும் ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் திறைசேரி முறிகள் & உண்டியல்கள், நிலையான வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

## ஆ. OCI மூலமாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட நிதிசார் சொத்துகள்

ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, IAS 32 நிதிசார் சாதனங்களின் கீழ் ஒப்புரவு வரைவிலக்கணத்தை அவை திருப்திப்படுத்தும் போது OCI மூலமாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட ஒப்புரவான நிதிசார் சொத்துகளை ஒப்புரவுச் சாதனங்களாக மாற்றவியலாத விதத்தில் வகைப்படுத்துவதற்கு குழுமம் தெரிவு செய்ய முடியும்: வர்த்தகத்திற்காக சமர்ப்பணம் செய்யப்படவில்லை. வகைப்படுத்தல் ஒரு சாதனத்திற்கு சாதனம் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த நிதிசார் சொத்துகள் மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வருமானக் கூற்றில் ஒரு போதும் மீள்சுழற்றப்படுவதில்லை. பங்கு இலாபங்கள், கொடுப்பனவுக்கான உரிமை ஸ்தாபிக்கப்படும் போது வருமானக்கூற்றில் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது. எனினும், குழுமம் நிதிசார் சொத்தின் கிரயத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வருமானத்திலிருந்து நன்மை அடைகையில், அத்தகைய இலாபம் OCI இல் பதிவு செய்யப்படுகிறது.

இந்த வகையின் கீழ் குழுமம் அதன் விலை குறிக்கப்பட்ட மற்றும் பட்டியல்படுத்தப்படாத உரிமையாண்மை முதலீடுகளை வகைப்படுத்துவதற்கு தெரிவு செய்தது.

## அங்கீகார நீக்கம்

ஒரு நிதிசார் சொத்து (அல்லது, பொருத்தமானவிடத்து, நிதிசார் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிசார் சொத்துகளின் ஒரு தொகுதியின் பகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது அடிப்படையில் அங்கீகார நீக்கம் பெறுகிறது (அதாவது, குழுமத்தின் ஒன்றிணைத்த நிதிசார் நிலைமைக் கூற்றிலிருந்து நீக்கப்படுதல்):

- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமை காலாவதியாகையில், அல்லது
- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமைகளை குழுமம் உரிமை மாற்றம் செய்திருத்தல் அல்லது ஒரு 'ஊடு கடத்தல்' ஏற்பாட்டின் கீழ் பெற்றுக் கொண்ட காசுப்பாய்சல்களை முழுமையாக ஒரு மூன்றாம் தரப்புக்கு பொருண்மைத் தாமதமின்றி கொடுப்பனவு செய்வதற்கான ஒரு கடப்பாட்டை ஏற்றமை மற்றும் (அ) குழுமம் சொத்தின் அனைத்து இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளைக் பெருமளவிற்கு உரிமை மாற்றியுள்ளமை, அல்லது (ஆ) குழுமம் சொத்தின் அனைத்து இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளைக் பெருமளவிற்கு உரிமை மாற்றவோ அன்றேல் வைத்திருக்கவோ இல்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை உரிமை மாற்றியுள்ளமை, ஆகிய இரண்டிலொரு நிலை.

குழுமம் ஒரு சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றி அல்லது ஓர் ஊடு கடத்தல் ஏற்பாட்டை மேற்கொண்டோ இருக்கும் போது, அது எந்தளவிற்கு உரிமையுடைமையின் இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்கிறது மற்றும் வைத்திருப்பின், என்பதை குழுமம் மதிப்பீடு செய்கிறது. அது, சொத்தின் அனைத்து இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவிற்கு உரிமை மாற்றமோ அன்றேல் தக்க வைத்திருத்தலையோ மேற்கொள்ளாதும், அல்லது சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்திருக்காத போதும், குழுமம் அதன் தொடர்ச்சியான சம்பந்தப்படுதல்கள் சொத்துடன் உள்ளவாறானளவிற்கு மாற்றப்பட்ட சொத்தை தொடர்ந்து அங்கீகரிக்கவும் செய்கின்றது. அச்சந்தர்ப்பத்தில், குழுமம் சொத்துடன் இணைந்தவொரு பொறுப்பையும் கூட அங்கீகரிக்கின்றது. மாற்றப்பட்ட சொத்தும் மற்றும் இணைந்த பொறுப்பும் குழுமம் தக்க வைத்துக்கொண்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலிக்கும் ஓர் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

## நிதிச் சொத்துகளின் சேத இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், ஒரு நிதிசார் சொத்து அல்லது ஒரு தொகுதி நிதிசார் சொத்துகள் சேத இழப்பைக் கொண்டுள்ளதா என்பதற்கு அங்கே ஏதேனும் சான்று நிரூபணம் உள்ளதா என்பதை குழுமம் மதிப்பிடும். சொத்தின் ஆரம்ப அங்கீகரித்தலின் (ஏற்பட்ட ஓர் 'இழப்பு நிகழ்வு' பின்னர் நடைபெற்ற ஒன்றோ அல்லது மேற்பட்ட நிகழ்வுகளின் ஒரு விளைவாக சேத இழப்புக்கான சான்று நிரூபணம் அங்கு இருப்பின், மற்றும் அந்த இழப்பு சம்பவம் உறுதியான வகையில் கணிப்பிடப்படக் கூடிய நிதிசார் சொத்து அல்லது தொகுதி நிதிசார் சொத்துகளின் கணிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருந்தால்

மட்டும், ஒரு நிதிசார் சொத்து அல்லது ஒரு தொகுதி நிதிசார் சொத்துகள் சேத இழப்புடையவையெனக் கருதப்படும். எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் (ECL), ஒப்பந்தத்திற்கு அமைவாக உரியதான ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் மற்றும் மூலப் பயனுறுதி வட்டி வீதத்தின் ஓர் அண்ணளவானளவில் தள்ளுபடி செய்யப்பட்டு, குழுமம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் அனைத்துக் காசுப் பாய்ச்சல்கள் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டின் அடிப்படையிலானவையாகும். எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்கள் வைத்துள்ள பிணையுறுதிகளின் விற்பனை அல்லது ஒப்பந்த நிபந்தனைகளின் முக்கியமானவையான ஏனைய கடன் அதிகரித்தல்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் இரண்டு நிலைமைகளில் அங்கீகரிக்கப்படுகின்றன. முதலாவது, ஆரம்ப அங்கீகரித்தல் தொடக்கம் கடன் இடரேதுநிலையில் ஒரு குறிப்பிடத்தக்கதான அதிகரிப்பைக் கொண்டிருக்காத கடன் வெளிப்படுத்தல்களுக்காக, அடுத்த 12 மாதங்களினுள் சாத்தியமாகும் மீள்செலுத்தல் கொடாநிலைகளிலிருந்து ஏற்படும் கடன் இழப்புகளுக்காக ECL ஏற்பாடளிக்கிறது (ஒரு 12 மாத ECL). அடுத்தது, ஆரம்ப அங்கீகரித்தலில் இருந்து கடன் இடரேதுநிலையில் ஒரு கணிசமான அதிகரிப்பு கொண்ட கடன் வெளிப்படுத்தல்களுக்காக, காலத் தவறுதல்களைக் கவனத்தில் கொள்ளாது, வெளிப்படுத்தலின் எஞ்சிய ஆயுள் முழுவதுமாக எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளுக்கு தேவையான ஒரு நட்டச் சலுகைத்தொகை (ஓர் ஆயுட்கால ECL).

வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளுக்கான, சேத இழப்புச் சான்று கடனாளிகள் அல்லது கடனாளிகளின் ஒரு குழு குறிப்பிடத்தக்கதான நிதி நெருக்கடிகளை அனுபவிக்கின்றனர், வட்டி அல்லது முதல் கொடுப்பனவுகளில் கொடாநிலை அல்லது தவறுதல், அவர்கள் வங்குரோத்து அல்லது ஏனைய நிதிசார் மீள்ஸ்தாபித்தல் என்பவற்றுக்குள் அவர்கள் செல்லும் சாத்தியம், மற்றும் அங்கே எச்சத் தொகைகள் அல்லது கொடா நிலைகளுடன் ஒத்திணையும் பொருளாதார நிலைமைகள் போன்ற கணிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் ஒரு அளவிடத்தக்கதான குறைவைச் சுட்டிக்காட்டும் அவதானிக்கத்தக்கதான தரவுகள் என்பவற்றை உள்ளடக்கலாம். குழுமம், அதன் வரலாற்று ரீதியான கடன் இழப்பு அனுபவங்கள் மீதான அடிப்படையில், கடனாளிகளுக்கு குறிப்பானதாக முன்நோக்கிப் பார்க்கும் காரணிகளுக்காக சீரமைத்துக் கொண்ட ஓர் ஏற்பாடளித்தல் அமைவுருவை ஸ்தாபித்தது.

ஒப்பந்த ரீதியான கொடுப்பனவுகள் அரிதானவையாகும் போது, ஒரு நிதிசார் சொத்து கொடாநிலையிலுள்ளது என குழுமம் கருதுகிறது. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில், குழுவினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் கடன் மேம்படுத்தல்களை கவனத்தில் கொள்வதற்கு முன் நிலுவையாயகவுள்ள ஒப்பந்தப்படுத்தப்பட்ட தொகைகளை குழுமம் முழுமையாக பெறுவது அசாத்தியமென உள்ளக மற்றும் வெளியகத் தகவல்கள் சுட்டிக்காட்டும் போதும் ஒரு நிதிசார் சொத்து கொடாநிலையில் உள்ளதென குழுமம் கருதலாம். ஒப்பந்தப்படுத்தப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் மீளப்பெறுதலுக்கு நியாயமான எதிர்பார்ப்பு அங்கே இல்லை எனும் போது ஒரு நிதிசார் சொத்து குழுமத்தின் பதிவுகளில் பதிவழிப்பு செய்யப்படுகிறது. வருமானக் கூற்றில் சேத இழப்பு நட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என்பதை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் முக்கியமான வர்த்தக வருமதிகளைத் தனித்தனியாக குழுமம் மீளாய்வு செய்கிறது. வர்த்தக வருமதிகளை தனித்தனியாக குழுமம் மதிப்பிடுவதால் மேலதிகமாக சேத இழப்புக் கணிப்பு செய்யப்பட வேண்டியதில்லை எனக் கண்டது.

## II) நிதிசார் பொறுப்புகள்

ஆரம்பநிலை அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல்

நிதிசார் பொறுப்புகள், இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் மூலமாக, வர்த்தக மற்றும் பொருத்தமான ஏனைய சென்மதிகளையும் உள்ளடக்கியதாய் நியாயப் பெறுமதியில் நிதிசார் பொறுப்புகளாக, ஆரம்பநிலை அங்கீகாரத்தில் வகைப்படுத்தப்படுகின்றது.

அனைத்து நிதிசார் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றதுடன், கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் மற்றும் சென்மதிகளைப் பொறுத்தவரை, நிகர நேரடிப் பரிவர்த்தனை நடவடிக்கைக் கிரயம் உபயோகிக்கப்படக்கூடியது.

குழுமத்தின் நிதிசார் பொறுப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள், வங்கி மேலதிகப் பற்றுகள் உட்பட கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது.

### பின்னிட்ட அளவிடல்

கடன்தீர்ப்புக் கிரயத்தில் கடன்கள் & கடன்பெறுதல்கள் மற்றும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்

ஆரம்பநிலை அங்கீகரித்தலின் பின்னர், வட்டி அறவிடும் கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் பின்னர் EIR முறைமை உபயோகித்து கடன்தீர்ப்புக் கிரயத்தில் அளவிடப்படுகிறது. பொறுப்புகள் அங்கீகார நீக்கம் செய்யப்படும் போதானதும் அதே போன்று EIR கடன்தீர்ப்புச் செய்முறை மூலமானதுமான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வருமான கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

கடன்தீர்ப்புக் கிரயம் கைப்படுத்தலின் மீதான ஏதேனும் தள்ளுபடி அல்லது முனைமம் மற்றும் EIR இன் ஒரு முக்கியமான பகுதியான கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கணக்கிலெடுத்து கணிப்பிடப்படுகிறது. EIR கடன்தீர்ப்பு வருமானக் கூற்றில் நிதிசார் செலவுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

### அங்கீகார நீக்கம்

பொறுப்பின் கீழான கடப்பாடு தீர்க்கப்பட்டு அல்லது இரத்துச் செய்யப்பட்டு அல்லது காலாவதியாகும் போது ஒரு நிதிசார் பொறுப்பு அங்கீகாரம் நீக்கப்படுகிறது. இருக்கின்ற நிதிசார் பொறுப்பு அதே கடனளிப்பவரிடமிருந்தான மற்றொன்றால் கணிசமாக வேறுபட்ட நிபந்தனைகளில், அல்லது இருக்கின்ற ஒரு பொறுப்பின் நிபந்தனைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டு மாற்றீடு செய்யப்படும் போது, அத்தகைய ஒரு பரிமாற்றம் அல்லது மாற்றியமைத்தல் மூலப் பொறுப்பினது அங்கீகார நீக்கமாகவும் மற்றும் புதியதொரு பொறுப்பின் அங்கீகாரமாகவும் கருதப்படுகிறது. சம்பந்தப்பட்ட தொகைகளிற்கிடையிலான வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது.

## III) நிதிசார் சாதனங்களை எதிர்தீர்த்தல் செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் எதிர்தீர்த்தலுக்கு தற்போது வலியுறுத்தத் தகுந்த ஒரு சட்ட உரிமை அங்கிருப்பின், மற்றும் நிதிசார் சொத்துகளை பயனுறும் மற்றும் நிதிசார் பொறுப்புகளை ஒரே சமயத்தில் தீர்த்தும், ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பதற்கான ஒரு நோக்கம் அங்கிருப்பின், நிதிசார் சொத்துகளும் மற்றும் நிதிசார் பொறுப்புகளும் எதிர்தீர்த்தல் செய்யப்பட்டு, நிகரதொகை நிதிசார் நிலைமையின் திரட்டிய கூற்றில் குறிக்கப்படுகிறது.

### நியாயப் பெறுமதியில் தீர்மானித்தல்

அறிக்கைத் திகதியில் வினைத்திறனான சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் நிதிசார் சாதனங்களுக்கான நியாயப் பெறுமதி, பரிவர்த்தனை நடவடிக்கைகள் கிரயத்திற்கு எந்தத் தள்ளுபடிகளுமின்றி அவற்றின் சந்தைக் குறிப்பிடப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டது.

ஒரு வினைத்திறனான சந்தையில் வர்த்தகம் செய்யப்படாத ஏனைய அனைத்து நிதிசார் சாதனங்களுக்கான, நியாயப் பெறுமதி பொருத்தமான விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்களை உபயோகித்து தீர்மானிக்கப்படுகிறது. விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் முறை, ஒத்த சாதனங்களுக்காக அவதானிக்கக்கூடிய சந்தை விலைகளுடனான ஒப்பிடுதல் மற்றும் ஏனைய தொடர்புபட்ட விலைமதிப்பிடல் மாதிரிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

சில நிதிசார் சாதனங்கள் விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்களை உபயோகித்து நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன, அதில் நடப்புச் சந்தைப் பரிவர்த்தனைகள் அல்லது அவதானிக்கப்படக்கூடிய சந்தைத் தரவுகள் இருக்காது. மிகப் பொருத்தமான மாதிரி கருதுகோள்களின் குழுமத்தின் சிறந்த மதிப்பீட்டுடன் விலைமதிப்பிடல் மாதிரிகளை உபயோகித்து அவற்றின் நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது.

நிதிசார் சாதனங்களின் நியாயப் பெறுமதிகளின் ஒரு பகுப்பாய்வு மற்றும் அவை எவ்வாறு அளவிடப்படுகின்றதுக்கான மேலதிக விபரங்கள் குறிப்பு 12.1 இல் தரப்பட்டுள்ளன.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் SLFRS 09 நிதிசார் சாதனங்களை வெளியிட்டது, அது நிதிசார் சாதனங்களைப் பிரதிபலிக்கின்றதுடன் LKAS 39 நிதிசார் சாதனம், அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதலை மாற்றீடு செய்கிறது. இத் தராதரங்கள் வகைப்படுத்தல் மற்றும் சேத இழப்பு மற்றும் ஹெட்ஜ் கணக்கீடு (Hedge Accounting) என்பவற்றுக்கான புதிய தேவைப்பாடுகளை அறிமுகம் செய்கின்றன.

### 1.4.15 நிகழ்சாத்தியப் பொறுப்புகள், வழக்காடல் மற்றும் பற்றுறுதிகள்

நிகழ்சாத்தியப் பொறுப்புகள் என்பவை சாத்தியம் கொண்ட கடப்பாடுகள், அவற்றின் இருப்பு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகளால் மாத்திரமே உறுதிப்படுத்தப்படும் என்பதுடன் அங்கு பொருளாதார நன்மை மாற்றப்படுவது சாத்தியமில்லை அல்லது உறுதியாக அளிவிடப்பட முடியாது. நிகழ்சாத்தியப் பொறுப்புகள் நிதிசார் கூற்றுகளில் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆயினும், அவை அரிதானவையாக இருந்தாலன்றி, நிதிசார் கூற்றில் வெளிப்படுத்தப்படும்.

### 1.5 விடுக்கப்பட்ட கணக்கீட்டுத் தராதரங்கள் ஆனால் இன்னமும் பயனுறுதியானவையல்ல

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் பின்வரும் SLFRS விடுக்கப்பட்டு அவை எதிர் வரும் காலத்தில் ஒரு பயனுறுதியான திகதியைக் கொண்டுள்ளதுடன் இந்த நிதிசார்கூற்றுகளைத் தயார் செய்வதில் பிரயோகிக்கப்படவில்லை. அந்த SLFRS குழுமத்தால் தற்போது கடைப்பிடிக்கப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்குமென்பதுடன் எதிர்கால நிதிக் கூற்றுகளில் ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கலாம்.

அ) SLFRS 16 - குத்தகைகள்

ஒரு குத்தகைக்காரர், ஒரு கடந்தகாலத்தை முழுமையாக உள்ளடக்கி அல்லது ஒரு மாற்றியமைத்த கடந்த காலத்தை உள்ளடக்கிய ஒரு அணுகுமுறையை உபயோகித்து தராதரத்தை பிரயோகிப்பதற்கு தெரிவு செய்யலாம். தராதர நிலைமாறுதல் ஏற்பாடுகள் சில நிவாரணங்களை அனுமதிக்கின்றன. SLFRS 16 இலிருந்தான சாத்தியமான தாக்கத்தை முகாமைத்துவம் இன்னமும் அளவிடுவதற்கு வேண்டியுள்ளது.

இந்தத் தராதரம் ஜனவரி 1, 2019 அன்றான அல்லது அதற்கு பிந்திய திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வருட காலங்களுக்கு பயனுறுதியாக வருகின்றது.

கூட்டுத்தாபனம் இந்தத் தராதரங்களை அவை பயனுறுதியாக வந்த பின் ஏற்றுக்கொள்ளும். விபரமான மீளாய்வின் பூர்த்தி முடிவடைவதற்கு காத்திருப்பதின் காரணமாக, இந்த நிதிசார் கூற்றுகளின் பிரசுரித்தல் திகதியன்று நிதிசார் தாக்கம் நியாயமான வகையில் கணிப்பிடத்தக்கதாக இல்லை.

பின்வரும் தராதரங்கள், திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் குழுமத்தின் நிதிசார் கூற்றுகள் மீது ஒரு குறிப்பிடத்தக்கதான தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

- திட்டத் திருத்தம், குறைத்தல் அல்லது தீர்த்தல் (LKAS 19 இற்கான திருத்தங்கள்)
- பொருள் வரைவிலக்கணம் (LKAS 1 மற்றும் 8 இற்கான திருத்தங்கள்)
- எதிர்மறை இழப்பீட்டுடன் முன்கொடுப்பனவு அம்சங்கள் (SLFRS 9 இற்கான திருத்தங்கள்)

வரி வருடங்கள் 2002/2003, 2013/14, 2014/2015 மற்றும் 2015/2016 இற்கான மதிப்பீடுகள் ரூ.2,755 மில்லியன், ரூ.100 மில்லியன், ரூ.723 மில்லியன் மற்றும் ரூ.70 மில்லியனிற்கு முறையே விடுக்கப்பட்டுள்ளதுடன் இ.பெ.கூ அந்த மதிப்பீடுகளுக்கு எதிராக பயனுறுதியான மேன்முறையீடுகளை மேற்கொண்டுள்ளது.

2007/08 வரி மதிப்பாண்டுக்காக இ.பெ.கூ வருமான வரி கட்டுவதற்கு பொறுப்புடையதென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. புதிய கணிப்பிடுதல்களின் படி, இந்தப் பொறுப்பு ரூ.393 மில்லியன் தொகையாகும்.

இ.பெ.கூ காணியின் அளவிடுதலுக்கான அதன் கணக்கீட்டை மீள்விலைமதிப்பிடல் முறைக்கு மாற்றியதுடன் மீள்விலைமதிப்பிட்ட தொகைகள் நிதிசார் கூற்றுக்களில் உள்ளிணைக்கப்பட்டுள்ளன. இ.பெ.கூ 2018 வருடத்தின் போது நான்கு காணிகளை மீள்விலை மதிப்பீடு செய்ததுடன் விலைமதிப்பிடல் திணைக்களம், தகுதிபெற்ற ஒரு சுயாதீன விலைமதிப்பீட்டாளரை, காணியின் நியாயப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு ஈடுபடுத்தியது. நியாயப் பெறுமதி சந்தை அடிப்படையிலான சான்றுக்கு குறிப்புரைத்தல் மூலம் தீர்மானிக்கப்பட்டது. விலைமதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட அந்த விலைமதிப்பிடல்கள் வினைத்திறனான சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டு, குறித்த ஆதனத்தின் தன்மை, அமைவு அல்லது நிபந்தனை என்பவற்றிலான ஏதேனும் வேறுபாடுகளுக்கு சீர்செய்து கொண்டதை, இது அர்த்தப்படுத்தியது.

முதலீட்டு ஆதனங்களின் நியாயப் பெறுமதி, விலைமதிப்பிடல் திணைக்களத்தினால் 2012 மற்றும் 2016 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட விலை மதிப்பிடல்களை அடிப்படையாகக் கொண்டது. திணைக்களத்தின் விலைமதிப்பீட்டாளர்கள் சுயாதீனமானவர்கள், கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபடவில்லை.

## 2. வருமானம்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 மீள்குறிப்பிட்டது | 2018 | 2017 மீள்குறிப்பிட்டது |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| உள்நாட்டு விற்பனை | 519,323.054 | 473,956.995 | 519,323.054 | 473,956.995 |
| ஏற்றுமதி | 72,434.772 | 42,814.169 | 72,434.772 | 42,814.169 |
| கப்பல் எரிபொருள் | 495.054 | - | 495.054 | 233.906 |
| முனையக் கட்டணங்கள் ரூ ஏனையவை | - | - | 1,271.160 | 440.722 |
| மொத்த விற்பனை | 592,252.880 | 516,771.164 | 593,524.040 | 517,445.791 |
| கழி: கலால் தீர்வை ரூ தே.க.வ | (71,285.656) | (70,820.778) | (71,285.656) | (70,820.778) |
| **நிகர வருமானம்** | **520,967.224** | **445,950.386** | **522,238.384** | **446,625.013** |

## 3. ஏனைய செயற்பாட்டு வருமானம்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி |
| முதலீட்டு சொத்து மீதான வருமானம் | 39.879 | 38.359 | 39.879 | 38.359 |
| ஊழியர் கடன் வட்டி | 214.659 | 210.318 | 794.110 | 563.085 |
| வாடகை வருமானம் | 10.914 | 10.328 | 14.311 | 12.994 |
| ஆதனம், பொறி & உபகரணம் விற்பனை மீதான இலாபம்/(நட்டம்) | 0.046 | (4.914) | 26.468 | (1.319) |
| நிரப்பு நிலைய உபகரண விற்பனை மீதான இலாபம் | 17.149 | 22.728 | 17.149 | 22.728 |
| பங்கிலாப வருமானம் | 434.063 | 243.105 | 0.063 | 0.105 |
| பல்வகை வருமானம் | 96.115 | 150.523 | 184.469 | 242.415 |
| | **812.825** | **670.446** | **1,076.449** | **878.366** |

## 4.தொழிற்பாட்டு இலாபம்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி |
| பின்வரும் செலவினங்கள் அறவிட்ட பின்னர் தொழிற்பாட்டு இலாபங்கள் குறிப்பிடப்பட்டன | | | | |
| பணிப்பாளர்கள் ஊதியங்கள் | 1.595 | 1.388 | 13.027 | 11.172 |
| கணக்காய்வாளர் ஊதியம் | 2.000 | 2.000 | 3.943 | 3.800 |
| தேய்மானம் (குறிப்பு 8) | 725.587 | 726.476 | 1,545.840 | 1,604.831 |
| விளம்பரச் செலவு | 37.476 | 26.763 | 37.476 | 26.763 |
| சட்டக் கட்டணம் & ஏனைய தொழில்சார் கட்டணம் | 62.454 | 156.435 | 62.454 | 156.435 |
| அனுமதிக்கப்படாத பெறுமதி சேர் வரி (VAT) | 2,741.672 | 2,252.653 | 2,741.672 | 2,252.653 |
| பொதுத் திறைசேரிக்கான விசேட கட்டணம் | 1,000.000 | 1,000.000 | 1,000.000 | 1,000.000 |

## 5. நிதிசார் வருமானம்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி |
| திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புகள் மற்றும் கோரிக்கை வைப்புகள் மீதான வட்டி வருமானம் | 4,749.463 | 4,041.318 | 4,867.340 | 4,230.759 |
| கடன் பட்டியல் & நாட்பட்ட வர்த்தகக் கடன்கள் மீதான வட்டி வருமானம் | 17.576 | 30.241 | 17.576 | 30.241 |
| இ.மி.ச/IPP/விமான எரிபொருள் கடனாளிகள் மீதான வட்டி வருமானம் | 5,152.443 | 3,561.129 | 5,152.443 | 3,561.129 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டி வருமானம் | 2,968.440 | 3,433.551 | 2,968.440 | 3,433.551 |
| வ.வெ.நா (RFC) கணக்கு & ஏனைவைகள் மீதான வட்டி வருமானம் | 1.252 | 0.843 | 1.252 | 0.843 |
| | **12,889.174** | **11,067.082** | **13,007.051** | **11,256.523** |

## 6. நிதிசார் செலவுகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி |
| நீண்ட காலக் கடன்கள் மீதான வட்டி | 29.244 | 39.879 | 29.244 | 163.952 |
| வெளிநாட்டு நாணய வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 12,024.101 | 10,457.912 | 12,024.101 | 10,457.912 |
| ஏனைய நிதிசார் செலவு | 11.711 | 33.020 | 11.711 | 33.020 |
| | **12,065.056** | **10,530.811** | **12,065.056** | **10,654.884** |

# 7. வரிச் செலவு

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 மீள்குறிப்பிட்டது | 2018 | 2017 மீள்குறிப்பிட்டது |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| **நடப்பு வரி** | | | | |
| நடப்பு வருமான வரி | - | 1,407.718 | 333.928 | 1,907.505 |
| முன்னைய வருடங்களின் குறை/(மிகை) ஏற்பாடு | (21.390) | - | 7.454 | (23.205) |
| பங்கிலாபம் மீதான நிறுத்தி வைக்கப்பட்ட வரி (WHT) | 43.400 | | 43.400 | |
| விநயோகிக்கக்கூடிய இலாபம் மீதான வரி | | 351.877 | | 351.878 |
| **ஒத்திவைக்கப்பட்ட வரி** | | | - | |
| தற்காலிக வேறுபாடுகளின் ஆரம்ப மற்றும் மறுதிருப்பல் - வருமானக் கூற்று | - | - | 962.139 | 24.155 |
| **வருமான வரிச் செலவு - வருமானக் கூற்று** | **22.010** | **1,759.595** | **1,346.922** | **2,260.333** |
| **வருமான வரிச் செலவு - ஏனைய முழு வருமானம்** | **-** | **-** | **18.336** | **(12.761)** |
| **மொத்த வருவமான வரிச் செலவு** | **22.010** | **1,759.595** | **1,365.258** | **2,247.572** |

நடப்பு வரி அறவீடு மற்றும் இலாபத்திற்கு முந்திய வரி என்பவற்றுக்கிடையிலான ஒரு இணக்கக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| வரிக்கு முந்திய கணக்கீட்டு இலாபம்/(நட்டம்) | (105,028.625) | 2,815.229 | (103,939.812) | 5,845.885 |
| சேர்: அனுமதிக்கவியலாச் செலவுகள் | 49,042.211 | 1,195.579 | 50,500.145 | 2,521.222 |
| கழி: அனுமதிக்கவியலும் செலவுகள் & வருமானம் தவிர்த்து | (1,520.186) | (1,711.796) | (3,158.891) | (2,952.876) |
| **சீராக்கிய வர்த்தக இலாபம்** | **(57,506.600)** | **2,299.012** | **(56,598.558)** | **5,414.231** |
| கழி: வரி இழப்புகளின் உபயோகித்தல் | (7,883.226) | (2,707.151) | (7,883.226) | (2,939.276) |
| சேர்: வருடத்திற்கான வரி இழப்பு | 65,389.826 | 5,435.704 | 65,389.826 | 4,883.713 |
| **வரி விதிப்பு வருமானம்** | **0.000** | **5,027.566** | **908.042** | **7,358.669** |
| அறவிடப்பட்ட வருமான வரி | | | | |
| 28% | (0.000) | 1,407.718 | 0.000 | 1,407.718 |
| சலுகை வீதங்கள் | - | - | 333.928 | 499.786 |
| முந்திய வருடங்களின் குறை/(மிகை) ஏற்பாடு | (21.390) | - | 7.454 | (23.205) |
| விநியோகிக்கக்கூடிய இலாபம் மீதான வரி | - | 351.877 | - | 351.877 |
| பங்கிலாபம் மீதான நி.வை.வ (WHT) | 43.400 | | 43.400 | |
| வருமானக் கூற்றுக்கு ஒத்திவைக்கப்பட்ட வரி அறவீடு | - | - | 962.139 | 24.156 |
| தற்காலிக வேறுபாடுகளின் ஆரம்பம் மற்றும் மறுதிருப்புதல் OCI | - | - | 18.336 | (12.761) |
| **வருமான வரிச் செலவு** | **22.010** | **1,759.595** | **1,365.258** | **2,247.572** |

வரிவிதிப்பு வருடங்கள் 2002/2003, 2013/14, 2014/2015 மற்றும் 2015/2016 இற்கான மதிப்பீடுகள் ரூ.2,755 மில்லியன், ரூ.100 மில்லியன், ரூ.723 மில்லியன் மற்றும் ரூ.70 மில்லியனிற்கு முறையே விடுக்கப்பட்டுள்ளதுடன் இ.பெ.கூ அந்த மதிப்பீடுகளுக்கு எதிராக பயனுறுதியான மேன்முறையீடுகளை மேற்கொண்டுள்ளது.

2007/08 வரி மதிப்பாண்டுக்காக, இ.பெ.கூ வருமான வரி கட்டுவதற்கு பொறுப்புடையதென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. புதிய கணிப்பிடுதல்களின் படி, இந்தப் பொறுப்பு ரூ.393 மில்லியன் தொகையாகும்.

# 8. ஆதனம், பொறி & உபகரணம் (இ.பெ.கூ)

## 8.1.செலவீனம்

| | காணி & கட்டிடங்கள் | உடைமையாக்கிய ஆதனம் | பொறி, இயந்திரம் & உபகரணம் | SPM வசதி | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்கள்/ இணைப்புகள், அலுவலக உபகரணம் & ஏனைய சொத்துகள் | மூலதன நடைமுறை வேலை | இ.பெ.கூ மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| 01/01/2018 அன்றான நிலுவை | 15,737.888 | 1.016 | 11,214.907 | 2,238.273 | 1,321.927 | 2,257.419 | 532.479 | 33,303.909 |
| சேர்த்தல்கள்/மாற்றல்கள் | 128.665 | - | 244.834 | - | 4.689 | 48.884 | 167.608 | 594.680 |
| மீள்மதிப்பீடு | 159.841 | - | - | - | - | - | - | 159.841 |
| அகற்றல்கள் | - | - | (21.479) | - | (1.626) | (0.917) | - | (24.022) |
| 31/12/2018 அன்றான நிலுவை | 16,026.394 | 1.016 | 11,438.261 | 2,238.273 | 1,324.990 | 2,305.387 | 700.087 | 34,034.407 |

## 8.2 தேய்மானம்

| | காணி & கட்டிடங்கள் | உடைமையாக்கிய ஆதனம் | பொறி, இயந்திரம் & உபகரணம் | SPM வசதி | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்கள்/ இணைப்புகள், அலுவலக உபகரணம் & ஏனைய சொத்துகள் | மூலதன நடைமுறை வேலை | இ.பெ.கூ மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| 01/01/2018 அன்றான நிலுவை | 797.937 | 0.397 | 5,296.249 | 1,300.219 | 638.801 | 1,661.721 | - | 9,695.324 |
| வருடத்திற்கான அறவிடல் | 114.523 | - | 564.544 | 31.566 | 182.866 | 63.537 | - | 957.035 |
| அகற்றல்கள் | - | - | (21.479) | - | (1.626) | (0.917) | - | (24.022) |
| 31/12/2018 அன்றான நிலுவை | 912.460 | 0.397 | 5,839.315 | 1,331.785 | 820.041 | 1,724.341 | - | 10,628.337 |
| **31/12/2018 அன்றான தேறிய புத்தகப் பெறுமதி (NBV)** | **15,113.934** | **0.619** | **5,598.947** | **906.488** | **504.949** | **581.046** | **700.087** | **23,406.070** |
| 31/12/2017 அன்றான கிரயம் | 15,737.888 | 1.016 | 11,214.907 | 2,238.273 | 1,321.927 | 2,257.419 | 532.480 | 33,303.909 |
| 31/12/2017 அன்றான திரட்டிய தேய்மானம் | 797.937 | 0.397 | 5,296.249 | 1,300.219 | 638.801 | 1,661.721 | - | 9,695.324 |
| 31/12/2017 அன்றான தேறிய புத்தகப் பெறுமதி (NBV) | 14,939.951 | 0.619 | 5,918.658 | 938.054 | 683.126 | 595.699 | 532.480 | 23,608.585 |

இ.பெ.கூ காணியின் அளவிடுதலுக்கான அதன் கணக்கீட்டை மீள்விலைமதிப்பிடல் முறைக்கு மாற்றியதுடன் மீள்விலைமதிப்பிட்ட தொகைகள் நிதிசார் கூற்றுக்களில் உள்ளிணைக்கப்பட்டுள்ளன. இ.பெ.கூ 2018 வருடத்தின் போது நான்கு காணிகளை மீள்விலை மதிப்பீடு செய்ததுடன் விலைமதிப்பிடல் திணைக்களம், தகுதிபெற்ற ஒரு சுயாதீன விலைமதிப்பீட்டாளரை, காணியின் நியாயப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு ஈடுபடுத்தியது. நியாயப் பெறுமதி சந்தை அடிப்படையிலான சான்றுக்கு குறிப்புரைத்தல் மூலம் தீர்மானிக்கப்பட்டது. விலைமதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட அந்த விலைமதிப்பிடல்கள் வினைத்திறனான சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டு, குறித்த ஆதனத்தின் தன்மை, அமைவு அல்லது நிபந்தனை என்பவற்றிலான ஏதேனும் வேறுபாடுகளுக்கு சீர்செய்து கொண்டதை, இது அர்த்தப்படுத்தியது.

கிரய மாதிரியை உபயோகித்து இந்தக் காணிகள் அளவிடப்பட்டிருந்தால், அவற்றின் முன்கொணர்ந்த பெறுமதிகள் பின்வருமாறு இருக்கும்:

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூ. மிலி | ரூ. மிலி |
| கிரயம் ; முன்கொணர்ந்த பெறுமதி | 0.073 | 0.073 |

31.12.2018 அன்றானவாறு முழுமையாகத் தேய்மானம் அடைந்த ஆதனம், பொறி & உபகரணத்தின் முன்கொணர்ந்த மொத்தப் பெறுமதி ரூ.4,821.475 மில்லியனாகும் (2017 இல் - ரூ.4,683.676 மில்லியன்).

# 8. ஆதனம், பொறி & உபகரணம் (குழுமம்)

## 8.1. செலவீனம்

| | காணி & கட்டிடங்கள் | உடைமையாக்கிய ஆதனம் | பொறி, இயந்திரம் & உபகரணம் | SPM வசதி | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்கள்/ இணைப்புகள், அலுவலக உபகரணம் & ஏனைய சொத்துகள் | மூலதன நடைமுறை வேலை | இ.பெ.கூ மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| 01/01/2018 அன்றான நிலுவை | 21,918.021 | 1.016 | 20,112.482 | 5,038.682 | 3,074.768 | 11,163.662 | 1,252.454 | 62,561.084 |
| சேர்த்தல்கள்/மாற்றல்கள் | 130.345 | - | 249.539 | - | 136.670 | 240.666 | 83.148 | 840.367 |
| மீள்மதிப்பீடு | 159.841 | - | - | - | - | - | - | 159.841 |
| அகற்றல்கள் | - | - | (21.479) | - | (48.811) | (1.021) | - | (71.311) |
| **31/12/2018 அன்றான நிலுவை** | **22,208.207** | **1.016** | **20,340.541** | **5,038.682** | **3,162.626** | **11,403.307** | **1,335.601** | **63,489.983** |

## 8.2. தேய்மானம்

| | காணி & கட்டிடங்கள் | உடைமையாக்கிய ஆதனம் | பொறி, இயந்திரம் & உபகரணம் | SPM வசதி | மோட்டார் வாகனங்கள் | தளபாடங்கள்/ இணைப்புகள், அலுவலக உபகரணம் & ஏனைய சொத்துகள் | மூலதன நடைமுறை வேலை | இ.பெ.கூ மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| 01/01/2018 அன்றான நிலுவை | 1,380.623 | 0.397 | 9,261.547 | 3,616.237 | 1,831.216 | 6,107.732 | - | 22,197.751 |
| வருடத்திற்கான அறவிடல் | 163.317 | - | 1,080.688 | 192.113 | 326.428 | 147.899 | - | 1,910.445 |
| அகற்றல்கள் | - | - | (21.479) | - | (48.714) | (0.946) | - | (71.139) |
| 31/12/2018 அன்றான நிலுவை | 1,543.940 | 0.397 | 10,320.756 | 3,808.349 | 2,108.930 | 6,254.685 | - | 24,037.058 |
| **31/12/2018 அன்றான தேறிய புத்தகப் பெறுமதி (NBV)** | **20,664.267** | **0.619** | **10,019.786** | **1,230.333** | **1,053.696** | **5,148.622** | **1,335.601** | **39,452.925** |
| 31/12/2017 அன்றான கிரயம் | 21,918.021 | 1.016 | 20,112.482 | 5,038.682 | 3,074.768 | 11,163.662 | 1,252.454 | 62,561.084 |
| 31/12/2017 அன்றான திரட்டிய தேய்மானம் | 1,380.623 | 0.397 | 9,261.547 | 3,616.237 | 1,831.216 | 6,107.732 | - | 22,197.751 |
| **31/12/2017 அன்றான தேறிய புத்தகப் பெறுமதி (NBV)** | **20,537.397** | **0.619** | **10,850.935** | **1,422.446** | **1,243.552** | **5,055.930** | **1,252.454** | **40,363.333** |

## 8.3 முதலீட்டு ஆதனம்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி | 2018 ரூ. மிலி | 2017 ரூ. மிலி |
| கிரயம் | | | | |
| வருட ஆரம்பத்திலான மிகுதி | 57.891 | 57.891 | 57.891 | 57.891 |
| சேர்: சேர்த்தல்கள்/மாற்றல்கள் | - | | - | - |
| வருட இறுதியிலான மிகுதி | 57.891 | 57.891 | 57.891 | 57.891 |
| **தேய்மானம்** | | | | |
| வருட ஆரம்பத்திலான மிகுதி | 17.763 | 16.316 | 17.763 | 16.316 |
| சேர்: PPE இலிருந்தான மாற்றல்கள் | | | | - |
| சேர்: வருடத்திற்கான அறவிடல் | 1.447 | 1.447 | 1.447 | 1.447 |
| வருட இறுதியிலான மிகுதி | 19.210 | 17.763 | 19.210 | 17.763 |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **38.681** | **40.128** | **38.681** | **40.128** |

முதலீட்டு ஆதனங்கள் தேர்ஸ்டன் வீதி, பிளவர் வீதி என்பவற்றில் அமைந்துள்ள ஆதனங்கள் & வாடகைக்கு கொடுத்துள்ள நிரப்பு நிலையங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன.

| விபரணம் | நியாயப் பெறுமதி ரூ.மிலி |
|---|---|
| இல.80, பிளவர் வீதி, கொழும்பு 07 | 40.000 |
| இல.22;1, தேர்ஸ்டன் வீதி, கொழும்பு 03 | |
| நிரப்பு நிலையங்கள் | 18.283 |

முதலீட்டு ஆதனங்களின் நியாயப் பெறுமதி, விலைமதிப்பிடல் திணைக் களத்தினால் 2012 மற்றும் 2016 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட விலை மதிப்பிடல்களை அடிப்படையாகக் கொண்டது. திணைக்களத்தின் விலை மதிப்பீட்டாளர்கள் சுயாதீனமானவர்கள், கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபடவில்லை.

## 8.4 அருவச் சொத்துகள்

| | குழுமம் | | | |
|---|---|---|---|---|
| | ERP முறைமை | SAP அனுமதி | தன்னியக்கமயமாக்குதல் முறைமை | மொத்தம் |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| **கிரயம்/முன்கொணரற் பெறுமதி** | | | | |
| வருட ஆரம்பத்தில் | 412.497 | 9.380 | 37.794 | 459.670 |
| சேர்க்கைகள்;மாற்றல்கள் | 129.542 | - | - | 129.542 |
| வருட இறுதியில் | 542.039 | 9.380 | 37.794 | 589.212 |
| **கடன்தீர்த்தல்** | | | | |
| வருட ஆரம்பத்தில் | 412.219 | 9.380 | 37.794 | 459.393 |
| வருடத்திற்கான அறவிடல் | 2.478 | - | | 2.478 |
| வருட இறுதியில் | 414.697 | 9.380 | 37.794 | 461.871 |
| கொணரற் பெறுமதி | | | | |
| **31.12.2018 அன்றானவாறு** | **127.342** | **-** | **-** | **127.342** |
| **31.12.2017 அன்றானவாறு** | **0.278** | **-** | **-** | **0.278** |

## 8.5 கடன்பெறல் செலவின் மூலதனமாக்கல்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புதிய நுழைவாயில் - E இல் இ.பெ.கூ இன் விமான எரிபொருள் மீள்நிரப்பல் முனையம் & இருக்கும் எரிபொருள் குழாய்முனை முறைமை மற்றும் ஒரு எரிபொருள் குழாய்முனை முறைமையைப் பொருத்துதல் என்பவற்றின் அபிவிருத்தி & தரமுயர்த்துதலின் நிர்மாணப்பணிகளை குழுமம் ஜனவரி 2018 இல் ஆரம்பித்தது. இந்த செயல்திட்டம் இரண்டு வெளிமூல வசதிகளால் நிதியளிக்கப்படுகின்றன (15% மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட வர்த்தகக் கடன் மற்றும் மிகுதி 85% ஒப்பந்தக்காரரினால் சுயநிதியிடல் அடிப்படையிலானது).

2018 வருடத்தின் போது மூலதனப்படுத்தப்பட்ட கடன்பெறல் செலவுத் தொகை ரூ.30.267 மில்லியனாகும். கடன்பெறல் செலவின் மூலதனப்படுத்தலைத் தீர்மானிப்பதற்கான வீதம் 7.56788% ஆகும்.

## 9. துணைநிறுவனத்தில் முதலீடு

| | இ.பெ.கூ | | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 | 2018 | 2017 |
| | வைத்திருப்பு % | வைத்திருப்பு % | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் | 66.67% | 66.67% | 5,000.000 | 5,000.000 | - | - |
| | | | 5,000.000 | 5,000.000 | - | - |

## 10. நடப்பிலல்லா நிதிசார் சொத்துகள்

| | | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள் | 10.1 | 12.500 | 29.000 | 12.500 | 29.000 |
| விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள் | 10.2 | 0.540 | 0.540 | 0.540 | 0.540 |
| உரிமையாண்மையிலா முதலீடுகள் | 10.3 | 25,406.501 | 29,844.492 | 25,406.501 | 29,844.492 |
| | | 25,419.541 | 29,874.032 | 25,419.541 | 29,874.032 |

## 10.1. விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து | | | | |
| ஒவ்வொன்றும் ரூ.10/= முழுமையாகக் கொடுப்பனவு செய்த 5,000,000 சாதாரண பங்குகள் | 29.000 | 29.500 | 29.000 | 29.500 |
| நியாயப் பெறுமதி மாற்றங்களுக்கான சீராக்கல் | (16.500) | (0.500) | (16.500) | (0.500) |
| | 12.500 | 29.000 | 12.500 | 29.000 |

## 10.2. விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| **வரையறுக்கப்பட்ட இலங்கை அசோசியேட்ஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம்** | | | | |
| ஒவ்வொன்றும் ரூ.10/= மதிப்பான 61,206 சாதாரணப் பங்குகள் | 0.539 | 0.539 | 0.539 | 0.539 |
| **வரையறுக்கப்பட்ட லங்கா லேலாண்ட் நிறுவனம்** | | | | |
| ஒவ்வொன்றும் ரூ.10/= மதிப்புள்ள 100 சாதாரணப் பங்குகள் | 0.001 | 0.001 | 0.001 | 0.001 |
| **சர்வதேச கூட்டுறவு பெற்றோலிய சங்கம்** | | | | |
| ஒவ்வொன்றும் US$ 100/= பெறுமதியான 5,499 பங்குகள் | | | | |
| ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் கூட்டிணைக்கப்பட்டது | 5.086 | 5.086 | 5.086 | 5.086 |
| கழி: சேத இழப்புக்கான ஏற்பாடு | (5.086) | (5.086) | (5.086) | (5.086) |
| | **0.540** | **0.540** | **0.540** | **0.540** |

OCI ஊடாக நியாயாப் பெறுமதியில் குறிப்பிடாத முதலீடுகள் நிதிசார் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டன, முதலீடுகள் கிரய விலையில் முன்கொணரப்பட்டன.

அறிக்கைத் திகதியில் கடன் இடரேதுநிலைக்கான அதிகபட்ச வெளிப்படுத்தல் OCI மூலமாக நியாயப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட ஒப்புரவுப் பங்குகளின் முன்கொணரற் பெறுமதியாகும்.

ஒரு சேத இழப்பு ஏற்பாடளிக்கப்பட்ட, சர்வதேசக் கூட்டுறவுப் பெற்றோலிய சங்கம் (International Cooperative Petroleum Association) தவிர்ந்த விலை குறிப்பிடா உரிமையாண்மைப் பங்கு முதலீடுகள் எவையும் நாட் கடந்தவையோ அல்லது சேத இழப்புக் கொண்டவையோ அல்ல.

## 10.3. விலைக்கூறிடா முதலீடுகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| நிலையான வைப்புகளிலான முதலீடுகள் | 5.000 | 5.000 | 5.000 | 5.000 |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | 25,401.501 | 29,839.492 | 25,401.501 | 29,839.492 |
| | **25,406.501** | **29,844.492** | **25,406.501** | **29,844.492** |

## 11. வர்த்தக & ஏனைய வருமதி

| | இ.பெ.கூ | | | |
|---|---|---|---|---|
| | 2018 | | 2017 | |
| | நடப்பு | நடப்பல்லா | நடப்பு | நடப்பல்லா |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| வர்த்தக வருமதிகள் | 82,575.246 | 3,601.342 | 76,956.161 | - |
| வருமதிகள் - உள்நாட்டு இறைவரி & சுங்கத் திணைக்களம் | 1,949.609 | - | 1,868.594 | |
| ஏனைய வருமதிகள் | 6,389.703 | 5,000.607 | 5,771.522 | 6,000.667 |
| வைப்புகள் & முன்கொடுப்பனவுகள் | 376.945 | 833.577 | 282.587 | 24.786 |
| முற்பணம் | 3,572.133 | - | 2,057.605 | |
| ஊழியர்களுக்கு கடன்கள் & முற்பணங்கள் | 43.558 | 3,535.116 | 54.119 | 2,938.187 |
| **மொத்தம்** | **94,907.195** | **12,970.642** | **86,990.589** | **8,963.640** |

டிசம்பர் 31 அன்றானவாறு, வர்த்தக வருமதிகளின் வயது முதிர்ச்சியடிப்படையிலான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது,

| | இ.பெ.கூ | |
|---|---|---|
| | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி |
| 30 நாட்களுக்கு குறைவானவை | 18,143.703 | 14,859.807 |
| 30-90 நாட்கள் | 10,930.265 | 14,894.417 |
| 91 - 180 நாட்கள் | 17,384.670 | 17,017.983 |
| 181 - 365 நாட்கள் | 30,583.025 | 21,112.398 |
| 365 நாட்களுக்கு மேற்பட்டவை | 9,610.400 | 9,120.833 |
| **மொத்தம்** | **86,652.063** | **77,005.439** |
| சேத இழப்புக்கான ஏற்பாடளித்தல் | (475.476) | (49.278) |
| | **86,176.588** | **76,956.161** |

வர்த்தக வருமதிகளின் சேத இழப்புக்கான ஏற்பாடளித்தல்களிலான நகர்தல் பின்வருமாறு:

| | இ.பெ.கூ | |
|---|---|---|
| | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி |
| ஜனவரி 1, இலானவாறான மிகுதி | 49.278 | 49.621 |
| கழி: வசூலித்த தொகை | (1.097) | (0.343) |
| கழி: பதிவழிக்கப்பட்ட தொகை | - | - |
| சேர்: வருடத்திற்கான ஏற்பாடளித்தல் | 427.295 | - |
| **டிசம்பர் 31, இலானவாறான மிகுதி** | **475.4763** | **49.278** |

| | குழுமம் | | | |
|---|---|---|---|---|
| | 2018 | | 2017 | |
| | நடப்பு | நடப்பல்லா | நடப்பு | நடப்பல்லா |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| வர்த்தக வருமதிகள் | 84,956.226 | 3,601.342 | 77,596.222 | - |
| வருமதிகள் - உள்நாட்டு இறைவரி & சுங்கத் திணைக்களம் | 1,949.609 | | 1,868.594 | |
| ஏனைய வருமதிகள் | 6,629.877 | 5,000.607 | 5,910.078 | 6,000.668 |
| வைப்புகள் & முன்கொடுப்பனவுகள் | 1,727.046 | 833.577 | 1,264.301 | 24.786 |
| முற்பணம் | 3,572.132 | - | 2,057.605 | - |
| ஊழியர்களுக்கு கடன்கள் & முற்பணங்கள் | 1,566.998 | 4,673.947 | 1,893.093 | 3,382.443 |
| | **100,401.890** | **14,109.473** | **90,589.895** | **9,407.897** |

வர்த்தக வருமதிகளின் முன்கொணர்ந்த பெறுமதிகள் பின்வரும் நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| இலங்கை ரூபாய்கள் | 60,826.272 | 63,555.887 | 63,207.252 | 64,195.948 |
| அமெரிக்க டொலர்கள் | 25,350.316 | 13,400.274 | 25,350.316 | 13,400.274 |
| | **86,176.588** | **76,956.161** | **88,557.568** | **77,596.222** |

## 12 நிதிசார் சாதனங்கள்

### வகை ரீதியான அடிப்படையில் நிதிசார் சொத்துகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் சொத்துகள் | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 105,928.227 | 86,096.650 | 111,211.653 | 86,875.269 |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | 29,698.683 | 35,361.708 | 29,698.683 | 35,361.708 |
| வங்கிகளில் இடப்பட்டுள்ளவை | 95,022.630 | 5,168.258 | 95,022.630 | 5,168.258 |
| வங்கியிலுள்ள காசுக் கையிருப்பு | 11,279.951 | 9,385.759 | 14,428.587 | 10,859.879 |
| OCI ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிசார் சொத்துகள் | | | - | |
| விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள் | 0.540 | 0.540 | 0.540 | 0.540 |
| விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள் | 12.500 | 29.000 | 12.500 | 29.000 |
| **மொத்தம்** | **241,942.531** | **136,041.915** | **250,374.592** | **138,294.654** |

### வகை ரீதியில் நிதிசார் பொறுப்புகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி | ரூ.மிலி |
| **கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் பொறுப்புகள்** | | | | |
| கடன்பெறல்கள் | 296,240.036 | 179,907.331 | 296,240.036 | 179,904.331 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய சென்மதிகள் | 287,898.385 | 183,282.528 | 286,005.430 | 177,816.873 |
| **மொத்தம்** | **584,138.421** | **363,189.859** | **582,245.466** | **357,721.204** |

## 12.1 நிதிசார் சாதனங்களின் நியாயப் பெறுமதி

நிதிசார் கூற்றுகளில் நிதிசார் சாதனங்களாக வகைப்படுத்தப்பட்ட குழுமத்தின் நிதிசார் சாதனங்களின் முன்கொணர்ந்த பெறுமதி மற்றும் நியாயப் பெறுமதிகளின் தன்மை அடிப்படையிலான ஓர் ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது

| | | முன்கொணர்ந்த பெறுமதி | | நியாயப் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் 31, அன்றானவாறு | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| **நிதிசார் சொத்துகள்** | | | | | |
| நடப்பிலல்லா நிதிசார் சொத்துகள் | | | | | |
| விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள் | 12.1.1 | 12.500 | 29.000 | 12.500 | 29.000 |
| விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள் | 12.1.2 | 0.540 | 0.540 | 0.540 | 0.540 |
| நிலையான வைப்புகளிலான முதலீடுகள் | 12.1.3 | 5.000 | 5.000 | 5.000 | 5.000 |
| திறைசேரி முறிகளிலான முதலீடுகள் | 12.1.1 | 25,401.501 | 29,839.492 | 25,401.501 | 29,662.613 |
| வர்த்தக & ஏனைய வருமதிகள் | 12.1.4 | 106,403.879 | 86,096.650 | 105,928.227 | 86,096.650 |
| குறுகிய கால முதலீடுகள் | | | | | |
| வங்கி வைப்புகள் | 12.1.3 | 95,017.630 | 5,163.258 | 95,017.630 | 5,163.258 |
| அரசாங்க முறிகள் | 12.1.1 | 4,297.182 | 5,522.215 | 4,297.182 | 5,480.095 |
| காசும் காசுச் சமானங்களும் | 12.1.4 | 11,279.951 | 9,385.759 | 11,279.951 | 9,385.759 |
| **மொத்தம்** | | **242,418.182** | **136,041.915** | **241,942.531** | **135,822.915** |
| நிதிசார் பொறுப்புகள் | | | | | |
| கடன்கள் & கடன்பெறல்கள் | 12.1.3 | 1,577.435 | 265.858 | 1,577.435 | 265.858 |
| வர்த்தக & ஏனைய சென்மதிகள் | 12.1.4 | 287,898.385 | 183,282.528 | 287,898.385 | 183,282.528 |
| குறுகிய கால கடன்பெறல்கள் | 12.1.4 | 294,662.601 | 179,641.473 | 294,662.601 | 179,641.473 |
| | | **584,138.421** | **363,189.859** | **584,138.421** | **363,189.859** |

## நியாயப் பெறுமதியைத் தீர்மானித்தல்

### மதிப்பிடுதல் மாதிரி

வெளிவாரியாக விலைகள் குறிப்பிடுதல் அல்லது மாதிரிகளுக்கு அவதானிக்கக்கூடிய விலை உள்ளிடுதல்கள் என்பவற்றைக் குறித்துரைப்பதன் மூலம் நியாயப் பெறுமதிகள் தீர்மானிக்கப்படும் அனைத்து நிதிசார் சாதனங்களுக்காக, சுயாதீனமான விலைத் தீர்மானித்தல் அல்லது விலைமதிப்பிடல் பெறப்படுகின்றது. ஒரு வினைத்திறனான சந்தையில், ஒரு விற்பனை செய்யப்பட்ட விலையின் நேரடி அவதானித்தல் சாத்தியமல்லாததாக இருக்கலாம். இந்த சந்தர்ப்பங்களில், மாற்றுச் சந்தை பற்றிய தகவல்களையும் மற்றும் மிகவும் பொருத்தமானதும் மற்றும் நம்பக்கூடியதுமாக கருதப்படக்கூடிய தகவல்களுக்கு கூடுதல் முக்கியத்துவத்துடன், நிதிசார் சாதனத்தின் நியாயப் பெறுமதியை செல்லுபடியாக்குவதற்கு தள்ளுபடி செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல்களை குழுமம் பாவிக்கின்றது.

12.1.1 விலை குறிக்கப்பட்ட உரிமையாண்மை மற்றும் திறைசேரி முறிகளிலுள்ள முதலீடுகளின் நியாயப் பெறுமதி, அறிக்கைத் திகதியில் சந்தையில் குறிப்பிடப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டவை.

12.1.2 கிரயப் பெறுமதியை முன்கொணரும் விலை குறிப்பிடப்படாத உரிமையாண்மை முதலீடுகள் முதலீட்டின் பொருண்மையைக் கவனத்தில் கொண்டு அதன் நியாயப் பெறுமதியை சமன் செய்வதற்கு அனுமானிக்கப்படுகிறது.

12.1.3 வைப்புகளிலுள்ள முதலீடுகள் மற்றும் கடன்கள் & கடன்பெறுதல்கள் வட்டி வீதங்கள், வங்கியின் நம்பகத்தன்மை, மற்றும் சாதனத்தின் இடரேதுநிலைத் தன்மைகள் போன்ற வரம்பெல்லைகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. டிசம்பர் 31, 2018 அன்று, வைப்புகள், கடன்கள் & கடன்பெறுதல்கள் என்பவற்றின் முன்கொணரற் பெறுமதிகள் அவற்றின் நியாயப் பெறுமதிகளிலிருந்து பெரிதும் வேறுபடவில்லை.

12.1.4 காசு மற்றும் காசுச் சமானங்கள், வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் குறுகிய கால கடன்பெறுதல்கள் என்பன இந்தச் சாதனங்களின் குறுகிய கால முதிர்ச்சி காரணமாக அண்ணளவாக அவற்றின் முன்கொணரற் பெறுமதியையே பெரிதும் கொண்டுள்ளன.

## 12.2 நியாயப் பெறுமதிப் படிநிலையொழுங்கு

விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்கள் மூலமாக நிதிசார் சாதனங்களின் நியாயப் பெறுமதியை தீர்மானித்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்காக குழுமம் பின்வரும் படிநிலையொழுங்கை உபயோகிக்கிறது:

மட்டம் 1: ஒரே மாதிரியான சொத்துகள் அல்லது பொறுப்புகளுக்காக வினைத்திறனான சந்தைகளில் குறிப்பிடப்பட்ட விலைகள் (சரிசெய்வதற்கு முடியாதது)

மட்டம் 2: நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பதிவு செய்யப்பட்ட அவதானிக்கப்படக்கூடிய நியாயப் பெறுமதி மீது ஒரு கணிசமான தாக்கத்தைக் கொண்ட அனைத்து உள்ளிடுதல்களுக்கான ஏனைய தொழில்நுட்பங்கள்

மட்டம் 3: அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிராத பதிவு செய்யப்பட்ட நியாயப் பெறுமதி மீது ஒரு கணிசமான தாக்கத்தைக் கொண்ட உள்ளிடுதல்களை உபயோகிக்கும் தொழில்நுட்பங்கள்.

| | இ.பெ.கூ | | | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31, அன்றானவாறு | 2018 | | | |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| | Level 1 | Level 2 | Level 3 | Total |
| **OCI ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிசார் சொத்துகள்** | | | | |
| விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள் | 12.500 | - | - | 12.500 |
| விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள் | - | - | 0.540 | 0.540 |
| | 12.500 | - | 0.540 | 13.040 |

## 13. கையிருப்புகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| கச்சா எண்ணெய் | 10,125.490 | 10,025.945 | 10,125.490 | 10,025.945 |
| ஏனைய மூலப்பொருட்கள் | 847.482 | 692.765 | 847.482 | 692.765 |
| முடிவு உற்பத்திகள் | 43,048.394 | 30,188.447 | 43,056.513 | 30,195.263 |
| இடைநிலை உற்பத்திகள் | 624.056 | 655.401 | 624.056 | 654.036 |
| ஏனைய பொருட்கள் & வழங்கல்கள் | 2,670.653 | 2,999.244 | 3,335.054 | 3,542.842 |
| கழி: மெதுவாக நகரும் உருப்படிகளுக்கான ஏற்பாடளித்தல் | (381.717) | (408.823) | (397.399) | (551.741) |
| | **56,934.359** | **44,152.978** | **57,591.197** | **44,559.109** |

## 14. குறுகிய கால முதலீடுகள்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| வங்கி வைப்புகள் | 95,017.630 | 5,163.258 | 95,017.630 | 5,163.258 |
| திறைசேரி முறிகளிலான முதலீடு | 4,297.181 | 5,522.215 | 4,297.181 | 5,522.215 |
| | **99,314.811** | **10,685.474** | **99,314.811** | **10,685.474** |

## 15. காசும் காசுச் சமானங்களும்

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| காசும் காசுச் சமானங்களின் பகுதிகள் | | | | |
| வங்கியிலுள்ள காசு | 11,279.951 | 9,385.759 | 14,428.596 | 10,859.879 |

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுச் சமானங்களும் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

| | இ.பெ.கூ | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி | ரூ. மிலி |
| காசும் காசுச் சமானங்களும் | 11,279.951 | 9,385.759 | 14,428.596 | 10,859.879 |
| வங்கி மேலதிகபற்றுகள் (குறிப்பு 21) | - | - | - | - |
